

KALKI 4.8.91
ரூ. 3/-

கல்கி

பொன்விழா
ஆண்டு மலர் -'9

வரப்புயர நீர் உயரும்
நீர் உயர நெல் உயரும்

நாட்டின் வளம் பெருக பசுமைப் புரட்சி கண்டிடும் வேளாண் பெருமக்களுக்கு நற்செய்தி!

தரத்திற்கு இணையற்ற ''இங்கிலிஷ் எலக்ட்ரிக்'' நிறுவனத்தின் ''அம்ருத்'' ஸ்டார்ட்டர்கள் உங்கள் மோட்டாரின் பாதுகாப்புக்கு இப்போது கிடைக்கின்றன!

''அம்ருத்'' ஸ்டார்ட்டர்கள் உங்கள் மோட்டாரின் உயிர்க்காவலர்! அவை...

- ஓவர்லோட், நிலையற்ற ஒல்டேஜ் ஆகியவற்றிலிருந்து மோட்டார்களைக் காக்கின்றன.
- தெர்மல் ஓவர்லோட் ரிலே அமையப் பெற்று சிங்கிள் ஃபேஸிங் பாதுகாப்பை அளிக்கின்றன.
- தொலைவிலிருந்தே இயக்கும் வசதி (ரிமோட் கண்ட்ரோல்) உடையவை.
- மோட்டாரை இயங்காத நிலையில் (ஆப் செய்த நிலையில்) இருக்கும் படி 'லாக்' செய்யும் புஷ் பட்டன் உடையவை.
- –20°C முதல் +60°C வரையிலான தட்பவெப்ப நிலைகளுக்கு ஈடுகொடுக்கும் திறன் பெற்றவை.
- உலகப்புகழ் ''ஜிஈஸி ஆல்ஸ்தம்'' (GECALSTHOM) நிறுவனத்தைச் சேர்ந்த ''இங்கிலீஷ் எலக்ட்ரிக்'' உங்களுக்காகவே உருவாக்கிய உன்னத படைப்பு.



''அம்ருத்'' துவக்க மோட்டார் இயங்கும், மோட்டார் இயங்க வயல் செழிக்கும், வயல் செழிக்க வளம் பெருகும்.

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

GECALSTHOM

தி இங்கிலீஷ் எலக்ட்ரிக் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்

தலைமை காரியாலயம்: பல்லாவரம், சென்னை 600 043.

கிளைகள்: பம்பாய், கல்கத்தா, புது டெல்லி, லக்னோ, சென்னை, பங்களூர், மற்றும் இந்தியாவெங்கும் உள்ள விற்பனையாளர்கள்.

ENGLISH ELECTRIC
SYMBOL OF EXCELLENCE

R K SWAMY/BBDO EEC 9161

அன்பார்ந்த வாசகர்களுக்கு...

நாலு நண்பர்கள் நெருங்கி வந்தது தமிழகத்துக்கு ஒரு பொற் காலமாக மலர்ந்தது. அந்த நால்வர் : ராஜாஜி, டி.கே.சி., ''கல்கி'', சதாசிவம். இந்த நால்வரும், திருமதி சதாசிவமாகிய எம். எஸ். சுப்புலக்ஷ்மியும் ஒருவரோடு ஒருவர் ஒத்துழைத்தும், சிற்சில சமயங்களில் தேவைப்பட்ட போது ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்தும் இயங்கிய விதத்தை ஓர் அற்புதம் என்றே சொல்லலாம். கல்கி இவர்களுடைய போஷிப்பிலே வளர்ந்து வாசகர்களின் பேராதரவுடன் இன்று பொன் விழா ஆண்டினைக் காண்கிறது. 41-ம் ஆண்டில் ஆரம்ப மான கல்கிக்கு இன்று 50 வயது பூர்த்தியாகி விட்டபோதிலும் இடை யில் ஒரே ஒரு ஆண்டு தவிர்க்க முடியாத காரணங்களால் நிறுத்தி வைக்கப் பட்டதையும் கருத்தில் கொண்டு, பொன் விழா ஆண்டின் தொடக்கமாக இந்த ஆகஸ்டு மாதத்தைக் கருதுகிறோம். இந்தப் பொன்னான நாளில் இதன் ஸ்தாபகர்களையும் போஷகர் களையும் எண்ணிப் பார்த்துக் கரம் குவிப்பதுடன், வாசக அன்பர்களையும் ''வாழ்த்துங்கள்'' என்று கோரி வணங்குகிறோம்.

தனிநபர் சத்யாகிரகம் செய்து சிறை வாசம் அனுபவித்து வெளியே வந்த கையோடு, நண்பர் சதாசிவத்தைச் சந்தித்து, புதிய பத்திரிகை பற்றி விவா தித்த போது அதற்கு வேறு பல பெயர்களை யோசித்து வைத்திருந்தார் ''கல்கி''. ஆனால் சதாசிவம்தான் ''கல்கி'' என்ற அவரது புனை பெயரிலேயே பத்திரிகை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தி, அவ்வாறே முடிவாகியது. ''கல்கி'', சதாசிவம் ஆகியோருடன் ''கல்கி''யின் பால்ய நண்பர் ஆர். கே. சுப்பிரமணியமும் மூலதன நிதி வழங்கினார். ஆனால் அதுவும் போதவில்லை. அப் போது எம். எஸ். அவர்களை 'சாவித்திரி' படத்தில் நாரதராக நடிக்கும்படி ஒரு கோரிக்கை வந்திருந்தது. ஆண் வேஷத்தில் நடிக்க விரும்பாத எம். எஸ்., அதை நிராகரித்திருந்தார். ஆனால் கல்கி தொடங்க நிதி வேண்டும் என் பதற்காகவே சம்மதித்தார். ''எவ்வளவு பெரிய தியாகம் இது!'' என்று ''கல்கி'' அடிக்கடி இச்சம்பவத்தை நன்றியோடு நினைவுகூர்ந்தது உண்டு.

சதாசிவத்தின் நிர்வாகத் திறனும், விளம்பரங்கள் பெறுவதில் அவருக்கு இருந்த அபார ஆற்றலும் கல்கி, தமிழகத்தில் ஒரு நிலையான இடத்தைப் பெற உதவின எனில், ''கல்கி''யின் எழுத்தாற்றல் இதற்குப் பரவலான வாசகர்களைப் பெற்றுத் தந்தது.

கல்கி ஆரம்பிக்கப்பட்ட போது, இங்கிலாந்திலிருந்து செப்பனிடப் பட்ட பழைய அச்சு இயந்திரம் ஒன்றை வரவழைத்து அமைக்க உதவியவர், 'கலைமகள்' நிறுவனர் நாராயண சுவாமி.

எடுத்த எடுப்பிலேயே பெரும் பரபரப்புடன் வரவேற்புப் பெற்று வந்த கல்கியின் சாதனைகள் கொஞ்ச நஞ்ச மல்ல. இலக்கியம், அரசியல், நுண்கலைகள், தொழில் வளர்ச்சி, நகைச் சுவை, சினிமா, நாடகம், கல்வி, சமுதாயப் பார்வைகள், சீர்திருத்த நோக்கு என்று பல்வேறு கோணங் களில் பார்த்தாலும் ஒவ்வொரு அம்சத்திலும் கல்கி சாதனை படைத்திருப்பதை உணரலாம். அவை ஒவ் வொன்றும் ஒரு பட்டை தீட்டிய ரத் தினம் என்பதால், அந்த ரத்தினங்கள் பதியப் பெற்ற ஆபரணத்தையே இந்தப் பத்திரிகையின் காவல் தெய்வத்துக்குச் சமர்ப்பித்து, நம்மையெல்லாம் மகிழ்வித்திருக்கிறார் ஓவியக் கலைஞர் கோபுலு, இந்த இதழ் மேலட்டையில்.

இதே நோக்கில்தான் இந்த ஆண்டு மலரின் உள்ளடக்கத்தையும் உருவாக்கியிருக்கிறோம். அதாவது, ஆரம்ப காலத்திலிருந்து கல்கி எப்படி பல்வேறு தேச நலப் பிரிவுகளில் அக்கறை காட்டி வந்துள்ளதோ, அதற்கெல்லாம் எடுத்துக்காட்டாக ஒரொரு கட்டுரை ஒவ் வொரு பிரிவுக்கும் புதிதாக உருவாக்கி, இந்த மலரில் வழங்குகிறோம். அத்துடன், இலக்கியத் தரமான கதைகளும் நகைச் சுவை அம்சங்களும் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு அம்சத்திலும் கல்கியின் அணுகுமுறை, எளிய விதத்தில் பெரிய விஷயத்தைச் சொல்ல வேண்டும் என்பதே. கல்கியைப் பெருமிதத்துடன் வாங்கிப் படிப்பவர்கள் மகிழ்ச்சி அடைவதோடு, பயன்பெறவும் வேண்டும், சிந்திக்கவும் வேண்டும் என்பது என்றும் எங்கள் நோக்கம்.

பொன் விழா ஆண்டிலும் அதன் பின்னரும் கல்கி தன் பணியைத் தொடர்ந்து வெற்றிகரமாகச் செய்து வர, உங்கள் ஒத்துழைப்பையும் விநாயகப் பெருமானின் அருளையும் வேண்டுகிறோம்.

\- ஆசிரியர்.

ஒரு கதை, திரைக்கதையாகிறது...

கதைக்கும் திரைக்கதைக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. ஒரு கதையை எப்படித் திரைக்கதையாக்குவது என்பதை டைரக்டர் ஸ்ரீதர் இங்கே விளக்குகிறார்...



ஒரு கதை மிக அற்புதமாக எழுதப்பட்டு, அனைவரின் பாராட்டுதலுக்கும் உள்ளானதாக இருந்தாலும் கூட அதை அப்படியே சினிமாவாக எடுத்து விட முடியாது. ஏனெனில் ஒரு விஷயத்தை எழுத்தின் மூலம் சொல்வது என்பது வேறு; அதையே காட்சிகளின் மூலம் சொல்வது என்பது வேறு. இதற்கு ஓர் உதாரணம் சொல்லுகிறேன்.

ஒரு தாய். அவள் ரொம்பவும் நல்லவள். மகனின் ஒளிமயமான எதிர்காலத்தைக் கனவு கண்டு கொண்டிருப்பவள். மகனோ, சுத்தத் தறுதலை.

நாலே வரியில் எழுத்தின் மூலம் மிகச் சுலபமாகச் சொல்லி விட்ட இதை, எப்படி விஷுவலாக - சினிமாவாகச் சொல்வது? இங்குதான் திரைக்கதை வருகிறது. டைரக்டரின் கற்பனை வருகிறது...

ஒரு பூஜை அறை.

இரு கைகள் தீபம் காட்டி வணங்குகின்றன. அந்தக் கைகளுக்குரியவள்தான் அந்தத் தாய். தனது ஒரே மகன் நன்றாக வாழ வேண்டுமென்று ஆண்டவனிடம் மனமுருகி வேண்டிக் கொள்கிறாள்.

மகனுக்காகத் தாய் வேண்டிக் கொள்ளும் அதே சமயம் - வீட்டுக்கு வெளியே கையில் பீடியுடன் பனியன், லுங்கி அணிந்த ஒருவன். ஆர்ப்பாட்டமாய் நடந்து வீட்டுக்குள் வருகிறான். நேராக பூஜையறைக்குச் சென்று சாமி முன்பு வைக்கப்பட்டிருக்கும் வாழைப் பழத்தை அலட்சியமாகப் பிய்த்துத் தின்று விட்டு, அதை விட அலட்சியமாகத் தோலை வீசி எறிகிறான்...

இதுதான் திரைக்கதை. தாய் நல்லவள்; மகன் தறுதலை. இந்த ஒரு வாக்கியத்தைத் திரையில் காட்டுவதற்கு என்னென்ன காட்சிகளைக் கலைநயத்தோடு சேர்க்க வேண்டியிருக்கிறது பார்த்தீர்களா!

அடுத்து காட்சிகளைப் பிரிப்பது (ஸீனேரியோ) என்பதும் மிகவும் முக்கியமான ஒன்று. இதற்கும் ஓர் உதாரணம் சொல்கிறேன்.


பஸ் ஸ்டாண்டில் ஓர் இளம்பெண் பஸ்ஸின் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கிறாள். தூரத்திலிருந்த ஒருவன் அவளை நெருங்கி வந்து, அவளது கையிலிருந்த கைப் பையைப் பறித்துக் கொண்டு ஓடுகிறான். "ஐயோ, திருடன்! திருடன்!" என்று அவள் கூச்சல் போடுகிறாள்.

இந்த நிகழ்ச்சியைத் தூரத்தில் கேமராவை வைத்து, ஒரே ஷாட்டில் கூட எடுத்து விடலாம். அப்படி எடுத்தால் பார்ப்பவர்களின் மனத்தில் அந்தக் காட்சி பதியவே பதியாது. அதனால் அந்த நிகழ்ச்சியை முதலில் பல்வேறு ஷாட்டுகளாகப் பிரித்துக் கொள்ள வேண்டும்.

முதலில் பஸ் ஸ்டாண்டு. அங்கே பலரும் பஸ்ஸுக்காகக் காத்திருக்கிறார்கள். அவர்களில் நமது கதாநாயகியும் ஒருத்தி. அவள் முகத்திலே ஒருவித டென்ஷன். பஸ் வருமா வருமா என்று ரோட்டையும் கைக் கடிகாரத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டே இருக்கிறாள். இவற்றை மாறி மாறிக் காட்டுகிறோம்...

அடுத்ததாகச் சிறிது தூரத்தில் ஒருவன். பார்த்தவுடனேயே இவன் திருடன்தான் என்று பார்ப்பவரை அனுமானிக்க வைக்கும் பார்வை. அவன் அவளை நோக்கிப் போக்குவரத்து நெரிசலில் புகுந்து புறப்பட்டு நடந்து வரும் காட்சி. அவள் பஸ்ஸை எதிர்நோக்கிக் காத்திருக்கும்

காட்சி. அவள் கையில் தொங்கும் ஹேண்ட் பேக் ஒரு ஷாட். அவன் அவளை நெருங்கித் திடீரென்று அந்தக் கைப்பையைப் பறித்தல். பிறகு அவனுடைய ஓடும் கால்கள். இவளுடைய பதற்றம்.



✦ கல்யாண பரிசு.....

இவற்றையெல்லாம் குளோசப்பிலும் லாங்ஷாட்டிலும் மாறி மாறிக் காட்டுகிற போதுதான் பார்க்கிற ரசிகர்கள் கதையுடன் ஒன்றிப் போவார்கள். இல்லையென்றால் ''நல்ல கதையைப் போட்டுச் சொதப்பிட்டான்'' என்பார்கள்!

சரி, ஒரு நல்ல கதை எப்படி உருவாகிறது? அதுதானே திரைக்கதைக்கும் ஸினேரியோவுக்கும் அடிப்படை? என்று கேட்கலாம். 'கல்யாணப் பரிசு' என் மனத்தில் பல வருஷங்களாக அசைபோட்டு வளர்ந்த கதை. ஆனால் ஒரு பொறி தட்டுவது போல் சட்டென்று மலரும் கதைகளும் உண்டு. உதாரணமாக ஓடியன் தியேட்டரில் மிக்கி ரூனி நடித்த படம் ஒன்று பார்த்தேன். அந்தப் படம் ஒரு வாரம் கூட ஓடாத படம்தான் என்றாலும் அது எனக்கு மிகவும் பிடித்துப் போனது. காரணம் அந்தப் படம் முழுவதும் முழுக்க முழுக்க ஒரு ஜெயிலிலேயே எடுக்கப்பட்டிருந்தது. இது என் மனத்தைக் கவர்ந்தது. நாமும் அப்படியொரு படம் எடுத்தால் என்ன என்று யோசித்தேன். அந்தப் படம் ஜெயிலில் மட்டுமே எடுக்கப்பட்டது போல் நாம் கதையில் நிலைக்களனாக எதை வைப்பது? கோயில்? அலுவலகம்? ஆஸ்பத்திரி... என்று யோசித்துக் கடைசியில் ஆஸ்பத்திரியையே கதைக் களனாக வைத்து எடுப்பது என்று தீர்மானித்தேன். அதற்கு ஒரு கதையை உருவாக்கினேன். அதுதான் அமோக வெற்றி பெற்ற 'நெஞ்சில் ஓர் ஆலயம்!'

ஹாலிவுட்டில் கதைக்குத்தான் முக்கியத்துவம் தருகிறார்கள். கதை தீர்மானமான பிறகு திரைக்கதை உருவான பிறகு - காட்சிகளெல்லாம் பிரிக்கப்பட்டுத் தயாரான பிறகுதான் அந்தக் கதைக்கான கேரக்டர்களில் எந்தெந்த நடிகர்கள் நடித்தால் பொருத்தமாக இருக்குமென்று யோசிக்கிறார்கள். இதற்கே ஆறு முதல் எட்டு மாதங்கள் வரை உழைக்கிறார்கள். அப்புறம்தான் காமிரா இயங்க ஆரம்பிக்கும். இங்கேயும் அப்படி இருந்த காலம் உண்டு.

எனது, 'நெஞ்சில் ஓர் ஆலயம்' படத்தின் கதை டிஸ்கஷன் நடந்து கொண்டிருந்த போது, முத்துராமனோ, கல்யாணகுமாரோ அதில் நடிக்கப் போகிறார்கள் என்பது தீர்மானிக்கப்படவேயில்லை. 'கல்யாணப் பரிசு' படத்தில் சரோஜாதேவி தேர்வு செய்யப்பட்டதும், கதை - திரைக்கதை எல்லாம் தயாரான பிறகுதான்.

நாளடைவில் எல்லாமே மாறிப் போக ஆரம்பித்து விட்டது. கதைக்கான பாத்திரங்களுக்கு நடிக - நடிகையர்கள் என்பது போய், நடிக - நடிகையர்களுக்காகக் கதை என்றாகி விட்டது! ஆயினும் அவ்வப்போது கதை, திரைக்கதைக்கு முக்கியத்துவம் தரும் படங்களும் வெளிவந்து வெற்றியும் பெறுகின்றன. என்றாலும் என்ன காரணமோ தெரியவில்லை. சமீபத்தில் வெளியான எனது படம் தோல்வியிலும் சூப்பர் தோல்வியாகி விட்டது! இருப்பினும் எனக்கு வருத்தமில்லை. எப்படி என்கிறீர்களா? ஒருமுறை இந்தி நடிகர் அசோக்குமார் சொன்னார்: ''ஸ்ரீதரால் தோல்விப் படங்களை வேண்டுமானால் தர முடியுமே தவிர, மோசமான படங்களைத் தர முடியாது!''

தொகுப்பு : எஸ். சந்திரமௌலி

படம் : உத்ரா.

ஜெயலலிதா:

பள்ளிச் சிறுமி முதல் முதல்வர் பதவி வரை

முதல்வர் ஜெயலலிதாவுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புப் பெற்றவர்கள் அவரைப் பற்றிச் சொல்லுகிறார்கள்....

ரகுராம்ஜி (நடன இயக்குனர்) : நான் நடனம் பயின்று கொண்டிருந்த கே. ஜே. சரஸாவிடம்தான் ஜெயலலிதாவும் நடனம் பயின்றார். பரதம், கதகளி, குச்சுப்புடி என்று அனைத்தையுமே நாங்கள் பயின்றோம்.

எங்கள் இருவருக்குமே தனித் தனி சைக்கிள் உண்டு. சி. ஐ. டி. நகர், பாண்டி பஜார், மாம்பலம், மைலாப்பூர் என்று இருவரும் சைக்கிளை எடுத்துக் கொண்டு வேக வேகமாகப் பறப்போம். வழியில் தென்படும் தின்பண்டங்களையும் விட்டு வைக்க மாட்டோம். சிறுமியாக இருந்தபோதே அடுத்தவரைப் பிரமிக்கவைக்கும் ஆங்கிலம் அவருடையது. எதிலும், தான் ஜெயிக்க வேண்டும்; முன்னணியில் இடம் பெற வேண்டும் என்பதில் அப்போதே மிகவும் கவனமாக இருப்பார். ஏன்... மேக்கப் போடும் போது கூடத் தனக்குத்தான் முதலில் போட வேண்டும் என்று அடம் பிடிப்பார்! அந்த நாளில் அவரை எல்லோருமே ''அம்மு'' என்று தான் கூப்பிடுவோம். அவர் எனக்கு வைத்த பெயர் : ''போண்டா!''

திருமதி சைமன் (ஆசிரியை) : சர்ச் பார்க் பள்ளியில் ஜெயலலிதா படிக்கும் போது கிறிஸ்துமஸ் விழா ஒன்றில் கன்னி மேரியாக நடித்தார். நடிப்பு அற்புதமாக இருந்ததால், அதன் பின் ஒவ்வொரு விழாவுக்கும் நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் ஆசிரியைகள் ஒவ்வொருவரும் தங்கள் நிகழ்ச்சியில் ஜெயலலிதா இடம்பெற்றே ஆக வேண்டும் என்பதில் போட்டியே போடுவார்கள்! பள்ளி இறுதி வகுப்பில் படித்த போது அவர் தான் பள்ளி மாணவிகள் தலைவி. ஸ்போர்ட்ஸ் தினங்களிலும், ஆண்டு விழாக்களிலும் ஏகப்பட்ட பரிசுகளை வாங்குவார். 'பெஸ்ட் அவுட் கோயிங் மாணவி' விருதை எங்கள் பள்ளியில் பெற்றவர் அவர்.

பின்னால் அவர் புது மனை புகுவிழாவுக்கு மறவாமல் என்னையும் வேறு சில ஆசிரியைகளையும் அழைத்திருந்தார்.





''இதுதான் என் லைப்ரரி'' என்று ஒரு கதவைத் திறந்தார். ஒரு பிரம்மாண்ட அறை நிறையப் புத்தகங்கள்! ''ஒரு லைப்ரேரியன் தேவையென்றால் சொல்லுங்கள்; நான் வந்து விடுகிறேன்'' என்றேன். ''இப்படி நீங்கள் சொன்னதே எனக்குப் பெருமை'' என்று பதிலளித்தார்!

வலம்புரி ஜான் : ஜெயலலிதா ராஜ்ய சபை உறுப்பினரான போது, அரசியலுக்கே புதியவரான இவர் எப்படி ஜாம்பவான்கள் நிறைந்திருக்கும் ராஜ்ய சபையில் பிரகாசிக்கப் போகிறாரோ என்று அனைவரும் நினைத்தோம். ஆனால், அவரது கன்னிப் பேச்சே அனைவரின் பாராட்டுதலையும் பெற்றது. ஒரு சமயம், புதிய கல்விக் கொள்கை பற்றி அவர் உரையாற்றிய போது, கரும்பலகைகள், ஆசிரியர்கள் இல்லாத பள்ளிக்கூடங்களையெல்லாம் அவர் குறிப்பிட்டு விட்டு, இந்த நிலையில் புதிய கல்விக் கொள்கையைச் செயல்படுத்து முன்னர் நிறைய யோசிக்க வேண்டும் என்று தமது பேச்சை முடித்தார். அந்த விவாதத்தில் மொத்தம் முப்பத்திரண்டு பேர் பேசினார்கள் என்றாலும் கூட ஜெயலலிதா பேசிய பேச்சுக்குத்தான் அன்றைய மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சரான பி. வி. நரசிம்மராவ் பதிலளித்தார் என்றால் அவரது பேச்சுத் திறனைச் சுலபமாகப் புரிந்து கொண்டு விடலாமே!

அமைச்சர் செங்கோட்டையன் : எம். ஜி. ஆர். அவர்கள் இறந்த போது, நாவலர் உள்பட நாங்கள் சுமார் இருபது பேர் ஜெயலலிதா அவர்களைச் சந்தித்து, ''இனி நீங்கள்தான் பொதுச் செயலாளராக இருந்து கட்சியை வழி நடத்திச் செல்ல வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டோம். அப்போது அவர் நாவலர் போன்றோரைப் பார்த்து, ''நீங்களெல்லாம் பெரியார், அண்ணா காலத்திலிருந்து கட்சியில் இருக்கிறீர்கள். நீங்கள் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். நான் உங்களின் கீழ் கட்சிப் பணியாற்றுகிறேன்'' என்று தன்னடக்கத்தோடு கூறினார். பிறகு மற்றவர்களின் வற்புறுத்தலின் பேரில்தான் அவர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்.

கட்சிக்காரர்களிடம் அவர் காட்டும் அன்பு அபரிமிதமானது. ஒரு முறை தலைமைக்கழக விவகாரமொன்றில் போலீஸ் எங்களைக் கைது செய்து போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்ற போது, அவரே நேரடியாகப் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து எங்கள் விடுதலைக்கு முயற்சியெடுத்தார் என்றால், தொண்டர்களிடம் அவருக்குள்ள அன்பைத்தானே அது காட்டுகிறது!

பி. சி. கணேசன் : கட்சிப் பத்திரிகையாக 'நமது எம். ஜி. ஆர்.' பத்திரிகையை அவர் ஆரம்பித்த போது, தமக்குப் புதிய துறை என்பதால் பல்வேறு சந்தேகங்களையும் போக்கிக் கொண்ட பிறகுதான் ஆரம்பித்தார். நான் ஆசிரியர் பொறுப்பேற்றேன். எதையும் திட்டமிட்டபடி செய்து முடிக்க வேண்டும் என்று விரும்புபவர். அப்படி முடிப்பவர்களிடம் தனி மரியாதை காட்டுவார்.

சோ : ''தம்மைச் சுற்றி நடக்கும் பல விஷயங்கள், குறித்துத் தமது எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள ஒருவர் விரும்புகிறார். அவர் வாசகர்களுக்கு நன்கு தெரிந்தவர்தான் என்றாலும் அவரது பெயரை இப்போது வெளியிடப் போவதில்லை'' என்ற ஆசிரியர் குறிப்புடன் ஜெயலலிதாவின் தொடர் கட்டுரைகளைத் துக்ளக்கில் வெளியிட்டு வந்தேன். எழுதுவது யார் என்று வாசகர்கள் பலவிதமாக ஊகித்தார்கள் என்றாலும் ஒருவராலும் ஜெயலலிதா என்று கண்டுபிடிக்க முடியவில்லை. கிட்டத்தட்ட ஓராண்டு எழுதினார். ''எழுதப்படும் விஷயங்கள் அருமையாக உள்ளன; யாரானாலும் தொடர்ந்து எழுதட்டும்'' என்பதுதான் வாசகர்கள் கருத்தாக இருந்து வந்தது. அனைத்துமே அவர் சொந்தமாக எழுதியவை. கோஸ்ட் ரைட்டிங் கிடையாது!

தொகுப்பு : ப்ரியன், சாருப்ரபாகசுந்தர், மௌஷ்மி.

வண்ணப்படம் : டி. ராமமூர்த்தி

பொன்விழா ஆண்டு

பொன் நகைப் பரிசுப் போட்டி-1



50 கல்கி

பாலு ஜுவல்லர்ஸ்

இத்தனை வகை நகைகளை இந்நாளில் யாரும் அணியவும் முடியாது. அணிந்தால் நன்றாகவும் இராது. ஆனால் படத்தில் பார்க்க அழகாகத்தான் இருக்கிறது இல்லையா?

எத்தனை வித நகைகள், அவற்றின் பெயர்கள் என்ன? பட்டியலிடுங்கள், ஒரு தபால் கார்டில். எங்களுக்கு அனுப்பி வைக்கக் கடைசித் தேதி ஆகஸ்ட் 12.

எல்லா நகைகளையும் சரியாகப் பட்டியலிட்ட வாசகர், ஒரு சவரன் பெறுமானமுள்ள பொன் நகை பரிசு பெறுவார். ஒருவருக்கு மேல் சரியான விடைகள் எழுதினால் குலுக்கலில் ஒருவர் தேர்வு செய்யப்படுவார்.

கல்கி பொன் விழா ஆண்டில் இந்தப் பரிசுத் திட்டத்தை நம்முடன் இணைந்து நடத்துபவர் பாலு ஜுவல்லர்ஸ் அதிபர் எஸ். பாலசுப்ரமணியம்.

பரபரப்பான வாழ்க்கையுடன் மோதும் பாரம்பரியக் கலைகள்

O ஏன்தான் இந்தத் துறையில் முழு மூச்சுடன் இறங்கினோமோ என்ற சலிப்பு உங்களுக்கு ஏற்பட்டதுண்டா?

சுஜாதா ஸ்ரீநிவாஸன் (பரதநாட்டியக் கலைஞர்) : மேடை வாய்ப்புக்களுக்காகக் காத்திருந்து காத்திருந்து, அவை நியாய மற்ற காரணங்களுக்காக வேறு சிலருக்குத் தரப்பட்டபோது சலிப்பு ஏற்பட்டதுண்டு. ஆனால் அது தாற்காலிகமானதாகத்தான் இருக்கும். கலையில் உள்ள ஆர்வம் மீண்டும் நம்பிக்கையைத் தோற்றுவிக்கும். சிலர் ஒரு நிகழ்ச்சிக்குத் தேவையான சில உருப்படிகளைக் கற்றவுடனேயே அரங் கேறி விடுகிறார்கள். பெற்றோர்களும் ஏராளமான பணம் கொடுத்துக் குழந்தை களுக்கு மேடை வாய்ப்பை 'வாங்கி'த் தரத் தயாராய் இருக்கிறார்கள். பல பெற் றோர்கள் சேர்ந்து தங்கள் குழந்தைகளின் நாட்டிய நிகழ்ச்சிகளை ஒரு 'சீரிஸ்' ஆகவே நடத்தி விடுகிறார்கள்! இவை பெற்றோரின் சமூக அந்தஸ்தும், தொழில் வர்த்தக உறவு களும் வளர உதவலாம். ஆனால் கலையை நீர்த்துப் போகத்தான் செய்கின்றன... இவையெல்லாம் உற்சாகம் இழக்கச் செய்தாலும் வேறு அம்சங்கள் தெம்பூட்டு கின்றன : சிறந்த கலைஞர்களின் எண் ணிக்கை அதிகரித்து வருகிறது. சென்னில் நடத்தப்படும் ஆய்வு அரங்கங்கள், செயல் முறை விளக்கங்கள் இளம் கலைஞர்களின் அறிவை ஆழப்படுத்தியுள்ளன. விஷய மறிந்த ரசிகர் கூட்டம் அரங்கின் முதல் இரு



✦ சுஜாதா : ''சலிப்பு ஏற்பட்டது...''

வரிசையைக் கடந்து ஓரளவு விஸ்தீரணம் அடைந்திருக்கிறது. இவர்களுக்கு உயர் வான நாட்டியத்தை அடையாளம் காட்ட டீ.வி.யும் வீடியோவும் பெரிய அளவில் உதவ முடியும் - புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தப்பட்டால்.

O ஒரு தலைசிறந்த இசைக் கலைஞரின் மகனான நீங்கள் வேறு குடும்பத்தில் பிறந்திருந்தால் ஓர் இசைக் கலைஞராக உருவாகியிருக்க முடியும் என்று நம்புகிறீர்களா?

ஆர். தியாகராஜன் (புல்லாங்குழல் ரமணியின் மகன்) : வேறு குடும்பத்தில் பிறந்திருந்தால் நிச்சயமாக நான் இசைக் கலைஞனாக உருவாகியிருக்க மாட்டேன். என் வயதொத்த பிற குடும்பத்து இளை ஞர்களைப் பார்க்கப் பார்க்க இதை உணர்கிறேன். அவர்களுள் இசையின்பால் ஈடுபாடோ ஆர்வமோ கொண்டவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம்! அவர் களைக் குறை சொல்லிப் பயனில்லை. இன்றைய வாழ்க்கை வேகத்தில் இலவசக் கச்சேரிகள் கேட்கக் கூட கூட்டம் வரு வதில்லை. அதனால் கச்சேரி வருவாயை நம்பிக் கலைஞர்கள் காலம் தள்ள முடி யாது. ஆனால் கேஸட் ரிக்கார்டிங் தொழில் இப்போது சிறப்பாக வளர்ந்துள்ளது. ஒரு சராசரி வாத்தியக் கலைஞர் இந்த ரிக்கார் டிங்களின் மூலமே நல்ல வருவாய் பெற முடிகிறது.

O கச்சேரிகளுக்கு ரசிகர் ஆதரவு இல்லை என்பதால் பல சபாக்களை இழுத்து



✦ லால்குடி : ''முள்ளை முள்ளால் எடுக்க வேண்டும்...''

மூட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ள சமயத்தில் 'ஹம்ஸத்வனி' மட்டும் வெற்றிகரமாக நடப்பதன் ரகசியம் என்ன?

ஆர். ராமச்சந்திரன் (அமைப்பாளர் ஹம்ஸத்வனி) : ரகசியம் எதுவும் இல்லை! கொஞ்சம் முன்னெச்சரிக்கையுடன் ஆரம்பித்து, கொஞ்சம் கற்பனை வளத்துடன்நிகழ்ச்சிகளை வழங்கி வருறோம். 'ஹம்ஸத்வனி' துவங்கும் முன் சுற்றறிக்கை அனுப்பி, அடையாறு பகுதியிலுள்ள அனைத்து 'நகர்'வாசிகளின் ஆதரவும் கணிசமாகக் கிடைக்கும் என்று உறுதி செய்து கொண்டோம். வருடச் சந்தா நூறு ரூபாய்தான் - இருவருக்கு. டிக்கெட் விலையும் குறைவு : 5 முதல் 15 ரூபாய் வரை.



✱ சுஜாதா : ''காத்திருந்து காத்திருந்து...''

டீ.வி.யுடன் போட்டி போடாமல் கூடுமானவரை சனிக்கிழமை மாலை, திறந்தவெளி அரங்கில் கச்சேரிகள் நடக்கின்றன. சீனியர் கலைஞர், ஜூனியர் கலைஞர், வாய்ப் பாட்டு, வாத்திய இசை என மாற்றி மாற்றி நிகழ்ச்சிகளை வரிசைப்படுத்துகிறோம். ''கௌரவச் சன்மானம்'' (ரூ 800 - ரூ1000) தருகிறோம். கலைஞர்களுக்குச் சன்மானம் குறைவு என்றாலும் நல்ல ரசிகர் கூட்டம் என்பதால் கலைஞர் உற்சாகமாகப் பாடுகிறார். கச்சேரிகளை கட்டுகிறது. குடியிருப்புப் பகுதியில் வாய் மொழியாகச் செய்தி பரவி, மேலும் ஆர்வத்துடன் கூட்டம் வருகிறது. தவிர, நிகழ்ச்சிகளுக்கு மிக எளிதாக Sponsorship வேறு கிடைத்து விடுகிறது. அதனால் பணத் தட்டுப்பாடின்றி நடத்த முடிகிறது.

O மாணவர்களைக் கட்டாயப்படுத்திக் கச்சேரிகள் கேட்கச் செய்து, அதன் அடிப்படையில் கேள்வி கேட்டு, மதிப்பெண் அளித்து... இதெல்லாம் கலை ஆர்வத்தை வளர்க்குமா...?

பாரத் கலாச்சார் அமைப்பின் நிறுவனர்: திருமதி ஒய். ஜி. பார்த்தசாரதி :நான் சிறுமியாக இருந்த போது பெற்றோர் கச்சேரிகளுக்கு அழைத்துச் செல்வார்கள். புரிந்தும் புரியாமலும் தூங்கி வழிந்தபடி உட்கார்ந்து இருப்பேன். ஆனால் அந்தப் பருவத்தில் மனத்தில் ஊன்றப்பட்ட விதைதான் பிற்காலத்தில் என் கலை ஆர்வத்துக்கு அடித்தளமாய் அமைந்தது. இந்தக் காலத்திலோ பெற்றோர்களுக்குக் குழந்தைகளைக் கச்சேரிகளுக்கு அழைத்துச் செல்ல நேரம் கிடையாது. குழந்தைகளுக்கும் மேற்கத்திய மோகம். இந்தியக் கலை, கலாசாரத்துடன் அவர்களுக்கு ஒரு பரிச்சயமாவது ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான் அவர்களைக் கட்டாயப்படுத்தி முதல் தரக் கலைஞர்களின் கச்சேரிகள் கேட்கச் செய்கிறோம். எல்லோரும் விரும்பிக்



✱ திருமதி ஒய். ஜி. பி. : ''விதைகளைத் தூவுகிறோம்...''

கச்சேரிக்கு வருவதில்லை என்பதையும் எல்லோரும் விஷயஞானமுள்ள ரசிகர்களாக மாறுவது சாத்தியமில்லை என்பதையும் உணர்கிறோம். ஆனால் பரவலாக விதைகளைத் தூவும் போது அவற்றுள் சிலவாவது முளைத்துப் பலன் தரும் என்று நம்புகிறோம். கச்சேரிகள் தொடர்பாகக் கேள்வி கேட்டு மதிப்பெண் அளிப்பது மாணவர்களை ஊக்கப்படுத்தத்தான். அவர்களுடைய பரீட்சை மதிப்பெண்களுக்கும் இவற்றுக்கும் சம்பந்தமில்லை.

O இசை பயின்று சேர்த்தனை வரை



♦ தியாகராஜன் : "இலவசக் கச்சேரிக்கே கூட்டம் இல்லை...!"

கற்றுக் கொண்டுள்ள நீங்கள் எத்தனை கச்சேரிகள் கேட்டிருக்கிறீர்கள்?

சங்கீதா (கல்லூரி மாணவி) : சமீப காலம் வரை நான் கச்சேரிகளுக்குப் போனதில்லை. ஏதோ ஆசைக்காகப் பாட்டுக் கற்றுக் கொண்டேன். யதேச்சை யாக Youth Association for Classical Music என்ற அமைப்பு நடத்திய விளக்க நிகழ்ச்சிக்குச் சென்ற போது 'நம் கர்நாடக இசையில் இவ்வளவு நுணுக்கங்களா?' என்ற பிரமிப்பு ஏற்பட்டது. அதன் பிறகு என் நோக்கும் பார்வையும் மாறி இசை யின்பால் ஈடுபாடு அதிகமாயிற்று. பாடல் பயிற்சியைத் தொடர்ந்ததோடு அடிக்கடி கச்சேரிகளுக்குப் போய்க் கேட்கவும் ஆரம் பித்தேன். இக் காலத்து இளைஞர்கள் எதையுமே தூண்டித் துருவி ஆராயும் போக்கு உடையவர்கள் என்பதால், அவர் களுடைய ஆராய்ச்சிக் கண்ணோட்டத்துக்கு விருந்தளிப்பதன் மூலம்தான் அவர்களைக் கலைகளின் பால் ஈர்க்க முடியும்.

O பாரம்பரிய இசை, நடனம் அழிந்து வருகின்றன என்ற பயம் ஏற்பட்டு, அதைக் காப்பாற்ற முயற்சிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இந்த பயம் அவசியமானதா?

வித்வான் லால்குடி ஜெயராமன் : இந்தப் பயம் மிக அவசியமானது. நியாய மானது. போட்டி நிறைந்த வேகமான வாழ்க்கையில் கலைகளை ரசிக்க நேரம் கிடைப்பதே அரிதாகி விட்டது. தப்பித் தவறி ஓய்வு கிடைத்தால் மற்ற ஜகஜ்ஜாலப் பொழுதுபோக்கு அம்சங்கள் கவ்வி இழுக்கின்றன.

இதை உணர்ந்துதான் பாரத் கலாசார், ஸ்பிக் மகே, ஸ்ரீராம் டிரஸ்ட் போன்ற அமைப்புக்கள் நம் கலைகளை இளைஞர் களுக்கு அறிமுகப்படுத்தி, ஆர்வத்தைத் தூண்ட விசேஷ முயற்சிகள் எடுத்து வரு கின்றன. கச்சேரிகளை ஸ்பான்ஸர் செய்யும் போற்றுதலுக்குரிய மரபு ஏற்பட்டிருக் கிறது. ஆனால் இவை மட்டுமே போதாது. முள்ளை முள்ளால் எடுப்பது போல்



♦ ராமச்சந்திரன் : "ரசிகர்களில்லை!"

எலக்ட்ரானிக் சாதனங்களின் தாக்கத்தை அவற்றைக் கொண்டே நாம் முறியடிக்க வேண்டும். இசை நுணுக்கங்களை விளக்க, நிறைய வீடியோ டேப்களை, எளிய, உறவாடும் நடையில் தயாரித்து வழங்க லாம். டி.வி., சினிமாவில் க ர் நா ட க இசைக்கு அதிக இடம் ஒதுக்கலாம். பிளஸ் டூ வகுப்பில் இசையைப் பாடமாக வைக்க லாம்.

ஆன்மிக அடித்தளத்தில் அமைந்த நமது கலைகளுக்கு மனத்தைச் சாந்தப் படுத்தும் வல்லமை இருக்கிறது. மனிதனை விலங்கு நிலையிலிருந்து மீட்டு உயர்த்த தெய்விக இசையால் முடியும்... இன்றைய வன்முறைச் சூழலை எண்ணிப் பார்த்தால் இதன் முக்கியத்துவம் புரியும். இசை யினால் சமூகமும் சமூகத்தால் இசையும் மேம்படுவதற்கு ஒரு விழிப்புணர்வு இயக் கம் அவசியம். அதில் கலைஞன், ரசிகன், இவர்களை இணைக்கும் சபா அமைப் பாளர் ஆகிய முத்தரப்பினரும் முழு மூச்சுடன் ஈடுபட வேண்டும்.

- சீதா ரவி

வண்ணப்படம் (சுஜாதா), மற்ற படங்கள் : உத்ரா

வண்ணப்படம் (லால்குடி) : யோகா

அடுத்த இதழில்.....

●● ஆடியோ கேஸட்டுகள் : கலைஞன் முதல் ரசிகன் வரை....
- ஓர் ஆய்வு

●● பாண்டிச்சேரி அரசியல்
- சிறப்புக் கட்டுரை



ஆம். சரியாக சாப்பிடாமல் இருப்பது குழந்தையின் வளர்ச்சியை பாதிக்கலாம்.

சரியாக சாப்பிடாமலிருக்கும் குழந்தை தனது
உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள்
அனைத்தையும் முழுமையாகப் பெறுவதில்லை.
இப்பற்றுக்குறை அவனது வளர்ச்சியை பாதிக்கக்
கூடும். அவனுக்கு அளிப்பீர் காம்ப்ளான். அவன் இழந்த
ஊட்டத்தைப் பூர்த்தி செய்ய காம்ப்ளான் உதவுகிறது.
குழந்தையின் வளர்ச்சிக்குத் தலைசிறந்த புரதமாகிய
பால் புரதம் 20% மற்றும் உடலுக்குத் தேவையான 22
அத்தியாவசியமான ஊட்டச்சத்துக்கள் அடங்கியதாகும்
காம்ப்ளான்.


காம்ப்ளான் நாவிற்கினிய
5 சுவைகளிலே கிடைக்கிறது.



காம்ப்ளான்®

திட்டமிட்ட பரிபூரண உணவு.

GX/27/203 TAM


பபுல்கம் ஊதறதுல நம்மை மிஞ்ச பண்ண ஆள் இல்லை...
தமிழக பந்த்
கர்நாடகா பந்த்
எங்களுக்கு மட்டும் ஊதத் தெரியாதா?
ஜெயலலிதா
பங்காரப்பா
சுதந்திரமா, நல்லா பறக்கட்டும்!
எம்மாம் தூரம் பறக்கப் போவுது, பார்த்திடலாம்!


சுட்டுத் தள்ளிடுறேன் பாரு...
என்னை வந்து
பார்க்காமே, என்னைக்
கேட்காமே
ஹெலி காப்டரில
எப்படி ஏறிப்போச்சு?
எப்படி வேதாரண்யம்
மேலே பறக்கப்
போச்சு...?
ஒரு மட்டு மரியாதை
வேணாமா?
ஜெயலலிதா



கல்கி

1991
ஆகஸ்ட் 4
மலர் : 50
இதழ் : 1
பிரஜோத்பத்தி
ஆடி 19

மனவேதனை சிங்!

"வயிற்றைச் சுற்றி பெல்ட்டை இறுக்குங்கள்; தியாகம் புரியத் தயாராகுங்கள்" என்று பிரதமரும் நிதி அமைச்சரும் திரும்பத் திரும்பச் சொல்லி ஏகமாகப் பயமுறுத்தி வைத்தார்கள். இது ஒரு தந்திரம். இதனால் பட்ஜெட் வந்த போது "அப்பாடா, எதிர்பார்த்த அளவு மோசமில்லை" என்று தொழிலதிபர்களும் தனி மனிதர்களும் ஆறுதல் பெற்றிருக்கிறார்கள். உண்மையில் பட்ஜெட் மிகவும் கடுமையானதே.

பற்றாக்குறையைக் கட்டுப்படுத்தியிருப்பதாக நிதி அமைச்சர் பெருமைப்பட்டுக் கொள்கிறார். 7,719 கோடி பற்றாக்குறை என்பது கொஞ்ச நஞ்சமல்ல. இந்த அளவுக்கு நோட்டு அச்சடிக்கப்படும் போது, ஏற்கெனவே உள்ள பணவீக்கம் மேலும் அதிகரிக்கவே செய்யும். இது தவிர, இரண்டாயிரம் கோடிக்கு மேல் புதிய வரிச் சுமை! இவை விலைவாசிகள் உயரவே வழி செய்யும். வழக்கம் போல் 'பணக்காரனுக்குத்தான் வரி' என்ற பல்லவி பாடப்படுகிறது. எந்தப் பணக்காரத் தொழிலதிபரும் வர்த்தகரும் பண்டங்கள் மீது போடப்படும் உற்பத்தி வரிகளால் பாதிக்கப்படுவதில்லை. அவர்கள் லாபம் குறையாது. வரிகளைத் தாங்குவது பண்டங்களை வாங்கி உபயோகிக்கும் சாமானியக் குடிமகன்தான். பெட்ரோல் விலை உயர்வால் மொபெட் வைத்திருக்கும் சராசரிதான் பாதிக்கப்படுவான். கார் வைத்திருக்கிற, அல்லது விமானத்தில் பறக்கிற முதலாளியோ, அரசு அதிகாரியோ அல்ல. அவர்கள் கணக்கு எழுதுவார்களே யன்றிக் கை விட்டுச் செலவழிக்க மாட்டார்கள். இதனால் விலைவாசிகள் உயரும். காஸ் விலை உயர்வால் சராசரி இல்லத்தரசிதான் பாதிக்கப்படுகிறாளேயன்றி, காஸ் உபயோகிக்கும் ஹோட்டல்கள், மற்றும் தொழிலகங்கள் அல்ல. அவர்களும் கணக்கு எழுதி விலை உயர்வுக்கே வழி வகுப்பார்கள். இப்படியேதான் ஒவ்வொன்றும். 'பணக்காரர்களுக்கு வரி' என்பது முதல் தர மோசடி.

இது மறைமுக மோசடி என்றால் நேரடியான மோசடியும் பட்ஜெட்டில் இருக்கிறது. அதுதான் கறுப்புப் பணம் வைத்திருப்போருக்கும் அயல்நாடுகளில் பணம் பதுக்கியிருப்பவருக்கும் காட்டப்படும் சலுகைகள். அரசுக்குப் பணமும் அந்நியச் செலாவணியும் தேவை என்பதற்காக, இப்படி அயோக்கியர்களுக்குச் சலுகை காட்டினால் இன்று வரை கஷ்டப்பட்டு நேர்மையுடன் வரி செலுத்தியிருப்போரின் மனம் என்ன பாடுபடும் என்பதை நிதி அமைச்சர் யோசிக்கவில்லை. 'இந்த அரசுக்கு ஏன் கொட்டி அழ வேண்டும்? நாமும் மோசடி பண்ண வேண்டியதுதான்' என்றே தோன்றும். ஒழுங்காக வரி செலுத்தி வருவோருக்கு ஒரு பைசா கூட பட்ஜெட்டில் சலுகை கிடையாது.

புதிய தொழில் கொள்கையில் கட்டுப்பாடுகள் எல்லாம் நீக்கப்பட்டு சுதந்திரமாகத் தொழில்கள் இயங்க வழிவகுக்கப்பட்டுள்ளது. ஆனால் அதற்கு அனுசரணையாக வரி விதிப்புக் கொள்கையில் மாறுதலைக் காணோம். 'வரிகள், மேலும் வரிகள்' என்பதே கொள்கை எனில். புதிய தொழில் கொள்கை எதிர்பார்த்த வேகத்தில் பலன் தராது. மிக அதிகமான தொழில்கள், நமது நாட்டில் சிறு தொழில்கள் ரகத்தைச் சேர்ந்தவை. அவற்றுக்கு உற்சாகமூட்டும் விதத்தில் பட்ஜெட்டில் ஏதொன்றும் இல்லை.

அரசாங்கத்தின் உற்பத்திக்கு உதவாத செலவினங்கள் கட்டுப்படுத்தப்படும் என்று எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றமே. வேடிக்கை என்னவெனில், செலவுகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய இலாக்காவுக்கே ஏகப்பட்ட பணம் அதிகப்படியாக பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது! வீண் செலவு ஒருபுறம், மெத்தனத்தால் ஏற்படும் நஷ்டம் மறுபுறம். உதாரணமாக, புதிய சொத்து வரி ஃபாரம் அச்சாகவில்லை என்பதால் பத்து கோடி ரூபாய் வருவல், ஆறு - ஏழு மாதங்களுக்குத் தாமதப்படுகிறது!

பல்வேறு வரி விகிதங்களை உயர்த்துவதாலும், புதிய புதிய வரிகளை விதிப்பதாலும் வரி ஏய்ப்பே அதிகரிக்கும். வரிகளை நியாய அளவுக்குக் குறைத்து, அதிகமான நபர்களை வரி வட்டத்துக்குள் கொணர்ந்து, சந்தோஷமாக வரி செலுத்தச் செய்ய வேண்டும். 'நாமும் நாட்டின் மேன்மைக்கு உதவுகிறோம்' என்று எல்லோரும் பெருமைப்படச் செய்ய வேண்டும். அந்நிலையில் கறுப்புப் பணம் கணிசமாகக் குறைந்து போகும். வரிகளைக் குறைத்து, உற்பத்தியை அதிகரிக்கச் செய்தால், அதன் மூலம் அரசு அதிக வருமானம் பெறுவது சாத்தியமே. இது போன்ற புதிய சிந்தனைகளை பட்ஜெட்டில் எதிர்பார்த்து ஏமாந்தோம். நிதி அமைச்சர் பொருளாதாரம் அறிந்தவராயினும், அரசியல் நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகியிருக்கிறார். மன்மோகன் சிங், மனவேதனை சிங் ஆகியிருக்கிறார்!

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.

தாயகம் திரும்ப வரும் மகிழ்ச்சி



இந்த் ஸாகர் திட்டத்தில் முதலீடு செய்து உங்கள் குழந்தையின் மேற்படிப்புக்காக வசதி செய்யுங்கள். பத்து வருட இறுதியில் கனிசமான மூலதன லாபத்தை உங்களுக்கு வழங்குகிறது இந்த் ஸாகர். கூடுதலாக, உங்களுக்குக் கிடைக்கும் லாபத் தொகைக்கு 60 சதவீதம் வரிச்சலுகை கிடைக்கிறது. அல்லது இந்த் மோத்தியில் நீங்கள் முதலீடு செய்யலாம். 5 வருடங்களுக்கு மேலும் உங்களுக்கு வருடாந்திர லாபத்தை வழங்கும் ஒரு ஒப்பற்ற பங்கீட்டு வளர்ச்சித் திட்டமாகும்.

இது தவிர, நிச்சயமான அலாட்மெண்ட், எளிதான முறையில் மற்றவர் பெயருக்கு மாற்றம், ரொக்கமாகப் பெறும் வசதி மற்றும் 3 வருடத்தில் பணத்தைத் திரும்பப் பெறும் அல்லது பங்கு மார்க்கெட்டில் விற்கும் வசதி. இவை அனைத்தையும் இத்திட்டங்கள் அளிக்கின்றன. ஆகையால் தாமதிக்காமல் உங்கள் குழந்தையின் வளமான எதிர்காலத்திற்கு இன்றே முதலீடு செய்யுங்கள்.

IND SAGAR
CAPITAL GAINS SCHEME

இந்த் ஸாகர்

மூலதன லாபத் திட்டம்

வழங்கீடு துவங்கிவிட்டது

இந்தியன் பாங்க்
பரஸ்பர நிதி
உங்கள் செல்வச் செழிப்பின் சிற்பி

கார்ப்பரேட் அலுவலகம்: 1வது மாடி, நானக் மோட்வானி மார்க், டி ஜி. சேம்பர்ஸ், ஃபோர்ட், பம்பாய்-400 023

08:2012:TM

வீடு காலி செய்பவருக்கு...



● வீட்டைக்
காலி செய்துவிட்டு
வேறிடம் போகிறீர்கள், போங்கள்.
அடுத்து
வாடகைக்கு வருபவரை வரவேற்க
முடிந்தால் ஒரு
புன்னகையை
வைத்து விட்டுப் போங்கள் வாசலில்!

● அடித்த
ஆணிகளில் தொங்கிய படங்களைக்
கழற்றுவது பிழையில்லை...
அந்த ஆணிகளில்
உங்கள்
காயங்களை
மாட்டி வைத்து விட்டுப் போகாதீர்கள்!

● இரவுகள்
துண்டாடிய உங்கள்
தூக்கங்களின் கறைகளைக்
கழுவி விட்டுப் போங்கள்!
சந்தேகங்களால்
சண்டைகளால்
உடைந்து நொறுங்கிய
அமைதியின் முனகல்கள்
ஆவிபோல்
வீட்டுக்குள் சுற்ற வேண்டாம்
அப்புறப்படுத்தி விடுங்கள்.
அறைக் கதவுகளின்
தாழ்களையும்
திருகி எடுத்துக் கொண்டு போகிறீர்கள்,
போங்கள்...
அப்படியே
அடுத்தவர் பற்றி நீங்கள் பேசிய
அவதூறுகளைச்
சுவரின்
காதுகளிலிருந்து
சுரண்டி எடுத்துக் கொண்டு போங்களேன்!

● பூஜ்யம் வாட்ஸ்
மின் குமிழியைக் கூடப்
பறித்துப் போகத் துடிக்கிறீர்கள்!
பரவாயில்லை! - இனி,
வருபவர் முன்
கண்திறக்கக் கொல்லைச் செடியில்
காத்திருக்கும்
அரும்புகளை
விட்டு வைக்கக் கூடாதா?

- தமிழன்பன்.

“ஏழை மக்களுக்கே எங்கள் சேவை!”

“சித்தப்பாவுக்குக் காலையே எடுக்கணும்னுட்டாங்க பெரியாஸ்பத்திரியிலே. விரலை மட்டுமே வெட்டி எடுத்துக் குணமாக்கிட்டார் டாக்டர் ஐயா!” என்றார் சுப்புலட்சுமி.

“இந்த டாக்டர் இல்லையின்னா எங்களுக்கு எங்கேயும் போக வழியில்லீங்க!” என்றார் இருளர் பழங்குடியைச் சேர்ந்த சாமியார் மரதன்.

“மகளுக்கு ஐயாதான் ஆபரேஷன் பண்ணி நல்லாக்கினார்!” என்றார் ராஜம்மா.

யார் இந்த டாக்டர்? போகிற கிராமங்களில் எல்லாம் இவரைக் கண்ட உடனே மக்கள் தெய்வ தரிசனமாகக் கருதி ஓடி வந்து, வணக்கம் சொல்லும் அளவுக்கு, அப்படி என்ன செய்து விட்டார்?

கோவையிலிருந்து வடமேற்கே சுமார் முப்பது கிலோ மீட்டர் தூரத்திலிருக்கிறது ஆனைக்கட்டி கிராமம். மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியைச் சேர்ந்தது. தமிழ் நாட்டில் ஒருகாலும், கேரளத்தில் ஒரு காலுமாக நிற்கும் சின்னஞ்சிறு கிராமம். யானைகளும், கரடிகளும், குள்ளநரிகளும், கொடிய விஷமுள்ள பாம்புகளும் உலா வரும் பகுதி!

இந்த ஆனைக்கட்டிக்கு வந்து ஓர் இடத்தை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு, டிஸ்பென்சரி தொடங்கியவர்தான் டாக்டர் சுப்பிரமணியம். குடியிருப்பது பதினைந்து கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் அகளி கிராமத்தில்! சுற்று வட்டாரத்தில் சுமார் 75 கிராமங்களுக்கு இவர் பணி பரவியுள்ளது. ஸ்கூட்டரிலேயே மூன்று லட்சம் கி. மீ. சுற்றியிருக்கிறார்!

◆ உள்ளூர் வாசிகளோடு டாக்டர் சுப்பிரமணியன் தம்பதி......



நாற்பது வயதான டாக்டர் சுப்பிரமணியம் கோவை மருத்துவக் கல்லூரியில் எம். பி. பி.எஸ். பட்டம் பெற்றவர். அடுத்த வருடமே கிராமம் கிராமமாகச் செல்ல ஆரம்பித்தார், ஸ்கூட்டரில்.

பெயர் நிலைத்து விட்டது: ‘ஸ்கூட்டர் டாக்டர்’!

மருத்துவர்கள் கிராமங்களில் போய்த் தங்கிச் சிகிச்சை செய்ய வேண்டும்

என்று அவரவரும் தொண்டை வரளக் கத்தி யும் எந்தப் பயனும் விளையாத இந்தக் காலத்தில், எப்படி ஓர் இளைஞருக்கு மட்டும் வித்தியாசமாயிருக்கத் தோன்றி யது?

''மருத்துவக் கல்வி பயின்று தேறி, மருத்துவமனை கூட ஆரம்பித்தேன். இரண்டு, மூன்று டாக்டர்கள் உடன் பணியாற்றினார்கள். நல்ல சம்பாத்தியம் இருந்தது. ஆனால் மனசு என்னவோ உறுத்திக் கொண்டே இருந்தது. கிராமங்களுக்கு மருந்துகளுடன் சென்று, வசதி இல்லாத கிராமவாசிகளுக்கு அவர்கள் வசிக்கும் இடத்திலேயே மருத்துவம் பார்த்து விட்டுத் திரும்பும் பொழுது கிடைக்கும் மனத் திருப்தியும், மன அமைதியும் எதிலும் கிடைக்காது என்று அழுத்தமாக உணர்ந்தேன்!'' என்றார் டாக்டர் சுப்பிரமணியம்.



கோவையிலிருந்து பதினைந்து கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் சின்னத்தடாகம் என்ற கிராமத்தில் டாக்டர் சுப்பிரமணியத்தைச் சந்தித்த போது, ''வாருங்கள், இப்போது என் மருத்துவமனை இங்கேதான் தாற்காலிகமாக இயங்கி வருகிறது!'' என்று அழைத்துக் கொண்டு போய்க் காண்பித்தார்.

பிளாஸ்டிக் சர்ஜரிக்காகக் காத்துக் கொண்டிருந்தார் இடது கை முழுக்க ஸ்டவ்-தீ எரித்த நிலையில் கிடந்த பெண்மணி ஒருவர். ''கோவையிலிருந்து என் நண்பர் டாக்டர் சந்தான கிருஷ்ணன் வருவார். அவர் பிளாஸ்டிக் சர்ஜன். இலவசமாக இந்தச் சிகிச்சையைச் செய்து விட்டுப் போய் விடுவார், இந்த வாரம்!'' என்றார் டாக்டர்.

பிறந்து மூன்றே நாளான குழந்தையுடன் இளம் தாய் ஒரு கட்டிலில். ''பிரசவ கேஸ்களும் பார்க்கிறோம். எனது இன்னொரு நண்பர் டாக்டர் ராஜேந்திரன் ஒரு கைனகாலஜிஸ்ட். இரவு பன்னிரண்டு மணிக்கு அழைத்தாலும் வந்து விடுவார்!''

காசநோய்க்குச் சிகிச்சை பெறுபவரும், வயிற்று நோய்க்குச் சிகிச்சை பெறுவோரும், டைபாய்டு காய்ச்சலுக்குச் சிகிச்சை பெறுவோருமாக, இரண்டு பெரிய அறைகளில் எல்லாருமே கட்டிலில் படுத்திருந்தார்கள்.

''மலைவாழ் பழங்குடியினரின் நடை, உடை எல்லாமே மாறியிருக்கிறது. சடைமுடியை வெட்டாது, கலர் கலராகக் கழுத்தில் மாலைகள் தொங்க, வாழ்ந்து வரும் ஜனங்கள் இவர்களில் இப்போது மிகவும் குறைவு!'' என்று டாக்டர் சொன்ன போதுதான், நோயாளிகளில் பழங்குடியினரைத் தெரிந்து கொள்ள முடிந்தது.

மருத்துவமனையில் படுசுத்தமாக, முக்கியமான சாதனங்களுடன் இருந்த அறையைக் காண்பித்து, ''இதுதான் எனது ஆபரேஷன் தியேட்டர்!'' என்றார் டாக்டர். அடிக்கடி மின்சாரம் நின்று விடுவதால் ஒரு ஜெனரேட்டர் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளதைச் சுட்டிக் காண்பித்தார்.

அடுத்தாற்போல் நாங்கள் சென்ற ராமநாதபுரம் கிராமத்தில் டாக்டர் வந்த உடனேயே, அங்கங்கே நின்று கொண்டிருந்தவர்கள், ஓடி வந்து அவரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

முடுகர்கள், குறும்பர்கள், இருளர்கள் என்று அங்கு வாழும் பழங்குடியினர் தவிர, அரிஜன கிராமங்கள் அத்தனையிலும் டாக்டர் அறிமுகமானவர். சிலரைத் தோளோடு

சேர்த்து அணைத்துக் கொள்ளுகிறார். சிலரைத் தட்டிக் கொடுக்கிறார். சிலரை விசாரிக்கும் போதே 'ஸ்டெத்தை வைத்துப் பரிசோதனையும் செய்கிறார்.

''இவர் டாக்டர் மட்டும் இல்லீங்க. நண்பர். காசே குடுக்கலேன்னாலும் இரண்டு வருசமா இலவசமாவே வைத்தியம் பார்த்தவருங்க!'' என்றார் ரங்கசாமி.

''ராமநாதபுரத்திலிருந்து வரப்பாளையம் கிராமத்துக்குப் போக வர, மூன்று கிலோ மீட்டர். மழையில், சேறு சகதியில், இருளில், நடந்து போய் வைத்தியம் பார்த்திருக்கிறேன். ராமநாதபுரம் கிராமத்தில் ஸ்கூட்டரை வைத்து விட்டு, மழையில் நடக்க ஆரம்பிப்பேன்!'' என்றார் டாக்டர்.

77-ல், ஐம்பத்து மூன்று நாட்கள் தொடர்ந்து மழை பெய்தது. ஒரு நாள் கூட விடாமல், ஸ்கூட்டரில் வழக்கமாகப் போகிற எல்லாக் கிராமங்களுக்கும் போய் விட்டுத்தான் வந்தார் டாக்டர் சுப்பிரமணியம்.

'மேட் ஃபார் ஈச் அதர்' வேறு யாருக்குப் பொருந்துகிறதோ இல்லையோ, டாக்டர் சுப்பிரமணியத்துக்கும் அவர் மனைவி உமா மகேசுவரிக்கும் நூறு சதம் பொருந்தும். இவரும் ஒரு டாக்டர்தான். பாட்னாவில், மருத்துவத்தில் 'டிப்ளமா' பெற்றவர். கணவருடைய சிந்தனைகளின், சேவைகளின், அப்பட்டமான பிரதிபலிப்பு.

''இப்படி ஒரு கணவரை எப்படித் தேர்ந்தெடுத்தீர்கள்? ஒருமுறை கூட நீங்கள் அலுத்துக் கொண்டதில்லையா?''

''சேவை மனப்பான்மையுள்ள ஒருவரைத்தான் மணப்பது என்று தீர்மானமாக இருந்தேன். அப்படியே இவர் அமைந்ததுதான் என் பாக்கியம்!'' என்கிறார் உமா மகேசுவரி.

87-ல் ஸ்கூட்டர் விபத்தில் - லாரி மோதி -நினைவிழந்து, டாக்டர் சுப்பிரமணியம் மாதக் கணக்கில் அம்னீசியா நிலையில் கிடந்தபோதெல்லாம், கணவரையும் கவனித்துக் கொண்டு, குழந்தைகளையும் பார்த்துக் கொண்டு, வருகிற நோயாளிகளுக்குச் சிகிச்சையும் அளித்துக் கொண்டு குடும்பம் நடத்தியவர் உமா மகேசுவரி.

டாக்டரின் பெண் குழந்தை கூட முப்பது கிலோ மீட்டர் தூரம் தினசரி பயணம் செய்துதான் பள்ளிக்குச் சென்று வருகிறாள். ''இது பரவாயில்லையே. ஆனைக்கட்டியிலிருந்து அவள் போய் வந்து கொண்டிருந்த போது, அறுபது கிலோ மீட்டர் பயணம்!'' என்கிறார் தாயார் உமா மகேசுவரி.

ஆனைக்கட்டியில் நிலம் வாங்கி, மருத்துவமனை கட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. அதனால் இடைக் காலத்தில் தடாகத்தில் மருத்துவமனையைத் தாற்காலிகமாக வைத்துக் கொண்டு, ஆனைக்கட்டிக்கும் போய் வந்து கொண்டிருக்கின்றனர் டாக்டர் சுப்பிரமணியம் தம்பதி. ஸ்கூட்டர் விபத்துக்குப் பிறகு, பஸ்ஸில்தான் பயணம். பஸ் போகாத தடங்களில் நடை. இருப்பது வாடகை வீட்டில்தான்.

டாக்டர் சுப்பிரமணியமும், உமா மகேசுவரியும் அளிக்கும் மருத்துவப் பராமரிப்புக்குப் பல செல்வந்தர்களும் தொழிலதிபர்களும் உதவி வருகிறார்கள். ''மெய்யான சேவை புரிய ஒருவர் தயாராக இருந்தால் நிதி வசதி தன்னால் வரும். நல்ல இதயம் படைத்தவர்களுக்கு நம் நாட்டில் பஞ்சமே இல்லை'' என்று நன்றியோடு சொல்கிறார் டாக்டர் சுப்பிரமணியம்.

- சாருகேசி

வண்ணப் படங்கள் : யோகா

ஃபிரிஜ் பரிசு : கூப்பன் நெ. 16

இந்த வாரம் வெளியாகியிருக்கும் ''நேற்று வரை நந்தவனம்'' தொடர் கதையைப் படித்து விட்டீர்களா? அதில் நாங்கள் வேண்டுமென்றே ஒரு தவறு செய்திருக்கிறோம். அது என்ன என்பதைக் கண்டுபிடித்துக் கீழே ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுதுங்கள். அதற்கான திருத்தத்தையும் அருகிலுள்ள இடத்தில் எழுதுங்கள். இப்படி ஒவ்வொரு வாரமும் நாங்கள் வேண்டுமென்றே செய்யும் தவறைக் கண்டுபிடித்துத் திருத்தத்தையும் எழுதிக் கூப்பனைப் பத்திரப்படுத்துங்கள். தொடர் முடியும் வாரம் எல்லாக் கூப்பன்களையும் சேர்த்து, கதை பற்றிய 5 - 10 வரி விமர்சனத்தையும் எழுதி எங்களுக்கு அனுப்பி வையுங்கள். அதிகமான தவறுகளைக் கண்டுபிடித்தவருக்கு ஃபிரிஜ் பரிசு! அதிகபட்ச விடைகளைப் பல பேர் எழுதியிருந்தால் குலுக்கல் மூலம் ஒருவர் தேர்வு! ஆறுதல் பரிசுகள் உண்டு.

இந்த இதழில் வேண்டுமென்றே செய்யப்பட்ட.....

தவறு : ______________________

திருத்தம் : ______________________


ஒவ்வொரு தாயும் அறிந்தது:
குழந்தையின் உணவிலே
பருப்பு மிக அவசியமாகும்.
ஃபாரெக்ஸ்-வெஜ்
மட்டுமே பருப்பின்
நற்பயன்கள் அடங்கியதாகும்.
புரதச்சத்து நிரம்பிய
ஃபாரெக்ஸ்-வெஜ்,
தானிய வகைகள்,
பாசிப்பருப்பு, தக்காளி,
காரட் ஆகியவை
அடங்கியதாகும்; எளிதில்
ஜீரணிக்கக் கூடிய
உணவாகும்.
பருப்-
புடன்
Farex-veg
ஃபாரெக்ஸ்-வெஜ்
சுவையுடன் வளரும் வழி.

Gx.427.91 T

ஒன்றுமில்லாதவர்கள்

பாலகுமாரன்

அந்தக் காலை வேளையில் எழுபதாவது தடவையாக அம்மாவின் பெயரையும், அம்மாவின் பெயரால் அம்மாவின் உருவத்தையும் நடேசன் நினைவு படுத்திக் கொண்டான்.

ஹோட்டல் அன்னபூர்ணா என்று ஒவ்வொரு தம்ளரிலும் பெயர் அடிக்க வேண்டியிருந்தது. அப்படி அன்னபூர்ணா என்று பெயர் அடிக்கும் போதெல்லாம் அம்மாவின் உருவம் நினைவுக்கு வந்தது. அம்மாவின் பெயர் ஹோட்டல் அன்னபூர்ணா இல்லை. அன்னபூர்ணேஸ்வரி. ஆனாலும் 'அ' என்று சிறு உளியைச் சுத்தி அடியோடு நகர்த்தும் போது, அம்மாவின் நினைவு வந்தது.

கிழவி தீபத்துக்கு வருகிறேன் என்று ஆள் அனுப்பியிருந்தது. காத்திருந்தான். வரவில்லை. தீபம் முடிந்த பிறகு யாரோ வந்து 'உடம்புக்குச் சுகமில்லை; அத்தினி கூட்டத்துல வரமுடியாது' என்று சொல்லி விட்டதாய்ச் செய்தி வந்தது.

''என்னவாம் உடம்புக்கு?''

''தள்ளாமை தான்.''

ஜுரம், தலைவலி, வயிற்றுப் போக்கு என்றால் சரியாகிவிடும். எங்கேயாவது மாத்திரை, மருந்து வாங்கி அனுப்பலாம். தள்ளாமைக்கு என்ன மருந்து.... சாப்பாடு தான். ஊட்டமான உணவு தான். ஒரு சிறிய ஹார்லிக்ஸ் பாட்டில் வாங்கிச் செய்தி சொன்னவன் மூலம் அனுப்பினான். 'பால் இல்லாட்டியும் வெந்நீர்ல கரைச்சுக் குடிக்கச் சொல்லு' என்று தெரிவித்தான்.

கிழவி குடித்ததோ இல்லையோ தெரியவில்லை..... போய் ஒரு தடை பார்த்து விட்டு வரமுடியவில்லை. தீபத்தை ஒட்டி எல்லாப் பாத்திரக் கடையும் இரவு, பகலாய் ஒருநாள் கூட விடுமுறை இல்லாமல் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன.'நீ பாட்டுக்கு ஊரைப் பாக்கப் போயிட்ட. இங்க பேர் அடிக்க ஆள் இல்லை. நேத்திக்கு மட்டும் நாப்பது தவலை போச்சு தெரியுமா?' என்று பேச்சு வரும்.

'உன்னைய வுட்டா ஆள் இல்லைன்னு போவாதே. நடேசா... நானே எலக்டிரிக் மிஷின்ல பேர் அடிச்சுடுவேன். உன் பொழப்பைக் கெடுக்க வேணாமேன்னு பார்க்கறேன்!' தாக்குதல் வரும். பதில் பேசாது கேட்டுக் கொள்ள வேண்டும்.

ஒரு முதலாளி, ஒரு கடையாய் இருந்தால் பேசி, அழுது சமாதானம் சொல்லலாம். பதினெட்டு முதலாளி, பதினெட்டுக் கடை.

மலையடிவாரத்தில் கோயில். கோயில் எதிரே கோடு போட்டாற் போலக் கடைகள். அத்தனையும் பாத்திரக் கடைகள். எல்லாப் பாத்திரக்கடையும் நடேசனிடம் தான், பெயர் அடிக்க அனுப்பும். எப்போது அனுப்பும் என்று சொல்ல முடியாது. எப்போது வேணுமானாலும் அனுப்பும். வியாபாரம் ஆக ஆகப் பாத்திரம் நடேசனிடம் வந்து கொண்டே இருக்கும்.

ஓர் எழுத்து இருபது பைசா என்று ரேட். சில சமயம் இருபது. சில சமயம் எழுபது ரூபாயும் கிடைக்கும்.

ஹோட்டல் அன்னபூர்ணா, ஜெயராஜ் நாடாரிடம் நூறு தம்ளர்கள் வாங்கி நாடார் மூலமாகவே இவனிடம் தம்ளர்களை அனுப்பியிருந்தது. சிறு உளியும், மெல்லிய சுத்தியலும் சமநேரத்தில் இயங்க எல்லாத் தம்ளர்களிலும் ஹோட்டல் அன்னபூர்ணா, அன்னபூர்ணா என்று பெயர் அடிக்கிற போதுதான் அம்மா நினைவு வந்தது. கிழவி எப்படியிருக்கிறதோ தெரியவில்லை.

'அக்காளைக் கொண்ட இடத்தில் இந்த ஜாதகன் உக்காந்து சாப்பிடுவான்' என்று சின்ன வயசிலேயே நடேசனைப் பற்றி ஜோஸ்யம் சொன்னார்கள்.

'அட கிரகச்சாரமே.... இப்படியா உன் தலையெடுத்து இருக்கணும்?' அம்மா நொந்து கொண்டாள்.

'அவனவன் பத்துப் பைசாக் காசுக்கு நாயா, பேயா அலையறான்... அக்கா ஊட்ல உட்கார்ந்து சாப்படறது என்ன தப்பு. அண்ணன், தம்பி உறவை விட மாமன், மச்சான் உறவு உசத்தி. ஒண்ணும் தப்பில்லை.' யாரோ சமாதானம் சொன்னார்கள்.


கிழவிக்கு உடன்பாடில்லை. 'அக்கா ஊட்டுக்குப் போனமா..... பார்த்தமா வந்தமான்னு இருக்கணும். அங்க கை நனைச்சதாத் தெரிஞ்சா நெஞ்சுல ஏறி மெதிப்பேன். தின்ற சோறை விட, மனுஷாளுக்கு மானம், மரியாதை தான் முக்கியம்.'

ஆனால் அவன் அக்காளைக் கொடுத்த இடத்தில், உட்கார்ந்து சாப்பிடுவதாய்த் தான் வாழ்க்கை அமைந்தது. அதற்கு அக்

காள் கையால் சோறு என்று அர்த்தமில்லை. அம்மா சொல்லிடுக்க என்று கை நனைக் காமல் இருக்கிற பதினாறு வயசுப் பைய னைக் கண்டு அதிசயப்பட்ட அத்தான் அவ னுக்குப் பாத்திரக் கடையில் சொல்லி வேலை வாங்கிக் கொடுக்க, உளியும், சின்னச் சுத்தியலுமாய் உட்கார்ந்து காலில் பாத்திரம் இடுக்கிப் பேர் அடிக்கிற வேலை கிடைத்து விட்டது. இது உட்கார்ந்து செய் கிற வேலை. உட்கார்ந்து சாப்பிடுகிற வேலை!

நேர் எதிரே கோயில் கோபுரம். அதற் குப் பின்னே பெரிய மலை. கோடு கிழித் தது போலப் பாத்திரக் கடை வரிசையின் கடைசிக் கடையில் ஆஸ்பெஸ்டாஸ் நிழ லில் நடேசன் பேர் அடித்துக் கொண்டி ருப்பான். தலை தூக்க மலை தெரியும். கோபுரம் தெரியும். பெரிய கொடுப்பினை. அதை விடக் கொடுப்பனை இடது பக்கம் ஐம்பதடி தூரத்தில் உள்ள பழைய வீடு. வெண்தாடியும், சுடர் முகமுமாய் இருக்கிற விசிறிச் சாமியார் வீடு. உன்னிப்பாய்க் காது கொடுத்துக் கேட்க விசிறிச் சாமியின் கூர் மையான குரல் அவ்வப்போது கேட்கும்.

''கோ.... கோ..... கம் பை டென் ஓ க்ளாக்.'' இப்போதும் கூட யாரையோ சாமி விரட்டிக் கொண்டிருந்தது. வாசலில் நின்ற வர்கள் மெல்லத் திரும்பிக் கோயில் பக்கம் போனார்கள். நடேச னைப் போல விசிறிச் சாமிக் கும் இந்த ஊர் சொந்தம் இல்லை. வடக்கே காசி தேச மாம். விசிறியும், தேங் காய்ச் சிரட் டையுமாய் ஊர் சுற்றிக் கொண்டி ருந்த இவரைச் சிலர் காக போட்டு வீடு வாங்கி





"எனக்கு இங்கிலீஷ் பர்த்டே, டமில் பர்த்டே இரண்டும் வருதே, இந்தி பர்த்டே ஏம்மா வரலே...?"

இங்கே உட்கார வைத்து விட்டார்கள். தினம், தினம் நிறையப் பேர் மாலை மரியாதை சகிதம் தேடி வருகிறார்கள். அவர் காலில் முட்டி முட்டி அழுது ஆசீர்வாதம் வாங்கிப் போகிறார்கள். சாமி ஆங்கிலத்தில் பேசும். கொச்சையாய்த் தமிழ் பேசும். செக்கச் செவேர் என்கிற உள்ளங்காலும், சில சமயம் வலது உள்ளங்கையும் அழிக்கம்பிகளுக்கு அப்பால் உற்றுப் பார்க்கும் போது தெரியும். வந்து சுத்தியும் உளியுமாய் உட்கார்ந்து மலையை ஒரு தடவையும், விசிறிச் சாமியை ஒரு தடவையும் பார்த்துக் கும்பிட்ட பிறகுதான் தொழில் துவங்குவது இவனுக்கு வழக்கம்.

அம்மாவுக்குத் தள்ளாமை என்று விசிறிச் சாமியிடம் சொல்லலாமா? யார் யாரோ வந்து என்னென்னவோ குறை சொல்கிறார்கள். அது நிமிர்ந்து பார்த்த மாத்திரத்திலேயே எல்லாப் பாவமும் பொடிப் பொடியாயிடும் என்று பேசுகிறார்கள். போய்ப் பார்த்துப் பேசுவோமா?

நூறாவது தம்ளர் அன்னபூர்ணா என்று அடித்து நிமிர்ந்த போது இடுப்பும், முதுகும் கைகளும் வலித்தன. எழுந்து நின்று உடம்பு மு றி க் க ப் படபடவென்று சொடுக்கு விழுந்தது.

"டேய்.... நூறு தட்டுக்கு ஆர்டர் கொடுத்திருக்கான் ஹோட்டல்காரன். எப்ப செய்யறே?"

"எப்ப தர்றியோ அப்ப...."

"நாலு தட்டு ஸாம்பிள் அனுப்பியிருக்கேன். எது சரின்றாங்களோ அது அனுப்பணும். போயிடாதே."

ஒரு நடை கோவிலுக்குப் போய் விட்டு வரலாம். அத்தான் கோவில் மண்டபத்தில் புத்தகக் கடை வைத்திருக்கிறார். பெரிய நான்மணி மாலை, ஞான வெட்டியான், கை ரேகைக் களஞ்சியம், மலைக் கோயில் மகிமை, மஸ்தான்சாகிப் துதிப்பாடல்கள் என்று புத்தகங்கள் விற்கிறார். கடையில் உட்கார்ந்து உட்கார்ந்து அவருக்கும் உடம்புக் கடுப்பு வந்துவிடும். இரு என்று அவனைக் கடையில் உட்கார வைத்து விட்டு ஒரு ரவுண்டு நடந்து விட்டு வருவார். இல்லை.... டீ சொல்லிவிட்டு ஊர்க் கதை பேசுவார்.

இப்போது அவனாகப் போய் மாட்டினால் ஒருமணிநேரம் அசைய முடியாது போகும். அதே சமயம் உட்காரவும் முடியவில்லை. போய் விசிறிச் சாமியாரைப் பார்த்துப் பேசுவோமா?

இதற்கு முன் இரண்டு தடவை பேசியிருக்கிறான். குறை ஏதும் கேட்கவில்லை. கும்பிட மட்டும் போயிருக்கிறான்.

மறுபடி போய் விசிறி சாமியைப் பார்க்கலாமா? உள்ளே எட்டிப் பார்த்தான்.

அழிக்கம்பிகளுக்கு உள்ளே சாமி உட்கார்ந்திருந்தது.

"யார் அது?" குரல் கொடுத்தது.

"நா நடேசனுங்க."

ஒரு பையன் கதவு திறந்து விட, உள்ளே போனான்.

கும்பிட்டான்.

"என்ன பண்றே நீ?" சகலமும் மறந்து போய்க் கேட்டது.

"இங்கதான் பாத்திரம் பேர் அடிக்கிறேனுங்க."

"என்ன?"

"பாத்திரத்துல பேர் அடிக்கிறேன் சாமி... வாங்கறவங்க பேரு...."

"பேர்ல என்ன இருக்கு?"

"சாமி....?"

"பேர்ல என்னாடா இருக்கு?"

"புரியலை சாமி."

"உம் பேரு நடேசன்னு யார் சொன்னா?"

யார் சொன்னா... யோசித்தான்.

"பேரு முக்கியமா? நீ முக்கியமா?"

"தெரிலை சாமி. எங்கம்மாளுக்கு உடம்பு முடியலை.... அதான்...."

"அம்மான்றது யாரு?"

"என்னையப் பெத்தவ சாமி."

"யாரு சொன்னது?"

"எல்லாரும் சொன்னாங்க."

"நான் சொல்றேன், அதோ ரோட்ல போறவதான் உங்கம்மான்னு. கேப்பியா?"

அது எப்படி என்பது போல் நின்றான்.

"மத்தவங்க சொன்னது நெஜம். நான் சொல்றது பொய்யா, ஊர் சொன்னது நம்புவே. என் பேச்சு நம்பமாட்டியா?"

"இல்லை சாமி. நீங்க பொய் சொல்ல மாட்டீங்க...."

"அப்போ அம்மான்றது பேரா? ஆளா?"

"தெரியலையே சாமி."

"தெரிஞ்சுக்கிட்டு வா. போ."


பேசாது நின்றான்.

"போடா..." அதட்டியது.

வெளியே வந்து கையெடுத்துக் கும்பிட்டான். குழப்பமாய் இருந்தது. சாமி ஏதோ கோவமாயிருக்கு என்று நினைத்துக் கொண்டான்.

"எங்கேடா போயிட்ட?" ஜெபராஜ்

காலத்தை வெல்லும் காளியின் திறன்



காலையோ, மாலையோ எந்நேரமானாலும் எல்லா உணவுமே நொடியில் தயார் — காளியின் உதவியால்.

காளி காப்பர்-பாட்டம் ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் சமையல் பாத்திரம் —

- எலெக்ட்ரோ பொலிஷன் முறையை கையாண்டு உலகத்தரம் வாய்ந்த விஞ்ஞான தொழில்நுட்பத்துடன் தயாரிக்கப்பட்டது.
- குறைந்த நேரம், எரிபொருள் சிக்கனம், அத்துடன் சுவை நிறைந்த சத்தான உணவு.
- சிறந்த தரமான பொருட்களுக்கான இந்திய அரசின் தேசிய விருதினைப் பெற்றது.
- உயர்தர, கனமான சேலம் ஸ்டெயின்லெஸ் ஸ்டீலினால் ஆனது.

சாஸ்பான் / கடாய் / தோசைக்கல் / ஸ்கில்லெட்ஸ் / ஸ்டீம் குக்கர் (பேடன்ட் 200)

காளி—என்றும், எப்பொழுதும் உங்கள் இணைபிரியா துணை.

IS 4501

ஐ.எஸ்.ஐ. முத்திரையுடன் கூடிய ஒரே பிராண்ட்.

காளி kali kali

காப்பர்-பாட்டம்

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
சமையல் பாத்திரம்.

விற்பனை ஏஜென்ட் : ஸ்ரீவித்யா ஏஜென்ஸிஸ், கும்பேஸ்வரர் சன்னதி, கும்பகோணம் 612 001. போன்: 20136. சில்லறை விற்பனை நிலையம்: ஸ்ரீ எம்.வி.எம். ஸ்டோர்ஸ் (காளி பிராண்ட்), கும்பேஸ்வரர் சன்னதி, கும்பகோணம் 612 001. போன்: 20136. வட்டார ஏஜென்ட்: சம்மு & கம்பெனி, த.பெ. எண்: 3622, M.G. ரோடு, எர்ணாகுளம், கொச்சி 682 035. போன்: 361139-

Imageads 3161

நாடார் கத்தினார்.

''வந்துட்டேன்.''

''பேர் அடிக்கணுமாம். எதிரே தவலையுடன் நின்றிருந்த கிழவியைக் காட்டினார். போணும், போணும்னு பறக்குது. கிழவி சுற்றுப்பக்கக் கிராமத்திலிருந்து வந்திருப்பாள் போலத் தெரிந்தது. ரவிக் கையின்றிப் பழம் புடைவை மட்டும் போர்த்திச் சுவரோரம் நின்றிருந்தாள்.

''தட்டு வாங்கலையா?'' உட்கார்ந்தான்.

''சாயந்தரம் வருதாம். நீ இத முடி.''

''என்னாம்மா உன் பேரு?''

''பொன்னியம்மாள்.''

''உட்காரு.'' கிழவி உட்கார, தவலையை இடுக்கிக் கொண்டு சுத்தியலால் புள்ளி போட்டான். 'பொன்னியம்மாள்' என்று அடித்து முடித்தான். கிழவி நடுங்கும் கைகளால் தவலை வாங்கியது, பேர் அடித்த இடம் தடவியது, படிக்கத் தெரியாது என்பதால் வியப்புடன் பார்த்தது.

''என்ன எழுதியிருக்கு?''

''பொன்னியம்மாள்.''

''ஐய்ய... அது எம்பேராச்சே. அத ஏன் எழுதின?''

''நீதான சொன்ன?''

''நீ எம் பேரு கேட்ட..... சொன்னேன். அதுவா அடிக்கிறது?''

''ஏ கிழவி விளையாடறியா?''

''இது எம் பொண்ணு வாங்கினது. அவ பேர்ல போடணும். இத அழிச்சிடு.''

''அழிக்கிறதா.... தவலை பொத்துக்கிடும்.''

''ஐயோ... எம் பேர் போட்டா வந்து மொலு மொலுன்னு பிடிக்கக்குவாளே....''

''என்ன செய்யச் சொல்றே?''

''மாப்பிளை கோவக்காரன். நீதானடி துட்டுக் குடுத்த. உங்க ஆத்தா பேர் ஏன் போட்டேன்னு என் பொண்ணைப் போட்டு அடிப்பான். என் பொண்ணு பேரைப் போட்டுரு ராசா....''

''பொண்ணு பேரு என்ன?''

''மணிமேகலை.''

நடேசன் யோசித்தான். பொன்னியம்மாள் என்று எழுதியாகிவிட்டது. இப்போது மணிமேகலை என்று அடிப்பதா? பொன்னியம்மாள் மகள் மணிமேகலை என்று அடித்தால் என்ன! ஊரில் நாலைந்து மணிமேகலை இருக்கலாம். பொன்னியம்மாள் மகள் மணிமேகலை ஒருவர்தான் இருக்க முடியும்.

அடித்து முடித்த போது கிழவியிடம் யாரோ பேசிக் கொண்டிருப்பது தெரிந்தது.

''ஏன் தவலை வாங்கின? தூக்குத் தானே வாங்கச் சொன்னேன்.''

''அவங்க தவலை தானே கொடுத்தாங்க. பதிலுக்குத் தவலை கொடுக்காம தூக்குக் கொடுத்தா மரியாதையா? என் கிட்ட இருபது ரூபா இருந்தது. உன் துட்டோட என் துட்டையும் போட்டு வாங்கினேன்.''

''தவலை எங்கே?''

''பேர் அடிக்கிறான்.''

''என்ன பேரு?''

''உம் பேருதான்.''

''நாசமாப் போவ... என் பேர் எதுக்கு?''

''உம் புருஷன் இட்டப்போறானேன்னு தான் உம்பேரை அடிக்கச் சொன்னேன். இந்தாளு முதல்ல எம் பேரு அடிச்சுட்டான்....''

''உம் பேர் வேறயா? அட கஷ்ட காலமே.''

''உம் பேரு என்னான்னான். சொன்னேன். உடனே தவலைல அடிச்சிட்டான். நான் என்னாடி பண்ணுவேன்?''

''ஐயோ... ஐயோ.... எம்ப்பா, தவலையைக் குடு.''

'பொன்னியம்மாள் மகள் மணிமேகலை' என்று சுத்தமாய்ப் பொறிக்கப்பட்டிருந்தது.

''அட கூறு கெட்ட முண்டமே...'' மகள் கிழவியை நோக்கிக் கத்தினாள்.

''என்னாடி...?'' கிழவிக்குக் குரல் நடுங்கிற்று.

''இதப் போய் எப்படிக் கல்யாணத்துக்குக் குடுக்கறது?''

''ஏன்?''

''உம் பேரு, எம்பேரு போட்டா இன்னொருத்தருக்குத் தருவாங்க. கல்யாணப் பொண்ணுபேரு போடவேணாமா? போட்டாக் கல்யாணப் பொண்ணு பேரு போடணும். இல்லியா சும்மா குடுக்கணும் தவலைய...''

''புதுசு தானே... நம்ம ஞாபகமா நம்மபேரு போட்டு....''

''ஆமா... நம்ப பேரு போட்டு.... நம்ம ஆண்டுக்கிட்டிருந்ததைத் தூக்கி குடுத்ததால்ல ஆயிடும்.... அவ என் கல்யாணத்துக்கு இந்த மாதிரி பேர் போட்டுக் குடுத்ததையே திருப்பி அவளுக்கு வச்சிட்டம்னுல நினைப்பா.. இத அழிக்க வேற முடியாது....''

''என்னம்மா?''

''காயமே இது பொய்யடான்னு ஹெட்கிளார்க் பாடறாரே ஏன்?''

''வெங்காயம் நறுக்கும் போது விரலை நறுக்கிட்டதாச் சொல்லி டைப் பிஸ்ட் போட்டிட்டு வந்திருக்கும் கட்டைப் பற்றிய தன் சந்தேகத்தை இப்படி வெளியிடறார்!''

- கரம்.



''பேரு தப்பு.''

''பேரு... தப்பா... இது ரெண்டாந்தடவ.

''ஏம்மா தவலை குடுக்கச் சொல்ல பேர் கரெக்டா சொல்ல மாட்டீங்களா?''

''ஆமாய்யா... இது கூறு கெட்ட மாதிரி இது பேரையும் எம் பேரையும் சொல்லி வச்சிருக்கு. கல்யாணப் பொண்ணு பேரு போடணும்.''

''இதுவே மூணு ரூபா எண்பது பைசா.''

''பேர் அடிக்கிறதுக்கா அத்தினி... அப்படியே குடுக்கறத வுட்டுட்டு எதுக்குப் பேரு, புண்ணாக்கு எல்லாம். இந்தப் பீடை பண்ற கூத்து.....'' மகள் கத்தினாள். கிழவி வெறிக்க உட்கார்ந்திருந்தது.

''நீ பஸ்ல வராதே. நடந்து வா. அப்பத்தான் உனக்குப் புத்தி வரும்.''

கிழவி தலை குனிந்து கொண்டாள். அவள் கண்களில் நீர் திரண்டது. முணுமுணுப்பாய் ஏதோ பேசினாள்.

''குறைக்கக்க முடியாதா?''

''முடியாதும்மா.''

''கல்யாணப் பொண்ணு பேரு போடலாமா?''

''போடலாம்.''

''மொய் எழுதினாமாதிரி போடலாமா?''

''போடலாம்.''

''அப்ப போட்டுரு. தூக்கு வாங்கினாப் போதும்னேன். கோயிலுக்குப் போயிட்டு வரதுக்குள்ள தவலைய வாங்கி.....''

''அவங்க தவலைதானடி நமக்குச் சீரு வச்சாங்க. நாமளும் பதிலுக்குத் தவலை தான வைக்கணும். அதான் என் துட்டுப் போட்டு....''

இப்ப நாலு ரூபா கூட செலவு இருக்கே. இந்த துட்டு யார் தரது? நீ தரியா?''

''என் கிட்ட பஸ்ஸுக்குக் கூட துட்டு இல்லை.''

''நீ நடந்து வா. அப்பத்தான் புத்தி வரும்.''

''உன்னாண்ட இருந்தாக் குடேன். ஊருக்கு வந்து தரேன்.'' யாரிடமோ கிழவி கடன் கேட்டாள். அங்கே ஏழைமை தெளிவாய்த் தெரிந்தது.

நடேசன் தவலையை இடுக்கினான். கல்யாணப் பெண் பெயர் கேட்டான்.

'பொன்னியம்மாள் மகள் மணிமேகலை, செல்வி வனஜாட்சிக்குத் திருமணப் பரிசு' என்று வெட்டினான்.

''எதுக்குச் செல்வி, திருமணம் எல்லாம்... அதுக்கு வேற அனாவசியத் துட்டு புடுங்கவா?''

''எனக்குத் துட்டு வேணாம்.''

''ஏன்?''

''அந்தத் துட்டுல கிழவிக்குக் காப்பி வாங்கிக் குடுத்து, பஸ்ல கூட்டிட்டுப் போ. நடக்க வுடாத... பாவம்.''

''கிழவி அழுதவுடன பாசம் பொங்கிடுச்சாக்கும்.''

''ஆமா. எங்காத்தா இப்பிடித்தான். தூக்குக் குடுத்தா பதிலுக்குத் தூக்குத் தான் சீர் தரணும். தவலைன்னா தவலைதான் தரும். வாங்கினது என்னவோ அதுதான் தரும். அளவு கூடப் பாத்துச் சரியா வாங்கும். இத எடுத்துக்கிட்டு போ. நாடார்..... தட்டு வந்துருக்கா?'' குரல் கொடுத்தான்.

மகளும், கிழவியும் சிறிதுநேரம் அங்கேயே நின்றார்கள். மகள் நகர, கிழவி திரும்பி நடந்தாள். நாலடி நடந்து விட்டு ஓடி வந்தாள்.

''உங்க ஆத்தா இருக்குதா?''

''இருக்குது.''

''அவளுக்கு ஒரு குறையும் வராது.'' அவன் முகம் வழித்து நெட்டி முறித்தாள். அவள் கண்களிலிருந்து நீர் வழிந்து கோடாய் விழுந்தது.

நடந்து போகும் கிழவியை நடேசன் பார்த்தபடி இருந்தான். தேரடிக் கும்பலில் இருவரும் நடந்து மறைந்தார்கள்.

'அம்மான்றது ஒரு பேரா... ஒரு ஆளா? அதோ ரோட்ல போவுதே, அவதான் உன் அம்மான்னு சொல்றேன். மத்தவங்க சொல்றது நிஜம். நான் சொல்றது பொய்யா?'

விசிறிச் சாமியின் குரல் காதில் ஒலித்தது. நடேசன் உடம்பு உதறிப்போட்டது.

''சாமி....'' ஓடிப்போய் அழிக்கதவுக் கருகே நின்றான்.

''என்னாடா?'' சாமி அதட்டியது.

என்ன சொல்வது... எல்லாவற்றையும் எப்படிச் சொல்வது. நடேசனுக்குத் தொண்டை அடைத்தது.

''ஒண்ணுமில்லை சாமி.''


விசிறிச் சாமி இடி போன்ற குரலில் சிரித்தது.

''அங்கேர்ந்து ஓடிவந்து ஒண்ணுமில்லை சாமின்றான். ஒண்ணுமேயில்லையாம்....'' மறுபடி வாய் விட்டுச் சிரித்தது.


நடேசனும் சிரித்தான்.

''இப்ப இருக்கிற கல்வித் திட்டத்தை மாத்தியாகணும்... புஸ்தகப் படிப்பை வெச்சுக்கிட்டுப் பொழைக்க முடியுமா, சொல்லுங்க...''

''நிச்சயமா மூட்டை தூக்கிப் பொழைக்கலாம்...!''




It reflects on you...



THE HINDU

One of the finest newspapers in India, specialises in the firsthand delivery of accurate facts. That's why it is the south's favourite newspaper!




Frontline

A general interest magazine that covers everything from Politics to Arts and Wildlife—all in vivid colour.

SPORTSTAR

India's most popular sports magazine—coveted for its breathtaking photography and exhaustive Indian and international sports coverage.



All from THE HINDU group of publications, known for its commitment to quality journalism.

Our annual publications include **INDIAN CRICKET,** the only almanac of cricketing reviews and statistics of its kind in India, **THE SURVEY OF INDIAN INDUSTRY,** a comprehensive review of Indian industrial development, and, **THE SURVEY OF INDIAN AGRICULTURE,** the first feature-digest with agricultural facts and figures.

Honest. Authentic.

THE HINDU

Anna Salai, Madras - 600 002.

கம்ப்யூட்டர் கிராமம்

சுஜாதா





1

"வள்ளிக்குப்பமா?" என்றான் மனோஜ், தலையில் கை வைத்துக் கொண்டு.

"ஆம். நீ தமிழன்தானே? தமிழ்நாட்டில் எங்கே இருக்கிறது அந்தக் கிராமம், வள்ளிக்குப்பம்! மேப்பில் தேடு!" ஷண்பேகர் பென்ஸிலைக் கடித்துக் கொண்டு கண்ணாடிக்கு வெளியே பம்பாயின் கான்க்ரீட் மறைத்த தொடுவானத்தைப் பார்த்தான்.

பம்பாய் மூச்சுத் திணறிக் கொண்டிருந்தது. வானத்தில் மான்ஸூன் ஆயத்தங்கள் தெரியக் கேட்வே அருகில் படகில் அஜாக்கிரதையாக ஆடிக் கொண்டு, டூரிஸ்ட்டுகள் இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

"தமிழ்நாடு மில்லியன் மேப்பில் கூட இந்தக் கிராமத்தின் பேர் இல்லை. கெஜட்டியரில் இல்லை. கலெக்டருக்கு எழுதினால் அவருக்கே தெரியாதாம்!"

"தேடுவோம்" என்றான் மனோஜ். "கலெக்டருக்காவது தெரிந்திருக்க வேண்டும்."

"மனோ உனக்கு சமைக்கத் தெரியுமா?"

"ஆம்லெட் பண்ணுவேன். டோஸ்ட் பண்ணுவேன்."

"தங்குவதற்கு இடம் கிடையாதாம். பக்கத்தில் ஆரம்பாக்கம் என்று ஒரு தாலுக்கா டவுன் இருக்கிறதாம். அதில் கீதா லாட்ஜ் என்று ஒரே ஒரு ஓட்டலில் ஒரு ரூம் இருக்கிறதாம். பி. ஆர். சிவசங்கரன் சொன்னான்."

"உத்தமம்," என்றான் மனோ.

மனோஜ் யோசனையில் ஆழ்ந்திருந்தான். கல்யாணத்தை ஒத்திப் போடுவதா, கல்யாணம் பண்ணிக் கொண்டு, அவளையும் இந்தக் கிராமத்துக்கு அழைத்துச் செல்வதா? வருவாளா? சாயங்காலம் ப்ரமிளாவைக் கேட்டுப் பார்க்க வேண்டும். அராஜகத்தனமான, கருணையற்ற அதிகாரிகள். கல்யாணம் செய்து கொள்ளப் போகிறான் என்று அவர்களுக்குத் தெரியாதா?

"யோசிக்கிறாய். யோசிக்கக் கூடாது."

"கல்யாணத்தைப் பற்றித் தான்."

"ஒத்திப் போடு. லெட்டர் எழுதிக் கொண்டு இரு. கிராமத்திற்கு

அழைத்துச் சென்றால் முதல் மாதம் டிவோர்ஸ் வாங்கி விடுவாள்.''

''அநியாயம். கவண்ட் ஆஃப் மாண்டி க்றிஸ்டோ போல உணர்கிறேன்.''

டெலக்ஸ் செய்தி வந்தது.

'எல்லாம் தயார். சுமாரான ரஸ்தா இருக்கிறது. பளுவான சாதனங்களை, குறிப்பாக ஆண்டென்னாவைக் கடத்துமுன் லோடு தாங்குமா என்று கவனித்துக் கொள் ளவும். மற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டன.'

''இதெல்லாம் மார்க்கெட்டிங் டிபார்ட் மெண்ட் வேலையில்லையா?'' என்றான் மனோஜ் ஆயாசத்துடன்.

ஷண்பேகர் ''லுக் மனோஜ், விதி நம்மை குக் கிராமத்துக்குத் துரத்துகிறது'' என்றான்.

''கம்ப்யூட்டர் ஸாப்ட் வேர் எழுதுகி றாய். விதியில் எல்லாம் நம்பிக்கை வைத்தி ருக்கிறாய்....''

''அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?''

''கம்ப்யூட்டர் என்றால் கொஞ்சம் பகுத்தறிவான - மூட நம்பிக்கையற்ற ஆசாமி என்றுதான் சொல்வார்கள்.''

''யார் சொன்னது? எல்லாம் தப்பு. எங்கள் அனைவருக்கும் ஏதாவது மூடநம் பிக்கை இருக்கிறது. நான் எப்போதும் பிள்ளையார் சுழி போடாமல் ப்ரொக்ராம் எழுத ஆரம்பிக்க மாட்டேன்.''

''இந்தியாவில்தான் இது நடக்கும். ராகு காலம் கூடப் பார்ப்பாய் இல்லையா நீ?''

''அய்யோ! ராகு காலத்தில் ப்ரொக்ராம் எழுத ஆரம்பிக்கவே மாட்டேன்.''

ஷண்பேகர் எப்போது விளையாட் டாகப் பேசுகிறான். எப்போது சீரியஸ் என்று கண்டுபிடிப்பது சிரமம். நிஜமாகவே அவனுக்கு இதில் எல்லாம் நம்பிக்கை இல்லையென்றுதான் நி னை த் த ா ன். ஆனால் தவறாமல் பிள்ளையார் சுழி ஸ்ரீ ராம ஜெயம் எல்லாம் எழுதுவான், ஓர் அதிநவீனமான 'ஸி ப்ளஸ் ப்ளஸ்' ஆணைத் தொடர் எழுதுவதற்கு முன்.

சாயங்காலம் ஆபிசிலிருந்து நேராக கல்பாதேவி போய், ப்ரமிளாவைச் சந்தித்தான். ''ப்ரமிளா, நம் கல்யாணத்தைத் தள்ளிப் போட வேண்டியிருக்கும் என்று தோன்றுகிறது.''

ப்ரமிளா தன் கைப்பையிலிருந்து சிறிய கைக்குட்டையை எடுத்து அழ ஆரம்பித் தாள்.

கொஞ்ச நேரம் அவளைக் கண் கொட்டாமல் பார்த்து விட்டு, ''அழுதால் கூட அழகாய் இருக்கிறாய்!'' என்றான்.

அவள், அவன் மார்பில் இரண்டு கைக ளாலும் குத்தினாள்.

''அழாதே, நான் சொல்வதைக் கேள். நான் ஒரு இன்ஸ்டாலேஷனுக்காகத் தமிழ் நாட்டில் ஒரு குக்கிராமத்துக்குப் போக வேண்டியிருக்கிறது.''

''எப்போது?''

''கல்யாணம் ஆன மறுநாள் போயே ஆக வேண்டும். இல்லை, வேலை போய் விடும். என் பாஸ் கிராதகன்.''

''நானும் வருகிறேனே. ராமன் போகு மிடமெல்லாம் சொர்க்கம் அண்ட் ஆல்தட்,'' என்றாள்.

''இம்பாஸிபிள்.''

''நான் கிராமத்துக்கு வந்து உனக்குச் சமைத்துப் போட மாட்டேனா?''

''உனக்குச் சமைக்கத் தெரியுமா? மை காட்!''

''ஆம்லட் டோஸ்ட் பண்ணுவேன்.''

''போதாது. உன்னை அழைத்துப் போவதில் பல சிக்கல்கள். அந்தக் கிராமம் ரொம்பச் சிறியது. இருக்க இடம் போதாது.''

''மரத்தடியில் வேண்டுமானாலும் இருப்பேன்,'' என்றாள் ப்ரமிளா.

''அதெல்லாம் வெட்டிப் பேச்சு. உனக்கு ஏஸி இல்லாவிட்டால் 'உஸ் உஸ்' என்பாய்.''

''அப்பா, பாருங்கப்பா மனோ வந்து மேரேஜை போஸ்ட்போன் பண்ணணும்ங் கறது!'' என்று அவள் அப்பா வந்ததும் புகார் செய்தாள்.

''என்ன ஆச்சு மனோ?'' என்றார் ராமச்சந்திரன். அவருக்கு பைப் பிடிப்பது, ப்ரிட்ஜ் , கால்ஃப், மகள் கல்யாணம் எல்லாம் ஒரேதான்! விவரமாகச் சொன் னான்.

''மாப்பிள்ளை, இன்ஸ்டாலேஷன் எத்தனை நாளாகும்?''

''எட்டு வாரத்தில் முடிந்து விடும்.''

''அவர் சொல்வதும் சரிதான். கல்யா ணம் பண்ணிக் கொண்ட உடனே பிரிந்தால் ரொம்ப வருத்தமாக இருக்கும்.''

''நான் கூடப் போகிறேன் என்று சொல் கிறேனே!''

''ப்ரமிளா பி ரீஸனபிள்! நீ பி.எஸ்ஸி. பரீட்சை எழுதி முடிக்க வேண்டாமா? அவன் பின்னால் போவாயா? இந்த ஒத்தி வைப்பு எல்லா விதத்திலும் சௌகரியமாக இருக்கிறது. எனக்கும் செலவழிக்கப் பணம் கொஞ்சம் வர இரண்டு மாதம் ஆகும். உன் பரீட்சையும் முடிந்து விடும். மனோஜ் எங்கேயும் போக மாட்டான். தினம் லெட்டர் போட்டுக் கொள். ஒருநாள் விட்டு ஒருநாள் போன் பேசிக் கொள். எஸ்.டி.டி. இருக்கிறதல்லவா!''

''ரொம்ப கிராமம் ஸார். எலக்ட்ரிஸிட்டியே இல்லை.''

''பெயர்?''

''வள்ளிக்குப்பம். தமிழ்நாட்டில் எங்கிருக்கிறது என்று முதலில் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும்.''

''அங்கே போய் என்ன வேலை?''

''ஒரு எர்த் ஸ்டேஷன் அமைக்கப் போகிறோம். விஸாட் என்று ஒரு டெர் மினல். கேயு பாண்டில் புதுசாக.''

''கிராமத்திலா?''

''ஆம்.''

''எதற்காகக் கிராமத்தில் அமைக்க வேண்டும்?''

''டெக்னிக்கலாக நிறையக் காரணங் கள். எலக்ட்ரிக்கல் நாய்ஸ் எலிவேஷன், இக்வட்டோரியல் பெல்ட் என வெள்ளைக் காரர்கள் அட்ச ரேகை தீர்க்க ரேகை போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். அந்த இடத்தில கிராமம் இருக்கிறது. வைக்கப் போகிறோம்.''

ப்ரமிளாவைச் சமாதானப்படுத்திய பின் அவனுக்குப் புறப்பட ஏழு மணி ஆகி விட்டது. ரூம் போவதற்கு முன் டெட்டால், பர்னால், ஒரு கெரோஸின் விளக்கு. முதல் உதவிப் பெட்டி, நோட்டுப் புத்தகம் என்று பற்பல அன்றாடப் பொருட்களைச் சேகரித்துக் கொண்டு ரூமுக்குச் சென்றான்.

ஷண்பேகர் அவன் படுக்கையில் படுத் துக் கொண்டு, 'பயலாஜி ஆஃப் டெத்' என்ற புத்தகம் வாசித்துக் கொண்டிருந்த வன், ''மனோஜ் இந்த உலகத்தில் யாரும் சாவதில்லை தெரியுமோ! மைகாட்! இதெல் லாம் என்ன?''

''கிராமத்தில் போய் இருப்பதற்கு.''

''ஏதோ அண்டார்ட்டிக்கா பிரயாணம் போல அல்லவா சேர்த்திருக்கிறாய்.''

''எல்லாம் தேவைப்படும்.''

விளக்குமாற்றைப் பார்த்து, ''நாம் அங்கே போய்த் தோட்டி வேலை செய்யப் போகிறமோ என்ன?''

''அதும் தேவைப்படும்.''

''மனோஜ் டேக் இட் ஈஸி. வாழ்க் கையில் இவ்வளவு தயாராக இருக்கவே கூடாது. நான் என்ன கொண்டு வரப் போகி றேன் தெரியுமோ? இரண்டு லுங்கி, நாலு புத்தகங்கள், டூத் பிரஷ். மற்றதெல்லாம் அங்கே பார்த்துக் கொள்ளலாம்.''

''உன்னையும் என்னையும் எப்படித் தான் ஜோடி சேர்த்தார்களோ!''

''கல்யாணம் என்ன ஆச்சு?''

''ஒத்திப் போடச் சம்மதித்து விட்டாள் ப்ரமிளா.''

''உத்தமமான காரியம். முதலில் கல்யா ணமே தேவையில்லாத ஒரு ஸ்தாபனம் என்பது என் அபிப்ராயம். ஒரு பாட்டில் பியருக்கு பியர் ஷாப்பையே வாங்குவது போல..''

''இதை எத்தனை தடவை சொல்லி விட்டாய்'' என்றான் அலுப்புடன்.

''மாற்றிச் சொல்கிறேன். ஒரு மசாலா தோசைக்கு உடுப்பி ஓட்டலையே வாங்கு வது போல!''

மனோஜ் அவன் மேல் பென்சிலை எறிந்தான்.

இரானி ஓட்டலின் டீக்கார பையன் டீ கொண்டு வந்து கொடுத்து, ''சாப்கா போன், ஆயா'' என்றான்.

போய்க் கேட்டதில் ப்ரமிளாவின் அம்மா காத்திருந்தாள்.

''என்ன விஷயம்?''

''மனோஜ் கல்யாணத்தை ஒத்திப் போட்டு விட்டாயாமே?''

''ஆம், ஒரு இன்ஸ்டாலேஷனுக்காக.''

''அதெல்லாம் முடியாது. கல்யாணம் குறிப்பிட்ட தேதியில் நடந்தே ஆகணும். என்ன இது? என் பெண்ணுடன் இஷ்டப் படி சுற்றி விட்டு, இஷ்டப்படி ஒத்திப் போட்டு, இப்போது வேறு ஏதாவது மனம் மாறி விட்டால்? படிப்பு முக்கியமல்ல. கல் யாணம் நடைபெறாமல் போய் விட்டால் என் பெண்ணுக்கு வேறு கல்யாணம் நடக் குமா? யோசித்துப் பார்.''

போனில் அதட்டல் பக்கத்தில் நிற்பவ ருக்கும் கேட்டது.

''நோ வே! மனோஜ் உன் வேலை போனாலும் சரி... நாங்கள் சப்போர்ட்டு பண்ணுகிறோம், அடுத்த வேலை கிடைக் கிறவரை! கல்யாணம் தள்ளிப் போடக் கூடாது!''

''இப்ப நீங்கள் என்ன சொல்கி றீர்கள்?''

''கல்யாணம் செய்து கொண்டு அவளை அழைத்துச் செல்.''

''அவள் படிப்பு?''

''படிப்பு முக்கியமல்ல. கல்யாணம் ஆகிற வரைதான் படிப்பு.''


திரும்ப வந்து சொன்ன போது, ஷண்பேகர் விநோதமாகச் சிரித்தான்.


''இதுதான் சந்தர்ப்பம். சொல்லாமல் கொள்ளாமல் புறப்பட்டு விடலாம்,'' என்றான்.

(தொடரும்)

''போற போக்கைப் பார்த்தா எல்லா கண்ட்ரோல்களையும் எடுத்துடுவாங்க போலிருக்கே!''

''பர்த் கண்ட்ரோலைக் கூடவா?''




புதிய
வேப்பம் சக்தி பச்சைநிற ஜவான்
ஆரோக்கியத்தின் காவல் ஜவான்
JAVAN
NEEM GUARDS YOUR HEALTH
JAVAN
வேப்பம் சக்தி பச்சைநிற
குளியல் சோப் இது
ஆரோக்கியத்தின் பாதுகாவல்.
உழைத்த உடம்பின் அழுக்கு
பிசுக்குகளைக் கழுவிப்
போக்கி துர்நாற்றம்
அகற்றுகிறது.
குளித்துப் பாருங்கள்: சிக்கன
விலையிலே புதிய ஜவான்.
புதிய
ஜவான்
குளித்திடப் பச்சைநிற சோப்
டாட்டா தயாரிப்பு
JAVAN
Creative Unit 7859 Tam

நேற்றுவரை நந்தவனம்

மீராவுக்காகப் பரிந்து கொண்டு அவன் பேசுவது இதுவே முதல் தடவை.

''சாப்பிடறீங்களா...?''

''நீங்க படுங்க. இத்தனை நேரத்துக்கு மேல என்ன சாப்பாடு.. பால் இருந்தாக் காய்ச்சி ரெண்டு பேருமா எடுத்துக்கறோம். போதும்.''

- இது மீரா.

குமரன் அதற்கு மேல் அம்மாவின் எதிரில் நிற்க முடியாதவனாய் மெள்ள நகர்ந்தான்.

இன்னும் கூட, தோளில் அவள் பற்றியிருப்பது போன்ற பிரமை...

'அதெப்படி இத்தனை நாளுமில்லாமல் - இன்று இவளிடம் இத்தனை சகஜமாய்ப் பேசினோம்...'

'இவன்தானாகட்டும்; என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வாள்... பேசாமல் இருந்த போது கூட மதிப்பாய் இருந்தோம் போலிருக்கிறதே... பேசி இப்படி 'சபல புத்திக்காரன்' என்று பெயர் சூட்டிக் கொள்ள வேண்டுமா...'

மீரா, மௌனமாய் பாலைக் காய்ச்சிக் கொண்டு வந்து வைத்து விட்டு, 'சட்'டென விலகினாள்.

''மீரா...''

''உம்?''

''நீ ரவி வீட்டுக்குப் போனதெல்லாம் அம்மாவுக்குத் தெரிய வேண்டாம். அநாவசியத்துக்குக் கவலைப்படுவா. ரவி பேரைச் சொன்னாலே அம்மாவுக்கு அலர்ஜி...''

''நான் எதுவுமே சொல்ல மாட்டேன்...''

''எதையும் சொல்லாம இருக்க வேண்டாம். நாம சித்த முந்திப் பேசின விஷயத்துல உனக்கு ஏதாவது அந்தரங்க ஆலோசனை நடத்தணும்னு தோணினா தாராளமா அம்மாகிட்ட கேட்கலாம். ஆனா ஒண்ணு, உன் மனசுல இந்தக் கல்யாணத்துல விருப்பம் இருந்தா மட்டும் அம்மாகிட்டப் பேசு. இல்லாட்டி வேண்

இதுவரை....

மீரா - கீர்த்தி புதுமணத் தம்பதி. தஞ்சாவூரிலிருந்து தேனிலவுக்குப் பஸ்ஸில் புறப்படும் போது, பஸ்ஸில் குண்டு வெடித்து, கீர்த்தி இறந்து விடுகிறான். அதில் பயணம் செய்த எம்.எல்.ஏ.வுக்காகத்தான் யாரோ குண்டு வைத்திருக்கிறார்கள் என்று. அந்த விபத்தில் தப்பிப் பிழைத்த மீரா ஊகிக்கிறாள். யார் வைத்தது? கண்டுபிடிக்க மீரா முற்படுகிறாள். அதே பஸ் விபத்தில் தனது மனைவியையும் எம்.எல்.ஏ. வான தனது தந்தை யையும் பறிகொடுத்தவன் குமரன். அவன் வீட்டில் தங்கித் துப்புத் துலக்க ஆரம்பிக்கிறாள் மீரா. குமரனின் தாய் ராஜேஸ்வரி, மீராவுக்குத் தேவை யான சகல வசதிகளையும் செய்து தருகிறாள். இதற்கிடையில் குமரனின் குழந்தை இளவரசு மீராவுடன் ஒட்டிக் கொள்கிறான். மீராவுக்கும் குழந்தையைப் பிடித்துப் போகிறது.

ஒருநாள் குமரன், அவளைத் திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்கிற தனது ஆசையைத் தெரிவிக்கும் போது மீரா அதிர்ச்சியடைகிறாள்.

17

இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் ஜோடியாய் வந்திறங்கிய மீராவையும், குமரனையும் கவலையுடன் பார்த்த ராஜேஸ்வரி, மீராவிடம் உரிமையுடன் கடிந்து கொண்டாள்.

''எங்கே போயிட்டே? நான்தான் உனக்காக ஆட்டோ ஏற்பாடு செஞ்சிருக்கேன் இல்லே? போறவ, ஞானத்தை எழுப்பி, அவன் வண்டியில போயிருக்கப்படாதா? எத்தனை நேரமானாலும் கவலையில்லாம இருப்பேனே...''

இதற்கு மீரா பதிலளிக்கும் முன் - குமரன் முந்திக் கொண்டு பதிலளித்தான்.

''அவ புகுந்த வீட்டு மாமா ஒருத்தர் இருக்காரில்லே.. அவரைப் பார்த்துட்டுப் பொடி நடையா நடந்து வந்திட்டிருந்தா. நான் போனேனா... வண்டியில ஏத்திட்டு வந்துட்டேன்...''

ராஜேஸ்வரி மகனை வியப்பு ததும்பப் பார்த்தாள்.

அனுராதா ரமணன்

டாம். அவ பாவம். கனவுகளை மட்டும் சுமக்கற ஜாதி... அநாவசியமாக் கற்பனைய வளர்த்துட்டு, அப்புறம் திண்டாடுவா...''

மீரா இதற்குப் பதில் சொல்லவில்லை.

அவளால் இன்னமும் இந்த விஷயத்தை ஜீரணிக்க முடியவில்லை.

'குமரனை நாம் கல்யாணம் செய்து கொள்வதாவது...'

'அது எப்படி அவன் கேட்லாம்...'

'அவன் மனசுல ஒண்ணுமில்லே. கேட்டுட்டான். முடியும்னா 'சரிதான், சம்மதம்'னு சொல்லு. முடியாது போலத் தோணினா - அதையும் 'பட்'டுனு சொல்லிடலாமே!'

'ஒருவேளை இந்த வெடிகுண்டு விஷயத்தை இதுக்கு மேல நான் கிளறக் கூடாதுங்கறதுக்காகத்தான் இப்படியொரு கொக்கி போட்டானோ...'

'எல்லாம் சரிதான். இதைப் போய் நீ, அப்பா அம்மாகிட்ட எப்படிச் சொல்லுவே. என்னதான் அப்பா, உனக்கு இன்னொரு கல்யாணம் செஞ்சு வைக்கிறதாச் சொன்னாலும் இப்படி ஜாதி விட்டு ஜாதி...'

'இத்தனை தூரம் - அவன் கேள்விக்கு மதிப்புக் கொடுத்து மண்டையக் குழப்பிக்கிறியே... அப்படின்னா - உனக்கு இதுல இஷ்டம்தானா...'

'மறுபடி ஒரு கல்யாணம்... புருஷன்... இவனுக்கு என்னென்ன பிடிக்கும், இவன் சுபாவம் என்னங்கறதுல எல்லாம் நான் அக்கறை எடுத்து... கடவுளே...'

மீரா புரண்டு படுத்தாள்.

குழந்தை இளவரசு, தூக்கத்தில் இவள் மீது கால் போட்டான். எத்தனை நேரம் அப்படியே கிடந்தாளோ - ராஜேஸ்வரியின் கை, தோளில் பட்டதும் 'விருட்'டெனத் திரும்பிப் பார்த்தாள்.

''நீங்க இன்னும் தூங்கலையா?''

''எப்படித் தூங்க முடியும்? இந்த வீட்டுல ரெண்டு சின்னஞ் சிறுசுங்க - சட்டைப் பைக்குள்ள வச்சிருந்த காசைத் தொலைச்சிட்டுத் தெருவெல்லாம் தேடற மாதிரி இங்கே தவிச்சிட்டிருக்குங்க. பெரியவ நான், கோட்டான் மாதிரி உட்கார்ந்திருக்கேன்... எப்படித் தூக்கம் வரும்?''

மீரா, இளவரசுவின் வெல்வெட் கிராப்பை மெள்ள விரலால் கோதி விட, ராஜேஸ்வரி அவளது கரத்தை அப்படியே பிடித்து, தன்னிரு கரங்களுக்குள் வைத்துக் கொண்டு சொன்னாள்:



''இங்கே பாரு.. இந்த வீட்டுக்குள்ள நீ வர்றப்ப, எங்களை மாதிரி, இந்த வெடி விபத்துல துணையைப் பறிகொடுத்தவங்கற ரீதியிலதான் உன்னை ஏத்துக்கிட்டேன். குமரு வேண்டாம்னு தலை தலையா அடிச்சிட்டும் கூட நான் கேட்கலை. புருஷனைப் பறிகொடுத்தவ நீ, பெண்டாட்டியப் பறிகொடுத்த குமரு, அம்மாவை இழந்த இளவரசு, இப்படி மூணு பேரோட இழப்பையும் - மூணு முடிச்சுல சரிக்கட்ட முடியும்னா... எத்தனை சந்தோஷமா இருக்கு? யோசிச்சுப் பாரு....

''நீ இப்பவே பதில் சொல்ல வேண்டாம். மனசு ஒத்துப்

போனாலும் பழக்க வழக்கம், சம்பிரதாயம் - வேற வேற ஜாதி - இப்படி எத்தனையோ முட்டுக்கட்டை இருக்கு.... என்னைக் கேட்டா - அன்புக்கு ஏங்கற நாம் எல்லோருமே ஒரே ஜாதியின்னுதான் சொல்வேன்...''

மீரா, கண்களை அழுந்த மூடி, மூடிய இமைக்குள் கீர்த்தியைக் கொண்டு வர முயற்சி செய்தாள்.

'இங்கே பாருங்கோ... நான், உங்களுக்கு நேர்ந்த கொடுமைக்கு யார் காரணம்னு தேடத்தான் இங்கே வந்தேன்... வந்த இடத்துல... தயவு செஞ்சு என்னை அப்படிப் பார்க்காதிங்கோ... நான் என்ன பண்ணுவேன். வாழ்க்கை முழுக்க இப்படியே.. இது சாத்தியமில்லே போல இருக்கே.. எனக்கு ஏதாவது ஒரு வழி சொல்லுங்க.

'நான் ரொம்பச் சாதாரணமானவங்கறது இப்பத்தான் தெரியறது. என் மனசை அடக்கவே முடியலை. எது எல்லாம் கூடாதுன்னு எனக்கு நானே தீர்மானிக்கிறேனோ - உடனே அதை மீறுகிறேன். இதனாலேயே என் தரத்தை இழந்து, மதிப்பை இழந்து எல்லாருடைய' ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாயிடுவேனோன்னு பயமா இருக்கு...

'நான், உங்களுக்குத் துரோகம் செய்யறேனோ...'

அவள், கெஞ்சக் கெஞ்ச - கீர்த்தி அவளிடமிருந்து உதறிக் கொண்டு கிளம்புவது போல உணர்ந்தாள்.

அவள் தூங்கி வெகுநேரமாகியும் ராஜேஸ்வரி விழித்திருந்தாள். அவளையுமறியாமல் மாலை மாலையாய்க் கண்ணீர்.

மறுநாள் -

விடியற்காலையிலேயே குளித்து முடித்துக் குமரன் காலை உணவுக்கு வருவதற்குள், வெளியே கிளம்பத் தயாராகி விட்டாள் மீரா.



''நேற்றைக்கு என் வீட்டுக்கு வந்த திருடன் தொழிலுக்குப் புதுசு போலிருக்கு...''

''எப்படிச் சொல்றே?''

''என் பெண்டாட்டி என்னை மிரட்டின போது அவன் பயந்து ஓடிட்டான்....''

- வி.கி. குமார்.

ராஜேஸ்வரி பூஜையறையிலிருந்து வெளியே வரவில்லை. இளவரசுவை கூடத்தின் ஊஞ்சலில் உட்கார வைத்துத் தானும் அமர்ந்து, வீசி ஆடியபடியே ராஜேஸ்வரியின் வருகைக்காகக் காத்திருந்தாள் மீரா...

''இந்தா... தாத்தா, அப்பா மாதிரி எலக்ஷன்லே நிக்கப் போறியா.. இல்லே நல்லாப் படிச்சுப் புத்திசாலியின்னு பேர் வாங்கப் போறியா?''

மீரா, தனக்குப் பின்னால் குமரன் இருப்பதை அறிந்தும், கவனியாதவள் போல, குழந்தையிடம் பேசினாள்.

குழந்தை என்ன புரிந்து கொண்டானோ...

''...ப்பா... ப்பா...''

''ஓ... அப்பா மாதிரியா.. அப்ப இந்தா, கை ரெண்டையும் இப்படி கும்பிடற மாதிரி வச்சுக்க...''

சிறுவன் பிஞ்சுக் கரங்களைக் குவித்தபடி - வாய் கொள்ளாமல் சிரித்தான்.

''நான் சொல்றதை அப்படியே திருப்பிச் சொல்லு...''

''நா... என்னது?''

''தாய்க்குலமே...

''தாய்... களுக்...''

மீரா தலையில் நாசூக்காய் அடித்துக் கொண்டாள். நிக்கறேங்கறே... ஆனா, உங்க அப்பாவுக்கு நீ எவ்வளவோ தேவலை....''

குமரன் தனக்குள் சிரித்தபடி, குழந்தையைத் தூக்கி மார்புற அணைத்துக் கொண்டான். ''எதிராளி இல்லாத நேரத்துல அவங்களைப் பத்தி விமர்சிக்கக் கூடாது. அது நாகரிகமில்லே. ஹூம்... என்ன படிச்சிருந்து என்ன.. சில பேருக்கு இந்த அடிப்படை ஞானம் கூட இல்லாம போயிடறது...''

மீரா, மெள்ள ஊஞ்சலை விட்டு எழுந்தாள்.

''இருங்க... எங்கே காலையிலே அம்மன் ஊர்வலத்துக்குக் கிளம்பியாறது?''

''மறுபடியும் தேடல்தான்!''

- குமரன், இதைக் கேட்டுச் சிரித்தான்.

''இட்டத்தட்ட முக்கியமானவங்களைத்தான் பார்த்துட்டியே... அப்புறமென்ன?''

''இல்லே... பஸ்லே வந்த அந்த சினிமா ஸ்டாருக்குச் சொந்தக்காரப்




அநேகமாக உங்களுடைய குழந்தையின் உணவுடன் தண்ணீர் கலந்துதான் கொடுக்கிறீர்கள்.

அது பாதுகாப்பாய் இருப்பதற்கு நீங்கள் உறுதி செய்து கொள்ள வேண்டாமா ?

அக்குவாகார்டு எளிதாகவும் திறம்படவும் வேலை செய்கிறது.

- இது உடற்கூறு மூலமும், ஆர்கானிக் மூலமும், கிருமிகள் மூலமும் ஏற்படும் அசுத்தங்களைப் போக்குகிறது.
- இது அல்ட்ரா-வையலெட் சிகிச்சையைப் பயன்படுத்தி, நோய் ஏற்படக்காரணமாயிருக்கும் பாக்டீரியாக்களைச் செயலிழக்கச் செய்கிறது.
- வெளிவேறும் தண்ணீரின் தரத்தைப் பராமரிக்கிறது— ஒப்பற்ற எலெக்ட்ரானிக் மானிட்டரிங் சிஸ்டம், சுத்தம் செய்வதற்கு, முன்கூட்டியே நிர்ணயிக்கப்பட்ட நிலைக்கு குறைந்து விட்டால், உடனடியாக தண்ணீர் வருவது நின்றுவிடுகிறது.

உங்கள் குடும்பத்தினருக்கு அக்குவாகார்டிலிருந்து நம்பகமான தண்ணீரை வழங்குங்கள்.



அக்குவாகார்டு

சுத்தமான, பாதுகாப்பான குடிநீருக்கு

உங்களுடைய வீட்டிற்கு வந்து இலவச செய்முறை விளக்கமளிக்க எழுதுங்கள் :

யுரேகா ஃபோர்ப்ஸ் லிமிடெட்


தபால் பெட்டி எண். 936, ஜி.பி.ஓ.,
பம்பாய்-400 001.


Interpub/EFL/AG/01/91

Bring efficiency into your kitchen

PREMIER

STAINLESS STEEL L.P.G. STOVE





In every efficient woman's kitchen

- *Heavy-Duty Brass Burners for perfect Blue flame and greate' fuel economy.*
- *Tough enamel coated pan supports for scratch-proof and rust free for ever.*
- *Made of AISI-304 Salem Stainless Steel to last year after year.*
- *With ISI, the symbol of quality.*

IS : 4246

ISI

Manufactured by :
PREMIER HOME APPLIANCES
289, P. H. Road, Madras-600 007
✆ 664779 / 661924

பொண்ணு. அந்த ஸ்டாரோட குழந்தை...''

''அவங்களுக்கும் இந்த விபத்துக்கும் சம்பந்தமிருக்கறதா யார் சொன்னாங்க?''

''உங்க அம்மாதான் சொன்னாங்க. உங்களோட சந்தேக லிஸ்ட்டுல அதே நடிகையைச் சேர்ந்தவங்களும் இருக்கறதா...''

''ஆமா போ... பெரிய்ய லிஸ்ட்.. சி. பி. ஐ. லிஸ்ட்... நானா சொல்லி வச்சேன். நடுவுல - இந்த நாலாந்தரப் பத்திரிகைங்க எல்லாம் - அந்த நடிகைய இந்த பஸ் விபத்தோட சம்பந்தப்படுத்திக்கன்னாபின்னான்னு எழுதியிருந்தாங்க.. அம்மா இதைப் படிச்சிட்டிருப்பாங்க. வீட்டுல பொழுது போகா மத்தானே உட்கார்ந்திருக்காங்க.''

''என்ன ஸார் இது, உயிரோடு இருக்கும் தலைவரை இறந்திட்டார்னு, போட்டிருக்கீங்க?''

''நான்தான் அப்பவே சொன்னேனே, செய்திகளை முந்தித் தருவது, எங்க நாளிதழ்ன்னு....''

- ஆர். வசந்தகுமார்.



மீரா, அதை அதிகமாய் பொருட்படுத்தாதவளாய் டிபன் தட்டுக்களை மேசை மீது எடுத்து வைத்தாள்.

''சொல்றேனேயின்னு தப்பா எடுத்துக்காதே மீரா.. .எதையோ துருவிக் கண்டு பிடிக்கறதா நினைச்சிட்டு எதுலேயாவது சிக்கிக்காதே...''

''உம்...''

''உன் மேல அக்கறை இருக்கறதுனால சொல்றேன்...''

மீரா, ஞானத்தின் ஆட்டோவில் ஏறியதிலிருந்து அவன் ஒரு பக்கம் புலம்பித் தீர்த்தான்.

''என்னம்மா, ராத்திரி எங்கே போயிட்டீங்க... அம்மா பாவம்... வாசலுக்கும் உள்ளுக்குமா எத்தனை நடை நடந்துட்டாங்க?''

மீராவுக்கே கஷ்டமாக இருந்தது.

'சே.. நம்மால எத்தனை கஷ்டம்...'

ஞானம், மேலும் தொடர்ந்தான்.

''தலைவர் அப்பத்தாம்மா வீட்டுக்குள்ளார நுழைஞ்சாரு.. அம்மா என்ன சொல்லி விரட்டி விட்டாங்களோ தெரியலை. உடனே மோட்டார் சைக்கிள்லே பறந்துட்டாரே. ... ஏம்மா, எங்கே போனாத்தான் என்ன... என்னை ஒரு அதட்டல் போட்டு எழுப்பக் கூடாதா?''

''இனிமே அப்படியே செய்யறேன் ஞானம்...''

''இப்ப எங்கேம்மா போகணும்?''

மீரா, தனது கைப்பையிலிருந்து எட்டாக மடித்து வைத்திருந்த ரோஜா நிறக் கல்யாணப் பத்திரிகையை எடுத்துப் பார்த்தாள்.

'சௌபாக்கியவதி மீரா என்கிற சீதாலட்சுமியை சிரஞ்சீவி கீர்த்தி என்கிற சீனுவாசனுக்குக் கன்னிகாதானம் செய்து கொடுப்பதாய்ப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு...'

பத்திரிகையின் வரிகள் அப்படியே நீண்டு கடைசியில் - 'யானும் அவ்வண்ணமே கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு தங்கள் விதேயன் விசுவநாதன் - ரிடையர்ட் டி. ஸி. டி. ஓ... நெம்பர் 6, பாலகிருஷ்ண மேஸ்திரி தெரு, தஞ்சாவூர் ' - இந்த வரிகளை மட்டும் இரைந்து படித்தாள்.

''பாலகிருஷ்ண மேஸ்திரி தெரு போங்க ஞானம்...''

மனசுக்குள் 'திக்திக்'கென்று ஒருவிதப் பதைப்பு..

''அந்த வீட்டுக்கு... அந்த வீட்டுக்கு...''

'எதுக்கு?'

'எதுக்கா.. கீர்த்தியோட அம்மாவைப் பார்த்து நான் பேசணும்... இதைப் பத்தி.. நான் இன்னமும் இந்தப் புதிருக்கு விடை காணாம அலையறதைப் பத்தி.. நேத்து குமரன் என்கிட்ட கேட்டது பத்தி.. அந்த நிமிஷத்துலேயிருந்து நான் படற பாட்டைப் பத்தி...'

டாக்ஸி, ஆறாம் நம்பர் வீட்டு வாசலில் போய் நின்றதும் - இவள் இறங்க...

திண்ணையில் நின்றபடியே எச்சில் இலையைக் குப்பைத் தொட்டியில் வீச வந்த கீர்த்தியின் தாய், இவளைப் பார்த்து அப்படியே விக்கித்து நின்றாள்.

(தொடரும்)

ஆகஸ்ட் 15



கிருஷ்ணமூர்த்திக்குத் திடுமென விழிப்பு ஏற்பட்டது. சுவர்க் கடிகாரம் பதினொன்று இருபது என்றது. பத்து மணிக்குப் படுத்தான். அதற்குள் விழிப்புத் தட்டி விட்டது. பல யுகங்கள் தூங்கி எழுந்த தெளிவு உடம்பில் வந்து விட்டதாக அவன் உணர்ந்தான். ஜன்னலுக்கு வெளியே ஏதோ பற்றி எரிவது மாதிரி பிரகாசமாய் இருந்தது. எழுந்து ஜன்னலண்டை சென்று நின்று வெளியைப் பார்க்கையில் நிலா வீணே எரிவது தெரிந்தது. மொட்டை மாடிக் கைப்பிடிச் சுவருக்கும் ஆகாயத்துக்கும் இடையே காக்காய்ப் பொன் துகள்கள் காற்றில் பறந்தன. நிலவு வறிதே எரிவது கஷ்டமாகத்தான் இருந்தது. அறைக் கதவைத் திறந்து கொண்டு, கைப்பிடிச் சுவரை அணைந்து நின்றான்.

தெரு, ஆட்டம் முடிந்த சினிமாக் கொட்டகை மாதிரி வெறிச்சென்று கிடந்தது. மனிதர்களின் பரபரத்த ஆக்ரமிப்பு இன்றி, குளித்து விட்டு வந்து நிற்கிற குழந்தையைப் போல இப்படி மினுமினுத்துக் கொண்டு கிடக்கிற தெரு ஆச்சர்யம் தருவதாய் இருந்தது. அப்படியே அதைச் சுருட்டிப் பையில் வைத்துக் கொள்ள வேண்டும் போலவும் இருந்தது.

இப்படி அமுதமாய்ப் பொங்கி, நிலா, ஊருக்கு வார்த்துக் கொண்டிருக்கையில் படுக்கையில் படுத்துக் கண்களை மூடிக் கொள்வது என்பது மனுஷத்தனம் அல்லவே! அவன் கைலியை நன்கு சுருட்டிக் கொண்டு, கோட் ஸ்டாண்டில் தொங்கின ஜிப்பாவை எடுத்து அணிந்து, படி இறங்கி, தெருப்படிக் கதவைப் பூட்டிக் கொண்டு தெருவுக்கு வந்தான்.

காற்று கரையை உடைத்தேறும் அலையைப் போல அவனை மோதிக் கிறங்கச் செய்தது. என்றுமே சரியான நேரம் காட்டாத மணிக்கூண்டுக்குக் கீழே இருக்கும் டீக் கடையில் ஒரு டீ சொல்லிக் குடித்தான் மூர்த்தி. தேநீர் என்பது இரவுடன் பிறந்த பானம் போன்று, இரவோடு ஒத்திசைந்திருந்தது. உடம்புக்கும் மனசுக்கும் புதுத் தென்பு ஊறியது. டீக் கடையிலேயே ஒரு சிகரெட்டை வாங்கிப் பற்ற வைத்துக் கொண்டான். கைலியைத் தூக்கி மடித்துக் கொண்டான். கடற்கரையைப் பார்த்து நடந்தான்.

கடல் இரைச்சல் இட்டுக் கொண்டிருந்தது. சற்று நிதானித்தால் புரிந்து கொள்ளக்கூடிய பாஷைதான். எதைத்தான் புரிந்து கொள்ள முடியாது? ஒப்புக் கொடுத்தல் என்னும் சமர்ப்பணம் கை வந்தால் எதுவும் சாத்தியம்தான்.

கடல், மூர்த்தியை நல்வருகை சொல்லி வரவேற்றது.

ஏது எதனை ஆக்ரமிக்கிறது? கடல், மண்ணையா? உலகம் கடலையா? இந்த யுகாந்திர பலாத்காரம் எப்போது தொடங்கிற்று? ஹிம்சைகள் தவிர்க்க முடியாத ஓர் உலக நியதிதானா?

மூர்த்தி தன் முன் விரிந்திருக்கும் இந்த அகண்டாகாரத்தில் லயித்துப் போய், கரையை ஒட்டின சிமெண்ட்டுக் கட்டையில் அமர்ந்திருந்தான். தன்னை மறந்திருந்த அவனை ''யார்டா அது?'' என்னும்

பிரபஞ்சன்

அன்மைக் குரல் பூமிக்கு அழைத்து வந்தது. அவன் திரும்பினான்.

இரண்டு போலீஸ்காரர்கள் நின்றிருந்தார்கள். ஒருவர் பிரும்மாண்டமான பருமனும், அதனினும் பெரிய வயிற்றையும், கொண்டிருந்தார். சட்டை அந்தப் பருமனுக்குத் தாங்காது கவ்விக் கொண்டிருப்பது மாதிரி இருந்தது. அடுத்தவர் ஈர்க்குச்சி மாதிரி மெலிந்தும், நோயாளியைப் போல வெளுத்தும், வெம்பிப் போன மாங்காய் மாதிரியும் இருந்தார். ஏதோ உள் நோயினால் அவஸ்தைப்படுகிறவரைப் போலக் காணப்பட்டார். பருமனாக இருந்தவர் மூர்த்தியைப் பார்த்து, ''யார்ரா நீ... இந்த நேரத்துல இங்கே என்ன வேலை?'' என்றார். மூர்த்திக்கு அக் கேள்வி மிகுந்த ஆச்சர்யத்தைத் தந்தது. மதிலேறிக் குதித்தவனைக் கையும் களவுமாகப் பிடித்து விட்டவர் மாதிரி அவர் பேசினார்.

''சும்மாதான். நல்ல நிலாக் காலம். ரசிக்கலாம்னு வந்தேன்'' என்றான் மூர்த்தி. அந்த இரண்டு காவலர்களும் இந்த பதிலைக் கேட்டு ஆச்சர்யமுற்றவர்களைப் போல ஓரடி பின்னிட்டனர். பருமனார் அவன் முகத்தையும் ஆடைகளையும் தீவிரமாகப் பரிசிலனை செய்து, பின் சொன்னார்.

''சந்தேகமா இருக்கு. தெளிவான பதிலாச் சொல்லலியே. பின்னயும், கைலி வேற உடுத்தியிருக்கே. ஊம்...?''

மூர்த்தி மேலும் ஆச்சர்யத்தில் முழுகிப் போனான். அவன் இதைக் காட்டிலும் தெளிவாக என்ன பதிலைச் சொல்ல முடியும்? தவிரவும் கைலி உடுத்தியிருப்பதும் எப்படி சட்டப் புறம்பான விஷயமாக இருக்க முடியும்?



"புது கிரைண்டரை என் அம்மாதான் முதலில் ஸ்டார்ட் பண்ணித் துவக்க விழா — நடத்தணும் என்கிறாயே, அவ்வளவு மாமியார் பக்தியா?"

"உம்... தொட்டால் ஷாக் அடிக்குதா என்று எப்படித் தெரிஞ்சுக்கிறதாம்?"

– சுதர்ஸன்.

"என்ன வேலை பார்க்கிறே நீ...?"

"வாத்தியார்."

"வாத்தியார்னு சொல்றே. அதுக்குத் தகுந்த நடை உடை இல்லியே. புள்ளைகளுக்கு நல்ல பாடம் சொல்லித் தர வேண்டிய நீயே பைத்தியம் மாதிரி இப்படி நடு ராத்திரியிலே கடற்கரையிலே வந்து உட்கார்ந்துக்கிட்டு இருக்கே. சந்தேகமாயில்லே இருக்கு. ஊம்..."

பருமர் ஒல்லியரைப் பார்த்தார். ஒல்லியர் மிகுந்த சிரமப்பட்டு மூச்சு விட்டுக் கொண்டிருந்தார். அவருக்கு ஆஸ்த்மா இருக்கும் போலத் தோன்றியது மூர்த்திக்கு. அந்த இரண்டு பேரும் இரண்டடி தள்ளிப் போய் என்னவோ தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். திரும்பி அவனை நெருங்கி நின்றார்கள். பருமர் சொன்னார்.

"நீ எதுக்கும் ஸ்டேஷன் வரைக்கும் வந்து ஐயாவைப் பார்த்துட்டு வந்துடு. வா போகலாம்"

"ஐயான்னா யார்?"

"சப் இன்ஸ்பெக்டர்" என்று பருமர் எரிச்சலோடு சொன்னார்.

"அவரைப் பார்த்து நான் என்ன சொல்லணும்?"

"............"

பருமராகிய அந்த அரசு ஊழியர் எழுதத் தக்கதல்லாத ஓர் ஆபாச வார்த்தையைப் பிரயோகப்படுத்தினார். அப்புறம் "நடடா டேசனுக்கு," என்றார்.

மூர்த்தி அவர்களுடன் நடக்கத் தொடங்கினான். நிலவு படிப்படியாக மஞ்சள் வர்ணத்தைக் கொட்டி உலகத்தைப் பொன் செய்து கொண்டிருந்தது. நிலவின் வாசனை அவனை நிரைத்து, அதன்பின் அவனைச் சுற்றி வியாபிப்பதாக அவனுக்குத் தோன்றியது. நிலவு ஒரு புஷ்பம். அதிலிருந்து சிந்தும் மகரந்தமே வெளிச்சச் சிதறல்கள். பூமி மேல் படிந்த பூச் சிதறல்களை மிதித்து விடக் கூடாது என்பது மாதிரி மூர்த்தி அவர்களுடன் நடந்தான்.

கடைத் தெருவை ஒட்டின காவல் நிலையத்துக்கு அவர்கள் வந்து சேர்ந்தார்கள். ஒரு பழங்கால மேசையின் முன் நடுவயதினராகக் காட்சி அளித்த ஒருவர் சப்தம் கேட்டு விழித்து எழுந்தார். உறக்கம் கெட்டதில் அவர் அமைதி குலைந்தது தெரிந்தது.

"என்னையா?" என்று முகத்தைச் சுருக்கிக் கொண்டு கேட்டார்.

"ஒரு சந்தேகக் கேஸ்" என்றார் பருமர். கடற்கரைச் சம்பவத்தை விளக்கினார். மேசைக்காரர் மூர்த்தியை அவதானித்தார். "யார்டா நீ?" என்றார். அவர் தன்னைக் காட்டிலும் பத்து வயதாவது குறைந்தவராக இருப்பார் என்று மூர்த்தி யோசித்து விட்டு, "நான் ஒரு வாத்தியார்" என்றான். அதைக் கேட்டு விட்டு அவர், "என்ன... அர்த்த ராத்திரியில பீச்சல உக்காந்திருக்கே? எவளையாவது வரச் சொல்லியிருக்கியா, அங்கே?" என்றார். இவரும் ஆபாசமாகப் பேசினார்.

"அப்படியெல்லாம் இல்லை," என்றான் மூர்த்தி.

"எந்த ஸ்கூலில் வேலை பார்க்கிறே?"

அவன், தான் வேலை பார்க்கும் ஸ்தாபனத்தைச் சொன்னான்.

"என்ன... கைலி கட்டி இருக்கே?"

என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் நின்றான் மூர்த்தி.

"குந்து அப்படி" என்று சுவர் ஓரமாகப் போட்டிருந்த வாங்குப் பலகையைக் காட்டினார் அவர். மூர்த்தி அங்கு சென்று அமர்ந்தான். அவனுக்கு நேர் இடதுபுறம் அறை ஒன்று இருந்தது. அது அதிகாரியின் அறையாக இருக்க வேண்டும். அதை ஒட்டிக் கம்பிகளையே கதவாய்ப் போட்டிருந்த அறை ஒன்றையும் அவன் கண்டான். அந்த மேசைக்காரர் கையை மடக்கி, அதன் மேல் தலையை வைத்துக் கொண்டு, மீண்டும் உறங்கத் தொடங்கினார். பாவம், களைப்பாக இருக்கிறார் போலும் என நினைத்துக் கொண்டான் மூர்த்தி.

அவன் வேடிக்கை பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தான். அழுக்கேறிய சுவர். ஒரு மகாத்மா காந்தி படம். கைப்பட்டு நைந்த அட்டை போட்ட நோட் புஸ்தகம். ஒரு வெறும் 'ரீபில்' அதன் அருகில் கிடந்தது.

பருமரும் ஒல்லியரும் உள்ளே வந்தார்கள். அந்த ஒல்லியர் அவன் பக்கத்தில் வந்து அமர்ந்தார். தொப்பியைக் கழற்றித் தலையைத் தடவியபடி அவன் காதுகளில்

NAVAJEEVAN SOCIAL WELFARE CENTRE
SRI KANCHI SHANKARA MUTH,
P. O. TIRUMALA HILLS
(Via) TIRUPATHI - PIN - 517 504.

ஸ்ரீ வெங்கடேச்வர கோடிநாம எழுத்து வேள்வி - 1991

Aug 15 To Nov - 23 - 101 Days

ஸ்ரீ காஞ்சி சங்கராச்சார்ய ஸ்வாமிகளின் அனுக்ரஹத்துடன் திருப்பதி புண்ய க்ஷேத்திரத்திலிருந்து நவஜீவன் சேவா கேந்திரம் கடந்த 12 வருடங்களாகப் பார்வையற்றோர் மற்றும் ஏழை மக்களுக்குப் பல விதங்களில் உதவி வருவது குறித்து ஆஸ்தீகர்கள் அறிந்ததே.

தமிழ்நாடு, வட இந்தியா மற்றும் வெளிநாட்டிலுள்ள ஆஸ்தீக அன்பர்களின் விசேஷ வேண்டுகோளுக்கிணங்க நாட்டு மக்களிடையே தெய்வ பக்தியை வளர்க்கும் பொருட்டும் உலக க்ஷேமத்திற்காகவும் நவஜீவன் சேவா கேந்திரம் ஆகஸ்ட் 15 முதல் நவம்பர் 23 ந் தேதி வரை 101 நாட்களுக்குத் திருப்பதி - திருமலை புண்ய ஸ்தலத்தில் ''ஸ்ரீ வெங்கடேஸ்வர கோடிநாம எழுத்து வேள்வி''யை நடத்தத் திட்டமிட்டுள்ளது. இந்தப் புனிதமான கோடிநாம யக்ஞத்தில் கலந்து கொண்டு ஸ்ரீ கலியுக கண்கண்ட தெய்வமான ஏழுமலையானின் அருளைப் பெற வேண்டுமாய் ஆஸ்தீக அன்பர்களை வேண்டுகிறோம். (கோடிநாம யக்ஞத்தின் ஆரம்ப நாளான 15.8.91 அன்று நவஜீவன் மற்றும் ஞானபூமியின் சார்பாக ''ஸ்ரீஸூக்த ஹோமமும்'' ஸ்ரீ புவனேஸ்வரி ஸ்வாமிகள் தலைமையில் நடைபெற இருக்கிறது.)

கோடிநாம எழுத்து வேள்வியில் பங்கு கொள்ளும் ஆஸ்தீக அன்பர்களுக்கு நவஜீவன் சார்பாகச் சில பரிசுகளும் ஆசிர்வாதமாக வழங்கப்படும்.

1. (FTT) Free Trip to Tirupati : தேர்ந்தெடுக்கப்படும் 100 ஆஸ்தீக அன்பர்களுக்கு இலவச திருப்பதி புனிதப்பயணம்.
2. (FGTM) Free Gold Tirumangalyam : 9 சுமங்கலிப் பெண்களுக்கு ஆசிர்வாதமாகத் தங்கத்தில் திருமாங்கல்யம்.
3. (FGM) Free Group Marriage : 9 ஏழைக் கன்னிப் பெண்களுக்குத் தங்கத்தில் திருமாங்கல்யம் அளித்து எல்லாச் செலவுகளையும் ஏற்று திருப்பதி ஸன்னிதானம் அருகில் 1992 (ஜனவரி) தை மாதத்தில் இலவசத் திருமணம்.
4. (FTK) Free Trip to Kashi : 9 வயோதிகத் தம்பதிகளுக்கு அவர்களின் இருப்பிடத்திலிருந்து இலவச காசி யாத்திரை.

ஆசீர்வாதமாக விசேஷப் பிரசாதம்:

கோடிநாம எழுத்து வேள்வியில் பங்கு கொள்ளும் எல்லா ஆஸ்தீக அன்பர்களின் சார்பாகவும் விசேஷப் பிரார்த்தனை செய்வித்துப் பார்வையற்ற குழந்தைகளுக்கு அன்ன தானமும் வழங்கி ஸ்ரீ ஏழுமலையானின் ஆசிர்வாதமாகக் கோடிநாம எழுத்து வேள்வியின் பிரசாதமும் தபால் மூலம்அனுப்பி வைக்கப்படும்.

முக்கிய குறிப்பு : ஸ்ரீ வெங்கடேச கோடிநாம எழுத்து வேள்வியில் பங்கு கொள்ள விரும்பும் ஆஸ்தீகர்கள், அதற்கான விதிமுறைகள் மற்றும் நியமங்கள் அடங்கிய அச்சிட்ட படிவத்தை (Printed Form) இலவசமாகப் பெற ரூபாய் - ஒன்று தபால்தலை (Stamp) ஒட்டிய சுயவிலாசம் எழுதிய Long கவருடன் (With Pincode) மேற்குறிப்பிட்ட அட்ரஸுக்கு விண்ணப்பிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

''ஓம் நமோ ஸ்ரீ வெங்கடேசாய''

K. R. ACHARYA,
ORGANISER.

சொன்னார்.

''ஐயா வர்ற நேரம் தெரியலை. அவர் வந்து பார்த்துத்தான் உன்னை விடணும். வந்தாலும் வரலாம். வராட்டாலும் இல்லை. ஏதாவது இருந்தா கொடுத்துட்டுப் போயிடு.''

மூர்த்திக்கு ஒன்றும் புரியவில்லை. என்ன கேட்கிறார் இவர். அவர் வேக வேகமாக மூச்சு விட்டுக் கொண்டு இருந்தார். ஆஸ்த்மாக்காரர்களே அனுதாபத்துக்கு உரியவர்கள்.

''பணம் எவ்வளவு வச்சிருக்கே? இருபது ரூபா கொடுத்திட்டுப் போயிடு'' என்றார் அவர் இரைத்துக் கொண்டே.

பகீர் என்றது மூர்த்திக்கு. அடடா! அவனிடம் பணம் இல்லை. சுமதி, அம்மா வீட்டுக்குப் போயிருந்தாள். அவளை ஊருக்கு அனுப்ப, ஐம்பது ரூபாய் அன்று காலையில்தான் நண்பரிடம் அவன் கடன் வாங்கியிருந்தான். நாற்பது ரூபாயை அவளிடம் கொடுத்து அனுப்பி விட்டுப் பத்து ரூபாயில் மதியச் சாப்பாடும், இரவு டிபனையும் முடித்திருந்தான். டீக்கும், சிகரெட்டுக்கும் கொடுத்தது போக என்ன சில்லறை இருக்கும்?

அவன் பாக்கெட்டைத் துழாவிச் சில்லறைகளை வெளியில் எடுத்தான். எண்ணினான். எண்பத்தைஞ்சு பைசாக்கள் இருந்தன.

''இவ்வளவுதான் இருக்கு'' என்று மூர்த்தி வெட்கத்துடன் அந்த மனிதரிடம் சொன்னான். தொடர்ந்து, ''காலைலேதான் யாரிட்டயும் கடன் வாங்க முடியும். அவசரம்னா, காலையிலே பத்து மணிக்குத் தரலாம்'' என்றான் அமர்ந்த குரலில்.

வெறுத்துப் போன முகமுடைய அந்த நோயாளி மனிதர் அவனை விசித்திரமாகப் பார்த்தார். திரும்பவும் தொப்பியை அணிந்து கொண்டு, நாலடி தள்ளி நின்றபடி ஒரு மாலைப் பத்திரிகையைப் புரட்டிக் கொண்டிருந்த பருமரைப் பார்த்தார். அதே சமயம் அவரும் இவரைப் பார்த்தார். ஒல்லியர் அவரைப் பார்த்து உதட்டைப் பிதுக்கினார். பருமர், அந்தப் பத்திரிகையைக் கசக்கியபடி மேசை மேல் விட்டெறிந்தார். இருவரும் வெளியேறினார்கள்.

மூர்த்திக்குப் புழுக்கமாகவும் அசதியாகவும் இருந்தது.

சுமார் ஒரு மணி நேரத்துக்குப் பிறகு, சப்தம் கேட்டு மூர்த்தி விழித்துக் கொண்டான். திபுதிபுவென்று நாலு பெண்கள் உள்ளே நுழைந்தார்கள். அசாதாரணமான அளவுக்கு மல்லிகைப் பூச் சூடியிருந்தார்கள். கண்களில் செம்மை ஏறும்படிக்கு



''உன் அப்பா நம்ம கல்யாணப் பத்திரிகையைக் கூட ஓசியிலேயே அடிச்சிட்டார் போலிருக்கே?''

''உங்களுக்கு எப்படித் தெரிஞ்சுது?''

''பத்திரிகையின் பின்னாடி 'அன்பளிப்பு காமாட்சி ஸ்டோர்ஸ்'னு போட்டிருந்திச்சே!''

- வி.கி. குமார்.



நிருபர் : ஆட்சிக்கு.... வந்ததும் விலைவாசியைக் குறைப்பேன்னீங்க; கடைசில, ரூபாயின் மதிப்பைக் குறைச்சிட்டீங்களே?

அரசியல்வாதி : அதையாவது, குறைச்சிருக்கோமேனு.... சந்தோஷப்படுவீங்களா, அதை விட்டுட்டு.....

- ஆர். அப்துல் சலாம்.



ஒருத்தி : உன் கணவர் உன்னை வாடி, போடின்னு கூப்பிடுகிறாராமே... என் கணவர் சொன்னார்.

மற்றவள் : ஏமாந்துவிடாதே, அப்படிச் சொல்லி உன்னை வாடி, போடின்னு கூப்பிடப் பார்க்கிறார்!

– நல்லாலம் காசிதாசன்.

மை தீட்டியிருந்தார்கள். கண்ணைப் பறிக்கும் மினுமினுப்பான வர்ணங்களில் சேலை உடுத்தியிருந்தார்கள். வந்தவர்கள் ஏற்படுத்தின சப்தத்தில் மேசையாளர் விழித்துக் கொண்டார். அவர் எரிச்சலடைவார் என்று எதிர்பார்த்த மூர்த்தி ஏமாற்றத்துக்குள்ளானான். பிரிந்த நண்பர்கள் ஒன்று சேர்ந்தாற்போல அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள். அந்தப் பெண்களை அழைத்து வந்தவர்களைப் போன்று காணப்பட்ட சில காவலர்கள், அதிகாரியின் அறையை ஒட்டிய பகுதிக்குச் சென்று மறைந்தார்கள்.

அந்தப் பெண்கள் சுவரை ஒட்டி முதுகைச் சுவரில் சாய்த்துக் கொண்டு அமர்ந்து கொண்டார்கள். அவர்கள் மூர்த்தியைப் பார்த்து, தமக்குள் என்னவோ பேசிச் சிரித்துக் கொண்டார்கள்.

நால்வரில் ஒருத்தி மிக இளமையானவள். இருவர் நடுவயதினர். ஒருத்தி என்ன வயதினள் என்பதையே அனுமானிக்க முடியாத விதத்தில் இருந்தாள். மேசையாளர் ''என்ன கிரிஜா, ஆளைப் பார்த்து ரொம்ப நாளாச்சே. எங்களையெல்லாம் மறந்தே போய்ட்டே..'' என்று அந்தப் பெண்களில் இளமையானவளைப் பார்த்துச் சொன்னார். இவ் வார்த்தைகளில் பெரிய நகைச்சுவை பொதிந்திருப்பது மாதிரி அவர்கள் சிரித்தார்கள்.

''நானா, நீங்களா? தேவையின்னாத் தான் தேடுவீங்க. அல்லாக்காட்டி சீந்தக் கூட மாட்டீங்களே..''

''தே. தே. அப்பிடியெல்லாம் சொல்லாதே.''

அந்த இளம் பெண்ணும் இன்னொருத்தியும் வெற்றிலை போட்டுக் கொண்டார்கள். அதற்குள் பருமர் உள்ளே நுழைந்தார். வயது கடந்தவள், ''இன்னா குண்டு மணி சௌக்யமா?'' என்றாள் அவரைப் பார்த்து.

''வாயிலே ஒன்னு போட்டாத் தெரியும்'' என்றார் அவர். செல்லமாகத்தான் சொன்னார். எல்லோரும் இதற்குச் சிரித்தார்கள்.

மேசையாளர் எழுந்து நின்றார். மூர்த்திக்குத் திடுக்கிட்டது. அவர் கீழே சீருடை அணியாமல், கோடு போட்ட உள்ளாடை மட்டும் அணிந்திருந்தார்.

''இந்த ஆளைப் பாரு கிரிஜா. வாத்தியாராம். லூஸ் மாதிரி கைலி கட்டிக்கிட்டு ராத்திரி பன்னண்டு மணிக்கு பீச்சில உக்காந்திருக்கான்.''

அந்தப் பெண்கள் அவனைப் பார்த்தார்கள்.

''பீச்சுக்கு எதுக்குய்யா அந்த நேரத்துல.,.. என் வீட்டுக்கு வந்திருக்க வேண்டியதுதானே?'' என்றாள் கிரிஜா அவனைப் பார்த்து. மேசையாளர் உள்பட அத்தனை பேரும் உரக்கச் சிரித்தார்கள்.

மூர்த்தி மிகவும் குழம்பிப் போய் இருந்தான். விரும்பின இடத்துக்குப் போவது கூட எப்படித் தவறாக இருக்க முடியும்? ராத்திரியானால் என்ன? ஒருவன் ஒன்றை அவன் விரும்பும் நேரத்தில்தானே செய்ய முடியும்.

''ஐயா வர்ற நேரம். யூனிபார்மை மாட்டிக்கிடறேன்...'' மேசையாளர் மறைந்தார். சற்று நேரத்தில் சீருடை அணிந்து திரும்பினார்.

வாகனம் வந்து நிற்கிற சப்தம் கேட்டது. நிலையம் சுறுசுறுப்படைந்தாற் போல இருந்தது. மேசையாளர், பருமர், ஒல்லியர் மற்றும் இரண்டு பேரும் எழுந்து விறைத்துக் கொண்டு நின்றார்கள்.

பெண்கள் போய்ச் சேர்ந்திருந்தார்கள். அவர்களின் பூ வாசனை மட்டும் அங்கேயே சுழன்று கொண்டிருந்தது.

அதிகாரி எனப்பட்டவர் உள்ளே நுழைந்தார். எல்லோரும் சல்யூட் அடித்து நின்றார்கள். அதிகாரி மூர்த்தியைப் பார்த்துக் கொண்டே அவனைக் கடந்தார். அறை வாசலில் நின்று மீண்டும் அவனைப் பார்த்தார்.

''சார்... நீங்க கிருஷ்ணமூர்த்தி சார் தானே?'' என்றார் அந்த அதிகாரி.

மூர்த்தி எழுந்து நின்றான்.

''ஆமாம்.''

''சார். என்னைத் தெரியலையா? நான் தான் கேசவன். உங்க ஸ்டூடன்ட். எஸ். எஸ் எல்.சி.க்கு எனக்குத் தமிழ் எடுத்தது நீங்கதானே சார்... இங்க எப்படி சார்... இந்த நேரத்துல...''

''பீச்சுல உக்காந்திருந்தேன். இங்க இட்டுக்கிட்டு வந்துட்டாங்க.''



''இந்த டாக்டர் எதுல ஸ்பெஷலிஸ்ட்....?''
''வேற எதுல..... ஃபீஸ் கறக்கறதுலதான்!''
- சீர்காழி வி. ரேவதி.





உதவி ஆசிரியர் : அந்த அரசியல்வாதி பேட்டியில் சொன்ன கருத்துப் பற்றி நீங்க 'மிகப் பெரிய ஜோக்' குன்னு எழுதியது தப்பாப் போச்சு.....

பத்திரிகை ஆசிரியர் : ஏன்.... என்ன ஆச்சு?

உதவி ஆசிரியர் : சிரிப்புக்குரிய சன்மானம் பத்து ருபாயை உடனே அனுப்பவும்னு லெட்டர் போட்டிருக்கார்!

- எஸ். கந்தசாமி.

''எவன்டா இவரை அழைச்சுக்கிட்டு வந்தது?'' என்று அதிகாரி அந்தக் காவலர்களைப் பார்த்தார். பருமரும், ஒல்லியரும் ஒருவரையொருவர் மாறி மாறிப் பார்த்துவிட்டு, ''சார்... தெரியாமே...'' என்றார்கள். அவர்கள் முடிக்கும் முன்பே அதிகாரி, ''... தெரியுமா?.... தெரியுமா?'' என்று கத்தினார். விசித்திரமான பாஷையாக இருந்தது அது. மூர்த்தி நிச்சயமாக அந்த வார்த்தைகளைச் சொல்லிக் கொடுக்கவில்லை. முடித்து விட்டு, ''நீங்க வாங்க சார்'' என்று அறை உள்ளே நுழைந்தார். மூர்த்தி அவர் முன் இருந்த இருக்கையில் அமர்ந்தான்.

''சௌக்யமா சார்?''

''இருக்கேன்.''

''அம்மா சௌக்யமா?''

''உம்.''

''பெரிய பையன் என்ன பண்றான்?''

''பத்தாவது போயிருக்கான்.''

''குழந்தையில் பார்த்தது. சின்னவன்?''

''ஆறாவது.''

''டீ சாப்பிடறீங்களா?''

''சாப்பிடலாம். ஒரு சிகரெட் இருந்தால் தேவலை.''

மூர்த்தி சில்லறைகளைத் தேடி எடுத்தான்.

''சும்மா வைங்க சார்.''

அவர், காவலரைப் பெயர் சொல்லி அழைத்தார். இவனைப் பார்த்து, ''என்ன பிராண்ட் சிகரெட் சார்?'' என்றார்.

சொன்னான்.

''டீயும், சார் சொன்ன சிகரெட் ஒரு பாக்கெட்டும் மறக்காம தீப்பெட்டியும் வாங்கியா.... யார் யோக்யர், எவன் அயோக்கியன்னு கூடத் தெரிஞ்சுக்காமே இன்னாடா உத்யோகம் பாக்கிறீங்க? சுத்தக் களிமண்ணா இருக்கு உங்க தலையிலே...''

''உங்க கதைகளையெல்லாம் நம்ம வீட்டிலே படிப்பா, சார்... எனக்குத்தான் நேரம் இல்லை. அடி, அவரு எங்க வாத்தியாருடின்னு பெருமையாச் சொல்லிக்குவேன்.''

மூர்த்தி சிரித்து வைத்தான்.

''எப்போ இந்த வேலைக்கு வந்தே?''

''எண்பத்தி ஆறிலே வந்தேன், சார்...''

''எத்தனை குழந்தைகள்?''

''இனிமேல்தான். கல்யாணம் ஆகி எட்டு வருஷமாச்சு. இரண்டு பிறந்து செத்துப் போச்சு.''

''எல்லாம் சரியாப் போயிடும். கவலைப்படாதே. சின்ன வயசுதானே. எல்லாம் பொறக்கும்.''

''வீட்டுக்கு வாங்க சார். உங்களைப் பார்த்தா அவளுக்கும் சந்தோஷமா இருக்கும். ஆறுதலாவும் இருக்கும்.''

அவன் குரலும், அவன் முகமும் மிகவும் மாறிப் போய் தழுதழுத்ததாக மூர்த்திக்குத் தோன்றியது.

டீயும் சிகரெட்டும் வந்தன. இருவரும் டீ குடித்தார்கள். அவன் புகைத்தான்.

''அப்போ நான் புறப்படலாமா?''

''நான் உங்களை வீட்டுலே டிராப் பண்றேன் சார்.''

அவர் எழுந்தார்.

''மணி என்ன?''

''நாலே முக்கால்.''

''வேணாம். நடந்தே போயிடறேன். இன்னும் நிலா இருக்கும்.''

''என்ன சொன்னீங்க?''

''இல்லே. நிலா, சமயங்கள்லே ஆறு வரைக்கும் கூட இருக்கும்.''

''நான் வீட்டுலே விட்றேன் சார்.''

''எதுக்குப்பா... எனக்கு நடந்தாத்தான் சந்தோஷம். நீ இரு. நிலாவில நடக்கறது எனக்கு ரொம்பப் பிடிக்கும்.''

''உங்க இஷ்டம். மனசுக்குள்ளே ஒன்றும் வச்சுக்காதீங்க சார். தெரியாம நடந்து போயிடுச்சு.''

''அதனால என்ன?''


மூர்த்தி வெளியே வந்தான். ஒல்லியர் அவனைத் தொடர்ந்து வந்தார். அவருக்கு இரைத்துக் கொண்டிருந்தது.

''மருந்து எடுத்துக்கறீங்களா? இதுக்குச் சித்தவைத்தியத்திலே ரொம்ப நல்ல மருந்து இருக்கு.''

அவர் இருமினார்.

மூர்த்தி தெருவில் நடந்த போது நிலா இருந்தது. அவனுக்குச் சந்தோஷமாக இருந்தது.

இதமான காற்று, செய்தித்தாள் ஸ்டேன்ஸ் பாபுலர் காபி இவையே எனது காலைப் பொழுதை இனிமையாக்குகின்றன.





பிரபலமான ஸ்டேன்ஸ் பாபுலர் காபி ஒவ்வொரு காலைப்பொழுதையும் இனிமை நிறைந்ததாக மாற்றும் சிறந்த ஸ்டிராங்கான காபி.

ஒவ்வொரு கோப்பை காப்பியும் உங்களுக்கு அதன் நறுமணம் நிறைந்த திருப்தியை அளிக்கிறது.

சுவைத்துப் பாருங்கள் தனித்தன்மை மிகுந்த இனிய சுவையை நீங்களும் உங்கள் குடும்பத்தினரும் விரும்புவீர்கள்.

ஸ்டேன்ஸ் பாபுலர் காபி - தனித்தன்மை நிறைந்த திடமான நறுமணத்திற்கு

ஸ்டேன்ஸ்

ஸ்டேன்ஸ் டீ அண்ட் காபி லிமிடெட்

8/1597, திருச்சி ரோடு,
அஞ்சல் பெட்டி எண் 3856
கோயம்புத்தூர் - 641 018.


MAC/STC/1134 TA/

மாநகர காவல்

அரசியல் அதிகாரம் கையில் இருக் கும் போது அடையக் கூடாததுதான் எது? பலன்தான் முக்கியமே தவிர, அதைப் பெறுவதற்காக மேற்கொள்ளும் வழிமுறைகளைப் பற்றி என்ன கவலை?

நெஞ்சுக்குள் வஞ்சமும் தோற்றத்தில் கனிவும் கொண்ட அரசியல்வாதிகள் சிலர், பணத்தாசையும் பதவி வெறியும் உந்த, தங்கள் லட்சியப் பூர்த்திக்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள், எந்த அளவுக்கு நாசத்தையும் மோசத்தையும் கொண்டு வருகின்றன என்பதை அழுத்தமாகவே வலியுறுத்தும் கதை.

எதையும் திட்டமிட்டுப் பெரிதாகவே செய்து பழக்கப்பட்டு விட்ட ஏவி. எம். நிறுவனம் இந்த (150-வது)ப் படத்திலும் அந்த வழிமுறையையே தொடர்ந்து கடைப்பிடித்திருக்கிறது - சற்றுக் கூடுதலாகவே.



புது தில்லியின் நெரிசல் மிகுந்த பஜார் ஒன்றில், ஆனந்தராஜைத் துரத்திக் கொண்டு விஜயகாந்த் ஓடுவது -

அண்ணாந்து பார்த்தால் கழுத்தை வலிக்கும் அளவுக்கு உயரமான அடுக்கு மாடிக் கட்டடத்தின் மேல் தளத்திலிருந்து தவறிக் கீ.....ழே விழும் குழந்தை, ஏதோவொரு வீட்டிலிருந்து துருத்தி நிற்கும் ஆன்டெனாவில் மாட்டிக் கொண்டு தொங்கி ஊசலாட, அந்த ஆன்டெனா பளு தாங்காமல் எந்த நிமிடமும் சுவரிலிருந்து பிய்த்துக் கொண்டு ரோடை நோக்கிக் குழந்தையுடன் விழுந்து விட ஆபத்தமாவது -

எல்லாவற்றுக்கும் உச்சமாக, நாட்டின் பிரதமரைக் கொலை செய்ய முயலும் நடவடிக்கைகள் - சில உதாரணங்கள்.

இவற்றைப் படமாக்கியிருக்கும் விதம் பரபரப்பூட்டுவது மட்டுமல்ல, இருக்கை நுனியில் அமரச் செய்து திகிலைக் கூட்டவும் செய்கிறது.

விஜயகாந்த் நடிப்பில் மேலும் கூடியிருப்பது நயம் என்றால், ஆனந்தராஜின் வில்லத்தனத்தில் தெரிவது வித்தியாசமான வினயம். அதுவும், தன்னை அடித்துச் சாய்த்து, விஜயகாந்த் வெல்லும் ஒவ்வொரு கட்டத்திலும் சப்தம் எழாத வகையில், மெலிதாகக் கைதட்டிப் பாராட்டுவது, ஒரு தனியான ரசனை.

பிரதமராக லட்சுமி, சோகமாக வைஷ்ணவி, கடமை தவறாத ஐ. ஜி. யாக நம்பியார், அவ்வப்போது கிளுகிளுப்பூட்டும் சுமா, லேசாகச் சிரிப்பூட்டும் செந்தில் - சின்னி ஜெயந்த், ரசிக்கும் படியான இசை... இவை படத்தின் ப்ளஸ் பாயிண்டுகள்.

நிமிடத்துக்கு ஒரு த்ரில் - உபயம் : இயக்குனர்.


- சி. ஆர். கே. -

ஹைதராபாத்-400

"முஸ்லீம்களாக இங்கே பிறந்தோம். இங்கேயே மடிவோம். என் சவப்பெட்டியை இந்துக்களும், முஸ்லீம்களும் சேர்ந்து தூக்கிக் கொண்டு போக வேண்டும்." ஹைதராபாத்தின் எட்டாவது நிஜாமான இளவரசர் முக்ரம் ஜா இவ்வாண்டு மதக்கலவரத்தில் சுமார் ஆயிரம் பேர் பலியாக்கப்பட்ட போது இப்படிச் சொன்னார்.

முந்தின ஏழு நிஜாம்களும் செல்வச் செழிப்பில் வாழ்ந்தவர்கள். எட்டாவது நிஜாம் இன்று 'செழிப்பை' இழந்து வாழ்கிறார். இருபது ஆண்டுகளுக்கு முன் ஹைதராபாத்திலிருந்து ஆஸ்திரேலியா சென்றவர், இவ்வாண்டு பணக் கஷ்டத்தில் திரும்பி இருக்கிறார். ஆஸ்திரேலியாவிற்கு முதல் மனைவியோடு சென்றவர், 'ஆய்சா ஹெலன்' என்ற ஏர்ஹோஸ்டலை மணந்தார். அப்பெண் 'எய்ட்ஸ்' வியாதியால் இறந்து விட்டார் என்று சொல்லப்படுகிறது. இன்று துருக்கிய அழகியொருத்தியை மீண்டும் மணந்து கொள்ள இருக்கிறார்!

◆ சார்மினார்



நானூறு ஆண்டுகள் பழைமையான ஹைதராபாத்தின் சரித்திரத்தைக் கூர்ந்து பார்த்தால், முந்தைய நிஜாம்களின் செல்வச் செழிப்புத் தெரியும்.

1,500-ல் ஆண்டு வந்த



◆ கோல்கொண்டா கோட்டை.....

சுல்தான் இப்ராஹிமிற்கு கோல்கொண்டா கோட்டை தலைநகரமாக இருந்தது. கோல்கொண்டா சற்று நெரிசலாகிப் போகவே, புது நகரம் ஒன்றை நிர்மாணம் செய்ய ஆரம்பித்தான். 1,508-ல் அவன் இறந்த பின் அவனுக்குப் பின் வந்தவர்கள் அவன் கனவை நிறைவேற்றினர்.

கோல்கொண்டா கோட்டை ஒன்பது கிலோ மீட்டர் சுற்றுச் சுவர் கொண்டது. ஆயுதக் கிடங்குகள், நகைகளையும் வைரங்களையும் பாதுகாக்க அறைகள், அரசரின் அந்தரங்கத்திற்கான சுகபோக ஸ்தானங்கள், விசாலமான குளியலறைகள், கலைஞர்களைப் போஷிக்கத் தனி இடங்கள்.


கீழ் வாசல் ஒன்றில் கை தட்டினால் சுமார் 70 மீட்டர் உயரமுள்ள கோட்டை உச்சியில் தெளிவாய்க் கேட்கிற சாகச கட்டடத் திறன். உலகின் சில இடங்களில் கோல்கொண்டாவின் கோகினூர் வைரங்கள் உள்ளன. பிரத்யேகமான வைரமொன்று ரஷ்ய மியூசியத்தில். அது இங்கிருந்து கொண்டு செல்லப்பட்டதுதான். 'ஹாதியக்காதாரக்த்' என்ற மரம் ஒன்று உள்ளது. யானை மரம். அடிப்பாகம் நூறு சதுர அடி. ஒரு பக்கம் நின்று எவ்வளவு சப்தமிட்டாலும் அடுத்த பக்கத்திலிருப்பவருக்குக் கேட்காது. மரப்பட்டைகள் யானைகளின் தோல் போல். 'யானை மரம்' இன்னும் இருக்கிறது.

கோல்கொண்டா இப்ராஹிமிற்கு வாரிசு முகம்மது குலி குதுப்ஷா. உருதுக் கவிஞன். இளவரசன் என்பதால் காதல் லீலை இருக்குமல்லவா? அவனைக் கவர்ந்தவள் பாக்மதி என்ற நாட்டிய + நாடோடிப் பெண். வயிற்றுப் பிழைப்புக்காகக் கோல்கொண்டாவிற்கு வந்து குடியேறிய குடும்பம். அவள் இளவரசனின் கண்ணில் பட்டாள். ஆஸ்தான நாட்டியக் காரியாக நியமிக்கப்பட்டாள். ஆனால், தானே முழுமையாய் அவளின் நாட்டியத்தை, வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ள குதுப்ஷாவிற்கு ஆசை. இப்ராஹிமின் காவலை மீறிக் குதிரையின் உதவியால் மூஸி நதிக்கரையை அடைந்தான். மூஸி அவன் உள்ளக் களிப்பு போலவும், பரபரப்பு போலவும் பொங்கி வழிந்தது. மூஸியைக் காதல் வேகத்தில் நீந்திப் பாக்மதியைச் சந்தித்தான்.

இனி எந்தக் காதலனும் வெள்ளத்தின் பெருக்கத்தோடு எதிர் நீச்சல் போட்டுக் கரையைக் கடந்து, காதலியைச் சந்திக்க வேண்டாம் என்ற நினைவிலோ என்னவோ நதியில் பாலம் ஒன்றைக் கட்டினான். 'புரானாபுல்' பாலம் அது. பாரிஸிலுள்ள 'பாண்ட் நியூப்' என்ற பாலத்துக்கு இணையானது. பாக்மதி பெயரால் 'பாக்யநகர்' ஆகி, பின் 'ஹைதராபாத்'.

◆ மண்வாசனை...





✱ வகைவகையாய் வளையல்கள்....

கோல்கொண்டாவில் நிஜாமின் வைரம் 280 காரட் நிறை இருந்ததாம். பேப்பர் வெயிட்டுக்கும் வைரங்கள் பயன் பட்டிருக்கின்றன. சில வைரங்களின் பெயர்களின் சேர்க்கையால் கோல்கொண்டா என்ற பெயர் வந்திருக்கிறது. Great table, Orloff, Kohinoor, Nizam, Daryainoor ஆகிய வைரங்களைச் சேர்த்தால் Golkonda பெயர்.

இப்ராஹிமுக்குத் தெலுங்குக் கலாசாரத்தின் மேல் ஈடுபாடு இருந்தது. ''தெலுங்கு எனது இரண்டாவது பாஷை'' என்று கூறிக் கொள்வாராம்.

ஔரங்கசீப் தன் எல்லையை விரித்துக் கொண்டே இருந்த போது, கோல்கொண்டாவுடன் உறவு வைக்க நினைத்து வந்தார். குதுப்ஷாவின் ராஜகுமாரியைத் தம் மகனுக்குக் கேட்டார். அதே சமயம் அவரின் மேல் இஸ்லாமிய நம்பிக்கைகளுக்கு எதிரானவர் என்ற குற்றச்சாட்டை வைத்துப் போர் தொடுத்தார். எட்டு மாதப் போர். இருப்பினும் கோல்கொண்டா கோட்டையைத் தாண்டி வர முடியவில்லை. ஔரங்கசீப் தளர்ந்து டில்லி திரும்ப நினைத்த சமயம்; குதுப்ஷாவின் தளபதி ஒருவன் லஞ்சம் வாங்கிக் கொண்டு கோட்டையின் கிழக்கு வாயிலைத் திறந்தான். படைகள் நுழைந்தன. குதுப்ஷாவின் ஆட்சிக்கு முற்றுப் புள்ளி விழுந்தது.

சார்மினாரைக் காட்டினதும் ஹைதராபாத் ஞாபகம் வரும். நான்கு மினார்கள். ''யாஹுஃபீஜ்'' என்றொரு பெயர் இதற்கு. 1,591-ல் குதுப்ஷா கட்டினான். பல ஆயிரக்கணக்கான மக்கள் பிளேக் நோயால் இறந்தனர். அந்த நோயை ஒழிப்பது குதுப்ஷாவிற்கு ஒரு பெரிய பிரச்னை. நோயை ஒழித்து வெற்றி கண்டதன் நினைவுச் சின்னம்தான் 'சார்மினார்'.

1,986-க்குப் பின் சார்மினாரின் மேலே ஏறி நகரை பருந்துப் பார்வையால் பார்க்கிற அதிர்ஷ்டம் இல்லாமற் போயிற்று. நான்கு பெண்கள் - திருமண வயது வந்து, வரதட்சணை என்னும் பிரச்னைகளால் திருமணமாகாத அவர்கள் - அவர்களின் சகோதரர் ஒருவர் என ஐந்து பேர் சார்மினாரின் உச்சிக்குச் சென்று அங்கிருந்து கீழே குதித்து மரணமடைந்ததற்குப் பின், பொது மக்கள் உச்சிக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. 'குருக் குருக்' என்று இறக்கைகளைப் படபடத்துச் செல்லும் புறாக்கள், தொந்தரவு செய்யும் பிச்சைக்காரர்கள், எப்போதும் முனையில் குவிந்திருக்கும் ஆயுத போலீசார், மூச்சை முட்டும் வாகனங்களின் பெட்ரோல் புகை, சிவப்புக் குங்குமமிட்ட சாமியார்கள், சிறு முஸ்லீம் வழிபாட்டு ஸ்தலம், மூலையில் லட்சுமி + பிள்ளையார் கோவில்கள் - இவற்றைச் சார்மினாரின் கீழே இருப்பதை ஒரு பார்வை பார்க்கலாம் - மேலே போகிற ஆசையை ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு.

சார்மினாரிலிருந்து வளையல் கடைகளை நோட்டமிட்டபடி நடந்தால் மெக்கா மசூதி தென்படும். பத்தாயிரம் பேர் தொழுகை நடத்தலாம். வெகு விசாலம். மசூதியில் நான்கு பெஞ்சுகள் உள்ளன. சலவைக் கற்களினாலும், கருங்கல்லினாலும் செய்யப்பட்டவை. அவற்றில் உட்கார்ந்தால் அங்கு மறுபடியும் வரும் வாய்ப்புக் கிடைக்குமாம். 1,614 - ல் கட்ட ஆரம்பித்து, 78 ஆண்டுகள் பிடித்ததாம் இதைக் கட்டி முடிக்க.

மசூதியின் அடிக்கல்லை நாட்ட ஒரு தகுதியானவரைத் தேட பல வல்லுனர்களும், மதவாதிகளும் அழைக்கப்பட்டனர். காலை நேர பிரேயரை வாழ்க்கையில் தவறவிடாத ஒருவரே அடிக்கல்நாட்டத் தகுதியானவர் என்றாராம் சுல்தான். பன்னிரண்டு வயதிலிருந்து தொடர்ந்து அதைக் கடைப்பிடித்து வரும் அவரே அதற்குப் பொருத்தமானவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டாராம்.

பிரெஞ்ச் வைர வியாபாரி ஒருவரின் குறிப்பில் இந்த மசூதி பல ஆயிரக்கணக்கான ஆட்களைக் கொண்டு கட்டப்பட்ட தகவல் உள்ளது. 700 ஜோடி எருதுகள் சுமைகளை எடுத்துச் செல்லப் பயன்பட்டன.

ஹாஜ் யாத்திரை சென்று மெக்காவில் 'நமாஸ்' செய்ய இயலாதவர்கள் இங்கு நமாஸ் செய்வது அங்கு செல்வதற்கு இணையானது என்ற நம்பிக்கையும் உண்டு.

இதைக் கட்டி முடிப்பவர்கள்தான் இதன் இறுதி ஆட்சியாளராக இருப்பார்கள் என்ற நம்பிக்கை, பலரைப் பயமுறுத்தி இருக்கிறது. அப்துல் ஹாசன் குதுப்ஷா இதைப் பொய்யாக்க நினைத்துக் கட்டடத்தைக் கட்டி முடிக்கச் சொன்னாராம். அதே

வீடு ஒன்று வாங்குங்கள் - உமக்கே சொந்தமாக.



வாருங்கள் எல்ஐசி வீட்டு வசதி நிதி நிறுவனத்திற்கு.

எல்.ஐ.சி என்றாலே பாதுகாப்பின் சின்னம். பாதுகாப்பிற்கான அடிப்படைத் தேவைகளில் ஒன்று இருக்க இடம்
உங்கள் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் ஒன்று

எல்.ஐ.சியின் புதிய துணை நிறுவனமாகிய எல்.ஐ.சி. வீட்டுவசதி நிதி நிறுவனம் இப்போது இத்துறையிலே அடியெடுத்து வைத்துள்ளது. தமக்கே சொந்தமாக ஒரு வீடு கட்டிக் கொள்வதற்கு மக்களுக்கு உதவிட இரு நீண்டகால திட்டங்கள் இதில் உள்ளன.

ஜீவன் நிவாஸ்

கடன் வரம்பு : ரூ. 5 இலட்சம் வரை.
கால வரம்பு : 20 வருடங்கள் வரை.
கடன் தொகை : திருப்பித் தரும் வசதியைப் பொறுத்தது. அத்துடன் சொத்தின் மதிப்பில் 75%-80%க்கு அதிகப்படாமல்.
வட்டி விகிதம் : 12% முதல் 17% வரை
மாதாந்திர சரி விகித தவணைகளில் அல்லது எல்.ஐ.சி பத்திரங்கள் அல்லது இரண்டும் இணைந்தும் செலுத்தலாம்.

ஜீவன் குடீர்

கடன் வரம்பு : ரூ. 2 இலட்சம் வரை.
கால வரம்பு : 20 வருடங்கள் வரை
கடன் தொகை : சொத்து மதிப்பிலே 75%-80% வரை
வட்டி விகிதம் : 12% முதல் 14% வரை
குறைந்த விலையுள்ள பீமா சந்தேஷ் கால காப்பீடு திட்டத்துடன் சேர்த்து மாதாந்திர சரிவிகிதத் தவணைகளில் செலுத்தலாம்.

கவர்ச்சியான விகிதங்களில் கடனுதவி.

எங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

எல்ஐசி வீட்டு வசதி நிதி நிறுவனம் லிமிடெட்

स्वगृहाय अर्थसहाय:

மண்டல அலுவலகங்கள் : சவுத் இந்தியா
கோ-ஆப். பில்டிங், அண்ணா சாலை, சென்னை-600 002.
யுனைடெட் இந்தியா பில்டிங், அவனாசி ரோடு,
கோயம்புத்தூர்-641 018.

தலைமை அலுவலகம் : பாம்பே லைப் பில்டிங்,
45-47 வீர் நரிமான் ரோடு, பம்பாய்-400 001

SAS490TM

போல் கட்டடம் முடிந்தது. ஔரங்கசீப்பின் படையெடுப்பால் ஆட்சி முடிந்தது!

பிரிட்டிஷ் படைகளுக்கு கன்டோன் மெண்ட்டாக அமைந்ததே செக்கந்திராபாத். நவீன வளர்ச்சியில் புது நகரமானது. பின் இரட்டை நகரத்துள் ஒன்றாகி விட்டது.

கன்டோன்மெண்டில் குதிரை மேல் ஏறின ஒரு வீரனின் ஆவி ஜூலை 9-ம் தேதி இரவுகளில் உலாவுவதாய் ஒரு வதந்தி நெடுநாளாய் உள்ளது. அதன் பின்னணியில் ஒரு கதை உண்டு. ஜான்மூர் என்ற ஆங்கில லெப்டினென்டுக்குக் குதிரையில் உட்கார்ந்து சவாரி செய்து, ஓர் ஆழமான கிணற்றைத் தாண்டுவது உற்சாகமான விளையாட்டு. பிறரின் வேடிக்கைக்கென அவர் அடிக்கடி தாண்டுவாராம். சென்னையைச் சார்ந்த ஒரு ஜெனரல், செக்கந்திராபாத் வந்த போது இதைக் கேட்டுச் சிரித்திருக்கிறார். பார்க்க விரும்பியிருக்கிறார். ஜான்மூர் அவர் முன்னிலையில் குதிரை ஏறி இருக்கிறார். குதிரை அடிபடக் குதிரையோடு கிணற்றில் விழுந்து இறந்தார். பக்கம் பக்கம், இவருக்கும் குதிரைக்கும் கல்லறைகள் இப்போதும் காணப்படுகின்றன.

OO ராமதாஸ் என்ற இந்து அரசாங்க ஊழியர். ராமபக்தர். அரசாங்கப் பணத்தில் தன் கிராமத்தில் ஒரு கோவில் கட்டியது தெரிந்து, நவாப் சுல்தான் அவரைச் சிறை வைத்தார். ராமர் சுல்தானின் கனவில் வந்து ஆறுதல் சொல்கிறார். அடுத்த நாள் ராமதாஸை விடுதலை செய்து வழியனுப்பியதோடு அந்தக் கோவிலுக்கு மான்யமும் அளித்தார் சுல்தான். இக்கோயிலுக்கு இன்றும் அரசாங்க மான்யம் உள்ளது.

OO ஆப்ரிக்க கறுப்பர்கள் வசிக்கிற ஒரு பகுதி மசால் டாங்க். நிஜாமிற்கு மெய்க்காப்பாளர்களாகப் பயிற்சி பெற வானப்பரத்தி ராஜா ஒருவர் ஐம்பது நீக்ரோக்காரர்களைக் கூட்டி வந்திருக்கிறார். பின் இது தொடர, நிறையப் பேர் வர ஆரம்பித்து விட்டனர். முரட்டுத் தோற்றம் கொண்டவர்கள். முஸ்லீம் பெண்களை மணந்து வாழ்கிறார்கள். போலீஸ், வாட்ச்மேன் உத்யோகங்களில் காணப்படுகிறார்கள். மறுமணம், விவாகரத்து போன்றவை இவர்கள் மத்தியில் சுலபம். நிஜாம் இருந்தவரை மெய்க்காவல் படை வேலை நிரந்தரமாக இவர்களுக்கு இருந்திருக்கிறது. இப்போது தாழ்ந்த ஜாதிகளைப் போல்



❖ ரெபக்கா சிலை....

கஷ்டப்படுகிறார்கள், இந்த ஆப்ரிக்கர்கள்.

OO சார்மினார் என்றதும் வளையல்கள் ஞாபகம் வரும். ''காஞ்சா சூடி... சாந்திகா சூடி... லாக்கர் சூடி...'' என்று வகை வகையாய், வளையல்கள் செய்யும் இடத்தைக் கார்கானா என்கிறார்கள். சொல்லும் விலைக்கு இரக்கமில்லாமல் பாதிக்குத் தட்டிக் கேட்க வேண்டும். ஜிர்கோனியம் என்ற அமெரிக்க வைரக்கல் பதித்த வளையல்கள் விலை அதிகம்.

OO துணிகளில் ஓவியங்களை வரைவது 'பத்திக்'. இந்தக் கலை இன்று நசிந்து போய், லுங்கிகளில் பொம்மைகள் போடுவது என்றாகி விட்டது.

OO 'இந்தியன் ரயில்வே சிக்னல் அன்ட் கம்யூனிகேஷன் இன்ஸ்டிட்யூட்' இந்தியாவிலேயே இங்குதான் உள்ளது. இங்கு தமிழ் ஆசிரியர்கள் நிறைய உள்ளனர். இங்குள்ள தமிழர்களில் பெரும்பான்மையோர் ரயில்வேயில் வேலை செய்பவர்கள், மத்திய அரசுப் பணியாளர்கள்.

OO கானா பஜார் அல்லது மெகபூப் கி மெகந்தி பிரசித்தியானது. நிஜாம் காலத்திலிருந்து பிரபலம் இது. அரச குடும்பத்தினர் ஓய்வு நேரத்தைக் கழிக்கப் பெண்கள் ஆடுவதும், பாடுவதுமாக இருந்து தொடர்ந்து,

இன்றும் கேளிக்கைச் சட்டம் இரவு ஏழு மணியிலிருந்து பன்னிரண்டு மணி வரை இதற்கு அனுமதிக்கிறது. வெள்ளைத் திண்டுகள், விளக்குச் சரங்கள். இவற்றின் மத்தியில் அழகான பெண்கள். பெரும் பாலும் முஸ்லீம்கள். ஓரிரு இந்து குடும்பப் பெண்கள். கஜல், பாப் பாடல்கள், தெலுங் கானா கிராமியப் பாடல்கள், சினிமாப் பாடல்கள் என்று கலவையாகப் பாடு கிறார்கள்.

OO நிஜாமின் பிரதமர் சாலார்ஜங் (மூன்றாமவர்) நிறையக் கலைப் பொருட் களைச் சேகரித்து வைத்துள்ள இடம் ''சாலார்ஜங் மியூசியம்.'' பைபிளின் ''பழைய ஏற்பாட்டில்'' ஐசக்கின் தங்கை ரெபக்கா பெண் பார்க்க வந்தவனைத் திரையிட்டு, நாணத்தோடு காணும் காட்சி பளிங்குக் கல்லில். ஜோனி என்ற இத்தா லியக் கலைஞர் செய்தது. கொதேயின் நாடகம் ஒன்றில் (டாக்டர் பாஸ்டில்) வரும் மேபஸ்டா பிலிஸ், மார்கரெட்டா என்ற இரு ஆண், பெண் பாத்திரங்களை ஒரே சிற் பமாய்ச் செதுக்கியிருக்கிறார்கள். குரான், ராமாயண மகாபாரத உரைகள், திப்புசுல்தா னின் வாள், நவரத்தினங்கள், இவற்றுக்கு மேல் நவீன பெயிண்டிங்குகள்.. எம். என். ராயின் ''குளிக்கும் பெண்ணும்,'' ரவி வர்மாவின் ''திருட்டுக் காதலும்'' அற்புத மான இந்திய ஓவியங்கள்.

OO பதினைந்து விதமான திராட்சை களைப் பிப்ரவரி, மார்ச்சில் இங்கு கலப மாகப் பார்க்கலாம். விதையில்லாத விசேஷ திராட்சையும் உண்டு. 1,956-ல் ராம கோடேஸ்வரராவின் முதல் திராட்சைத் தோட்டம் இதற்கு வித்திட்டது. தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு ஜீடிமெட்லா என்ற பகுதியில் ஐம்பது ஏக்கர் திராட்சைத் தோட்டம்.

OO ஹைதராபாத் 'பலாவ்' நல்ல ருசி யானது. பாலில் செய்யப்படும் ''கலா கந்தி'' விசேஷமானது. ''டபுள் கா மிட்டா'' இப்போது முஸ்லீம்கள் உட்பட எல்லோ ரின் பிரத்யேக ஸ்வீட்... வெஜிடபிள், நான் வெஜிடேரியன் பிரயாணிகளுக்கு ஏக கிராக்கி. வழக்கம் போல் ஆவக்காய் ஊறு காய்... ஆ... காரம் ருசி...

OO புத்தர் சிலையொன்று ஹுசேன் சாகர் ஏரியின் மத்தியில் வைக்க ஏற்பாடு நடந்தது. ஒரு கோடி செலவு. (ஹுசேன் சாகர் ஏரி ஒரு மைல் நீளம் - ஹைதரா பாத்தையும், செகந்திராபாத்தையும் பிரிப் பது) பீடத்திற்குப் படகில் கொண்டு செல் லும் போது படகு கவிழ்ந்து பதினைந்து பேர் மரணம். பல கம்பெனிகள் டெண்டர் எடுத்துப் புத்தர் சிலையை மீட்க முயற்சி செய்தன. தோல்விதான். இங்குதான் விநாயகர் சதுர்த்தியின் போது ஆயிரக்கணக் கான சிலைகள் நீரில் மூழ்கடிக்கப்படு கின்றன. புத்தரை மீட்பது சிரமம் என்கி றார்கள். இதை வடிவமைத்தவர் கணபதி ஸ்தபதி.

OO எகிப்திய மம்மி ஒன்று ஹைதரா பாத் பப்ளிக் கார்டனில் வைக்கப்பட் டுள்ளது. மம்மி என்பது பாதுகாக்கப்பட்ட சடலம். பிரிந்த உயிர் பல ஆண்டுகளுக்கு பின் அதே உடலில் வரும் என்று எகிப்தியர்கள் நம்பி, அரச குடும்பத்தினரின் சடலங்களை இவ்வாறு வைத்துள்ளனர். இங்குள்ளது 4,500 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. ஜாகிர்தார் ஒருவர் ஆயிரம் பவுண்டுக்கு வாங்கி நிஜாமுக்குப் பரி சளித்தாராம். இந்த 'மம்மி' பிரசவத்தால் இறந்த ஒரு பெண்ணின் உடல். இதை வாங்கியவர் உடல் இருக்கிறதா என்று பார்க்கப் பாதத்தில் சிறிதளவை வெட்டி இருக்கிறார்; துவாரம் இதனால் தெரிகிறது.

OO உருதும், தெலுங்கும் கலந்த பாஷை சாதாரணம். 'பான்ஷன்' என்று தெலுங்கானா மக்கள் வழங்கும் வார்த்தை (அடிமைத்தனம்) ''பானிஷா'' என்ற உருதிலிருந்து வந்தது. ''லஸ்கர்'' என்பது உருது. தெலுங்கு வழக்காக உள்ளது. (செகந்திராபாத் முன்பு கன்டோன்மெண்ட் ஆக இருந்ததால் லஸ்கர் - ஆயுத கிடங்கு - என்ற பெயர் செகந்திராபாத்திற்கு உண்டு). பரிக்ஷான், பேகார் போன்ற இந்தி வார்த்தைகள் தெலுங்கு வார்த்தைகளா கவே சுலபமாக வழங்கப்படுகின்றன.

- ஸ்ரீமுகி

வண்ணப்படங்கள், படங்கள் :
யோகா



''மாமி, எங்க சுசி, 'பாபா ப்ளாக் ஷீப்' எவ்வளவு அழகாகச் சொல்லுவாள். கேட்டுப் பாருங்களேன்.''

''ஒரு கண்டிஷன். நீங்களும் எங்க வீட்டுக்கு வந்து எங்க நிம்மி 'பாபா ப்ளாக் ஷீப்' சொல்றதைக் கேட்கணும்.''

- விஷ்ராம்.

உதவும் கரங்களுக்கு தேவை உங்கள் உதவி



-எஸ். வித்யாகர்

இந்தப் பிடிப்பு இக்குழந்தையின் வாழ்க்கை பிடிப்பு

இதை பலப்படுத்த முன்வாருங்களேன்?

95 குழந்தைகளோடு, மனநிலை நோயுற்றோர், அந்திம காலத்தில் ஆதரவற்றோர் என 200-க்கும் மேற்பட்டோருக்கு அடைக்கல மான உதவும் கரங்கள்,இல்லத்தை மேற்கொண்டு நடத்த நிதியுதவிக் குறைய தவிக்கின்றது.

சிந்தியுங்கள்! சமுதாயத்தின் மண்டிகளாகிவிட்ட இவர் களுக்கு உதவ ஒரு கணமாவது நீங்கள் நினைத்திருப்பீர்களோ? அதற்கான ஒரு அரிய வாய்ப்பு இது! செயல்படுத்துங்கள் உங் கள் மனசாட்சியின் அறை கூவலை. உயிரூட்டுங்கள் இவர் களின் ஜீவனற்ற வாழ்க்கையை. உங்களின் ஒவ்வொரு ரூபாய் நன்கொடையும், வாடும் ஒரு முகத்தை மலர வைக்கும், மன நிறைவை உங்கள் சொந்தமாக்கும்.

உங்கள் உதவியை எதிர்நோக்கும்,

எஸ். வித்யாகர்,
உதவும் கரங்கள்,
460-சி, என்.எஸ்.கே. நகர்,
அரும்பாக்கம்,
சென்னை-600 106.
தொலைபேசி எண்: 426141.

DONATIONS ARE EXEMPTED FROM INCOME TAX ACT SEC (80G)

சிவகாமியின் சபதம்

முன்கதை

காஞ்சி மாநகரைத் தலைநகராகக் கொண்டு, பல்லவ சாம்ராஜ்யத்தை ஆண்டு வந்த மகேந்திரவர்ம சக்கரவர்த்தியின் குமாரர் மாமல்லர் நரசிம்மருக்கும் அரண்யத்தின் நடுவில் வீடு கட்டிக் கொண்டு, சிற்ப வேலை செய்து வந்த ஆயனச் சிற்பியின் மகள் சிவகாமிக்கும் காதல் ஏற்பட்டு வளர்ந்து வருகிறது.

பல்லவ ராஜ்யத்தின் மேல் படையெடுத்து வந்த வாதாபி புலிகேசியின் சைன்யத்தை எதிர்ப்பதற்காகப் பல்லவ சைன்யத்துக்குத் தலைமையேற்றுப் புறப்படுகிறார் மகேந்திரர். போகும் போது, தம் குமாரரிடம் காஞ்சிக் கோட்டைக்கு வெளியே போவதில்லை என்று வாக்குறுதி வாங்கிக் கொண்டு செல்கிறார்.

ஆயனச் சிற்பிக்காக அஜந்தா வர்ண ரகசியங்களை அறிந்துவரச் சென்ற இளைஞன் பரஞ்சோதி, வழியில் பல்லவ சைன்யத்தில் சேர்ந்து, அரும்பெரும் வீரச் செயல்கள் புரிகிறான். அவனைக் காஞ்சிக் கோட்டையை முற்றுகைக்கு ஆயத்தமாக்கும் பொருட்டு, சக்கரவர்த்தி அனுப்பி வைக்கிறார்.

புலிகேசிக்கு முன்பே, தான் காஞ்சியை அடைய வேண்டுமென்ற துராசையோடு படையெடுத்து வரும் கங்க நாட்டு மன்னன் துர்விநீதனை முறியடிக்கும்படி சக்கரவர்த்தி ஓலையனுப்புகிறார். அதன்படி, நரசிம்மரும் பரஞ்சோதியும் புறப்பட்டுச் செல்கிறார்கள். புள்ளலூர்ப் போர்க்களத்தில், நரசிம்மர், துர்விநீதன் படைகளை எதிர்த்து வீரப் போர் புரிந்து கொண்டிருக்கும் போது, சக்கரவர்த்தியும் 'வஜ்ரபாகு' வேஷம் தரித்து, ஒரு சிறு படையுடன் வந்து துர்விநீதன் படைகளைத் தாக்குகிறார். துர்விநீதன் தோற்றோடினாலும், யுத்தத்தின் முழுப் பொறுப்பையும் தம்மிடம் ஒப்படைக்காமல் சக்கரவர்த்தியும் வந்து போரிட்டது நரசிம்மருக்கு வருத்தமளிக்கிறது.

இதற்கிடையில் நாகநந்தி என்னும் புத்த பிக்ஷு மாமல்லரைப் 'பயங்கொள்ளிப் பல்லவன்' என்றும் 'ஸ்திரீலோலன்' என்றும் கூறியதைக் கேட்ட சிவகாமி, அதிர்ச்சியடைந்து குழம்புகிறாள். அந்தக் குழப்பத்தில், 'சிவகாமியின் புகழ் தூர தேசங்களிலும் பரவ வேண்டுமானால் பல்லவ ராஜ்யத்தை விட்டு வெளியேற வேண்டும்' என்று நாகநந்தி கூறியதைத் தந்தையிடம் வற்புறுத்தி இணங்கச் செய்து, தந்தையையும் அழைத்துக் கொண்டு நாகநந்தியோடு புறப்பட்டுச் செல்கிறாள். அசோகபுரம் என்ற ஊரிலிருந்த புத்த விஹாரத்தில் இவர்களைத் தங்கவைத்த நாகநந்தி, மாயமாய் மறைந்து போகிறார்.

அவர்கள் தங்கியிருந்த புத்த விஹாரம் வெள்ளப் பெருக்கில் மூழ்கப் போகும் சமயம், நரசிம்மர் தெப்பத்துடன் வந்து, காப்பாற்றி, மண்டபப்பட்டு என்னும் கிராமத்திற்குப் பத்திரமாக அழைத்துப் போகிறார். புள்ளலூர்ப் போர்க்களத்தில் நரசிம்மர் காட்டிய வீரத்தை முன்பே கேள்விப்பட்டிருந்த சிவகாமி, நரசிம்மர் மேல் மேலும் காதலாகிறாள்.

நாகநந்தி, புலிகேசியின் நம்பகமான ஒற்றன் என்பதை அறிந்திருந்த சக்கரவர்த்தி, தொடர்ந்து நாகநந்தியைக் கண்காணித்து வருகிறார். அதனால், நரசிம்மரை, நாகநந்தி கொலை செய்யத் தீட்டிய திட்டம் தோல்வியடைகிறது. அதற்காக நாகநந்தி வைத்திருந்த விஷம் தோய்ந்த கத்தியும் சக்கரவர்த்தியின் வசம் வந்து விடுகிறது.

இதே சமயம் வாதாபிப் படைகள் காஞ்சியை நெருங்கிக் கொண்டிருந்தபடியால், நரசிம்மரையும் பரஞ்சோதியையும் உடனடியாகக் காஞ்சிக்கு அனுப்பி வைத்த சக்கரவர்த்தி, ஆயனர் தங்கியிருந்த இடத்திற்கு வருகிறார். சிவகாமியைத் தனியாகச் சந்திக்கும் சக்கரவர்த்தி, ராஜாங்க நன்மைக்காக நரசிம்மரை மறந்து விடும்படி கேட்கிறார். சிவகாமி மறுக்கவே, 'நான் தோற்றேன்' என்கிறார் சக்கரவர்த்தி.

சிவகாமியிடம் இப்படிச் சொல்லி விட்டுப் புறப்படும் சக்கரவர்த்தி, நெருக்கடியான நேரத்தில் பயன்படுத்திக் கொள்வதற்காக ஆயனரிடம் தாம் கொடுத்திருந்த சிங்க முத்திரையுள்ள இலச்சினையைத் திருடிச் சென்ற நாகநந்தி, அதை ரதசாரதி கண்ணபிரானிடம் காட்டி, அவனுடைய ரதத்தில் காஞ்சி நோக்கிப் புறப்படுவதைக் காண்கிறார். அதைக் கண்ட சக்கரவர்த்தியின் முகத்தில் புன்னகை தவழ்கிறது!

நாற்பத்தொன்பதாம் அத்தியாயம்

காஞ்சியில் கோலாகலம்

ஏறக்குறைய அர்த்த ராத்திரியில், வராக நதிக் கரையிலிருந்து புறப்பட்ட மாமல்லரும் தளபதி பரஞ்சோதியும் காஞ்சிமா நகரை நோக்கி விரைந்து சென்றார்கள். வழியில் இரண்டு காத தூரத்துக்கு ஒன்றாக ஏற்பட்டிருந்த இராஜாங்க விடுதிகளில், அவர்களுக்காக மாற்றுக் குதிரைகள் ஆயத்தமாயிருந்தன. உணவும் சிரம பரிகாரம் செய்து கொள்ள வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இவ்வளவுடன் ஒவ்வொரு விடுதியிலும், நூறு குதிரை வீரர்கள் அணிவகுத்து ஆயத்தமாக நின்றார்கள். மாமல்லருடன் வந்த வீரர்களை ஆங்காங்கே தங்கி வரும்படி நிறுத்தி விட்டுப் புதிய துணை வீரர்களுடன் செல்வது, பிரயாணத்தின் விரைவுக்கு அநுகூலமாயிருந்தது.

இந்த முன்னேற்பாடெல்லாம் மாமல்லருக்கு மிக்க வியப்பளித்தது. அதே வழியில் முன்னால் சென்ற தம் தந்தைதான் அந்த ஏற்பாடுகளையெல்லாம் செய்து விட்டுப் போயிருக்க வேண்டும் என்று ஊகித்து, மாமல்லர் அளவற்ற இறும்பூது அடைந்தார். பரஞ்சோதியிடமும் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தார்.

அதற்குப் பரஞ்சோதி, "ஆஹா! இதை ஒரு பிரமாதமாகச் சொல்லப் போகிறீர்களே? சமுத்திரத்தின் ஆழத்தையாவது கண்டுபிடிக்கலாம்; சத்துருமல்லரான மகேந்திரரின் முன்ஜாக்கிரதைக்கு ஆழம் கண்டுபிடிக்க முடியாது. இதையெல்லாம் எட்டு மாத காலம் அவருடன் கூட இருந்து நேரிலேயே பார்த்தேன். அதனாலேதான், சக்கரவர்த்தி எது சொன்னாலும் அதற்கு மாறாக என் மனத்தில் நினைப்பது கூட இல்லை" என்றார்.

வடபெண்ணையாற்றங்கரையில் பல்லவ சைனியத்தோடு எட்டு மாதம் தங்கி, வாதாபி சைனியத்தை மேலே வரவொட்டாமல் தடுப்பதற்குச் சக்கரவர்த்தி கையாண்ட அதிசயமான யுக்திகளையும் தந்திரங்களையும் பற்றிப் பரஞ்சோதி பிரஸ்தாபித்தார். இது மாமல்லருக்கு அவ்வளவு உற்சாகம் அளிக்கவில்லை.

"தளபதி! நீங்கள் என்னதான் சொல்லுங்கள், எதிராளியை நிறுத்தி வைப்பது, ஏமாற்றுவது, பின்வாங்கித் தப்பித்துக் கொண்டு வருவது - இதிலெல்லாம் ஒரு விதப் பெருமையும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லையே!" என்றார் மாமல்லர்.

அப்போது பரஞ்சோதி, "யுத்தத்தில் பின்வாங்க வேண்டிய சமயமும் உண்டு; எதிர்த்துத் தாக்க வேண்டிய சமயமும் உண்டு. ஒன்று கவனித்தீர்களா? துர்விநீதனைத் துரத்திக் கொண்டு, தென் பெண்ணைக்கு அப்பால் தாங்கள் போக வேண்டாமென்று, சக்கரவர்த்தி கட்டளையிட்டிருக்கிறார். அதற்காகத் தாங்கள் வருத்தப்பட்டீர்கள். ஆனால், துர்விநீதன் தப்பித்துக் கொண்டு விட்டானா? இல்லையே? சக்கரவர்த்தி அதற்கும் ஏற்பாடு செய்திருந்தார் அல்லவா? தென் பெண்ணைக்கு அக்கரையில் திருக்கோவலூர் கோட்டத் தலைவன் அனந்தன் மழவராயனை ஆயத்தமாயிருக்கும்படி செய்திருந்தார் அல்லவா? துர்விநீதன் சமணப் பள்ளியில் ஒளிந்து கொள்ள முயன்றும் தப்ப முடியவில்லையே? இப்போது அவன் மழவராயன் கோட்டையில் சிறைப்பட்டிருக்கிறானல்லவா? பிரபு! பிரம்மாண்ட சைனியங்களை வைத்துக் கொண்டு, யுத்தத்தில் ஜயித்தவர்கள் எத்தனையோ பேர் உண்டு. ஆனால், நமது சக்கரவர்த்தியைப் போல், சொற்ப சைனியத்தை வைத்துக் கொண்டு, மகத்தான எதிரிகளின் மேல் ஜயம் அடைந்தவர்கள் யாரும் இல்லை!" என்றார்.

"ஆமாம், அதில் என்ன சந்தேகம்? பல்லவ வீரன் ஒவ்வொருவனும் சளுக்க வீரன் பத்துப் பேருக்கு இணையானவன் அல்லவா? புள்ளலூரிலேதான் பார்த்தோமே?" என்றார் மாமல்லர்.

மகேந்திர சக்கரவர்த்தி சுத்த வீரத்தைக் கைக் கொள்ளாமல், இராஜதந்திரத்தைக் கையாண்டு ஜயிக்கிறார் என்ற எண்ணம், குமார சக்கரவர்த்திக்கு வேம்பாயிருந்தது. அதை அவரால் ஒப்புக் கொள்ளவோ, பாராட்டவோ முடியவில்லை.

அமரர் கல்கி

பாதி இரவும் ஒரு பகலும் அந்த அபூர்வ சிநேகிதர்கள் இடைவிடாமல் பிரயாணம் செய்து, சூரி

யன் அஸ்தமிக்கும் சமயத்தில், காஞ்சி மாநகரின் தெற்கு வாசலை அணுகினார்கள்.

அதே தெற்கு வாசலை, ஒன்பது மாதங்களுக்கு முன்பு, ஒருநாள் அஸ்தமன நேரத்தில், நாகநந்தி பிக்ஷுவுடன் கூட, தான் அணுகியது பரஞ்சோதிக்கு நினைவு வந்தது. அன்று கோட்டைக் கதவின் உள் துவாரத்தின் வழியாக, நகருக்குள் பரஞ்சோதி பிரவேசித்தார். இன்றைக்கு அவ்விதம் பிரவேசிக்க வேண்டியிருக்கவில்லை.

மாமல்லரும் பரஞ்சோதியும் துணையாக வந்த வீரர்களுடன், கோட்டை வாசலை நெருங்கியதும், கோட்டை வாசலின் மேல் மச்சு மண்டபத்தில் ஜயபேரிகைகள் முழங்கின; வெற்றிச் சங்குகள் ஒலித்தன; கொம்புகள் கோஷித்தன. கோட்டைக்கு உட்புறத்திலிருந்து ஒரே கோலாகலச் சப்தம் எழுந்தது.

கோட்டைக் கதவுகள் 'படார்' என்று திறந்தன. உள்ளே பார்த்தால், நகரம் கண்கொள்ளாக் காட்சி அளித்தது. விசாலமான வீதிகளின் நடுவில், கண்ணுக்கெட்டிய தூரம் பல்லவ வீரர்கள் அணிவகுத்து நின்றார்கள். வீதியின் இரு புறங்களிலும் நகர மாந்தர்கள் நெருங்கி நின்றார்கள். இரு புறத்து வீடுகளின் உப்பரிகை மாடங்களில், திவ்யாலங்கார பூஷிதைகளான இளம் பெண்கள் நின்றார்கள். அவர்கள் பக்கத்தில், மல்லிகை, முல்லை, கொன்றை முதலிய மலர்கள், கும்பல் கும்பலாகக் கிடந்தன. இரண்டு கை நிறையப் புஷ்பங்களை எடுத்து, அவர்கள் சித்தமாய் வைத்துக் கொண்டிருந்தார்கள். எதற்காக வென்று சொல்ல வேண்டுமா? வெற்றி வீரராகத் திரும்பி வரும் குமார சக்கரவர்த்தியின் மீது, மலர்மாரி பொழிவதற்காகத்தான்.

காஞ்சி நகரம், அன்று அப்படிக் கோலாகலமாய் இருந்ததற்குக் காரணங்கள் இரண்டு இருந்தன. முதலாவது, வடக்குப் போர்க்களத்திலிருந்து பல்லவ சைனியம், சேனாதிபதி கலிப்பகையின் தலைமையில், காஞ்சிக்குத் திரும்பி வந்து சேர்ந்திருந்தது. சென்ற சில நாளாக ஜனங்கள் நகரை விட்டுப் போய்க் கொண்டிருந்தபடியால், பாழடைந்தது போல் இருந்த நகரம், ஒரு லட்சம் போர் வீரர்களின் வரவினால் கலகலப்பை அடைந்திருந்தது. அதோடு, புள்ளலூர்ச் சண்டையில், மாமல்லரின் மகத்தான வெற்றியைப் பற்றிய செய்தியானது, அனைவருக்கும் உற்சாகத்தை உண்டுபண்ணியிருந்தது. இத்தகைய உற்சாகத்துக்கு காரண புருஷரான குமார சக்கரவர்த்தி மாமல்லர், அன்று நகருக்குத் திரும்பி வருகிறார். அவரை நேரிலேயே பார்க்கப் போகிறோம் என்று தெரிந்த பிறகு, மகா ஜனங்களின் குதூகலத்தைக் கேட்க வேண்டுமா?

தூக்கி நிறுத்தியிருந்த பாலம், அகழியின் மேல் விடப்பட்டதும் மாமல்லர் அதன் வழியாகக் கோட்டைக்குள் பிரவேசித்தார். பரஞ்சோதியும் மற்ற வீரர்களும் அவரைப் பின்தொடர்ந்து சென்றார்கள். திறந்த கோட்டைக் கதவுகள் மறுபடி சாத்திக் கொண்டன.

கோட்டை வாசலைத் தாண்டி, மாமல்லர் நகர வீதியில் பிரவேசித்ததும், ஏக காலத்தில் ஆயிரக்கணக்கான ரிஷபக் கொடிகள் தெருவெல்லாம் உயர்ந்தன. வீதியில் அணிவகுத்து நின்ற வீரர்கள், அதுவரை அக் கொடிகளைத் தாழ்த்திப் பிடித்துக் கொண்டிருந்தார்கள். மாமல்லர் உள்ளே பிரவேசித்ததும் கொடிகள் மளமளவென்று உயர்ந்து, காற்றில் சடசடவென்று அடித்துக் கொண்ட காட்சி, ஏதோ ஓர் இந்திரஜாலக் காட்சி மாதிரி தோன்றியது. அதிலிருந்து குமார சக்கரவர்த்தி நகருக்குள் பிரவேசித்து விட்டார் என்பதை, நெடுந்தூரத்துக்கு நெடுந்தூரம் நெருங்கி நின்ற ஜனத் திரள்கள் தெரிந்து கொண்டன. அவ்வளவு ஜனங்களும் ஒருவரோடொருவர், அந்தச் செய்தியைக் கூறி மகிழ்ந்து கொண்ட போது, எழுந்த சப்தமானது, ஏழு சமுத்திரங்களும் ஒரேயடியாகப் பொங்கி வந்தது போன்ற பேரொலியை ஒத்திருந்தது.

மாமல்லரை வரவேற்பதற்காகக் கோட்டை வாசலுக்கருகில் அமைச்சர் குழுவினர், மந்திரி மண்டலத்தார் இவர்களுடன் சேனாதிபதி கலிப்பகையாரும் காத்திருந்தார். மாமல்லரும் பரஞ்சோதியும் குதிரைகள் மீதிருந்து இறங்கினார்கள். தங்க நிறமான கொன்றைப் பூக்களை அழகாகத் தொடுத்திருந்த பெரியதொரு மாலையை, மாமல்லரின் கழுத்தில் முதல் அமைச்சர் சூட்ட, சேனாதிபதி கலிப்பகையார், ''வாழ்க! வாழ்க! புள்ளலூர்ப் போர்க்களத்தில் கங்கநாட்டு மன்னனைப் புறங்கண்ட வீராதி வீர மாமல்லர் வாழ்க! வாழ்க!'' என்று கோஷித்ததும், ''வாழ்க! வாழ்க!'', ''ஜய விஜயீ பவ!'' என்ற கோஷங்கள் ஆயிரம் பதினாயிரம் கண்டங்களிலிருந்து ஏக காலத்தில் எழுந்து, வானளாவி முழங்கின.

இந்த வரவேற்பு வைபவங்களினால் எல்லாம் மாமல்லருடைய முகத்தில் நியாயமாகத் தோன்றியிருக்க வேண்டிய மலர்ச்சி காணப்படவில்லை. அவருடைய உள்ளத்தில் இன்னதென்று தெரியாத, ஏதோ ஒரு குறை உறுத்திக் கொண்டிருந்தது. தந்தை மகேந்திர சக்கரவர்த்தி முன்னதாக நகருக்கு வந்து, இந்த வரவேற்பு வைபவத்தையெல்லாம் ஏற்பாடு செய்திருக்கிறார் போலும்! பல்லவ இராஜ்யத்தின் மகத்தான

எதிரியின் படைகள் காஞ்சியை நெருங்கி வந்து கொண்டிருக்கும் போது, இந்த வெற்றி முழக்கங்கள் எல்லாம் எதற்காக?

அந்தக் கணமே தந்தையைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல், மாமல்லரின் உள்ளத்தில் பொங்கிற்று. உடனே அவரும் பரஞ்சோதியும் தத்தம் குதிரைகள் மேல் ஏறிக் கொண்டு, அரண்மனையை நோக்கி விரைந்து செலுத்தினார்கள்.

அரண்மனையை அடைந்து, முன்வாசலையும் நிலாமுற்றத்தையும் தாண்டி உள்ளே சென்றதும், அந்தப்புரத்து வாசலில் புவன மகாதேவியார் சேடியார் புடைசூழக் காத்திருப்பதைக் கண்டார். போர்க்களத்திலிருந்து வெற்றி மாலை சூடித் திரும்பி வந்த வீரப் புதல்வனுக்கு அன்னை ஆரத்தியெடுத்து, திருஷ்டி கழித்த பிறகு, ''குழந்தாய்! உன் வீரச் செயல்களைப் பற்றிக் கேட்டு என் தோள்கள் பூரித்திருக்கின்றன. நகர மாந்தர் எல்லாம் சொல்ல முடியாத ஆனந்தத்தில் மூழ்கியிருக்கிறார்கள். ஆனால், உன் முகம் ஏன் வாடிச் சிணுங்கியிருக்கிறது? நெடுந்தூரம் பிரயாணம் செய்த அலுப்பினாலோ?'' என்று சக்கரவர்த்தினி கேட்டாள்.

''ஆம், அம்மா! அதுவும் ஒரு காரணந்தான்; ஆனால், அது மட்டும் அல்ல. இந்த வரவேற்பு வைபவம் ஒன்றும் எனக்குப் பிடிக்கவில்லை. புள்ளலூர்ச் சண்டையில் அடைந்த வெற்றி ஒரு பெரிய வெற்றியா? வாதாபி சைனியம் ஒரு பெரிய சமுத்திரம் என்றால், கங்கர் சைனியம் ஒரு சிறு குட்டைக்குச் சமானம். அந்தச் சிறு படையை முறியடித்ததற்கும் நானே முழுக் காரணம் அல்ல. புள்ளலூர்ச் சண்டையில் நமது வெற்றிக்குக் காரணமானவர் உண்மையில் என் தந்தைதான்! அது போகட்டும், அம்மா! சக்கரவர்த்தி எங்கே?'' என்று மாமல்லர் கேட்டார். அப்போது புவனமகாதேவியின் முகத்தில், ஆச்சரியக் குறி தென்பட்டது.

''இது என்ன குழந்தாய்? அந்தக் கேள்வியை உன்னிடத்தில் கேட்க வேண்டும் என்றல்லவா நினைத்தேன்? என்னை நீ கேட்கிறாயே? அப்பா எங்கே? நீ பார்க்கவில்லையா? உன்னோடு அவர் வரவில்லையா?'' என்றாள் புவனமகாதேவி.

அப்போதுதான் மகேந்திர சக்கரவர்த்தி காஞ்சிக்கு இன்னும் வந்து சேரவில்லையென்பது மாமல்லருக்குத் தெரியவந்தது.

தமக்கு முன்னாலேயே புறப்பட்டவர் ஏன் இன்னும் வந்து சேரவில்லை? வழியில் ஏதேனும் அபாயம் நேர்ந்திருக்குமோ? வாதாபிப் படைகள் கோட்டையைச் சூழ்வதற்குள் சக்கரவர்த்தி வந்து சேராவிட்டால் என்ன செய்வது? இராஜ்யப் பொறுப்பும் யுத்தம் நடத்தும் பொறுப்பும் தம்மையல்லவா சாரும்? - இத்தகைய பல எண்ணங்கள் மாமல்லரின் உள்ளத்தில் பொங்கி எழுந்தன.

புவனமகாதேவி கூறிய செய்தியானது, மாமல்லருக்கு எவ்வளவு வியப்பை அளித்ததோ, அவ்வளவு பரஞ்சோதிக்கு அளித்ததாகத் தெரியவில்லை. அவர் இதை எதிர்பார்த்ததாகவே தோன்றியது.

ஐம்பதாம் அத்தியாயம்
மந்திராலோசனை

அன்றிரவு ஒன்றரை ஜாமம் ஆன போது, மந்திராலோசனை சபை கூடியிருப்பதாகவும், குமார சக்கரவர்த்தியின் வரவை அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் செய்தி வந்தது. மாமல்லரும் அன்னையிடம் விடைபெற்றுப் புறப்பட்டார்.

புள்ளலூரிலிருந்து சக்கரவர்த்தி செய்தி அனுப்பியதன் காரணமாகத்தான் இன்றிரவு இந்த மந்திராலோசனை சபை கூடியது. ★ மந்திரிகளும், அமைச்சர்களும், கோட்டத் தலைவர்களும் மந்திராலோசனைக்கு அழைக்கப்பட்டு வந்திருந்தார்கள்.

தளபதி பரஞ்சோதி பின்தொடர, மாமல்லர் மண்டபத்திற்குள் பிரவேசித்ததும் அங்கே கூடியிருந்தவர் எல்லோரும் எழுந்து நின்று மரியாதை செய்தார்கள்! பிறகு பீடங்களில் அமர்ந்தார்கள்.

சக்கரவர்த்தியின் சிம்மாசனம் வெறுமையாயிருந்தது. அதனருகில் போட்டிருந்த மற்றொரு சிம்மாசனத்தில் மாமல்லர் அமர்ந்தார். அவருக்குப் பின்னால் பரஞ்சோதி நின்று கொண்டிருந்தார். அவருக்கு ஏனோ உட்கார மனம் வரவேயில்லை. ஏதோ எதிர்பாராத சம்பவங்கள் நடக்கப் போவதாக அவருடைய உள்ளுணர்ச்சி சொல்லிக் கொண்டிருந்தது. இதனால்

★ பல்லவ சாம்ராஜ்யத்தில் மந்திரி மண்டலம் என்றும் அமைச்சர் குழு என்றும் இரண்டு சபைகள். சக்கரவர்த்திக்கு இராஜ்ய நிர்வாகக் காரியங்களில் துணை செய்தன. மந்திரிகள் ஆலோசனை சொல்வதற்கு உரியவர்கள். அமைச்சர் அல்லது அமாத்தியர் காரிய நிர்வாகத் தலைவர்கள். சாம்ராஜ்யம் பற்பல கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஒரு தலைவன் உண்டு. நெருக்கடியான சமயங்களில் கோட்டத் தலைவர்களும் மந்திராலோசனைக்கு அழைக்கப்படுவார்கள்.

ஏற்பட்ட பரபரப்பு அவருடைய முகத்தில் பிரதிபலித்தது.

முதன் மந்திரி சாரங்கதேவ பட்டர் சபையை ஆரம்பித்து வைத்தார். அவர் சபையைப் பார்த்துக் கூறியதாவது :


''இன்றைக்கு இந்த நேரத்தில் மந்திராலோசனை சபை கூட்டும்படியாகச் சக்கரவர்த்தி ஆக்ஞை இட்டதன் பேரில், இங்கே கூடியிருக்கிறோம். ஆனால், சக்கரவர்த்தி இன்னும் வந்து சேரவில்லை. விசித்திர சித்தரான நம் சக்கரவர்த்தி, வேறு முக்கிய அலுவல்களில் ஈடுபட்டிருப்பதனால் இன்னும் வந்து சேரவில்லையா? அல்லது எதிர்பாராத இடையூறுகளினால் தடுத்து நிறுத்தப்பட்டாரா என்பதும் தெரியவில்லை. இந்த நிலைமையில் மந்திராலோசனையைத் தள்ளிப் போடுவதா அல்லது குமார பல்லவரின் தலைமையில் சபையை நடத்துவதா என்று முதலில் தீர்மானிக்க வேண்டும். சக்கரவர்த்தி ஒன்பது மாதத்துக்கு முன்பு, வடக்குப் போர்க்களத்துக்குச் சென்ற போது, மாமல்லருக்குச் சர்வ இராஜ்ய அதிகாரங்களையும் கொடுத்து விட்டுச் சென்றார். எனவே, மாமல்லரின் தலைமையில் மந்திராலோசனை நடத்தலாம் என்றே நான் நினைக்கிறேன். உங்கள் எல்லோருடைய அபிப்பிராயமும் அவ்விதமே இருக்கும் என்று கருதுகிறேன்.''


முதன் மந்திரியின் மேற்படி பிரேரணையை, ''ஆம், ஆம்'' என்று கூறிச் சபையோர் அனைவரும் ஆமோதித்தார்கள்.

பின்னர், முதல் அமைச்சர் ரணதீர பல்லவராயர் சொன்னதாவது : ''இந்தச் சபையைத் தள்ளிப் போட்டு, சக்கரவர்த்தி வருகிற வரையில் காத்திருப்பதற்கு முடியாத நிலைமையில் நாம் இருக்கிறோம். வாதாபியின் முன்னணிப் படைகள் கோட்டைக்கு இரண்டு காத தூரத்தில் வந்து விட்டன. இந்த நிலைமையில் நாம் செய்ய வேண்டியது என்னவென்பது பற்றிக் குமார சக்கரவர்த்தியின் அபிப்பிராயத்தையும், ஆக்ஞையையும் அறிய விரும்புகிறோம். வடக்குப் போர்க்களத்திலிருந்து, நம் வீர பல்லவ சைனியத்தைச் சேதமடையாமல் கோட்டைக்குள்ளே கொண்டு வந்து சேர்த்த சேனாதிபதி கலிப்பகையாரும் நமது கடமையைப் பற்றி தமது அபிப்பிராயத்தைத் தெரியப்படுத்துவாரென்று எதிர்பார்க்கிறோம்.''

செஞ்சிக் கோட்டைத் தலைவன் சடையப்ப சிங்கன் சொன்னான் : ''சக்கரவர்த்தியைப் பற்றிய செய்தியை முதலில் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். வடக்குப் போர்க்களத்தில் நமது சேனாதிபதியுடன் பல்லவேந்திரர் இருப்பதாகவே இத்தனை காலமும் எண்ணிக் கொண்டிருந்தோம். சைனியத்தை விட்டுப் பிரிந்து சக்கரவர்த்தி எங்கே போனார் என்பதைச் சேனாதிபதி தெரிவிக்கக் கூடுமா?''

சேனாதிபதி கலிப்பகையார் கூறினார் : ''பத்து தினங்களுக்கு முன்னால் சக்கரவர்த்தி இரண்டாயிரம் வீரர்களுடன் வடக்குப் போர்க்களத்திலிருந்து புறப்பட்டார். காஞ்சிக் கோட்டைக்குச் சைனியங்களுடன் வந்து சேரும்படி எனக்குக் கட்டளையிட்டு விட்டுச் சென்றார். அப்புறம் எனக்குத் தகவல் ஒன்றும் தெரியாது. புள்ளலூர்ப் போர்க்களத்துக்குச் செல்வதாக நான் ஊகித்தேன்.





சக்கரவர்த்தி அழைத்துச் சென்ற வீரர்களில் திரும்பி வந்திருப்பவர்கள் அவ்விதமே சொல்கிறார்கள்.''

''புள்ளலூர்ப் போர்க்களம்'' என்றதும் அங்கிருந்தோர் அனைவருடைய கண்களும் மாமல்லரை நோக்கின. சபையின் நோக்கத்தை அறிந்து கொண்டு மாமல்லர் பேசினார்:

''சேனாதிபதி ஊகித்தது உண்மை. தந்தை புள்ளலூர்ப் போர்க்களத்துக்குத்தான் வந்தார். ஆனால், இன்னும் இங்கு வந்து சேரவில்லையென்பது எனக்கும் வியப்பாகவே இருக்கிறது. உங்களையெல்லாம் கோட்டை வாசலில் சந்தித்த போது, என் தந்தை அரண்மனையில் என்னை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்று எண்ணினேன். அரண்மனைக்கு வந்ததும் பெரும் ஏமாற்றமடைந்தேன். என் அருமைத் தோழர் பரஞ்சோதிக்குச் சக்கரவர்த்தி அனுப்பியிருந்த ஓலையிலிருந்து, அவ்விதம் நாங்கள் நினைக்க நேர்ந்தது. தளபதி! எல்லா விவரங்களையும் இவர்களுக்குச் சொல்லுங்கள்!''

அவ்விதமே தளபதி பரஞ்சோதி புள்ளலூர்ப் போரின் விவரம், துர்விநீதன் தோற்று ஓடியது, அவனைத் துரத்திக் கொண்டு தாங்கள் சென்றது, சக்கரவர்த்தியும் வேறு மார்க்கமாகத் தெற்கு நோக்கி வந்தது, மாமல்லர் வெள்ளத்தில் அகப்பட்டுக் கொண்டு, மண்டபப்பட்டுக் கிராமத்தில் ஒதுங்கியது, தாம் அவரைத் தேடியது, துர்விநீதனைச் சக்கரவர்த்தி சிறைப்படுத்தி விட்டுத் தமக்கு ஓலை அனுப்பினது ஆகிய விவரங்களைச் சபையோருக்கு எடுத்துக் கூறினார். ஆயனர் - சிவகாமி விஷயத்தை மட்டும் அவர் பிரஸ்தாபிக்கவில்லை.

அதன் மேல் முதன் மந்திரி சாரங்க தேவபட்டர் கூறியதாவது : 'சக்கரவர்த்தி இல்லாத சமயத்தில் நம்முடைய பொறுப்பு பன்மடங்கு அதிகமாயிருக்கிறது. தென் தமிழ்நாடு இதுவரையில் கண்டிராத பெரிய பகைவர் படை நம்மை நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. அந்த நிலைமையில் நாம் செய்ய வேண்டியதைப் பற்றிக் குமார சக்கரவர்த்தியின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறோம். கோட்டத் தலைவர்களும் மாமல்லரின் ஆக்ஞையை எதிர்பார்க்கிறார்கள். காஞ்சிக் கோட்டை முற்றுகைக்கு உட்படுவதற்குள் அவர்கள் தங்கள் தங்கள் கோட்டத்துக்குத் திரும்பிப் போய் விட வேண்டுமல்லவா?''

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த மாமல்லர் உடனே மறுமொழி எதுவும் சொல்லவில்லை. ஏதோ தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்தவராகக் காணப்பட்டார்.

அதைக் கவனித்த முதல் அமைச்சர் ரணதீர பல்லவராயர், ''முதலில் வடக்குப் போர்க்களத்திலிருந்து திரும்பி வந்திருக்கும் சேனாதிபதி கலிப்பகையார் தமது அபிப்பிராயத்தைச் சொல்லுவது நல்லது. சக்கரவர்த்தி இந்தச் சபை கூட்டச் சொன்னதன் நோக்கம் என்ன என்பது அவருக்குத் தெரிந்திருக்கக்கூடும்!'' என்றார்.

சேனாதிபதி கலிப்பகையார் தம் ஆசனத்திலிருந்து எழுந்து நின்று சொல்லத் தொடங்கினார் :- ''சக்கரவர்த்தி இந்த மந்திராலோசனைச் சபையைக் கூட்டியதன் காரணம், காஞ்சி முற்றுகை சம்பந்தமானதுதான். முற்றுகை ஒருவேளை ஓராண்டு காலம் நீடித்தாலும் நீடிக்கலாம் என்று சக்கரவர்த்தி எதிர்பார்க்கிறார். இந்த ஒரு வருஷமும் கோட்டைக்குள்ளே இருப்பவர்களுக்கும் வெளியில் இருப்பவர்களுக்கும் சம்பந்தம் எதுவும் இராது. ஓலைப் போக்கு வரவுக்கும் இடமிராது. காஞ்சிக் கோட்டை முற்றுகைக்கு உட்பட்டிருக்கும் காலத்தில், நமது கோட்டத் தலைவர்கள் செய்ய வேண்டியது என்ன என்பதை, அவர்களுக்குச் சக்கரவர்த்தி சொல்ல விரும்பினார். அவர் சொல்ல விரும்பியது என்ன என்பதை நான் அறியேன்.''

''சேனாதிபதியை ஒன்று கேட்க விரும்புகிறேன். வாதாபிப் படைகள் கோட்டை வாசலுக்கு எப்போது வந்து சேரும் என்று நினைக்கிறீர்கள்?'' என்று கோட்டத் தலைவரில் ஒருவர் கேட்டார்.

''நாளைச் சூரியோதயத்துக்கு வந்து சேரலாம். அஸ்தமனத்துக்குள் கோட்டையை நாலாபுறமும் சூழ்ந்து கொள்ளக் கூடும்.''

''அப்படியானால், கோட்டைக்கு வெளியே போகிறவர்கள் நாளைச் சூரியோதயத்துக்குள் போய் விட வேண்டுமல்லவா?''

''சக்கரவர்த்தி இன்று இரவுக்குள்ளே வந்து சேராவிட்டால், கோட்டத் தலைவர்கள் அவர்களுடைய ஊர்களுக்குத் திரும்பிச் சென்று விடுவதுதான் நல்லது. சக்கரவர்த்தியின் ஆக்ஞை அவர்களைத் தேடிக் கொண்டு வந்து சேரும் என்று எதிர்பார்க்கலாம்.''

சற்று நேரம் மௌனம் குடிகொண்டிருந்தது. எல்லாரும் மாமல்லருடைய முகத்தை உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

''குமார சக்கரவர்த்தியின் ஆக்ஞையை எல்லாரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்'' என்று முதல் மந்திரி கூறினார்.

மாமல்லர் தமது ஆசனத்திலிருந்து கம்பீரமாக எழுந்தார். சபையோர் அனைவரையும் ஒரு தடவை பார்த்தார். பிறகு கூறினார் : ''பத்து மாதங்களுக்கு முன்பு சக்கரவர்த்தி காஞ்சியை விட்டுப் புறப்பட்ட போது, தாம் திரும்பி வரும் வரை, தம்முடைய ஸ்தானத்தில் சகல இராஜ்யாதிகாரங்களையும் வகிக்கும்படி எனக்குக் கட்டளையிட்டார். அது உங்களுக்கெல்லாம் நினைவிருக்கிறதல்லவா?''

''நினைவிருக்கிறது!'' என்று சிலர் சொன்னார்கள். இன்னும் சிலர் ஆமோதிப்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார்கள்.

ஏதோ விபரீதமான யோசனை வரப் போகிறதென்று எண்ணியவர்களைப் போல் மற்றவர்கள் மௌனமாயிருந்தார்கள்.

''சக்கரவர்த்தி இன்னும் திரும்பி வரவில்லை. ஆகவே, அவர் எனக்கு அளித்த இராஜ்யாதிகாரத்தை இன்னும் நான் வகிக்கலாமல்லவா? அது உங்களுக்கெல்லாம் சம்மதந்தானே?''

''சம்மதம்! சம்மதம்'' என்பதாகச் சபையில் பல குரல்கள் ஏக காலத்தில் கோஷித்தன.

முதன் மந்திரி எழுந்து நின்று, ''பல்லவ குமாரா! சக்கரவர்த்தி எங்களை ஆலோசனை கேட்கும் போது, நாங்கள் எங்கள் கருத்தைச் சொல்வோம். அது போலவே தாங்கள் கேட்டாலும் எங்கள் அபிப்பிராயத்தைச் சொல்கிறோம். தீர ஆலோசித்தபின் தாங்கள் எப்படிக் கட்டளையிடுகிறீர்களோ, அப்படியே நடத்தி வைப்போம். யோசனை சொல்வதற்குத்தான் எங்களுக்கு உரிமை; ஆக்ஞையிடும் உரிமை தங்களது'' என்றார்.

''சந்தோஷம். நீங்கள் சொல்ல வேண்டிய யோசனையெல்லாம் சொல்லுங்கள்; கேட்டுக் கொள்கிறேன். ஆனால் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி நான் முன்னமே முடிவு செய்து விட்டேன். மந்திரிகளே! அமைச்சர்களே! கோட்டத் தலைவர்களே! அனைவரும் கேளுங்கள். படையெடுத்து வந்த பகைவர்களுக்குப் பயந்து, கோட்டைக்குள் ஒளிந்து கொள்வது என்பது, பல்லவ குலத்துக்கு என்றும் அழியாத அவமானத்தை உண்டுபண்ணக் கூடியது. தொண்டைமான் இளந்திரையன் வழி வந்த வீர பல்லவ வம்சத்துக்கு, இந்த மகத்தான களங்கம், என்னுடைய காலத்தில் ஏற்படுவதை நான் ஒருநாளும் சகிக்க முடியாது. இந்தக் கோட்டைக்குள் இன்று சுமார் ஒரு லட்சம் பல்லவ வீரர்கள் போருக்குத் துடிதுடித்துக் கொண்டு காத்திருக்கிறார்கள். அவர்களை அழைத்துக் கொண்டு நாளைக்கே வெளியேறி, நமது கோட்டை வாசலில் வாதாபி சைனியத்தைத் தாக்குவது என்று முடிவு செய்து விட்டேன். அதற்கு உங்களுடைய சம்மதத்தை எதிர்பார்க்கிறேன். தளபதி பரஞ்சோதி என்னுடன் போர்க்களத்துக்கு வருவார். பரஞ்சோதிக்குப் பதிலாகச் சேனாதிபதி கலிப்பகையாரைக் கோட்டைக் காவலுக்கு நியமிக்கிறேன். இதற்கு உங்களுடைய சம்மதம் தெரிந்து கொண்ட பிறகு, வெளியூர்க் கோட்டத் தலைவர்களுக்கு நான் சொல்ல வேண்டியதைச் சொல்கிறேன்.''

மாமல்லர் பேச்சை நிறுத்திய போது, இடி இடித்து ஓய்ந்தது போலிருந்தது. மந்திரிகளும் அமைச்சர்களும் ஒருவரது முகத்தை ஒருவர் பார்த்தார்கள். யாருக்கும் பேச நா எழவில்லை.

(தொடரும்)

''கட்சித் தலைமைக்கு எதிராய்ப் போர்க்கொடி தூக்கப் போறதாய் அறிக்கை விட்டிருக்கீங்களே, ஏன்?''

''தேர்தல் சமயத்தில் எம். எல். ஏ. சீட்தான் கொடுக்கலை; இப்போ ஏதாவது ஒரு ஸ்கூல்ல என் பையனுக்கு எல்.கே.ஜி. சீட்டாவது வாங்கித் தரச் சொல்லித்தான்!''

- குடந்தை எல். ராம்பிரபு.



சில்வியா

அசோகமித்திரன்



சில்வியாவால் எனக்குச் சங்கடம் நேரும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் நேர்ந்து விட்டது. இரு நாட்களாவது, நான் வெளியே தலையைக் காட்ட முடியாதபடி.

சில்வியா மாரிஸ், டெரன்ஸ் சகோதரர்களின் அக்கா. நான் மாரிஸ், டெரன்ஸ் என்று வரிசையில் சொல்லாமல் டெரன்ஸ், மாரிஸ் என்றுதான் கூற வேண்டும். டெரன்ஸ்தான் பெரியவன். அவனுக்கும் மாரிஸுக்கும் இடையில் ஒரு சகோதரி. அவள் பெயர் லாரா. இவர்கள் எல்லாருக்கும் ஒரு தங்கை. அவள் பெயர் நான்ஸி.

மாரிஸ்தான் எனக்கு முதலில் சிநேகிதன் ஆனான். முதலில் அவனுக்கு ஓர் அண்ணன் உண்டு என்று எனக்குத் தெரியாது. திடீரென்று எங்கள் விளையாட்டு கோஷ்டியில் ஒரு முரட்டுப் பையன் வந்து அதிகாரம் செய்து கொண்டிருந்தான். அவனாகப் பந்தை வீசி எறிந்து விட்டு, என்னை "எடுத்து வா" என்றான். "ஜா, ஜா, சாலே," என்றேன். தமிழில் சொல்வதானால், "போடா போடா மச்சானே." இந்த 'மச்சானே' எப்போதும் அன்பைத் தெரிவிப்பதில்லை. எங்கள் ஊரில் அதை வசவாகத்தான் பயன்படுத்துவோம். முரட்டுப் பையன் என்னை அடிக்க வந்தான். நான் அவனுடைய இரு மணிக்கட்டுகளையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டேன்.

துவந்த யுத்தத்தில் எதிராளியின் இரு மணிக்கட்டுகளையும் கெட்டியாகப் பிடித்துக் கொள்வதற்கு விசேஷமான இடம் இருக்க வேண்டும். நான் ஒருவனுக்கு ஒருவன் என்று சண்டை போட்ட போதெல்லாம் இந்த மணிக்கட்டுப் பிடி மிகவும் உதவியிருக் கிறது. எதிராளி அடிக்க முடியாதபடி திமிருவான். அதற்குள் எப்படியும் ஐந்தாறு பேர் குழுமிச் சண்டையைக் கலைத்து விடுவார்கள். எதிராளி பெரியவனாக இருந்தால் கூட அவன் எதிர்க்கப் பட்டான் என்ற காரணத்தினாலேயே அவனுடைய தன்னம் பிக்கை சிறிது தளர்ந்து விடும். தன்னம் பிக்கை தளர்ந்தவனால் மீண்டும் பெரிதாகச் சண்டைக்கு வர முடியாது.

இந்த முரட்டுப் பையன் விஷயத்திலும் மணிக்கட்டுப்பிடி என்னைக் கைவிடவில்லை. அந்தச் சண்டைக்குப் பிறகுதான் அவன் மாரிஸுடைய அண்ணன் என்று தெரிந்து கொண்டேன். பெயர் டெரன்ஸ். அன்றைக்குப் பிறகு எப்போது நானும் மாரிஸும் பேச முற்பட்டாலும் டெரன்ஸும் உடனே வந்து விடுவான். நாங்கள் இருவரும் ஆல மரத்திலேறி விழுதுகளில் டார்ஜான் விளையாட்டு விளையாடினால் அவனும் ஆட வருவேன் என்பான். எனக்கு அவன் மரத்தின் மீது ஏற ஆரம்பிக்கும் போதே பயமாக இருக்கும். நிச்சயம் கீழே விழப் போகிறான் என்று பயந்து கொண்டிருப்பேன். அதன்படியே முதல் முறையாக விழுதைப் பிடித்து ஆடுகையிலேயே விழுந்து தொலைப்பான். கரகரப்பான தொண்டையோடு எப்போதும் குறைப் பட்டுக் கொண்டேயிருப்பான். எதைச் செய்தாலும் முரட்டுத்தனம் தெரிய இருக்கும். எனக்கு இதெல்லாம் கூடப் பொறுத்துக் கொள்ள முடிந்தது. ஒன்றை மட்டும் முடியவில்லை. அது அவன் முகம். அவன் கன்னங்களில் பிசுபிசு என்று மயிர் முளைத்



திருந்தது. அவனுடைய முகவாய்க் கடி யிலும் ஓரிரண்டு முளைத்து, அதில் ஒன்று ஸ்பிரிங் போலச் சுருண்டிருந்தது. எனக்கு டெரன்ஸைப் பிடிக்கவே இல்லை.

எனக்கு லாராவையும் பிடிக்கக் கூடாது. டெரன்ஸ் ஜாடை அவளிடம் நிறை யவே இருந்தது. எப்போதும் அழுக்கு கவுனை மாட்டிக் கொண்டிருப்பாள். எங்க ளோடு அவளும் மரமேற வந்து விடுவாள். கிரிக்கெட், பம்பரம், கில்லி தாண்டுதல் எல்லா ஆட்டத்திலும் சேர்த்துக் கொள் என்று கழுத்தறுப்பாள்.

டெரன்ஸ் போல அவளுக்கும் கன்னத் தில் காதோரமாக மயிர் முளைத்திருந்தது. ஆண் பெண் யாராயிருந்தாலும் பேசும் போது நிமிடத்திற்கு ஒருமுறை 'நோமேன், வாட் மேன், கோ மேன், கெட் அவுட் மேன்' என்று 'மேன்' போட்டுப் பேசுவாள். அவள் கண்களில் எல்லாமே 'மேன்'தான். இன்று நினைத்துப் பார்க்கும் போது மனித இனத்தின் ஆதாரப் பிணியின் நிவர்த்திக்கு அவள் ஒரு சூத்திரம் வைத்திருந்தாளோ என்று தோன்றுகிறது. எங்கள் கோஷ்டியில் அவளும் விளையாட வருவாள் என்றாலும் நான் அவள் ஒருத்தி இருக்கிறாள் என்ப தையே அங்கீகரிக்காதபடிதான் இருந்தேன். ஆனால் ஒருநாள் பாலு சகோதரர்கள் என்னை 'குல்சித்' செய்து விட்டார்கள். தனியாக நிற்பவனிடம் பேச வருவது போல இருவர் வருவார்கள். ஒருவன் ஏதோ கேட்க, இன்னொருவன் தனியாக நின்ற வனின் பின்புறம் சென்று அவனறியாதபடி பச்சைக் குதிரைக்கு உட்காருவது போலக் குனிந்து கொள்வான். இப்போது பேச வந்தவன் நின்றவனைப் பிடித்துத் தள்ள, அவன் பச்சைக் குதிரை மீது தடுக்கி அலங்கோலமாகக் கீழே விழுவான். இதை நான் நூற்றுக்கணக்கில் பார்த்திருக்கிறேன்.

இன்று நினைக்கும்போது இந்த குல்சித் ஆட்டத்தால் எத்தனை பேருடைய மண்டை, கை, கால் உடைந்திருக்க வேண் டும் என்று நடுங்க வைக்கிறது. ஆனால் எனக்குத் தெரிந்து பையன்கள் யாரும் பெரிதாக அடிபட்டுக் கொள்ளவில்லை. இன்னொன்று, இந்த குல்சித்தினால் பெரிய சண்டை ஏதும் ஏற்படவில்லை. ஆனால் அந்த அனுபவத்திற்குப் பிறகு எல்லோரும் சுவரோரமாகவே இருப்பார்கள். அல்லது மரத்தில் முதுகைச் சாய்த்துக் கொண்டு நிற்பார்கள். அதாவது புறமுதுகு காட்டாத படி இருக்க வேண்டும்.

நான் அலங்கோலமாகக் கீழே விழுந்த போது லாரா அருகில் இருந்தாள். நான் இன் னும் எழுந்திருக்காதபோதே அவள் பாலுவின் அண்ணனைப் பளார் என்று ஓர் அறை விட்டாள். அவன் அவள் தலைமயிரைப் பிடித்து இழுத்தான். அவள் ஓங்கி அவன் தலையில் ஒரு குட்டு வைத்தாள். அதே நேரத்தில் காலால் அவன் வயிற்றில் உதைத்தாள். இதற்குப் பிறகு எனக்கு லாராவைப் பிடிக்காது என்று நினைப்பது கூட விசுவாசத் துரோகம். ஆனால் நானும் பாலு சகோதரர்களும் ஜன்ம விரோதிகளாகி விட்டோம்.

நாங்கள் இருந்த லான்சர் பாரக்ஸ் பிரதேசத்தைச் சுற்றி இருந்த மதில் சுவர் வெளியின் ஆக்ரமிப்பைத் தடுத்ததா என்று உறுதியுடன் கூற முடியாது. ஆனால் நாங்கள் அதன் மீது ஏறி உட்கார்ந்து கொண்டு சாலையை வேடிக்கை பார்க்கச் சௌகரியமாக இருந்தது. நானும் மாரி ஸு¬ம் எங்கள் வாழ்க்கையில் நாங்கள் சந்தித்த அதிபலசாலிகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். எங்கள் பள்ளி டிரில் மாஸ்டர் பற்றிச் சொன்னேன். மாரிஸ் ஒரு இஞ்ஜின் டிரைவர் பற்றிச் சொன்னான். நானும் அந்த மனிதரைப் பார்த்திருக் கிறேன். அவரும் சட்டைக் காரர்தான். அவரால் ஒரு ரயில் இஞ்ஜினைத் தள்ளி நகர்த்த முடியும் என்றான். எங்கள் டிரில் மாஸ்டரால் அந்த இஞ்ஜினை நிறுத்தி விட முடியும் என்று நான் சொன்னேன். அந்த நேரத்தில் அவனுடைய வீட்டிலிருந்து நிறையக் கரகோஷம், சிரிப்பொலி எல் லாம் கேட்டது. நானும் அவனுடன் சென் றேன்.

அவன் வீட்டின் முன் அறையில் மாரி ஸு¬டைய அப்பா அம்மாவுடன் மூத்த பெண் சில்வியாவும், சற்றுத் தள்ளி ஓர் ஓரத்தில் லாராவும் இருந்தார்கள்.

சுவரோரமாகப் போடப்பட்ட சோபா வில் மூன்று வெள்ளைக்கார சோல்ஜர்கள்



''மிஸ்! உங்களுக்குக் கல்யாணம் ஆயிடுச்சிதானே?''

''எப்படித் தெரியும்?''

''டைவர்ஸ் ஆனது கூடத் தெரியும் மிஸ்!''

- விஷ்ராம்.

தங்களைத் திணித்துக் கொண்டு அசடு வழிந்து கொண்டிருந் தார்கள். இடது கோடியில் இருந்த சோல்ஜர் முகத்தில் சற்று விசேஷமாகச் சொட்டிக் கொண்டிருந்தது. விஷயம் இதுதான் : அவன் சில்வியாவை மணந்து கொள்ள அவளின் பெற்றோரான மன்னாஸ் தம்பதி களை அனுமதி கேட்டி ருந்தான். அனுமதி கொடுக்கப்பட்டு விட் டது. அதற்குத்தான் கரகோஷமும் சிரிப்பும்.

நானும் மாரிஸும் வெளியே வந்த போது லாராவும் எங்களுடன் வந்தாள். ''உனக்குப் பிடிக்கிறதா?'' என்று மாரிஸ் என்னைக் கேட்டான்.

''யாரை?''

''அந்த டாமியை.'' பிரிட்டிஷ் படை வீரர்களை டாமிகள் என்றும் அழைப்ப துண்டு.

''எனக்குத் தெரியவில்லை. மூன்று பேர் இருந்தார்களே?''

''அந்தக் கோடியில் இருந்தவன்.''

''எனக்கு எல்லாரும் ஒரே மாதிரி இருந் தார்கள்.''

மாரிஸ் என் தலையைத் தட்டினான். லாரா அவனை ஒரு குத்து விட்டாள்.

நாங்கள் மூவரும் வெளிமதில் சுவர் மீது ஏறி உட்கார்ந்து கொண்டோம். வெகு நேரம் பேசாமல் சாலையைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தோம். மாரிஸ்தான் முதலில் பேசினான். ''உனக்கு லாரென்ஸைத் தெரியுமில்லையா?'' என்று கேட்டான். லாரென்ஸ்தான் அவன் கூறிய பலசாலி இஞ்ஜின் டிரைவர்.

''தெரியும்.''

''அவன் சில்வியாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிறேன் என்றான். எங்கள் அம்மா தான் கூடாது என்று சொல்லி விட்டாள்.''

''எனக்கும் லாரென்ஸ் அங்கிளைப் பிடிக்காது.'' என்று லாரா சொன்னாள்.

''நீ வாயை மூடு.''

''நீ வாயை மூடு!''

நான் நடுவில் உட்கார்ந்திருந்தேன். அவர்கள் அடித்துக் கொள்வதாயிருந்தால் முதலில் நான்தான் கீழே விழுந்து விட வேண்டியிருக்கும். ''நீங்கள் ஜாதகம் பார்த் தீர்களா?'' என்று கேட்டேன்.

இருவரும் விழித்தார்கள். மாரிஸ் கேட் டான், ''என்ன?''

''ஜாதகம்.''

''அப்படி என்றால்?''

''சூரியன், சந்திரன் எல்லாம் உங்க ளுக்கு எங்கே எப்படி இருக்கிறது என்று காட்டும் ஓர் அட்டவணை.''

''எல்லாருக்கும் ஒரே சூரியன் ஒரே சந்திரன்தானே?''



''மூடிய மலிவு விலை மதுக் கடைகள் இருந்த இடத்தை, எங்க ளுக்கே கொடுத்திங்கன்னா கள்ளச் சாராய கேஸ் பிடிக்க நீங்க அனாவசி யமா அலைய வேண்டாம்...''

''ஆமாம்.''

''அப்புறம்?''

எனக்கு பதில் தோன்றவில்லை. சற்றுப் பொறுத்து, ''எங்கள் வீட்டிலெல்லாம் கல்யாணம் என்றால் ஜாதகம்தான் முதலில் பார்ப்பார்கள்.''

''எங்களுக்கு எல்லாம் பர்த் சர்டிபி கேட் கூடக் கிடையாது. எனக்குப் பதி னைந்து வயதா, பதினாறு வயதா என்று தெரியாது. யாருக்குமே தெரியாது.''

''இன்றைக்கு சில்வியா ரொம்பச் சந்தோஷமாக இருந்த மாதிரி எனக்குத் தோன்றிற்று.''

''அந்த முட்டாள் பெண் அந்த டாமி கொண்டு தருகிற சோப்பு, சாக்லெட்டைப் பார்த்து மயங்கியிருக்கிறாள்.''

''ஜார்ஜ். இரண்டு டின் குடிகூரா பவுடர் கொண்டு வந்தான். எனக்கும் ஒன்று கொடுத்தான்,'' என்றாள் லாரா.

''அப்போது நீயும் அவனைக் கல்யா ணம் செய்து கொள்!''

''ஏன் முடியாது?''

''வாயை மூடு.''

''நீ வாயை மூடு!''

நான் மரியாதையாகக் கீழே குதித்து விட்டேன். இனியும் இரண்டு பேருக்கும் சண்டையைத் தடுக்க முடியாது.

எனக்கும் ஏனோ ஜார்ஜ் விஷயம் அவ்வளவு பிடிக்கவில்லை. அந்த ஜார்ஜ் பக்கத்தில் சில்வியா ஒரு சின்னக் குழந்தை போல இருந்தாள். ஜார்ஜ் குழந்தைகளைத் தூக்கிப் போகிறவன் போலத் தோற்ற மளித்தான். நாங்கள் பகல் ஆட்டம் பார்த்த சினிமாப் படத்திற்கு சில்வியாவை மாலை ஆட்டத்துக்கு அழைத்துப் போனான். அவனால் சனி, ஞாயிறு இரு தினங்கள்தான்

எங்கள் லான்சர் பாரெக்ஸுக்கு வர முடியும். ஒரு நாள் லாரா, மாரிஸ் எல்லாரையும் அவன் சினிமாவுக்கு அழைத்துப் போன போது, நானும் கூடப் போயிருக்கிறேன். சினிமாக் கொட்டகையில் படைவீரர்களுக்கு அரைக் கட்டணம்தான். சினிமாக் கொட்டகைக்கு நடந்துதான் போக வேண்டும், நடந்துதான் திரும்பி வர வேண்டும். அந்த ஜார்ஜ் எதைச் சொன்னாலும் அவனே சிரித்துக் கொள்வான். அவன் என்ன சொல்கிறான் என்று எனக்குச் சுத்தமாகப் புரியாது. என்னுடன் இருப்பவர்களுக்கும் அப்படித்தான் என்று எனக்குச் சந்தேகம்.

டிசம்பர் மாதத்தில் சில்வியாவின் அம்மா என்னிடம் ஒரு நல்ல தையல்காரன் வேண்டும் என்று சொல்ல, நான் நரசிம்மாவை அவர்கள் வீட்டுக்கு அழைத்துப் போனேன். டிசம்பர் 31-ம் தேதி இரவு ஜார்ஜ் சில்வியாவை ஒரு பெரிய நடன விருந்துக்கு அழைத்துப் போகப் போகிறான். அதற்காகத்தான் விசேஷ உடை.


கிறிஸ்துமஸ் நாளன்று என்னை டெரன்ஸ், லாரா, மாரிஸ் அனைவரும் அழைத்தபோதும் நான் அவர்கள் வீட்டில் ஒரு நிமிஷத்துக்கு மேல் இருக்கவில்லை. ஜார்ஜ் இருந்தான். கண்பட்டுவிடும்படி சில்வியா சந்தோஷம் பொங்க ஜ்வலித்துக் கொண்டிருந்தாள்.

அதற்கடுத்த நாள் என்னால் எளிதாக நழுவி விட முடியவில்லை. சில்வியா ஒரு கிராமபோன் தட்டை ஒலிக்க வைத்து 'பால்' நடனம் பழகிக் கொண்டிருந்தாள். ஒத்திகைக்கு அவள் அம்மாதான் அவளுக்குக் கிடைத்தாள். அம்மாவால் இரண்டு அடி ஒழுங்காக எடுத்து வைக்க முடியாது. என்னைப் பார்த்தவுடன் இருவரும் ஒத்திகையை நிறுத்தினார்கள். மாரிஸுடைய அம்மா என்னைத் தரதரவென்று இழுத்து சில்வியா முன்பு நிறுத்தினாள். என்னுடைய இடது கையை சில்வியாவின் வலது கையோடு இணைத்தாள். சில்வியாவின் இடது கையை என் தோளின் மீது வைத்து என் வலது கையால் சில்வியாவை அணைக்கச் செய்தாள். கிராமபோன் பாட்டைத் தொடங்கினாள். நானும் சில்வியாவும் எங்களுக்குச் சாத்தியமான 'பால்' நடனம் ஆடினோம். ஜார்ஜ் கொண்டு வந்திருந்த பவுடர் நிஜமாகவே மிகவும் நன்றாகவே இருந்தது. நாங்கள் ஆடுவதை அந்த பாலு பார்த்திருக்கிறான். அடுத்த நாளே எங்கள் மதில் சுவரில் ஆங்கிலம், தமிழ், உருதுவில், சில்வியா - சந்துரு என்று கரியால் பெரிதாக எழுதப்பட்டிருந்தது. ஒவ்வொரு மொழியிலும் ஏதாவது ஒரு எழுத்தாவது தவறாக எழுதப்பட்டிருந்தது.

நான்தான் வெட்கப்பட்டேனே தவிர யாருமே இதைச் சட்டை செய்யவில்லை. யாருக்கும் தெரியாதபடி இரவில் அழித்து விடப் பார்த்தேன். அடுத்த நாள் சுவரில் அந்த இடம் பளிச்சென்று இருந்தது. பாலு எழுதியதும் ஒரு சேதமுமில்லாமல் இருந்தது.

அந்த நடன விருந்துக்குப் போய் வந்த பிறகு அவள் மிக நன்றாக ஆடியதாகவும் அதற்கு என்னுடன் அவள் பழகிக் கொண்ட ஒத்திகைதான் காரணம் என்றும் சில்வியா சொன்னாள். சுவரில் பாலுதான் எழுதியிருந்தான் என்று தெரிந்தும் ஏன் லாரா அவனை உதைக்கப் போகவில்லை என்று எனக்கு உறுத்திக் கொண்டிருந்தது. சில்வியா என்னுடன் பேசும் போது கவனித்தேன். லாராவின் முகம் ஆத்திரம் பொங்க இருந்தது.

எல்லாம் ஆறே மாதத்தில் மாறி விட்டது. யுத்தம் முடிந்து ஜார்ஜ் இங்கிலாந்து சென்று விட்டான். அவன் திரும்பி வரப் போகிறான் என்றுதான் எல்லாரும் காத்திருந்தார்கள். டெரன்ஸும் மாரிஸும் அவர்கள் வயதைக் கூட்டிச் சொல்லி ரயில்வே இஞ்ஜின் கிளீனர் வேலைக்குச் சேர்ந்து விட்டார்கள். லாரா ஒய். எம். சி. ஏ. யில் டைப்பிஸ்டு பயிற்சிக்குப் போனாள். சில்வியா வீட்டிலேயே காத்திருந்தாள். நாம் ஏதோ கண்ணகி, மாதவி, கோப்பெருந்தேவி என்கிறோம். திரும்பி வராத அந்த பிரிட்டிஷ் சோல்ஜரை நினைத்து ஏங்கி ஏங்கி சில்வியா இரண்டாண்டுக்குள் டி. பி. வந்து செத்துப் போனாள்.



மனைவி : ''வேலையை விட்டு நிறுத்தற அளவுக்கு அப்படி என்ன தப்புச் செஞ்சீங்க?''

ஆஸ்பத்திரியில் வேலை செய்பவர் : ''மறதியா நோயாளியைப் பார்க்க வந்த டாக்டர்கிட்டேயே லஞ்சம் கேட்டுட்டேன்!''

- கே. ரமேஷ்ராம்.



மிருதுவான போஷாக்கு

உங்கள் குழந்தைக்கு 4 மாதங்களாகும் சமயத்தில் அவனது இயற்கை உணவான பாலுடன் எளிதில் ஜீரணிக்க உகந்த போஷாக்கு உணவான நெஸ்டத்தையும் கொடுங்கள்.

பாலுடன் கலந்து தயாரிக்கப்பட்ட நெஸ்டம் உங்கள் குழந்தையின் மிருதுவான முதல் திட உணவாகும். ஏனெனில் இதில் குழந்தை ஆரோக்கியமாய் வளர்வதற்குரிய எல்லா போஷாக்குகளும் சமச்சீர் அளவில் அடங்கியுள்ளன. உங்கள் குழந்தையின் உணவில் வெவ்வேறு சுவையைக் கூட்ட விரும்பினால், அவ்வகை உணவுடன் நெஸ்டத்தை கலந்து கொடுங்கள். உதாரணமாய் வேக வைத்த பழங்கள், வேகவைத்து மசிய வைத்த காய்கறிகள் மற்றும் பருப்பு வகைகள்.

அரிசி சேர்த்த நெஸ்டம் போஷாக்கு நிறைந்த ஸீரியல் ஆகும். உங்கள் குழந்தை இதை எளிதில் ஜீரணிக்கும். உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு மருத்துவர்கள் சிபாரிசு செய்யும் எல்லாவித போஷாக்கும் இதில் உள்ளன. உறுதியான எலும்புகளுக்கும் பற்களுக்கும் தேவையான கால்ஷியம்; ஆரோக்கியமான ரத்தத்திற்கு தேவையான இரும்பு சத்து; பட்டு போல் பளபளக்கும் சருமத்திற்கும், ஒளிவீசும் கண்களுக்கும், நோய் எதிர்ப்பு சக்திக்கும் தேவையான வைட்டமின்களும் இதில் அடங்கியுள்ளன.

உங்கள் செல்லக் குழந்தை நெஸ்டத்துடன் சேர்ந்து வளர்வதை கவனியுங்கள்.

இலவச நெஸ்டம் செய்முறை புத்தகத்திற்கு எழுதுங்கள். போஸ்ட் பேக் 25, புது டில்லி-110016.

எளிதில் ஜீரணிக்க வல்ல பேபி ஸீரியல்.

நெஸ்டம்


காவல்



முதலமைச்சர் குளியலறைக்குப் போனார். வெளியே போக்குவரத்து நிறுத்தப்பட்டது. சூழல் அமைதியாகி விட்டது. முன்னதாக ஒரு ஜீப்பில் காவல் அதிகாரி புறப்பட்டார். காலம் இருக்கிற இருப்பில் ஏற்பாடுகள், மேற் பார்வை... கையில் மைக் பிடித்துக் கரகரப்பான உத்தரவுகள். கேட்டதும் பதறிச் செய்யத் தெருவின் இரண்டு பக்கங்களிலும் போலீஸ்காரர்கள்.

''யோவ், அந்த மாட்டை விரட்டுய்யா.''

ஓரத்தில் மேய்ந்த மாடு போலீஸ்காரர் விசில் ஊதியதை லட்சியமே செய்ய வில்லை. ஆத்திரத்தில் குனிந்து போலீஸ் காரர் கல்லெடுத்தார். பட்ட இடத்தை ஆட்டி விட்டு மாடு தொடர்ந்து மேய்ந்தது. ''தே, தே'' என்று குரல் கொடுத்துப் போலீஸ்காரர் மாட்டைத் துரத்தினார்.



இன்றைக்கு ரயிலைப் பல்லாவரத்தில் கொஞ்சம் நேரம் போட்டு விட்டான். கையில் சாவியுடன் தாமதமான அந்தச் சில நிமிடங்களில் நாகராஜனிடம் ஏற்பட்டு அடங்கிய படபடப்பிற்கு ஈடாக எத்தனை பணமும் போதாது. அலுவலகத்துக்கு நேரமாகி விடுமேயென்று அப்போதுதான் சாப்பிட்ட வயிற்றில் சைக்கிள் மிதித்துப் படியேறி ரயில் பிடித்து, இதோ பஸ்ஸைப் பிடிக்க நாகராஜன் ஓடினான். ஸ்டேஷனுக்கு வெளியே போக்குவரத்து நிறுத்தப் பட்டிருந்தது. இன்னும் சிறிது நேரத்தில் மாநில முதலமைச்சர் அந்த வழியாகப் போகவிருக்கிறார்.

ரவுண்டானா தாண்டி ஏலத்தில் மலிவாய் எடுத்த ஏரோப்பிளேன் நிற்கிற கட்டடம். அலுமினியப் பெயிண்ட் அடித்த அசையாத விசைக்காற்றாடி. முதலில் துவக்கம் அப்படித்தான். ஓய்வு பெற்ற பேராசிரியர்கள் சல்லிசாய்க் கிடைத்தார்கள். 'பொறியியல் கல்லூரி' என்று போர்டு மாட்டப் பட்டது. வெளியூர்ப் பத்திரிகைகளில் விளம்பரங்கள் வந்தன. அசாம், நாகாலாந்து என்று நம்பி வந்த பெற்றோர்கள் வாசல் ஏரோப்பிளேனில் ஏமாந்து, கேட்ட பீஸ் கட்டினார்கள். கூடாரங்கள் வகுப்பறைகள் ஆயின. சீக்கிரமே கடன் வாங்கி ஒரு கட்டடம் வந்தது. வாடகையில் கடனைக் கழிக்க முன்பக்கம் வங்கியே வந்து விட்டது. காலை மணி பத்தை நெருங்க, வாடிக்கையாளர்கள் காத்திருந்தார்கள். வெளியே போக்குவரத்து நிறுத்தப் பட்டிருந்தது. வழக்கமாய் இந்த நேரத்தில் வந்து விடுகிற கேஷியர் நாகராஜனை இன்னமும் காணவில்லை!

முஹம்மத் இஸ்மாயில் தோள்களைக் குலுக்கிக் கொண்டான். நல்ல வலுவான ஆப்ரிக்கத் தோள்கள். குள்ள உருவம், தடித்த உதடுகள், தலையில் ஸ்பிரிங்க் சுருள், கறுத்த முகத்தில் வெள்ளைச் சிரிப்பு. பார்க்கிற யாருக்கும் இஸ்மாயிலைப் பிடிக்கும். ஒரு குறும்புக்கார சிம்பன்ஸியைப் போல. அந்த ஊர்ப் பத்திரிகையில் ஏரோப்பிளேன் விளம்பரத்தைப் பார்த்து விட்டு அவனுடன், அவன் தாத்தாவும் ...ந்தார். வர்ணத் தொப்பியும், வெள்ளை ...ங்கியுமாய் எல்லோரும் அவரை விசித்திர...ய்ப் பார்த்தார்கள். அங்கே அவர் ஒரு பழங்குடிகளின் தலைவர் என்று இங்கே யாரும் ஊகித்திருக்க மாட்டார்கள். காபா,

ம.வே.சிவகுமார்

தீபா என்று அவர்களுக்குள்ளே ஒரு பாஷை. அப்பா இல்லாத இஸ்மாயிலை அவர் அன்புடன் வளர்த்து வந்தார். இங்கே நங்கநல்லூரில் அவனுக்குத் துணையாக நான்கு பேரை அங்கிருந்து அழைத்து வந்து, வீடெடுத்துப் படிக்க வைத்தார். மூன்று வருடங்களுக்கு மேலாகிறது அவரைப் பார்த்து. அவர் கூடவே வந்து துவக்கி வைத்த வங்கிக் கணக்கில் எப்போதும் பணம் இருக்கிறது. இன்னமும் அந்தக் கேஷியரைத்தான் காணவில்லை.

‘‘யோவ் கௌவா, ஓரமாப் போ.’’

நீலக்கலர் ஜீப்பில் காக்கிக் கலர் அதிகாரம். தள்ளாத கிழவன், நடையில் வேகம் பெற்றான். மனிதன் என்றும் பார்க்க முடியாது. மாடு தானேயென்று விட்டு விடவும் முடியாது. அதன் வயிற்றில் பாம் வெடிக்கலாம். இன்ஸ்பெக்டர் தன் மாமூல் தொப்பையைத் தடவிக் கொண்டார்.

‘‘யோவ் கண்ணாடி, பிளாட்பாரத்துலே ஏறு.’’

நாகராஜன் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தான். நீலக்கலர் ஜீப் ரவுண்டாணாவை வட்ட மடித்துப் போனது. ஒரு கணம் அவனுக்குக் கெட்ட வார்த்தைகளுடன் அதைத் துரத்தவேண்டும் போல இருந்தது. கோபத்தில் முகம் சிவந்து விட்டது. யாரும் அவனைக் கிண்டலாய் அழைத்து எவ்வளவோ வருடங்கள் ஆகிவிட்டன. நாகராஜன் சட்டைப் பையை ஒரு தரம் தொட்டுப் பார்த்துக் கொண்டான். வங்கியின் பணச் சாவி அங்கே பத்திரமாய் இருந்தது.

முஹம்மத் இஸ்மாயில் கடிகாரம் பார்த்தான். பத்து அடித்துப் பத்து நிமிடங்கள். இன்னமும் அந்தக் கேஷியரைக் காணவில்லை. தெருவைக் கடந்து ஒரு டீ குடிக்கலாம் என்று சோம்பல் முறித்தான். ஜுபேர் அஹம்மத் வரவில்லை. ஓர் இந்தியப் பெண்ணை மணக்கப் போவதாய்ச் சொல்லி, வங்கியிலிருந்த பெண்களைப் பார்த்து நின்றான்.


தடித்த உதடுகளைப் பிதுக்கி, இஸ்மாயில் தோளைக் குலுக்கிப் புறப்பட்டான். வெளியே ஏன் இவ்வளவு அமைதியாக இருக்கிறது? முஹம்மத் இஸ்மாயில் தெருவில் கால் வைத்த போது, தொலைவில் முதல்வரின் கார் வந்து கொண்டிருந்தது. பின் பக்கம் ஓடி வந்து போலீஸ்காரர் அவனைப் பிடித்துக் கொண்டார். விவரம் புரியாமல் அவன் உதறிய உதறலில் பத்தடி தூரம் போய் விழுந்தார். சர், சர் என்று வாகனங்கள் அவனைக் கடந்தன. எதிர்ப் பக்கத்திலிருந்து, ஒரு போலீஸ்காரர் அவனை நோக்கி ஓடி வந்தார். அவர் வந்த வேகத்திலேயே இலாவகமாய் இடுப்பைப் பிடித்து இஸ்மாயில் வீசினான்.

முஹம்மத் இஸ்மாயில் பழங்குடிகளின் இளவரசன். அவனுக்குக் கோபம் வந்தால் கானகமே நடுங்கும். எங்கேயோ விசில் சப்தம் கேட்டது. தட தடவென்று பலதிசைகளிலிருந்தும் அவர்கள் ஓடி வந்தார்கள்.

வங்கியின் படிக்கட்டில் வந்து சேர்ந்த படபடப்பு அடங்காமல், வாய் பிளந்து, கேஷியர் நாகராஜன் பார்த்து நின்றான். சப்தம் கேட்டு, மற்றவர்களும் வெளியே வந்து அவனைச் சுற்றி நின்றார்கள். தெருவில் பதினைந்து போலீஸ்காரர்கள் வெவ்வேறு நிலைகளில் தூக்கியெறியப்பட்டுக் கை, கால் அசைத்துக் கிடந்தார்கள். நடுவே முஹம்மத் இஸ்மாயில் இன்னமும் குதித்துக் கொண்டிருந்தான். மேலும் இருவர் தயங்கி, நெருங்கி, தூரப் போய் விழுந்தார்கள்.


நீலக்கலர் ஜீப் வந்தது. முஹம்மத் இஸ்மாயில் பெல்ட்டை அவிழ்த்துக் கையில் எடுத்துக் கொண்டான். லாரியிலிருந்து போலீஸ்காரர்கள் இறங்கினார்கள். சற்றுத் தூரத்தில் பைக் சப்தம் கேட்டது. இஸ்மாயில் ஓரக் கண்ணில் பார்த்தான்.

ஜுபேர் அஹம்மத். 'ரைய்ன், ரைய்ன்' என்று ஆக்சிலேட்டர் உயர்கிற சப்தம். இஸ்மாயில் பெல்ட்டை சுழற்றிக் கொண்டே



‘‘இதோ பாருங்க சார், இது லோ பட்ஜெட் படமா இருக்கலாம்; அதுக்காக எல்லாருக்கும் கம்மங்கூழும், கேழ்வரகுக் கஞ்சியும் சாப்பிடக் கொடுக்கிறதெல்லாம் நல்லா யில்லை!’’

- குடந்தை எல். ராம்பிரபு.



பக்கவாட்டில் ஓடித் தாவி ஏறிக் கொண்டான். வெறும் புகையை மட்டும் போலீஸுக்கு விட்டு விட்டு வண்டி எங்கேயோ பறந்து போனது!

ரவுண்டானாவைச் சுற்றிக் கொண்டு, வெள்ளை நிறத்தில் ஜன்னலில் வலையடித்த போலீஸ் வேன்கள் கல்லூரியை முற்றுகையிட்டு நின்றன. உதட்டில் புண் வந்த வாட்ச்மேன் முனுசாமி வேனில் ஏறுகிற சமயம் 'அய்யோ அய்யோ'வென்று தமிழில் கத்தியதால் தப்பித்தான். போலீஸ், ஹாஸ்டலில் புகுந்து சட்டை கிழித்து விசாரித்தார்கள். வங்கியில் அவ்வப்போது பியூன் செல்வராஜின் விசேஷ செய்தி மடல். "வேஸ்ட்டு. அவனுங்க இந்நேரம் எங்கனாச்சும் பறந்திட்டிருப்பானுங்க." "தே கெனாட் அரெஸ்ட் ஃபாரின் ஸ்டுடண்ட்ஸ். முதல்லே எம்பஸியிலே பர்மிஷன் வாங்கணும்...." என்று அக்கவுண்டண்ட் சந்துரு அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார்.

மதியம் மூன்று மணிக்கு மேல் நங்கநல்லூர் வீட்டில் முஹம்மத் இஸ்மாயில் பிடிபட்டு விட்டதாகச் செய்தி வந்தது. வங்கியின் சொச்சநேரமும் அன்றைய சம்பவத்தைப் பற்றிய பேச்சிலேயே போய் விட்டது.

கேஷியர் நாகராஜன் தூக்கம் வராமல் புரண்டு படுத்தான். தலையணையருகில் மூக்குக் கண்ணாடி கழற்றி வைக்கப்பட்டிருந்தது.

முஹம்மத் இஸ்மாயில். அவனைப் போலீஸ்காரர்கள் என்ன செய்து கொண்டிருப்பார்கள்? வங்கியில் பணம் கொடுக்கிற சதுரத்தில் குனிந்து சிரித்துப் போகிற அவனுடைய கறுத்த முகம், மீண்டும் மீண்டும் நினைவுக்கு வந்தது. ஆனால் முகம் இப்போது இரத்த மயமாக இருந்தது. மேலும் மேலும் பூட்ஸ் கால்கள் அவன் முகத்தில் இறங்கின...

காலை மணி பத்து. அலாரம் வைத்து எழுந்து நாகராஜன் சீக்கிரமே வந்து விட்டான். முஹம்மத் இஸ்மாயில். அவனை என்ன செய்திருப்பார்கள்? பியூன் செல்வராஜிடம் மேற்கொண்டு தகவல்கள் இல்லை. ரவுண்டானா பகுதியில் போலீஸ் நடமாட்டம் இல்லை.

'டிட்டாங், டிட்டாங்...' நாகராஜன் டோக்கன் நம்பரை அழுத்தினான்.

"யா கமிங்..." சப்தமாய் ஒலித்த குரலில் நாகராஜன் நிமிர்ந்து பார்த்தான். உடலில் ஒரு கீறல் இல்லாமல் முஹம்மத் இஸ்மாயில்! நாகராஜன் இன்னொரு முறை சரி பார்த்தான்.

பணத்தைக் கொடுத்து விட்டு, கவுண்டரில் குனிந்து இஸ்மாயிலைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே கேட்டான்:

"வாட் ஹாப்பண்ட்?"

"வாட்?"

"யெஸ்டர் டே?"

"ஓ!"

முஹம்மத் இஸ்மாயில் தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

"வெல்! அது சமரசமாகி விட்டது."

"எப்படி?"

"ரெண்டாயிரம் ரூபாய் கேட்டார்கள்."

"நீங்கள் என்ன சொன்னீர்கள்?"

முஹம்மத் இஸ்மாயில் கறுத்த முகத்தில் வெள்ளைச் சிரிப்புடன் கண்களைச் சிமிட்டித் தொடர்ந்தான்.


"நான் சொன்னேன்... நாலாயிரம் ரூபாய் தருகிறேன். இன்னும் கொஞ்சம் போலீஸ்காரர்களை அனுப்புங்கள்!"

குழந்தை மேதை குஞ்சப்பா

'ஜெயா'



பட்டோபட்டு பொன்பட்டு மேனிக்கு



ரெக்ஸோனா

தூய தேங்காயெண்ணெய் செறிந்தது.



டாக்டர். பாரதி ராவ்

மென்பட்டு மேனி காக்க எளிய குறிப்புகள்

கே: என் வயது 17. கடந்த இரண்டாண்டுகளாக, பெரிய பருக்களால் வலி ஏற்பட்டு அவதிப்படுகிறேன். அசிங்கமாகவும் தோற்றமளிக்கிறேன். இதற்கு நிவாரணம் என்ன?

ப: வளரும் பருவத்தில் பருக்கள் வருவது இயற்கையே. மற்ற காரணங்களாலும் ஏற்படுவதுண்டு — உதாரணத்திற்கு, ஹைஜீன் குறைவாக இருப்பது. கிருமிநாசினி துடைப்பான் கொண்டு தினசரி காலையிலும், இரவு படுக்கச் செல்லும் முன்னரும் முகத்தைச் சரியாகக் கழுவுங்கள். தலைப்பொடுகு இருந்தாலும் பரு ஏற்படும். பருக்களை எப்போதுமே நசுக்கக் கூடாது. உணவில் கவனமாயிருங்கள். அதாவது, எண்ணெய் மற்றும் ஸ்டார்ச் பதார்த்தங்களைத் தவிருங்கள். பச்சைப் பசேல் காய்கறிகளையும், பழங்களையும் நிறைய உண்ணுங்கள். நிறைய நீர் குடியுங்கள்.

கே: எனக்குப் பரு நிறைய உள்ளது. இதற்கு நானே வீட்டில் பேஸ்ட் தயாரிக்க விரும்புகிறேன். ஏனெனில், சோப் எனக்கு ஒத்துக் கொள்வதில்லை. இதற்கு என்ன வழி?

ப: சிறிது வேப்பிலை, துளசி, சோம்பு ஆகியவற்றை எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு டம்ளர் நீரில் இரவு முழுவதும் ஊற வையுங்கள். அடுத்த நாள், இவற்றை மிக்ஸியில் போட்டு கலந்து நீரை வடித்து, பாதிக்கப்பட்ட இடத்தில் ஒரு பருத்திக் கம்பளியை வைத்து தடவவும். முகத்தில் உள்ள அதிகப்படியான எண்ணெயை இந்த மருந்துக் கலவை அகற்றுவதுடன் இயற்கையான நிவாரணி போலவும் செயல்படுகிறது. நிறைய நீர் குடியுங்கள். எண்ணெயில் தயாரிக்கப்பட்ட அழகுப் பொருட்களை தவிர்த்திடுங்கள்.

கே: 32 வயதாகும் எனக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். இந்தப் பருவத்திலும் எனக்கு பருக்கள் உள்ளன. இதற்கு நான் என்ன செய்வது?

ப: ஹார்மோன் தொந்தரவினால், உங்களுக்குப் பருக்கள் ஏற்பட்டிருக்கலாம். மேலும் பிரசவ காலத்தில் நீண்ட நாட்களுக்கு அமிலம் கலந்த மருந்தை உண்டிருந்தாலோ, களைப்பு, வேலைப் பளு காரணமாக பாதிக்கப்பட்டிருந்தாலோ, உணர்ச்சி வசப்படுவதால் ஏற்படும் சிக்கல்களால் பாதிக்கப்பட்டிருந்தாலோ, அல்லது பிரசவ காலத்தில் அளவுக்கதிகமான ஹார்மோன்கள் சுரந்திருந்தாலோ, இந்த வயதில் உங்களுக்கு பரு ஏற்பட காரணமுண்டு. முந்தைய கேள்விக்குரிய பதிலில் உள்ளவாறு, இதற்கு நீங்கள் சிகிச்சை பெறலாம். அத்துடன், ஹார்மோன் தொந்தரவு குறித்து சிகிச்சை பெற, பெண் நோய் மருத்துவரை அணுகவும்.

கே: என் வயது 40. என் சருமம் எண்ணெய்ப் பசையுள்ளதாகவும், வாடி வதங்கியும் உள்ளது. மீண்டும், இளமையான மேனி வண்ணம் பெற விரும்புகிறேன். தயவு செய்து எனக்கு உதவவும்.

ப: பின்வரும் முகக்காப்பு முறையை வீட்டில் செய்து பார்க்கவும். ஒரு கப் நீரில் அரை கப் ஓம விதைகளை நனைத்து 2 மணி நேரம் ஊற வைக்கவும். அத்துடன் சிறிது கற்பூரத் துண்டுகளை சேர்க்கவும். ஒரு ஸ்பூன் யூ-டி-கோலோனையும் அத்துடன் சேர்க்கவும். பிறகு இவற்றைக் கலந்து முகத்தில் தடவவும். நாளொன்றுக்கு 2-3 முறை வீதம் இப்படிச் செய்யவும். சந்தனத்தையும், உவர் மண்ணையும் சேர்த்து பயன்படுத்தினால் சருமத்தில் உள்ள அதிகப்படி எண்ணெய் பசை குறையும்.

கே: என் வயது 25. என் இளமைப் பருவத்தில் பருக்களால் அவதிப்பட்டிருக்கிறேன். ஆனால் இப்போது என் சருமம் சரியாகி விட்டாலும், பருக்களின் தழும்புகள் இன்னமும் முகத்தில் உள்ளது. இதை எப்படி மிதப்படுத்துவது?

ப: இப்போதுள்ள சருமம் மறைந்து, இளமையான புதுப்பொலிவுள்ள சருமம் மலர கீழ்க்கண்ட சிகிச்சையை வீட்டிலேயே செய்து பார்க்கவும். இந்த சிகிச்சை, மெதுவான பலன்களைத் தான் அளிக்கும் என்பதால், நீங்கள் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். முதலில் பப்பாளித்துண்டு ஒன்றை முகத்தில் தேய்த்து, வெறும் நீரில் கழுவவும். தினசரி ஒரு முறை இப்படி செய்யவும். இதன் மூலம் மெதுவாக சருமம் மறையத் தொடங்கும். பப்பாளியில் உள்ள பெப்பின் என்கிற புரோட்டீன், சருமத்தை நாளாக நாளாக மறையச் செய்கிறது. நீங்காத, சக்தி மிக்க இந்த சிகிச்சை 2-3 ஆண்டுகளில் பலனளிக்கக் கூடும்.

கே: என் முகத்தில் சிவப்பு நிற, பழுப்பு புள்ளிகள் இருப்பதால், நான் அசிங்கமாகி விட்டேன். இதிலிருந்து நிவாரணம் பெறுவது எப்படி?

ப: அதிகமாக வெயில் பட்டதால், உங்களுக்கு இப்படிப் புள்ளிகள் ஏற்பட்டிருக்கலாம். வெப்பமான நமது நாட்டில் இது சகஜம் தான். கீழ்க்கண்ட சிகிச்சை செய்தால் மிதப்படுத்துவதுடன், மெதுவாக நிவாரணமும் பெறலாம். துருவப்பட்ட முள்ளங்கியை ஒரு ஸ்பூனில் எடுத்து, "யோகர்ட்டுடன்" சேர்த்து, அதைப் புள்ளிகள் மீது இடவும். அது உலர்ந்த பின் வெதுவெதுப்பான நீரில் கழுவி விடவும்.

கே: பல ஆண்டுகளாகவே என் உதடுகள் வறண்டு, வெடிப்பு ஏற்பட்டுள்ளது. எவ்வளவோ கிரீம் போட்டும் பலனில்லை. எனக்கு தயவு செய்து உதவுங்கள்.

ப: லேவண்டர் ஆயில் அல்லது 4 அல்லது 5 மல்லிகைப்பூவை நசுக்கி, பாதாம் எண்ணெயுடனும், தேனுடனும் சேர்த்து உதடுகள் மீது தடவவும். பட்டு போல் மென்மையான உதடுகளைப் பெற, தினசரி இதைச் செய்யவும்.

கே: பழைய நோய்வாய்ப்பட்டது போல் தோற்றமளிக்கும் சருமத்தை, மெருகேற்றும் வழி என்ன?

ப: ஒரு தேக்கரண்டி தேன், ஒரு தேக்கரண்டி பாதாம் எண்ணெய் கலந்து லேசாக சூடுபடுத்தவும். பிறகு அதை முகத்தில் தடவவும். 15 நிமிடங்களுக்குப்பின் வெதுவெதுப்பான நீர் கொண்டு கழுவி விடவும். இப்போது பாருங்கள். உங்கள் சருமம் மெருகேறி விட்டதா இல்லையா என்று.


வாசகர்கள் இம்முகவரிக்கு கேள்விகளை அனுப்பலாம்:

Rexona
P.O. Box 758, Bombay-1.

பின் குறிப்பு: உங்களது எல்லா பிரச்சினைகளுக்கும் தனிப்பட்ட முறையில் பதிலளிப்பது சாத்தியமில்லாமல் போகலாம். எனினும், வரும் இதழ்களில் உங்களது பிரச்சினைகள், கேள்விகளுக்கு நாங்கள் பதிலளிக்கிறோம்.

இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு

LINTAS RX 5 2416 TM



'இந்தியா டுடே' தமிழ்ப் பதிப்பின் ஆசிரியர் மாலன், டீவி மற்றும் திரைப்படத் தயாரிப்பாளர் எஸ். வி. ரமணன், பத்திரிகையாளரும் டீ. வி. விளம்பரதாரர் படத் தயாரிப்பாளருமான ஞாநி ஆகியோர் இங்கே கலந்துரையாடுகிறார்கள்.

டெலிவிஷனால் பத்திரிகைகள் பாதிக்கப்படுகின்றனவா?

மாலன் : டீ. வி. வந்த பிறகு பத்திரிகைகள் பெரும்பாலும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று ஒரு கருத்து நிலவுகிறது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ஞாநி : இதுநாள் வரை டீ.வி.யால் சினிமாவுக்குப் பாதிப்பு, டீ.வி.யால் நாடகத்துக்குப் பாதிப்பு என்றுதான் பேசிக் கொண்டிருந்தார்கள். பிரிண்ட் மீடியாவுக்கு பாதிப்பு என்று இதுவரை யாரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. இதுதான், இதைப் பற்றின முதல் விவாதம் என்று நினைக்கிறேன். இதை நாம் இரண்டு விதத்தில் பார்க்க வேண்டியிருக்கிறது. டீவி - வி.ஸி.ஆர். வளர்ச்சியையும் பத்திரிகைகளின் சர்க்குலேஷன் வளர்ச்சியையும் பார்த்தால், முன்னது- குறிப்பாக வி.ஸி.ஆர். சென்ற வருடம் 53 சதவிகித வளர்ச்சியைக் காண்பித்திருக்கிறது. ஆனால் பத்திரிகைகள் எதுவுமே 53 சதவிகித வளர்ச்சியைக் காண்பதில்லை! இவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு முதல் அடையாளமாக இப்போதுதான் இவர்கள் டீ.வி.யைப் பற்றி எழுத ஆரம்பித்திருக்கிறார்கள். இத்தனை நாட்களாக டீ.வி. என்று ஒன்று இருக்கிறது; அதைப் பற்றி எழுத வேண்டும், விமர்சனம் செய்ய வேண்டும் என்று பத்திரிகைகள் உணர்ந்ததாகவே தெரியவில்லை.

"ஜனங்களின் சிந்தனையில் டீ. வி. ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது..."



எஸ். வி. ரமணன் : டீ.வி.யில் ஏற்படும் பாதிப்பு, எல்லா வளரும் நாடுகளும் எதிர்கொள்கிற சவால்தான். முன்பு மேற்கத்திய நாடுகளில் டீவி வந்த போது, அங்கேயும் பத்திரிகைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன, ஏன் சினிமாக்களும் பெரிய அளவில் பாதிக்கப்பட்டன. அது ஆரம்ப கட்டத்தில் கொஞ்ச நாள் இருந்தது. ஆனால் டீவியையே எத்தனை நேரம், எத்தனை நாள் பார்த்துக் கொண்டிருக்க முடியும்? அதனால், 'சீரியஸ் ரீடிங்'கில் விருப்பமுள்ளவர்கள் பத்திரிகைகளைத்தான் நாடிப் போக வேண்டியிருந்தது. நாமே கூட காலையில் பேப்பர் படிக்கவில்லை என்றால் அன்றைக்கு வேலையே தொடங்க முடியாத அளவுக்கு அடிமையாகி விட்டோம்....

நம்முடைய மக்களிடையே கல்வியறிவு கொஞ்சம் குறைவு. அதனால், ஆடியோ-விஷுவல் மீடியமான டீவி சற்று அதிகமாகவே பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனாலும் பத்திரிகைகள் ஒரேயடியாக அழிந்து விடும் என்று எனக்குத் தோன்றவில்லை.

மாலன் : சில பாசிடிவ் காண்ட்ரிப்யூஷனும் டீவி செய்திருக்கிறது. பத்திரிகைகளின் உள்ளடக்கம் மாறியிருக்கிறது. சில வருடங்களுக்கு முன்னால், தொடர்கதை இல்லாமல் பத்திரிகை நடத்துவது என்பதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. இப்போது விளம்பரதாரர் நிகழ்ச்சிகளில் தொடர்கதை படிக்கிற திருப்தி கிடைத்து விடுகிறது. எனவே கதைகளை வெளியிடுகிற பத்திரிகைகள் விஷயத்தில் ஒரு சரிவு



''எழுத்தாளர்களின், பத்திரிகையாளர்களின் கிரியேடிவிடிக்கு விடப்பட்ட சவால் இது...''

ஏற்பட்டு வருகிறது. அதே சமயத்தில் நியூஸ் மாகஸின்கள் சக்கைப் போடு போடுகின்றன. காரணம், ஜனங்களின் சிந்தனையில் டீவி ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

ஞாநி : ஒருவிதத்தில் நீங்கள் சொல்லுவது சரிதான். ஏனென்றால் தொடர்கதைகளைப் பத்திரிகைகளில் படிப்பதை விட டீ.வி.யில் பார்ப்பது இலகுவாக இருக்கிறது.



''எத்தனை நேரத்துக்குத்தான் டீ. வி. யையே பார்த்துக் கொண்டிருக்க முடியும்...?''

ரமணன் : அது அவ்வளவு சரியாகத் தோன்றவில்லை... 1935ல் கதைகளை வெளியிட்ட பத்திரிகைகள் 1965லும் கதைகள் வெளியிடத்தான் செய்தன. இன்றும் வெளியிடுகின்றன. சில எழுத்தாளர்களுக்கு நிரந்தர வரவேற்பு உண்டு. மற்றவர்கள் காலத்துக்கேற்பப் புதுமையான கற்பனைகளைக் கையாண்டு - வித்தியாசமான முறையில் எழுதினால் நிச்சயம் வெற்றி பெற முடியும். 'டீவியால் தர முடியாததைத் தருவோம்' என்று இவர்கள் சிந்திக்க வேண்டும்.

ஞாநி : சுமார் பத்து வருடங்களுக்கு முன்னால், இப்படித்தான் டீ.வி.யால் நாடகம் பாதிக்கப்பட்டிருக்கிறதா என்று ஒரு சர்ச்சை நடந்தது. பூர்ணம், சுஜாதா எல்லாரும் பங்கெடுத்துக் கொண்டார்கள். ஏன் பாதிக்கப்படுகிறது என்றால் இரண்டும் ஒரே மாதிரியாக இருக்கின்றன; வெவ்வேறு மாதிரியாக இருந்தால் பாதிப்பு உண்டாகியிருக்காது என்று ஒரு கருத்து அப்போது வெளிப்பட்டது... பத்திரிகைகளில் சீரியஸ் ரீடிங் மெட்டீரியல் இல்லை. பொழுது போக்கு அம்சங்களைத்தான் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். டீ.வி.யும் பொழுதுபோக்கு அம்சங்களைத்தான் கொடுத்துக் கொண்டு வருகிறது. அதனால் ஒன்றுக்கு இன்னொன்று போட்டியாக இருக்கிறது. ஒவ்வொன்றும் வேறு வேறு மாதிரி ரசிகர்களுக்கு, அல்லது வாசகர்களுக்குத் தீனி போடும்படியாக இருந்

அருள்வாக்கு



இப்போது ஸர்க்காரே கடன் வாங்குவதாக ஆகி விட்டிருக்கிறது. அதே வழியில், வேண்டாத வஸ்துக்களையெல்லாம் ஜனங்களும் அத்யாவச்ய மாக்கிக் கொண்டால், எல்லாரும் கடனாளியாக வேண்டியது தான். கடன் வாங்காமலிருப்பதே பெரிய உபகாரம். ஏனென்றால், நாம் கடன் வாங்கிச் செல வழிக்கிற போது, நாம் கர்மம் பண்ண முடியாது என்பதோடு, மற்றவர்களையும் கடன் வாங்கி டாம்பீ கம் செய்யத் தூண்டுகிறோம். பிறத்தியாருக்கு ஸாத்ய மில்லாத ஆசை களைக் கிளப்பி விடுகிற விதத்தில், எவனொருத்தனும் டாம்பீகமாக வாழ்கிறது தான் பெரிய ஸமூஹ த்ரோகமான கார்யம். அநாதி யான நம் சாஸ்த்ரங்களிலிருந்து, நேற்று காந்தி வரையில் சொல்லி வந்த எளிய வாழ்க்கையை **(simple living)** வசதியுள்ளவர்களும் மேற்கொண்டால் எந்தக் கம்யூனிஸமும், வர்க்கப் போராட்டமும் வரவே வராது. எளிய வாழ்க்கையால் இவன் நிறைய மிச்சம் பிடித்துத் தர்மமும் பரோபகாரமும் செய்வது ஒரு பக்கம்; இதைவிட முக்யமாக மற்றவர்களுக்கு ஆசை, அஸூயை, கடன் இவற்றை ஏற்படுத்தாமல் இருக்கிறானே, இதுதான் பெரிய உபகாரம். வரவே சிறுத்து, செலவே பெருகினால், அது திருட்டு என்றே ஆன்றோர் மொழி இருக்கிறது. கடன் வாங்கின பணம் இன்னொருத்தனுடையதுதானே? அந்தப் பணம் தனக்கு வருமா, வருமா என்று இவன் (திருப்பிக்) கொடுக்கிற வரையில் அவன் திருட்டுக் கொடுத்து விட்டது போல, அவஸ்தைப்பட்டுக் கொண்டுதானே இருப்பான்? அதனால்தான் இதைத் திருட்டு என்றே சொல்லியிருக்கிறது. 'கடன் பட்டார் நெஞ்சம்' மட்டுமில்லாமல், 'கடன் கொடுத்தார் நெஞ்ச'மும் கலங்கும்படியாக இப்படி இரண்டு சாராருக்கும் அபகாரம் பண்ணுகிற இரவல் பழக்கத்தை விடுவதே பெரிய உபகாரம்தான்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

தால் இந்தப் பிரச்னையே எழுந்திருக்காது.

ரமணன் : ரொம்ப கரெக்ட். இப்போது டீ.வி.யில் கொண்டு வர முடியாத இன்வெஸ்டிகேட்டிவ் ஜர்னலிஸம், சில செய்திகளுக்குப் பின்னால் நடந்த உண்மைப் பின்னணிச் சம்பவங்கள், இன்றுள்ள சில பிரச்னைகள் படிப்படியாக வளர்ந்தவிதம் இவை பத்திரிகைகளில் வெளியிடப்பட்டால் மக்கள் நிச்சயம் வர வேற்பார்கள். அந்த மாதிரி மேட்டர் பத்திரிகைகளில் வரும் போது, வாசகர்கள் ஆர்வத்தோடு படிக்கிறார்கள். அறிவுத் தாகம் இருக்கிறது.

ஞாநி : சரி, செய்தி, கதைகளை விட்டு விடுவோம். விளம்பரத்துக்கு வருவோம். எல்லாப் பெரிய விளம்பர ஏஜென்ஸிகளும் விளம்பரதாரர்களும், தங்கள் விளம்பர பட்ஜெட்டின் பெரும் பகுதியை, டீ.வி.க்காக ஒதுக்குகிறார்கள், ஆடியோ - விஷுவல் மீடியம் என்பதால், மிச்சமுள்ள 20 சதம் பட்ஜெட்தான் பத்திரிகைகளுக்குப் போகிறது. அதிலும் பெரிய பெரிய தேசிய நாளிதழ்கள், நியூஸ் மாகஸின்களுக்குச் சென்ற பிறகு, சிறிய பத்திரிகைகளுக்கு மிகச் சிறிதளவே ஒதுக்கப்படுகிறது.


மாலன் : விளம்பரத்துக்காகச் செலவழிக்கும் பணத்திற்குப் பலன் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் செயல்படுகிறார்கள்.

ஞாநி : அதைத் தவறு என்று கூற முடியாது. ஆனால் தரமான பத்திரிகைகளை சமுதாயத்தில் ஆரோக்கியமான பாதிப்பை ஏற்படுத்தும் நல்ல பத்திரிகைகளை ஆதரிக்க வேண்டும் என்ற பெருநோக்கும் விளம்பரதாரருக்கும் தொழிலதிபர்களுக்கும் வேண்டும். இல்லாவிட்டல் பல நல்ல பத்திரி

YOU CAN BE MADE TO SEE A NEWS EVENT IN TWO WAYS.



AT DINAMALAR WE GIVE YOU A CLEAR PICTURE.



In the world of news, it's very easy to take sides. Or even colour your point of view. At Dinamalar, we more than understand this professional danger.

Since 1957, when we started our operations in Tamilnadu we have taken care to give you the whole truth. Our in-depth news coverage and analysis leaves you with the complete picture. So you arrive at your own conclusions. **Today, we have six editions. The latest being the Pondicherry edition.**

So if you are looking for a Tamil daily, there are no two ways about it. It's only Dinamalar.

தினமலர்

DINAMALAR

National Tamil Daily

Madras, Erode, Trichy, Madurai, Tirunelveli and Pondicherry.

NOW, REACH FOR THE TRUTH IN OUR PONDICHERRY EDITION ALSO.

கைகள் நசித்துப் போகும் அபாயம் உண்டு.

மாலன் : அது உண்மைதான். அதே சமயம் டீவி விளம்பரத்தில் ஏற்படும் ஆரோக்கிய பாதிப்பையும் பார்ப்போம். டீ.வி.யில் வரும் விளம்பரங்கள் சிலவற்றை ரொம்பப் புத்திசாலித்தனமாக அமைத்திருப்பார்கள். ரொம்ப அழகாக வெளிப்படுத்தியிருப்பார்கள். இதைப் பார்த்து விட்டு, பத்திரிகைகளும் விஷுவலாக ஏதேனும் புது மாதிரியாகக் கொடுக்க வேண்டும் என்று செயல்படத் துவங்கியிருக்கின்றன. நிறையப் புகைப்படங்கள்; ஸ்தலத்திலேயே எடுத்த புகைப்படங்கள் என்று நிறைய வெளியிட ஆரம்பித்திருக்கிறார்கள். ராஜீவ் காந்தி கொலை பற்றிச் சாதாரணப் படத்துடன் செய்தி வெளியிட்டால் போதாது. ராஜீவின் காலிலுள்ள ஷூஸ்களிலிருந்து நெருப்பு வருகிற வண்ணப்படம் வெளியிட்டால்தான், அது வாசகனை இப்போது பாதிக்கிறது.

ஞாநி : நல்ல கலர்ப் படங்கள், விளம்பர சப்போர்ட், படிக்கும்படியான மேட்டர் எல்லாம் இருந்தும், பதினோரு வருடங்கள் வெற்றிகரமாக நடந்த 'பாம்பே' பத்திரிகை மூடப்பட்டு விட்டது. இதையும் நாம் கவனிக்க வேண்டும். எடிடோரியல் டீம் கிடைக்கவில்லை என்று ஒரு பேட்டியில் அதன் ஆசிரியர் சொல்லியிருந்தார். வீடியோ, சினிமாவுக்குப் போகிறார்கள்; பத்திரிகைத் துறைக்கு - பிரிண்ட் மீடியத்துக்குத் திறமையான இளைஞர்கள் வருவதில்லை. அதிலும் இந்தப் பத்து வருடங்களில் இது குறிப்பாகத் தெரிகிறது.

மாலன் : 'பாம்பே' ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குள் செல்லுபடியாகிற பத்திரிகையாக இருக்கலாம்... சமீப காலத்தில் 'மங்கையர் மலர்' போன்ற பெண்கள் பத்திரிகையும் சண்டே, 'இந்தியா டுடே' போன்ற செய்திப் பத்திரிகைகளும் கணிசமான அளவு விற்பனையாகிற நிலைமையைப் பார்க்கிறோம். வாசகர் ரொம்ப செலக்டிவ் ஆக ஆகி வருகிறார் என்பதைத்தான் இது காட்டுகிறது. இப்படி ஒவ்வொரு துறைக்கும் கட்டுப்பட்ட வாசகர்கள் பெருகி வருகிறார்களோ என்று தோன்றுகிறது.

ரமணன் : எப்படி கமிடட் ஆடியன்ஸ் இருக்கிறார்களோ, அப்படி கமிடட் வாசகர்களும் இருக்கிறார்கள். இன்ன பத்திரிகை வாங்குவது என்று அவர்கள் தீர்மானமாகவே இருப்பார்கள். எந்த மாற்றமும் அவர்களை மாற்றவே மாற்றாது.

ஞாநி : நீங்கள் குறிப்பிடுவது 'வேல்யூஸ் கமிட்மெண்ட்' சம்பந்தப்பட்டது. எல்லாத் துறையிலும் இருக்கிற வேல்யூஸை இந்தப் பத்திரிகை வெளிப்படுத்துகிறது. அதனால் அந்தப் பத்திரிகையை வாங்கிக் கொண்டே இருப்பேன் என்கிற கமிட்மெண்ட். இன்னொன்று ஸ்பெஷலைஸ்ட் கமிட்மெண்ட். அதாவது பெண்கள் பத்திரிகையை மட்டுமே அல்லது நியூஸ் மாகஸினை மட்டுமே வாங்குவது. இதற்கும் டீ.வி.யால் பாதிப்பு ஒரு காலகட்டத்தில் வரும். இப்போது சமையல் குறிப்புகளும், பொம்மை செய்தலும் இந்தியில் பிற்பகல் நிகழ்ச்சிகளில் வந்து கொண்டிருப்பது, தமிழிலும் வரத் தொடங்குமானால் அப்போது அந்தப் பாதிப்பைத் தெரிந்து கொள்ள முடியும்!

மாலன் : டீ.வி.யில் அரசுக்குச் சாதகமான செய்திகள்தாம் வருகின்றன. ஆட்சிக்கு எதிரான எந்தச் செய்தியும் வராது. பத்திரிகைகள் எதிரான ஒரு நிலை எடுத்துக் கொண்டு, செய்திகளும், விமர்சனங்களும் வழங்கினால் ஒருவேளை பாதிப்பைத் தவிர்க்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கலாமோ?

ரமணன் : இல்லையே, செய்திகளைப் பின்னணியாகக் கொண்ட நியூஸ் காசெட்டுகளும் இப்போது நிறைய வர ஆரம்பித்து விட்டன. நம்முடைய கவலை எல்லாம், அடுத்த பத்தாண்டுகளில் படிக்கும் வழக்கமே மறைந்து போய் விடுமோ என்ற கோணத்தில்தான் இருக்கிறது.

மாலன் : கதை படிக்கிற பழக்கம் வேண்டுமானால் குறைந்து போகலாம். ஆனால் பத்திரிகை படிக்கிற பழக்கமே மறைந்து போய் விடும் என்று சொல்ல முடியாது.

ஞாநி : பத்திரிகைத் தொழிலில் இருக்கும் நம் போன்றவர் வேண்டுமானால் ஒரு பத்திரிகைக்கு மேல் படிக்கலாம்.

''ஏன் I love you ன்னு எழுதின டீ சர்ட்டையே போடறே?''

''இதையாவது, எந்தப் பெண்ணாவது சத்தமாப் படிக்க மாட்டாளான்னு, ஒரு நப்பாசைதான்!''

- ஆர். வசந்தகுமார்.



ஆனால் மற்றவர்கள்? இது ஒரு பிரச்னை. இன்னொன்று, டீவியில் பார்ப்பதே போதும் என்று விடாமல் டீவி பார்க்கும் நம் குழந்தைகளைப் பற்றிய கவலை. டீவியில் பார்க்கும் போது அவர்களது விழிக் கோளங்களுக்கு அசைவே இல்லை. நிலை குத்தினாற்போல் ஒரேயடியாக 'ஐ-பால்' அசைவே இல்லாமல் பார்க்கிற குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள் என்று அமெரிக்க சர்வே ஒன்று கூறுகிறது. இடமிருந்துவலமாகவும், வலமிருந்து இடமாகவும் விழிக்கோளங்கள் சென்று திரும்பும் பயிற்சி, படிக்கும் போது மட்டுமே கிடைக்கிறது. அதனால் டீவியையே பார்த்து சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கும் குழந்தைகளைப் படிக்க வைக்க வேண்டுமானால், கண்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும் முதலில்! இதை நோக்கித்தான் நம் குழந்தைகளும் போய்க் கொண்டிருக்கின்றனவோ என்ற கவலை இருக்கிறது! அந்தச் சமயத்தில் பத்திரிகைகள் நிலை என்ன என்று பத்திரிகைகள் யோசித்துப் பார்க்க வேண்டும்.

ரமணன் : அந்த மாதிரி பயப்பட வேண்டாம் என்று தோன்றுகிறது. ரெஸ்பான்சிபிள் ஜர்னலிஸம் என்ற பாதையில் சென்றால், ஒரேயடியாகப் பத்திரிகைகள் அழிந்து போய் விடுமோ என்ற கவலைக்கு இடமே இருக்காது என்று நம்புகிறவன் நான். ஏனென்றால் இது மாதிரிதான் நம் கலைகளும், இசையும் அழிந்து போய் விடுமோ என்று முப்பது - நாற்பது வருடங்களுக்கு முன்னால் பயந்து கொண்டிருந்தார்கள்... அப்படி ஒன்றும் நேரவில்லையே? டீ.வி.யில் மேலோட்டமாகப் பார்க்கிறவை பற்றி, கேட்கிற செய்திகளைப் பற்றி, இன்னும் ஆழமாக, முழுமையாகத் தெரிந்து கொள்ளவும், மாற்றுக் கருத்துக்களை அறிந்து கொள்ளவும் மாணவர்களும் மற்றவர்களும் பத்திரிகைகளை நாடித்தான் ஆக வேண்டும். இதற்குப் பாடப் புத்தகங்கள் மட்டுமே போதாது. இன்னொரு விஷயமும் சொல்லுகிறேன். டீவியில் ஒரு நிகழ்ச்சியைப் பார்க்கிற சுமார் மூன்று கோடிப் பேரில், சுமார் இரண்டு லட்சம் வாசகர்கள், தாங்கள் வாங்கும் பத்திரிகைகளில், அவற்றின் விமர்சனங்களைப் படிக்கிறார்கள். அந்த இரண்டு லட்சம் பேரின் பாதிப்பும், தொடர்பும் டீவி நிகழ்ச்சியைத் தயாரித்தவர்களுக்குப் போய்ச் சேருகிறது; எட்டுகிறது. அதனால் மூன்று கோடிப் பார்வையாளர்களை விட இரண்டு லட்சம் வாசகர்களின் பாதிப்புத் தெரிய வாய்ப்பிருக்கிறது - பத்திரிகைகள் மூலம்.

ஜோதி : இன்றைக்கு விடீயோ படம் பார்க்க வேண்டாம்; இந்தப் புத்தகத்தைப் படிப்போம் என்று வாசகனைத் தூண்ட வைக்கும் அளவுக்கு எழுத்தாளனுக்கு 'கிரியேடிவ் சாலஞ்ச்'சை டீவி கொடுத்திருக்கிறது. இந்தப் பயமும், கவலையும் பழைய தலைமுறை எழுத்தாளருக்கு இருந்ததில்லை. இந்தத் தலைமுறை எழுத்தாளன் இந்தப் பிரச்னையையும் சேர்த்துச் சமாளித்தாக வேண்டியிருக்கிறது. இதுவும் ஒரு விதத்தில் நல்லதுதான். எழுத்தாளர்களின் அல்லது பத்திரிகையாளனின் கிரியேடிவிடிக்கு விடப்பட்ட சவால் என்று எடுத்துக் கொள்ள வேண்டும்.

மாலன் : டீவி ஓர் அச்சுறுத்தல் அல்ல. நாட் எ த்ரட்; பெரிய தொல்லைதான். இட்ஸ் எ மெனேஸ். ஆனாலும் பத்திரிகைகளுக்கு 'பாஸிடிவ்' ஆகத்தான் அதன் 'கான்ட்ரிப்யூஷன்' இருந்திருக்கிறது. டீவியிலிருந்து, பிரிண்ட் மீடியாவுக்குக் கொண்டு வர பல உத்திகள் தோன்றலாம்.

ஜோதி : அதாவது பத்திரிகைகள் புதுமைப்படுத்திக் கொள்ளலாம்?

மாலன் : புதுமைப்படுத்திக் கொள்வதோடு, இன்னும் சிறப்பாகக் கூட ஆகும்.

தொகுப்பு : **சித்தார்த்**

புகைப்படங்கள் : **யோகா**

புலிராஜா

ஆகஸ்டு 1, 1941 தேதியிட்ட முதல் கல்கி இதழில், 'லாங்கூலன்' என்ற புனைபெயரில் அமரர் கல்கி எழுதிய நையாண்டிச் சிறுகதை இது.....

1

நமது கதாநாயகர் பிரதிபந்தபுரம் மகாராஜா அவர்களை, ஹிஸ் ஹைனஸ் ஜமேதார் - ஜெனரல், கிலேதார் - மேஜர், சத வியாக்ர ஸம்ஹாரி, மகா ராஜாதிராஜ விசுவபுவன ஸம்ராட் ஸர் ஜிலானி ஜங்ஜங்பகதூர் எம்.ஏ.டி., ஏ.ஸி.டி.ஸி., ஸி.ஆர்.ஸி.கே. என்றும் சொல்வதுண்டு; 'புலி ராஜா' என்று சுருக்கமாகச் சொல்வதும் உண்டு. அவருக்குப் 'புலி ராஜா' என்ற பெயர் ஏன் வந்தது என்பதைத் தான் இங்கே சொல்ல முன்வந்திருக் கிறேன்; ஆனால் முன்வருவது போல் வந்துவிட்டுப் பின் வாங்கும் உத்தேசம் எனக்குக் கொஞ்சம் கூடக் கிடையாது. 'ஸ்டுகா' பாம்பர் விமானம் வந்தாலும் நான் பயப்படப் போவதில்லை. 'ஸ்டுகா' தான் என் கதைக்குப் பயந்து ஓடும்படியிருக்கும்.

புலி ராஜாவைப் பற்றி மிகவும் முக்கியமான ஒரு விஷயத்தை முதலிலேயே சொல்லி விடுவது அவசியமாகிறது. ஏனெனில், அவரைப் பற்றிப் படிக்கும் போது, அப்பேர்ப்பட்ட அஸகாய சூரரைக் கண்ணால் பார்க்க வேண்டுமென்ற ஆசை எல்லாருக்கும் அளவில்லாமல் உண்டாகி விடும். ஆனால், அந்த ஆசை நிறைவேறுவதற்கு வழி கிடையாது. பரதன் ராமனிடம் தசரதரைக் குறித்துச் சொன்ன பிரகாரம், உலகிலே பிறக்கும் ஜீவர்களெல்லாம் கடைசியாக எந்த இடத்துக்குப் போய்ச் சேர்கிறார்களோ, அங்கே நமது புலி ராஜாவும் விஜயமாகி விட்டார். சுருங்கச் சொன்னால், புலி ராஜா இறந்து போனார்!

அமரர் கல்கி

அவர் எப்படி இறந்து போனார் என்பது ஓர் அதிசயமான விஷயம். அதைக் கதையின் கடைசியிலேதான் சொல்ல வேண்டும். ஆனால் அவருடைய மரணத்தில் ஒரு பெரிய விசேஷம் என்னவென்றால், அவர் பிறந்த காலத்திலேயே, அவர் ஒரு நாள் இறந்தும் போவார் என்று ஜோசியர்கள் கண்டு பிடித்துச் சொல்லி விட்டார்கள்!

''குழந்தை வீராதி வீரனாகவும் சூராதி சூரனாகவும் தீராதி தீரனாகவும் விளங்கு



வான். ஆனால்....'' என்று மென்று விழுங்கினார்கள். ''என்ன சமாசாரம்?'' என்று அழுத்திக் கேட்டதன் பேரில், ''சொல்லக் கூடாது; ஆனாலும் சொல்ல வேண்டியிருக்கிறது. இந்த ஜாதகனுக்கு ஒரு காலத்தில் மரணம் நேரிடும்'' என்றார்கள்.

அந்தச் சமயத்தில் ஒரு பெரிய அதிசயம் நடந்தது. பிறந்து பத்து தினங்கள் தான் ஆன ஜிலானி ஜங்ஜங் பகதூர் வாயிலிருந்து ஓர் ஆச்சரியமான வார்த்தை கிளம்பிற்று. ''பிரகஸ்பதிகளே!'' என்பதுதான் அந்த வார்த்தை.

எல்லாரும் அப்படியே பிரமித்துப் போய் நின்று விட்டார்கள். ஒருவரையொருவர் பார்த்து விழித்தார்கள்.

''நான்தான் பேசினேன், ' பிரகஸ்பதிகளே!''

இந்தத் தடவை சந்தேகத்துக்கே இடமில்லை. பிறந்து பத்தே நாளான குழந்தைதான் அவ்வளவு திவ்யமாகப் பேசியிருக்கிறது!

தலைமை ஜோசியர் மூக்குக் கண்ணாடியைக் கழற்றி விட்டு, குழந்தையை உற்றுப் பார்த்தார்.

''பிறந்தவர் யாவரும் இறந்துதானே தீரவேண்டும்? அதற்கு நீங்கள் என்ன ஜோசியம் சொல்வது? மரணம் எந்த விதத்தில் நேரும் என்று சொன்னாலும் அர்த்தம் உண்டு'' என்று சின்னஞ் சிறு கீச்சுக்குரலில் யுவராஜா திருவாய் மலர்ந்தார்.

ஜோசியர் தலைவர் மூக்கிலே விரலை வைத்து அதிசயித்தார். பத்து நாள் குழந்தை பேசுகிறது, அதோடு இல்லை - இவ்வளவு புத்திசாலித்தனமான கேள்வி கேட்கிறது என்றால் - இதென்ன, யுத்த இலாகா அறிக்கைகளைப் போல் தோன்றுகிறதே தவிர, நம்பக்கூடியதாயிருக்கிறதா?

தலைமை ஜோசியர் மூக்கிலிருந்த விரலை எடுத்துவிட்டு, யுவராஜாவை உற்றுப் பார்த்து விட்டுச் சொன்னார்:-

''ரிஷப லக்னத்தில் யுவ ராஜா ஜனனம். ரிஷபத்துக்கும் புலிக்கும் ப கை. ஆகையால், புலியினால் மரணம்.''





சப்-இன்ஸ்பெக்டர் (திருடனிடம்) : இதப்பாருப்பா... நமக்குள்ள ஆயிரம் இருக்கலாம்; அதுக்காக, உன் மகன் கல்யாணம் என் தலைமையிலதான் நடக்கணும்னு நீ பிடிவாதமாச் சொல்றது நல்லா இல்லே!

– சீர்காழி வி. ரேவதி.

புலி என்ற வார்த்தையைக் கேட்டதும் யுவ ராஜா ஜங்ஜங் பகதூர் பயந்து நடுங்கியிருப்பார் என்று நீங்கள் நினைக்கலாம். அதுதான் இல்லை. புலி என்று கேட்டதும், யுவ ராஜா ஓர் உருமல் உருமினார். பிறகு, இரண்டு பயங்கரமான வார்த்தைகள் அவர் வாயிலிருந்து வெளி வந்தன :-

''புலிகள் ஜாக்கிரதை!''

மேலே கூறிய சம்பவம் பிரதிபந்தபுரத்தில் வழங்கி வந்த வதந்தியேதான். ஆனால் பின்னால் நடந்தவைகளைக் கொண்டு பார்க்கும்போது, அது உண்மையாயிருக்கலாமென்றே தோன்றுகிறது.

2

யுவராஜா ஜங்ஜங் பகதூர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தார். மேற்கூறிய சம்பவத்தைத் தவிர, அவருடைய குழந்தைப் பருவத்தில் வேறு அதிசயம் ஒன்றும் நடக்கவில்லை. மற்ற சுதேச சமஸ்தானங்களின் யுவ ராஜாக்களைப் போல்தான் அவரும் இங்கிலீஷ் பசுவின் பாலைக் குடித்து, இங்கிலீஷ் நர்ஸினால் போஷிக்கப்பட்டு, இங்கிலீஷ் உபாத்தியாயரால் இங்கிலீஷ் கற்பிக்கப்பட்டு, இங்கிலீஷ் ஸினிமாக்கள் பார்த்து - இப்படியாக வளர்ந்து வந்தார். வயது இருபது ஆனதும், அதுவரைக்கும் 'கோர்ட் ஆப் வார்ட்' ஸில் இருந்த ராஜ்யமும் கைக்கு வந்தது.

ஆனால் ராஜ்யத்தில் மட்டும் மேற்சொன்ன ஜோசியக்கூற்று எல்லாருக்கும் நினைவிருந்தது. அநேகர் அதைப் பற்றிப் பேசியும் வந்தார்கள். மெதுவாக மகாராஜாவின் காதிலும் இந்தப் பேச்சு விழுந்தது.

பிரதிபந்தபுரம் சமஸ்தானத்தில் காடுகள் ஏராளமாக உண்டு; அவற்றில் புலிகளும் உண்டு. ''தன்னைக் கொல்ல வந்த பசுவையும் கொல்லலாம்'' என்ற பழமொழி மகாராஜாவுக்குத் தெரிந்திருந்தது. தன்னைக் கொல்ல வரும் புலியைக் கொல்லுவதைப் பற்றி என்ன ஆட்சேபணை? - மகாராஜா புலி வேட்டையாடக் கிளம்பினார்.

முதல் புலியைக் கொன்றதும் மகாராஜாவுக்கு ஏற்பட்ட குதூகலத்துக்கு அளவில்லை. சமஸ்தானத்தின் ஜோசியர் தலைவரைக் கூப்பிட்டு அனுப்பினார். செத்த புலியைக் காட்டி ''இப்போது என்ன சொல்கிறீர்?'' என்று கேட்டார்.

''மகாராஜா இந்த மாதிரியே 99 புலிகளைக் கொன்று விடலாம்; ஆனால்....'' என்று ஜோசியர் இழுத்தார்.

''ஆனால், என்ன? தைரியமாய்ச் சொல்லும்!''

''ஆனால், நூறாவது புலி விஷயத்தில் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.''

''சரி நூறாவது புலியையும் கொன்றுவிட்டால், அப்புறம்?''

''அப்புறம், என்னுடைய ஜோசிய புஸ்தகங்களையெல்லாம் கிழித்து நெருப்பு வைத்துவிட்டு....''

''வைத்துவிட்டு?.....''

''....தலையில் கிராப்பு வைத்துக் கொண்டு இன்ஷூரன்ஸ் கம்பெனி ஏஜெண்டாகப் போய் விடுகிறேன்!'' என்று, ஜோசியர் சம்பந்தமில்லாமல் முடித்தார்.

3

பிரதிபந்தபுரம் சமஸ்தானத்தின் காடுகளிலிருந்த புலிகளுக்கெல்லாம் அன்று முதல் கொண்டாட்டந்தான்.


மகாராஜாவைத் தவிர வேறு யாரும் புலி வேட்டை ஆடக்கூடாது என்று உத்தரவு பிறந்தது.

தப்பித்தவறி யாராவது ஒரு புலியின் மேல் கல்லை விட்டெறிந்தால் கூட, அப்படிப்பட்ட ராஜ துரோகத்தைச் செய்தவனுடைய சொத்துக்களெல்லாம் பறிமுதல் செய்யப்படுமென்று தண்டோரா போடப்பட்டது.

மகாராஜா நூறு புலிகளை முழுசாகக் கொன்ற பிறகுதான் மற்ற காரியங்களில் கவனம் செலுத்துவது என்று கங்கணம் கட்டிக்கொண்டார். அவருடைய உத்தேசம் நன்கு நிறைவேறியும் வந்தது.

அபாயங்கள் அவருக்கு நேரிடாமல் இல்லை. சில தடவை துப்பாக்கிக் குறி தவறிப் புலி அவர் மேல் பாயவும், அதனுடன் கைகலந்த சண்டை போடவும் நேரிட்டது.


உங்கள் வீட்டை
அஷ்டலக்ஷ்மி
அலங்கரிக்கட்டும்!
Sathya®
Corporation
அஷ்டலக்ஷ்மி பீரோக்கள்
அஷ்டலக்ஷ்மி –
எட்டு வெவ்வேறு
மாடல்களில்
தயாரிக்கப்
படுகின்றன.
ஒவ்வொரு மாடலும்
உங்களுடைய
குறிப்பிட்ட
தேவைகளுக்கு
ஏற்றபடி உருவாக்
கப்பட்டுள்ளது.
வாழ்க்கை
வளம் பெற
அஷ்டலக்ஷ்மி
பீரோக்கள்.
தரமானது
மலிவானது
• ஆயுட்கால முதலீடு
• ஈடு இணையற்றது
சத்யா கார்ப்பரேஷன்
தலைமை அலுவலகம்: 69 ராயப்பேட்டை நெடுஞ்சாலை
(சமஸ்கிருத காலேஜ் பஸ் ஸ்டாப் அருகில்) மயிலாப்பூர்,
சென்னை-600 004. போன்: Off : 847240, 847630.
கிளை: 68 புரசவாக்கம் நெடுஞ்சாலை, கார்டன் அபார்ட்மெண்ட்
சென்னை-600007. போன்: 665299
கோயம்புத்தூர்: தாமோதர் சென்டர், 1050, அவினாசி ரோடு, கோயம்புத்தூர்-18,
திருச்சி: 23, நந்தி கோயில் தெரு, தெப்பக்குளம். போன்: 24414



உங்கள் வாழ்க்கைக் கனவுகளை நனவாக்குகிறது ரெடிமணி

வி.ஸி.ஆர். வாஷிங் மெஷின். வெட் கிரைண்டர். மிக்ஸி. டூ-இன்-ஒன். கைக்கடிகாரம்... நீங்கள் விரும்பும் அத்தனை பொருட்களையும் வாங்கலாம். ஒரே கடையில். உங்கள் ஊரிலேயே. ரெடிமணி ஷாப்பில்.

ஆம். நுகர்வோர் பொருட்கள் விற்பனையில் முன்னோடியாக நிற்கும் ரெடிமணி உங்களுக்கு அளிக்கிறது. பிரத்யேக பண உதவி.

நீங்கள் வாங்குவதற்கு வசதியாக எளிய தவணை முறைத்திட்டம். கோல்டன் சர்டிபிகேட் ஸ்கீம் மற்றும் சனிக்கிழமை சிறப்புச் சலுகை.

ஆகவே. அடுத்த முறை போதிய பணமில்லையே என்று வருந்தவேண்டாம். ரெடிமணி ஷாப்பிற்கு வந்து. நீங்கள் விரும்பியதை எடுத்துச்செல்லுங்கள்.

ரெடிமணி ஷாப்

தலைமை அலுவலகம்:
119, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை,
சென்னை 600 004.
தொலைபேசி: 847365, 843030

கிளைகள்: சென்னை அண்ணா நகர்—டி.98, 3வது அவென்யூ, 14 நடைகள் எதிரில் ● ஆதம்பாக்கம்—142, மேடவாக்கம் மெயின் ரோடு. ● குரோம்பேட்டை—1, ஜிஎஸ்டி ரோடு, டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் எதிரில் ● புரசவாக்கம்—141-ஏ, புரசவாக்கம் ஹைரோடு, கெல்லீஸ்.

இதர ஊர்கள்: அரக்கோணம்—195, காந்தி ரோடு. ● கோயம்புத்தூர்—முதல் மாடி, 1000ஏ, கிராஸ் கட் ரோடு. ● தர்மபுரி—எம்வி காம்ப்ளெக்ஸ், 6, ஆறுமுக ஆசாரி தெரு. ● ஈரோடு—செல்வம் ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ், 97, பிரப் ரோடு ● காரைக்குடி—132, செக்காலை ரோடு ● கிருஷ்ணகிரி—42, காலனி ரோடு, ஸ்ரீசாயிராம் பில்டிங்ஸ் ● மதுரை—183 பி, வடக்கு வெளி வீதி ● நாமக்கல்—17, முனிசிபல் பில்டிங்ஸ், பரமாத்தி ரோடு. ● நெய்வேலி—9, டெய்லி பஜார் ● பாண்டிச்சேரி—90ஏ &92ஏ, செட்டி தெரு ● சேலம்—தாயாரம்மாள் காம்ப்ளெக்ஸ், புது பஸ் ஸ்டாண்டு அருகில், ஓமலூர் ரோடு. ● தேனி—1071, ஸ்ரீ விஜய நிவாஸ் பில்டிங், தேரு ஸ்கொயர் ● திருத்தணி—கேகேஎஸ் காம்ப்ளெக்ஸ், கமலா தியேட்டர் அருகில், கடப்பா டிரங்கு ரோடு ● தூத்துக்குடி—37, பிரெஞ்சு சாப்பல் ரோடு ● திருச்சி—7, எஸ்ஆர்எம் காம்ப்ளெக்ஸ், 73 பி-2, சாலை ரோடு ● திருநெல்வேலி—1-பி, எஸ்என் ஹைரோடு ● விருத்தாசலம்—842/சி, ஜங்ஷன் ரோடு ● வேலூர்—14/2, பாரக்ஸ் மெயின் ரோடு.

R.K SWAMY/BBDO RM 8411

ஒவ்வொரு தடவையிலும் அவர்தான் கடைசியில் வெற்றி பெற்றார்.

இன்னொரு சமயம் அவருடைய சிம்மாசனத்துக்கே ஆபத்து வருவதாயிருந்தது. ஒரு பெரிய பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர் பிரதிபந்தபுரத்துக்கு விஜயம் செய்தார். அவருக்குப் புலிவேட்டையில் ரொம்பப் பிரியம். அதைக்காட்டிலும், தாம்கொன்ற புலிக்குப் பக்கத்தில் நின்று புகைப்படம் எடுத்துக் கொள்வதில் அதிகப் பிரியம். வழக்கம்போல் அவர் பிரதிபந்தபுரம் சமஸ்தானத்திலும், புலி வேட்டையாட விரும்பினார். ஆனால் மகாராஜா கண்டிப்பாக மறுத்துவிட்டார். ''வேறு என்ன வேட்டைக்கு வேணுமானாலும் ஏற்பாடு செய்கிறேன். பன்றி வேட்டையா? ஆடுங்கள், எலி வேட்டையா? நடத்துங்கள். கொசு வேட்டையா? இதோ தயார். ஆனால், புலி வேட்டை மட்டும் இங்கே முடியாது'' என்றார் மகாராஜா.

''துரைதான் புலியைக் கொன்று ஆக வேண்டுமென்று அவசியமில்லை. மகாராஜாவே கொல்லலாம். செத்த புலிக்குப் பக்கத்தில் கையில் துப்பாக்கியுடன் நின்று போட்டோ எடுத்துக் கொள்வதுதான் துரைக்கு முக்கியம்'' என்று மேற்படி பிரிட்டிஷ் உத்தியோகஸ்தரின் காரியதரிசி, சமஸ்தான திவான் மூலமாகச் சொல்லி அனுப்பினார். இதற்கும் மகாராஜா சம்மதிக்கவில்லை. இப்போது கொஞ்சம் இடங்கொடுத்து விட்டால், அப்புறம் இன்னும் சில பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களும் புலி வேட்டைக்கு வந்து சேரலாமல்லவா?

இப்படி ஒரு பெரிய ஆங்கில உத்தியோகஸ்தரின் விருப்பத்துக்குக் குறுக்கே நின்றதன் பயனாக, மகாராஜாவின் கையை விட்டு ராஜ்யமே போய் விடுமோ என்று பயம் உண்டாயிற்று.

இதைக் குறித்து மகாராஜாவும் திவானும் கலந்தாலோசித்தார்கள். உடனே, கல்கத்தாவிலுள்ள ஒரு பெரிய இங்கிலீஷ் நகைக் கம்பெனிக்குத் தந்தி போயிற்று : - ''வைர மோதிரங்கள் சில உயர்ந்த மாதிரிகள் அனுப்பி வைக்கவும்'' என்று.


அப்படியே வைர மோதிரங்கள் சுமார் ஐம்பது தினுசுகள் வந்தன. அவற்றை அப்படியே மகாராஜா மேற்படி பிரிட்டிஷ் உத்தியோகஸ்தரின் தர்ம பத்தினிக்கு அனுப்பிவைத்தார். துரைசானி அம்மாள் ஏதாவது ஒன்றிரண்டு பொறுக்கிக் கொண்டு, பாக்கியைத் திருப்பி அனுப்பிவிடுவாரென்று மகாராஜாவும் திவானும் எதிர்பார்த்தார்கள்.

ஆனால், சற்று நேரத்துக்கெல்லாம் துரைசானியிடமிருந்து பதில் வந்துவிட்டது : - ''நீங்கள் அனுப்பிய பரிசு மோதிரங்களுக்காக மிகவும் வந்தனம்.''

இரண்டு நாளைக்கெல்லாம் நகைக் கம்பெனியாரிடமிருந்து மூன்று லட்சம் ரூபாய்க்கு 'பில்' வந்தது. மூன்று லட்சம் ரூபாய் போனாலும் சிம்மாசனத்துக்கு ஆபத்தில்லாமல் தப்பியது பற்றி மகாராஜாவுக்கு ஸந்தோஷந்தான்.

மகாராஜாவின் புலிவேட்டை விரதம் நன்கு நிறைவேறி வந்தது. பத்து வருஷ காலத்தில் எழுபது புலிகள் வரையில் வேட்டையாடிக் கொன்று விட்டார். அதற்குப் பிறகு ஒரு பெரிய இடையூறு எதிர்ப்பட்டது. பிரதிபந்தபுரம் காடுகளில் புலிகளே அற்றுப் போய்விட்டன போல் தோன்றியது. புலிகள் ஒரு வேளை கருத்தடை முறைகளைக் கையாண்டனவோ, அல்லது 'ஹரிகரி' செய்து கொண்டனவோ, அல்லது வெள்ளைக்காரர்களின் கையினால்தான் சாக வேண்டுமென்று ஆசைப் பட்டுக் கொண்டு நாட்டை விட்டு ஓடிப் போயினவோ, தெரியவில்லை!

(அடுத்த இதழில் முடியும்)



அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி-1991

ஆர்வி., பொன்மணி வைரமுத்து, பட்டுக்கோட்டை பிரபாகர், கி. ராஜேந்திரன் (கல்கி ஆசிரியர்) ஆகிய நால்வரும் கடந்த 14.7.91 அன்று ஒன்றுகூடிப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுத்தார்கள்.

முதல் பரிசு ரூ. 2,000/-

''எல்லைகளில்லா உலகம்''
எழுதியவர்: எஸ். அருண்மொழி நங்கை (எம். குப்புசாமி),
தொலைபேசிப் பொறியாளர்,
தொலைபேசி நிலையம்,
பாலக்கோடு - 636 803.


◆ ஆர்வி.


◆ பட்டுக்கோட்டை பிரபாகர்


◆ பொன்மணி வைரமுத்து

இரண்டாம் பரிசு ரூ. 1,000/-

''அஸ்தமிக்கிற உதயங்கள்''
எழுதியவர் : உமாகல்யாணி,
34, பழவூர்,
நெல்லை மாவட்டம்.

மூன்றாம் பரிசு ரூ. 500/-

மூன்றாம் பரிசு ரூ. 500/- ஒரு கதைக்கு என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், மேலும் ஒரு கதை மூன்றாம் பரிசுக்கு உரியது என்று நடுவர்கள் தீர்மானித்ததால், மூன்றாம் பரிசாகத் தலா ரூ. 500/- வீதம் இரண்டு கதைகளுக்கு வழங்கப்படுகிறது.


◆ நடுவர் குழு பரிசீலிக்கிறது

''முதல் தேதி''
எழுதியவர் : ப. ஜீவானந்தம்
சிண்டிகேட் வங்கி,
ஒடையார்பாளையம்,
கொள்ளேகால் தாலுக்கா,
கர்நாடக மாநிலம்.

''பிரணவ மந்திரம்''
எழுதியவர் : எஸ். ரமா,
(அறிமுக எழுத்தாளர்)
16, கிருஷ்ணராஜபுர அக்ரஹாரம்,
மதுரை - 625 001.

இவை தவிர, பிரசுரத்திற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கதைகளின் விவரம் அடுத்த இதழில் இடம் பெறும்.

- ஆசிரியர்

படங்கள் : யோகா

"தட்டிக் கேளுங்கள்; திருந்தி விடுவார்கள்!"



'மக்கள் சக்தி இயக்கத்தின்' தலைவர் டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி, அண்மையில் கன்னியாகுமாரியிலிருந்து சென்னைக்குப் பாத யாத்திரை வந்தார். அப்படி வந்த போது, மதிய வேளைகளில் அவர் தங்கி ஓய்வெடுத்த கிராமங்களிலெல்லாம் அந்தந்த கிராம இளைஞர்களுடனும் மக்களுடனும் கலந்துரையாடினார். கடலூருக்கு அருகிலுள்ள ராமநாதன் குப்பம் என்ற கிராமத்தில் அவர் அப்படிக் கலந்துரையாடிய போது, பலரும் பலவிதமான கேள்விகள் கேட்டனர். அப்போது நாமும் உடனிருந்தோம்.....



◆ தம்மோடு பாதயாத்திரை வந்தவர்களோடும், உள்ளூர் வாசிகளோடும் கலந்துரையாடுகிறார் உதய மூர்த்தி.....

கேள்வி : சட்டத்தை மீறி வரம்புக்கு மேல் லட்சக்கணக்கில் செலவு செய்து வெற்றி பெறும் வேட்பாளர்கள் எப்படித் தூய்மையான பொது வாழ்க்கையை நடத்த முடியும்?

எம்.எஸ். உதயமூர்த்தி : முடியாது தான். லட்சக்கணக்கில், தேர்தலில் செலவு செய்கிற ஒரு வேட்பாளரைப் போய்க் கேட்டால், எல்லாம் அந்தந்தப் பகுதிகளில் உள்ள கட்சிக்காரர்கள் எனக்காகச் செலவு செய்கிறார்கள் என்றுதான் சொல்லுவார். பின்னர் போட்ட முதலைத் திரும்ப எடுக்கத்தான் பார்ப்பார். அமெரிக்காவில் இதெல்லாம் நடக்காது. அரசியல் கட்சிக்கு நிதியுதவி என்றால் ஒரு தனிநபர் இவ்வளவுதான் செய்ய வேண்டும்; ஒரு ஸ்தாபனம் இவ்வளவுதான் செய்ய வேண்டும் என்று வரையறுத்திருக்கிறார்கள்..

கேள்வி : அங்கு கறுப்புப் பணப் புழக்கம் கிடையாதா என்ன?

உதய : கிடையாது. வரிகள் அளவோடு இருப்பதால் கொடுத்துவிட்டு உபரி வருமானத்தைச் சேமிப்பு, முதலீடு என்று செய்கிறார்கள். அரசாங்கத்தை ஏமாற்ற அவசியமில்லாமலே போகிறது.

கேள்வி : போஃபோர்ஸ் பீரங்கி ஊழல் பற்றி இப்போது யாரும் இங்கு பேசுவதில்லையே!

உதய : அடுத்து வருகிற அரசுகள் முந்தைய அரசின் தவறுகளைப் பெரும்பாலும் மூடி மறைத்துவிடவே செய்கின்றன. காரணம், இவர்களும் அதேபோன்ற தவறுகளைச் செய்து கொண்டிருப்பதுதான்! இதற்கெல்லாம் விடிவுகாலம், அரசியல் வாதிகளை மக்கள் கேள்வி கேட்கிற அளவுக்கு விழிப்புணர்ச்சி பெற்றால்தான் ஏற்படும்.

கேள்வி : தமிழகத்திற்கு தண்ணீர் வழங்க வேண்டும் என்று நடுவர் மன்றம் வழங்கிய தீர்ப்பைக் கர்நாடக அரசு மதிக்கவில்லையே? இதற்கு என்ன செய்வது?

உதய : நடுவர் மன்றத் தீர்ப்பு என்பது சுப்ரீம் கோர்ட் தீர்ப்புக்குச் சமம். அதை

மதிக்காத கர்நாடக முதல்வர் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்கு ஆளாகிறார். இதை நமது எம்.பிக்கள் வற்புறுத்த வேண்டும். அப்படி வற்புறுத்தாத எம்.பி.க்கள் வீட்டு முன்னால் சென்று, மக்கள் தர்ணா செய்ய வேண்டும். தமிழக மக்களின் நலனுக்காகப் பாடுபட முடியாவிட்டால் பதவியை ராஜினாமாச் செய்யச் சொல்லி மக்கள்தான் போராட வேண்டும்.

கேள்வி: அப்படிப் போராட்டம் நடத்தினால், போலீஸை விட்டு உதைக்கிறார்களே?

உதய : சுதந்திரப் போராட்டத்தின் போது நமது முன்னோர்கள் போலீஸின் தடியடிகளுக்குப் பயந்தார்களா? அப்படிப் பயந்திருந்தால் நம் நாடு சுதந்திரம்தான் பெற்றிருக்க முடியுமா?

கேள்வி : காவிரிப் பிரச்னைக்கு உங்கள் மக்கள் சக்தி இயக்கம் என்ன செய்யப் போகிறது?

உதய : காவிரியில், நமக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான தண்ணீர் கிடைக்காவிட்டால் நரிமணத்தில் கிடைக்கும் பெட்ரோலியம் எண்ணெய், நெய்வேலி ஆகியவை மூலம் கிடைக்கும் பலன்களை பிற மாநிலங்கள் அனுபவிக்க அனுமதிக்க மாட்டோம் என்று மக்கள் சக்தி இயக்கம் மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளது.

கேள்வி : அரசாங்கம் நடத்தும் தொழிலகங்கள் இங்கே கோடிக் கணக்கில் நஷ்டம் அடைகின்றன. இது மக்களின் பணம் விரயமாவதாகத்தானே ஆகும்! அமெரிக்காவில் எப்படி?

உதய : அங்கே அரசுத் துறை நிறுவனங்கள் மிகக் குறைவு. அநேகமாக இல்லை என்றே கூறி விடலாம். அதனால் அரசுத் துறையில் மக்கள் பணம் நஷ்டமாகிறது என்பதும் இல்லை. தனியார் துறையிலும் மக்களை யாரும் ஏமாற்ற முடியாது. மின்சாரம் தயாரிக்கும் அமெரிக்கத் தனியார் கம்பெனியொன்று அணுமின்நிலையம் அமைப்பதற்காக நூறு மில்லியன் டாலர் செலவு செய்து பூர்வாங்க வேலைகளைத் துவங்கி விட்டது. ஆனால் அணுமின் நிலையம் ஆபத்தானது என்பதால் மக்கள் அதை எதிர்த்தார்கள். உடனே அந்தக் கம்பெனி, தான் செலவழித்த பணத்தை, மின் கட்டணத்தை உயர்த்துவதன் மூலம் பெற்று விடலாம் என்று செயல்பட்ட போது, 'மக்கள் நலனைக் கருத்தில் கொள்ளாமல் கம்பெனி போட்ட முட்டாள்தனமான திட்டச் செலவுகளுக்குக் கம்பெனியேதான் பொறுப்பேற்க வேண்டும்' என்று சொல்லி

மக்கள் போராட்டம் நடத்தி வெற்றி பெற்றார்கள்!

கேள்வி : அரசாங்க மருத்துவக் கல்லூரிகளில் சுமாராக மார்க் வாங்கியவர்கள் தாழ்த்தப்பட்ட ஜாதியாக இருந்தால் இட ஒதுக்கீட்டின் மூலம் இடம் கிடைத்து விடுகிறது. பணக்காரர்களாக இருந்தால் தனியார் மருத்துவக் கல்லூரிகளிலுள்ள மானேஜ்மெண்ட் கோட்டா மூலம் பணம் கொடுத்து இடம் வாங்கி விடுகிறார்கள். ஆக, திறமை பின்னுக்குப் போய் விடுகிறது. அதனால் திறமையற்ற டாக்டர்களும் அதிகரித்து விடுகிறார்கள்...

உதய : இதைத் தடுப்பதில் கஷ்டமொன்றும் இல்லை. அமெரிக்காவில் 'மெடிகல் போர்டு' ஒன்று உண்டு. எந்தக் கல்லூரியில் படித்து டாக்டர் பட்டம் வாங்கிய மாணவனையும் அது இறுதியில் அவன் தகுதியைச் சோதித்துப் பார்க்கும். அந்தச் சோதனையில் வெற்றி பெற்றால்தான் யாரும் அங்கே டாக்டர் தொழில் செய்ய முடியும். அது போல் இங்கும் ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு அறிஞர் குழுவை நியமிக்க வேண்டுமென்று நாம்தான் அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும். நடப்பது நடக்கட்டும் என்று மக்களாகிய நாம் வெறுமனே வேடிக்கை பார்த்துக் கொண்டு ஒதுங்கியிருக்கக் கூடாது.

கேள்வி : ஒரே வேட்பாளர் இரண்டு மூன்று இடத்தில் போட்டியிடுகிறார். வென்றால் ஓரிடத்தை வைத்துக் கொண்டு மற்ற இடங்களில் ராஜிநாமா செய்து விடுகிறார். இதனால் இடைத் தேர்தல் நடத்த வேண்டியிருக்கிறது. இந்தச் செலவுகளெல்லாம் வீண்தானே?

உதய : நமது தேர்தலில் முதலில் ஆட்களைத் தேர்வு செய்து வேட்பாளர்களாக நிறுத்துகிறோம். இதை விடுத்துக் கட்சிக்கு வாக்களிக்கும் முறையைக் கொண்டு வந்து விட்டால், ஒவ்வொரு கட்சியும் பெற்ற வாக்குகளின் சதவிகிதத்தைப் பொறுத்து அந்தந்தக் கட்சிகள் கடைசியில் தங்கள் பிரதிநிதிகளை நியமிக்கலாம். இப்படிச் செய்தால் இடைத் தேர்தல்களைத் தவிர்த்து விடலாம். அதோடு மக்களும் வேட்பாளர்களுக்கு வாக்களிக்கும் நிலை போய், வாரிசுகளுக்கு வாக்களிக்கும் நிலை மாறிக் கட்சிகளுக்கும் கட்சிகளின் கொள்கைகளுக்கும் வாக்களிக்கும் ஓர் ஆரோக்கியமான சூழ்நிலை உருவாகும்.

தொகுப்பு : **பிரின்ஸ்**

படங்கள் : **யோகா**

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி -'91 ரூ. 2,000 முதல் பரிசுக் கதை

எல்லைகளில்லா உலகம்

எஸ். அருண்மொழி நங்கை

சமுத்திரம் அவளது கால்களைத்தான் பார்த்தான். நிமிர்ந்து பெண்களைப் பார்க்கும் துணிவு அவனுக்கு ஏற்பட்டதில்லை. ஆனால் அவனைப் பார்க்கும் பெண்கள் எல்லோருமே அவனை திரும்பத் திரும்பப் பார்க்கிறார்கள் என அவன் அறிவான். அதிலும் அழகான பெண்கள் பார்த்தபடியே இருப்பார்கள். உள்ளுணர்வால் அந்தப் பார்வையின் வருடலை அனுபவிப்பான். கண்களைத் தூக்கவே மாட்டான். அவனுக்குத் தீராத வியப்பு இது. சாதாரண முகங்களைத்தான் மனிதர்களால் அலட்சியப்படுத்த முடிகிறது. அதீத அழகும் சரி, அதீத கோரமும் சரி, கவனத்தை விடாது பிடுங்கிக் கொள்பவை போலும்! பெண்களின் கண்களில் தன் முகம் ஏற்படுத்தும் துணுக்குறலையும், அருவருப்பையும், பரபரப்பையும் பார்க்க அவன் விரும்பவில்லை. அவமானங்கள் அவனை அடித்துக் குறுக்கி, ஓட்டுக்குள் சுருங்கும் நத்தை போல ஆக்கி விட்டிருந்தன. மௌனம்தான் ஓடு.

ரயில் கிளம்பியது. சமுத்திரம் ஆரஞ்சுப் பழத் தோல்கள் சிதறிக் கிடந்த தரையையே பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு அவன் பார்வை அவள் புடைவையின் கீழ் நுனியின் அலைபாய்தல்களைக் கவனித்தது. அவனுக்குப் பெண்கள் என்றால் கால்கள் தாம். பதினைந்து வருடங்களாகத் தினம் பெண்களின் கால்களை மட்டுமே பார்த்து வருகிறான். கால்களை முகங்கள் போல எங்கு கண்டாலும் அடையாளம் காணவும் அவனால் முடியும்.

அந்தப் பெண்ணின் பாதங்கள் மிக வெண்மையாக இருந்தன. இல்லை, ஏதோ உறை போட்டிருக்கிறாளா? ஆனால் விரல்களும் நகங்களும் தெரிகின்றன! ஒருவேளை வெள்ளைக்காரப் பெண்ணா...? நிமிர்ந்து முகத்தைப் பார்ப்பதா, வேண்டாமா?

நீண்ட நேர யோசனைக்குப் பிறகு சமுத்திரம் கண்களைச் சற்றே தூக்கி, ஜாடையாகப் பார்த்தான். அவன் மனம் அதிர்வடைந்தது.

அந்தப் பெண்ணின் முகம், மாநிறத் தோலில் வெள்ளைத்திட்டுகள் கலந்து மிக விகாரமாக இருந்தது.

ஒரு வினாடி சமுத்திரம் குழம்பினான். பிறகு அவன் மனம் மெல்லத் தெளிந்தது. அவளை உற்றுப் பார்த்தான். உடம்பெங்கும் வெண்குஷ்டத் தழும்புகள் பரவியிருந்தன அவளுக்கு. மெலிந்த கச்சிதமான உடம்பு. இருபத்தைந்து வயதுக்குள் இருப்பாள். சமுத்திரம் அவளை நிதானமாகப் பார்த்தவாறிருந்தான்.

திடீரென்று அவனுக்கு வியப்பு ஏற்பட்டது. தனக்குள் புன்னகை செய்து கொண்டான். அவன் நினைவு தெரிந்த நாளுக்குப் பிறகு அத்தனை விஸ்தாரமாக எந்தப் பெண்ணையும் பார்த்ததில்லை. அவன் மனம் ததும்பியது.

மனம் புன்னகையாக முகத்தில் தெரிந்திருக்க வேண்டும். அவள் அவனைப் பார்த்தாள். மறுகணம் அவள் கண்களில் அதிர்ச்சி தெரிந்தது. அவளுடைய முகச் சதைகள் இறுகின. பதறிய கண்களைப் பிடுங்கிக் கொண்டாள்.

சமுத்திரம் தன் மனசுக்குள் சுரீரென்று தீயின் தொடுகையை உணர்ந்தான். அவன் பார்வை தழைந்தது. அவள் கண்களில் தெரிந்த அதிர்ச்சியும், வெறுப்பும் அவன் எத்தனையோ முறை கண்டவைதாம். அவன் மனம் பொங்கியது. 'வேண்டும் உனக்கு'என்று தன்னையே சபித்துக் கொண்டான். எந்தத் துணிச்சலில் அவளை அப்படிப் பார்த்தாய்? அவளுடையது நோய். குணமாக வாய்ப்பு உண்டு. நீ பிறவிக் கோரம்...

தன்னிரக்கம் அவனை நிறைத்தது. பிறகு அவன் தலைநிமிரவேயில்லை. அவளுடைய பார்வை தன் மீது பட்டுப் பட்டு விலகுவதை உணர்ந்தபடி இருந்தான்.

''சேலத்தில் இந்த ரயில் நிக்குமா?''

அவன் யாரிடமோ விசாரிப்பது கேட்டது.

''உங்களைத்தான்...'' என்றாள் அவள்.

சட்டென்று சமுத்திரத்தின் உடல் நடுங்

கியது. என்னிடமா? சந்தேகத்துடன் அவளை ஏறிட்டுப் பார்த்தான். அவள் புன்னகை செய்தாள். அவளுடைய உதடுகளும் பற்களும் மிக வசீகரமாக இருந்தன. ஒரு கணத்தில் அவளை அழகியாக ஆக்கிவிட்டிருந்தது அப் புன்னகை.

''என்ன கேட்டீங்க?'' தன் குரல்தானா என்று சந்தேகம் ஏற்பட்டது சமுத்திரத்திற்கு.

''இந்த ரயில் சேலத்தில நிக்குமா?''

சமுத்திரம் ''ரயிலா?'' என்றான். அடக் கடவுளே இதென்ன என்று உடனே மனம் கூவியது. அவசரமாய் ''சேலத்துல எல்லா ரயிலும் நிக்கும்'' என்றான்.

''நீங்க எங்கே போகணும்?'' அவள் கேட்டாள்.

''சமுத்திரம்'' என்றான்.

அவள் குழம்பி, ''என்னது?'' என்றாள்.


சமுத்திரம் தான் கூறியது என்ன என்று அறியவில்லை. ஒரு பெண்ணிடம் பேசியபடி இருக்கிறோம் என்பதே அவனால் நம்ப முடியாதபடி இருந்தது. ''ஆபீஸ் வேலையாப் போறேன். மூணு நாள் டிரெய்னிங்'' என்றான்.

அவள் புன்னகை மாறாமல், ''சமுத்திரம்கிறது உங்க பெயரா?'' என்றாள்.

சமுத்திரம், ''மெட்ராஸ்'' என்றான். ''டெலிபோன்ஸ்ல வேலை பார்க்கிறேன்.''

அவள் அதற்கு மேல் தாங்க முடியாதவளாய் வாய் விட்டுச் சிரிக்க ஆரம்பித்தாள். சமுத்திரம் தன் உடல் வியர்வையில் ஊறியிருப்பதை அறிந்தான். திக்பிரமை பிடித்தவன் போல அவளுடைய சிரிப்பையே பார்த்தான்.

அவள் ''என் பெயர் கனகம்'' என்றாள். ''நானும் மெட்ராஸ்தான் போறேன்.''



சமுத்திரத்தின் உடல் அடங்கிக் கொண்டிருந்தது. வியர்வை உலரவே, உடல் குளிர்ந்தது.

''சேலத்தில எறங்கணுமா?'' என்றான் சமுத்திரம்.

''இல்லியே மெட்ராஸ்தான் போகணும்?''

''அப்ப சேலத்தில எறங்கணும்னீங்க?''

அவள் குழம்பி, பிறகு சுதாரித்துக் கொண்டு, ''சேலத்தில நிக்குமான்னுதான் கேட்டேன்'' என்றாள்.

''எதுக்கு?'' என்றான் சமுத்திரம்.

''பசிக்குது. பழம் ஏதாவது வாங்கலாமே...''

நான் வாங்கித் தரேன் என்று மனசுக்குள் சொன்னான் சமுத்திரம். இல்லை அதை வாய் விட்டே சொல்லி விட்டோமா என்று அவனுக்குச் சந்தேகம் ஏற்பட்டது.

''டெலிபோன்ஸ்லதான் வேலையா?'' என்றாள் அவள்.

''ஆமாம்'' என்றான் சமுத்திரம். ''ஆபரேட்டர்.''

''ஹலோ ஹலோ?''

சமுத்திரம் உரக்கச் சிரித்தான். அவன் மனம் பொங்கிப் பொங்கி வந்தது: சட்டென்று தன் சிரிப்பு அவன் காதிலேயே விழுந்தது. குழம்பிப் போய் நிறுத்திக் கொண்டான். அவன் அதற்கு முன் அப்படிச் சிரித்ததே இல்லை. சிரிக்கும்படி என்ன நிகழ்ந்தது என்றும் புரியவில்லை.

''மெட்ராஸ்ல யார் இருக்கா?'' என்றான் சமுத்திரம்.

''அக்கா. அவளுக்கும் ஹஸ்பெண்டுக்கும் வேலை இருக்கு. நான்தான் குழந்தைகளைப் பார்த்துக்கறது.''

''இப்ப எங்க போயிட்டு வர்றீங்க?''

''கோயமுத்தூர்ல எங்கம்மா இருக்கா. அண்ணா கூட. அடிக்கடி போய்ப் பார்த்துட்டு வருவேன்.''

''தனியாகவா?''

அவள் சிரித்தாள். ''எனக்கென்ன பயம்? ரவுடிகள்லாம் என்னைப் பார்த்தாலே முகத்தைத் திருப்பிக்கறான்.''

சமுத்திரத்திற்குச் சட்டென்று அவள் மீது இரக்கம் ஏற்பட்டது. என்ன இருந்தாலும் அவள் சோகம் பெரியதுதான். அவள் பெண்ணல்லவா!

''எப்ப இது ஆரம்பிச்சது?'' என்றான்.

''என்னது, இந்த நோயா?''

''ஆமா.''

''பத்தாவது படிக்கிறப்ப. அதோட படிப்பும் போச்சு. மருந்து மந்திரம்னு அலைஞ்சதுக்குப் படிப்பையாவது முடிச்சிருக்கலாம். எங்கயாவது வேலைக்குப் போனால் வயிற்றுக்கு யாரையும் நம்பியிருக்கிற கதி வந்திருக்காது.''

சமுத்திரம் தயங்கி, ''உங்கக்கா?'' என்றான்.

அவள் ஜன்னல் வழியாகப் பார்த்தபடி, ''கொஞ்ச நாள் பழகியாச்சுன்னா அன்பு, இரக்கம் எல்லாமே போயிடறது'' என்றாள்.

நீண்ட மௌனம் நிலவியது.

அவள் சட்டென்று சிரித்தபடி, ''எங்கக்கா என்னை எப்படிக் கூப்பிடுவா தெரியுமா?'' என்றவள், குரலை மாற்றி, ''ஏய் செம்பட்டை'' என்றாள்.

அவன் முகம் கருமையடைந்தது. அவள் சிரிப்பிற்குப் பின்னால் அந்த மனம் கொதிப்பது அவனுக்குத் தெரிந்தது. ஆனாலும் அவன் சிரித்தபடி, ''எங்க ஆபீஸ்ல எம் பேரு என்ன தெரியுமா? சிம்பன்ஸி.''

அவள் சிரித்தாள். ''பொருத்தமான பேரு.''

அவனும் சிரித்தான். அவள் முகத்தைப் பார்த்தபடி அப்படிச் சிரிப்பது அவனுள் உற்சாகம் குமிழியிடச் செய்தது.

''ஆபீஸ்ல ரொம்பக் கிண்டல் பண்ணுவாங்களா?'' என்றாள் அவள்.

''கிண்டலா? நான்தான் எங்க ஆபீஸ் சர்க்கஸ்ல பபூன். ஆனா அடிக்க மாட்டாங்க. ஜீவகாருண்யம் உள்ள ஆசாமிகள் எல்லாரும்.''

''இந்த ஜீவகாருண்யம்தான் பெரிய பிரச்னை'' என்றாள் அவள். ''அது இல்லாட்டி நாமெல்லாம் இப்படி வளர்ந்திருக்க மாட்டோம். அப்பப்ப தீர்த்துக் கட்டியிருப்பாங்க.''

''உண்மைதான்'' என்றான் அவன்.

''நான் சில சமயம் யோசிக்கிற துண்டு... இந்த பூமியே அழகா இருக்கிறவங்களுக்குச் சொந்தம் அப்படீன்னு. நம்மைப் பார்க்கிற ஒவ்வொருத்தனும் இந்தச் சனியன் ஏன் உயிர் வாழணும்னுதான் நெனைக்கிறான். சட்டமும் தர்மமும் அனுமதிச்சா தீத்துக்கட்ட யாருமே தயங்க மாட்டாங்க...'' அவள் பெருமூச்சு விட்டாள்.


அவன் சற்று வியப்புடன், ''இதே மாதிரி நானும் ரொம்பத் தடவை நினைச்சிருக்கேன்... எல்லாமே ஒரு பெரிய விளையாட்டு மாதிரி இருக்கு; பெரிய காலரியில நான் மட்டும் தன்னந்தனியா உட்கார்ந்து விளையாட்டை வேடிக்கை பார்க்கிறேன்; என்னை யாரும் சேர்த்துக்க மாட்டாங்க; அவங்களுக்கு நாம பார்க்கிறது கூடத் தெரியலைன்னு...''

''இப்ப காலரியில இன்னொருத்தர் கூட... இல்லையா?'' என்றாள் அவள்.

அவன் மனசில் ஒரு குளிர்ந்த அதிர்ச்சி ஓடியது. அவள் கண்களைச் சந்தித்தான். அவளும் அவ் வார்த்தைகளைச் சொன்ன பின் தடுமாறிப் போய் விட்டிருந்தாள்.

மறுபடியும் பேச்சைத் தொடர அவனால் முடியவில்லை. அவள் சற்று தீவிர மான குரலில், ''முடம், குருபி இது மாதிரி ஜென்மங்களையெல்லாம் அப்பப்ப கொன்னுடணும் - என்ன சொல்றீங்க?'' என்றாள்.

அவன் அவளை உற்றுப் பார்த்தான்.


பூரண நம்பிக்கையுடன் பருகி ஆனந்தியுங்கள்.
லிம்கா ப்ளஸ்
சிறந்த சுவை
லிம்காவில் ஜமெய்காவின் எலுமிச்சை
சுவை மற்றும் ஸிஸிலியின் எலுமிச்சை
சுவை கலந்துள்ளது. இந்த புதிய
ஃபார்முலா அதன் சுவையை
மேம்படுத்துகிறது.
பாதுகாப்பான பானம்
முழுமையாக கிருமி நீக்கம்
செய்யப்பட்ட பானமாகத் தொடர்ந்து
திகழ்கிறது லிம்கா. மிகச் சிறந்த
தரமுள்ள அனுமதிக்கப்பட்ட
ஆக்கப்பொருள்கள் உபயோகப்படுத்தப்
படுகின்றன.
Limca
தாகம் தணிப்பதில்
சிறந்தது
லிம்காவில் அடங்கியுள்ள
ஐஸோடானிக் உப்பு உங்கள் தாகத்தை
தணிக்கிறது. பாதுகாப்பாக.
CONTAINS ADDED FLAVOUR. CONTAINS NO FRUIT JUICE/PULP. NO BVO USED.
RADEUS/PE/L/258/2-91-T



"அய்யா... சாமி... பிச்சை போடுங்கய்யா!"

"யோவ் இது தியேட்டர்ய்யா. வேற இடம் பாருய்யா...!"

"பரவாயில்லை... ஒரு 'பால்கனி' டிக்கெட்டாவது கொடுங்கய்யா!"

- கவிட் ரவி.

"உண்மையாத்தான் சொல்றேன்... ஏதோ பெரிய கருணையைச் செய்யறாப்ல அவங்களை வாழ விடுறதுங்கறது பெரிய கொடுமை. அணுஅணுவாச் செத்துட்டிருக்கிறதை விட ஆரம்பத்திலேயே கதை முடியறது ரொம்ப நல்ல விஷயம்."

அவள் முகத்தில் ரத்தம் குழம்பி நின்றது. அவன் அவளையே பார்த்தான். பிறகு, "உண்மைதான்" என்றான். அவன் மனசுக்குள் புகை சூழ்ந்தது. பிறகு இருவரும் பேசவேயில்லை.

சேலம் வந்தது. அவன் இறங்கிப் போய்ப் பழங்கள் வாங்கி வந்தான். "சாப்பிடுங்க" என்றான்.

"அய்யோ வேணாம்" என்றாள்.

"சாப்பிடுங்க. கேட்டீங்களே அப்பவே..."

"நீங்களும் சாப்பிடுங்க" என்றாள்.

ஒரு பழத்தைத் தின்று விட்டு அவள் சொன்னாள், "போதும்."

"ஏன், பசிக்குதுன்னீங்க?"

"சும்மா சொன்னேன்."

"சும்மாவா?"

"ஆமாம். உங்ககிட்டே பேசணும்னுதான் சேலம் பத்திக் கேட்டேன்."

சமுத்திரம் தன்னையறியாமலே புன்னகை செய்தான். அவளும் சிரித்தாள். "என்னவோ, நான் முகத்தைத் திருப்பிக்கிட்டது உங்களை ரொம்பப் புண்படுத்திச்சின்னு தோணிச்சு. உண்மைதானே?"

"அப்படியெல்லாம் இல்லை."

"பொய்."

"எனக்குப் பழக்கம்தான்."

அவள் முகம் கூம்பியது. "எனக் கும்..." என்றாள்.

"நான் இப்படிப் பேசற முதல் ஆண் நீங்கதான்."

சமுத்திரத்தின் மனம் அசைந்தது. அவன் தொண்டை வறண்டது. நாவால் உதடுகளைத் தடவிக் கொண்டான். பிறகு, "நானும் இப்பத்தான்" என்றான்.

அவள் சட்டென்று வெளியே பார்க்க ஆரம்பித்தாள். பனைமரங்கள் நிறைந்த வெளி ஓடிக் கொண்டிருந்தது.

"மெட்ராஸ்ல எங்கே?" என்றான் சமுத்திரம்.

அவள் திடுக்கிட்டு, அவனைப் பார்த்து ஒருகணம் விழித்தாள். பிறகு, "சேத்துப்பட்டு," என்றாள்.

"எங்கள் டிரெயினிங் பெரம்பூர்ல."

"மூணு நாள்தானே?"

"ஆமா."

"அப்புறம் கிளம்பிடுவீங்க?"

"ஆமா."

இதென்ன உரையாடல் என்றான் சமுத்திரம் தனக்குள். இப்போது பேசுவது எதையும் சொல்வதற்கு அல்ல. எதையோ மறைப்பதற்காக. பாஷைக்கு இரண்டு முகங்கள்.

மீண்டும் மௌனம். அவள் ஜன்னலுக்கு வெளியே பார்த்தபடி பெருமூச்சு விட்டாள்.

இரவு கவிந்தது. பெட்டிக்குள் விளக்குகள் எரிந்தன. சோர்வான, மயக்கம் தரும், மஞ்சள் ஒளி.

"ஜோலார்ப்பேட்டைலதான் சாப்பாடு வரும்," என்றான் சமுத்திரம்.

அவள், "அப்படியா?" என்றாள்.

"நான்வெஜிடேரியன் நல்லாவேயிருக்காது."

"உம்."

"அலுமினியப் பாக்கெட்ல குடுக்கிறான் பாருங்க; அநியாயம்."

அவள், "என்னைப் பார்த்தப்ப என்ன நினைச்சீங்க?" என்றாள் திடீரென்று.

சமுத்திரம் திடுக்கிட்டான், "என்னது?"

"என்னை முதன் முதலாப் பார்த்தப்ப என்ன நினைச்சீங்க?"

சமுத்திரம் "அது இனிமே முக்கியமில்லை. இப்ப என்ன நினைக்கிறேன்னுதான் முக்கியமாப் பாக்கணும்" என்றான்.

இப்படிக் கச்சிதமாகப் பேசவும் தன்னால் முடியும் என்பதை அவன் அப்போதுதான் உணர்ந்தான்.

அவள் புன்னகையுடன், "என்ன நினைக்கறீங்க?"

"அஜந்தா போயிருக்கீங்களா?"

"இல்லை."

அவன் உணர்ச்சி மிகுந்த குரலில், "அஜந்தாவில ஒரு தேவகன்னிகையோட ஓவியம் இருக்கு. அது மாதிரி இருக்கீங்க."

"கிண்டலா?" என்றாள். ஆனால் முகம் பூரித்து விட்டது.

"உண்மையா. அந்த ஓவியம் ரொம்பச் சிதிலமா உதிர்ந்து போய் இருக்கு. முதல் பார்வையில நாம ஓவியத்தை ரசிக்கவே முடியாது. அப்புறம் உதிர்ந்ததையெல்லாம் மனசிலேருந்து விலக்கி, மெல்ல ஓவியத்தை மட்டுமே பார்க்க ஆரம்பிச்சா அற்புதமான அழகு தெரிய ஆரம்பிக்கும்."

அவள் "அய்யோ..." என்றபடி தலை



''உங்க மாதிரியேதான் உங்க மகனும்... சபாநாயகர் வெளியே போகச் சொல்லிட்டார்னு நீங்க தினம் பன்னண்டு மணிக்கெல்லாம் வந்துட நீங்க. இவனும் டீச்சர் கிளாசை விட்டுத் துரத்திட்டார்னு வந்து நிக்கறான்...!''

யை மடி மீது வைத்து வெட்கினாள்.

அவனுள் உல்லாசம் நிரம்பியது. கை விரல்கள் வெடவெடக்குமளவு பரபரப்பு அலைமோதியது.

அவள் நிமிர்ந்த போது முகத்தைக் கடு கடுவென்று வைத்துக் கொண்டாள். ஆயி னும் கண்களில் ஒளியாகத் தெறித்தது.

முழு நிலா விரிந்த வயல் வெளிகள் ஜன்னல் வழியாக ஓடின.

''நல்ல நிலா இல்லை?'' என்றான்.

''எனக்கு நிலா பிடிக்காது.''

''ஏன்?''

''ஏனோ... இருட்டா இருந்தாத்தான் பிடிக்கும். கூடுமானவரை ராத்திரில லைட்டே போட மாட்டேன்.''

''எனக்கு நிலா ரொம்பப் பிடிக்கும். நிலா நாளை நிறைய வரைஞ்சிருக்கிறேன்'' என்றான்.

''வரைவீங்களா?''

''நிறைய வரைஞ்சிருக்கேன்.''

''என்ன வரைவீங்க?''

''ஆயில் பெயிண்டிங்; வாஷ் டிராயிங்...''

''என்னென்னமோ சொல்றீங்க... எதை வரைவீங்க? மனுஷங்களையா?''

''மனுஷங்களையும் வரைவேன். அதி கமா மிருகங்கள்தான்.''

''ஏன்?''

''ஏன்னா மிருகங்கள்லதான் அழகில் லாத மிருகமே இல்லை. எல்லா மிருகமும் இயற்கையா இருக்கிறப்ப அழகுதான்.''

''பன்றி?''

''பன்றி ஓடறப்பப் பாத்திருக்கீங்களா? அதன் வால் சுழற்றலும், தொந்தி அசைய றதும்! எவ்வளவு குழந்தைத்தனம் அதன் உடம்பிலே! ரொம்ப நவீனமான மிருகம் அது. நீங்கள் அதைச் சாக்கடையோட சேர்த் துப் பார்த்தா அது உங்க தப்பு. அதுக்குச் சாக்கடை என்ன சந்தனம் என்ன?''

''என்னமோ.... ரொம்ப வித்தியாச மாப் பேசறீங்க...''

''நான் இப்படியெல்லாம் யார்ட்டயும் பேசறதே இல்லை தெரியுமா?''

அவன் ஓவியங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தான். பேசப் பேசப் பேசுவதற்குத் தனக்குள் இவ்வளவு விஷயங்கள் இருப் பதை அவன் உணர்ந்தான். அவள் கண்கள் மின்ன, அவனையே கவனித்திருந்தாள். பேச்சின் நடுவே மெல்ல மௌனம். ஓரளவு தூக்கம். பின் விழித்துப் பரஸ்பரம் பார்த்துக் கொள்ளல். பிறகு மேலும் பேச்சு. அவள் அவளுடைய வீட்டைப் பற்றிச் சொன் னாள். பாட்டுக் கற்றுக் கொண்டதைப் பற்றிச் சொன்னாள்.

விடியும் போது, ''பெரம்பூர் வரப் போறது!'' என்றாள் அவள்.

சட்டென்று அவன் ஒரு அடி தன் மீது விழுந்ததைப் போல உணர்ந்தான். மறு கணம் மனம் சூனியத்தில் தெறித்தது.

'அவ்வளவுதான்' என்றது ஒரு குரல் அவனுள். 'அவ்வளவுதானா?' என வீறிட் டது இன்னொரு குரல். 'அவ்வளவேதான்' என அடக்கியது ஓர் உறுமல்.

அவன் மார்பு அடைத்தது. கண்களின் ஈரம் காற்றில் குளிர்ந்தது.

திடீரென்று ஓர் எண்ணம் அவனுள் எழுந்தது. அவளிடம் கேட்க ஒரு கேள்வி அவனுள் முளைத்தது.

மறுகணம் அவன் மனம் கூசியது. அவ னுடைய புலன்கள் சிறுத்துக் கூம்பின. ஒரு நொடியில் பழைய சமுத்திரமாக அவன் ஆனான். ஓர் இரவு அவனுக்கு அளித்த அத் தனை நெகிழ்வுகளும் தன்னம்பிக்கையும் அவனை விட்டு விலகின.

அவளிடம் எப்படி அவன் கேட்க முடி யும்? அவளிடமல்ல, உலகின் மோசமான குரூபியிடம் கூட தன்னால் தன்னை விரும் பும்படி கோர முடியாது என்று அவனுக்குப் பட்டது. ஒருவேளை அவள் அன்பு ஏற்கப் படலாம். ஆனால் மறுக்கப்படுமெனில் பிறகு அவனால் உயிர் வாழ முடியாது.

கனகம் என்ன செய்வாள்? ஏற்பாள் என்று தோன்றியது. மனம் நம்பிக்கையில் துடித்து எழுந்தது. பரவசத்துடன், உள நடுக் கத்துடன், சொல்ல வேண்டிய சொற்றொ டரைக் கோத்துக் கோத்து உருவாக்கினான். அடிவயிற்றிலிருந்து அதை உதடுகளுக்குக் கொண்டு வந்தான். மறுகணம் அவன் நம் பிக்கை சிதைந்தது. கூச்சத்தில் உடம்பு விறைத்துக் கொண்டது. அப்படியே கூனிக் குறுகிப் போனான். மீண்டும் நம்பிக்கை முளைத்தெழுந்தது. உதிர்ந்தது. அலைக்க ழிப்பின் கணங்கள் யுகங்களாக நீண்டு... நீண்டு... நீண்டு. ரயிலின் தடக் தடக் மண்டை மீது அறைந்தது.

ரயில் பெரம்பூர் வந்த போது அவ னுக்குள் சட்டென்று ஒருவிதமான நிம்மதி தான் ஏற்பட்டது. அந்த அலைக்கழிப்பின் இம்சையிலிருந்து தப்பினால் போதும் என்று மனம் தவித்தது.

ரயில் கூவியபடி நின்றது. அவன் பெட் டியை எடுத்துக் கொண்டான். அவள் கண்க ளைச் சந்திக்கத் தயங்கித் திணறினான். அவ

புகழேணியின் உச்சியை எட்டுவதற்கு ஸ்ரீதேவி கூறும் யோசனை.

"கொள்கையை விட்டுக் கொடுக்காதீர்கள்"



"உங்கள் கலைத்தொழிலின் துவக்கத்தில், ஒவ்வொரு-வரும் அவரவர் வழியிலே, நீங்கள் செயல்படவேண்டும் என்று விரும்பும் போதுதான், இது, குறிப்பாக முக்கியமானது."

"நக்ஷா" பிலிமில் நடிப்பதற்கு முன்பே, நான் பலருக்கும் மறுப்பு தெரிவித்து வந்திருக்கிறேன்-" சிரிக்கிறார் ஸ்ரீதேவி. "சர்வ சாதாரணமான பாத்திரங்களுக்கெல்லாம் முடியாது என்றேன்; அசட்டுத்தனமான கோரிக்கைகளுக்கும் முடியாதுதான்." இன்று புகழேணியின் உச்சியிலே, உறுதியாக ஊன்றிவிட்ட ஸ்ரீதேவி, தமது வழியிலே அனைத்தையும் சாதித்துவிட்டதில் மிகுந்த பெருமிதம் அடைகிறார்.

"சிலநேரங்களில், ஒரு டைரக்டர், ஒரு ஷாட்டில் திருப்தியடைந்து விடுகிறார்; ஆனால் என் உள்ளத்தினுள், எனக்குத் திருப்தியில்லை. எனவே, நான் அதனை மீண்டும் செய்கிறேன்; மறுபடியும் செய்கிறேன். எனது ரசிகப் பெருமக்களை திருப்திப்படுத்தும்வரை." சரிதான் ஸ்ரீதேவி. உங்கள் கருத்தை நாங்கள் ஏற்கிறோம்.

"சிலர், பலசமயங்களில், குறுக்குவழியில் பாய்கிறார்கள்"—புலம்புகிறார் ஸ்ரீதேவி. நிச்சயமாக, ஸ்ரீதேவியும் கூட, குறுக்குவழியில் செல்கிறார். "நான், ஒரு அவசரத்தின்போது, தினசரிதயாரிப்பு உணவு அல்லது ஆயத்த உடைகள் போன்றவற்றை பயன்படுத்தும்போது மட்டும்தான். ஆனால் எனக்கு எதுவும், மெய்யாகவே முக்கியமானதாக இருக்கும்போது, நான் ஒரு போதுமே, குறுக்குவழியை நாடுவதில்லை. ஒருபோதுமில்லை."

"எனது கூந்தலுக்கு, டாபர் ஆம்லா ஹேர் ஆயிலின் பரம்பரைப் பராமரிப்புக்கு மாற்றே கிடையாது"

"எனது கூந்தல்தான், என் பெரும் பொக்கிஷம் என்று நான் நினைக்கிறேன்-" தமது அலை அலையான கருங்கூந்தலை நெருடியவாறே முறுவலிக்கிறார் ஸ்ரீதேவி. டாபர் ஆம்லா ஹேர் ஆயிலை பயன்படுத்தி, நான் அதனைப் பராமரிக்கிறேன். ஒவ்வொரு நாளுமே. கூந்தல் நாகரீகத்துக்கான அல்லது நேர்த்தியான எண்ணெய், எனக்குத் தேவையில்லை—எனக்கு வேண்டியது மெய்யான ஒரு எண்ணெய்தான். டாபர் ஆம்லா ஹேர் ஆயிலின், வளமிக்க ஊட்டச் சத்து, என் கூந்தல் நன்கு வளரவும், மென்மையாகவும் ஆரோக்கியமாகவும் மின்னவும், துணைபுரிகிறது. அதனால்தான், என் கூந்தலுக்கு, நான் வேறு ஒரு எண்ணெய்யையும் நம்புவதில்லை.


"டாபர் ஆம்லா ஹேர் ஆயில் அதுதான் எனது கொள்கை-விட்டுக்கொடுக்காத கூந்தல் பராமரிப்பு திட்டம்.



டாபர்
ஆம்லா
ஹேர் ஆயில்

DIL/114 tam

கூந்தலைப் பராமரிக்கும் உண்மையான எண்ணெய்


THE COLTS MAN
கம்பீரம்!
Colts
VESTS & BRIEFS
A Quality product from :
VIJAYAKUMAR MILLS LTD
Kalayamputhur Post, Palani, Tamil Nadu - 624 615.

ளுடைய பார்வை தன் மீது ஊன்றியிருப்பதை உணர்ந்தான்.

விடைபெறும் முகமாக அவளைப் பார்த்தான். அவள் மிக இயல்பாக இருந்தாள்! சிரித்தபடி, ''அப்போ, பார்ப்போம்,'' என்றாள்.

அவனுடைய தவிப்பு அடங்கியது. ஏமாற்றமும் வெறுமையும் ஏற்பட்டது. அவன் வெற்றுப் புன்னகையுடன், ''ரொம்பப் பேசிட்டோம் இல்லை?'' என்றான்.

அவளும் சிரித்தபடி, ''ஆமா. ரொம்ப நல்லாப் போது போனது ராத்திரி...'' என்றாள்.

அவன் இறங்கிக் கொண்டான். மனம் எரிந்தது. எத்தனை அலட்சியமாக விடை தருகிறாள்! நல்லவேளை, சொல்லாமலிருந்தோம்! ஆனால்... கடவுளே அவ்வளவு தானா... அவ்வளவுதானா... மார்பை அடைத்தது. கண்ணீர் வந்து முட்டியது. நடக்க முடியவில்லை.

ரயில் கூவியது. அவன் உயிரைப் பிளந்தபடி ஒலித்தது அது. அதன் முதல் தடக் அவன் மார்பின் மீது விழுந்தது. தடக் தடக்...

ரயில் நகர்வதைக் கண்டான். அவனுள் ஏதோ உடைந்தது. இல்லை, இப்படி இது முடியலாகாது. அவளிடம் கூறி விட வேண்டும். அவள் நிராகரித்தால் கூடப் பரவாயில்லை. கூறிவிட வேண்டும். இந்த நிச்சயமற்ற நிலையில் தவிக்க முடியாது. அவள் வெறுக்கட்டும்; புறக்கணிக்கட்டும். ஆனால் அவளிடம் சொல்லியே ஆக வேண்டும். இல்லையேல் நெஞ்சு வெடித்து விடும்!

அவன் ஓடும் ரயிலில் பாய்ந்து ஏறினான். ஜன்னலோரம் கம்பிகளில் சாய்ந்து கைகளில் முகம் புதைத்தவளாக அவள். அவள் தோள்கள் குலுங்கின. அழுகிறாளா?

அவன் மனம் ஜிவ்வென்று எழுந்தது. ஆம். அவள் ஓசையின்றிக் குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தாள்! என்ன முட்டாள் நான்! இது எப்படி எனக்குப் புரியாமல் போயிற்று!

மெதுவாக அவளருகே அமர்ந்தான். முதலில் அவள் கவனிக்கவில்லை. பிறகு மெல்ல அவள் அழுகை நின்றது.

அவன் பேசாமல் அமர்ந்திருந்தான்.

அவள் சேலையால் முகத்தைத் துடைத்தாள். பிறகு ஓரக்கண்ணால் அவனைப் பார்த்தாள்.

ஜ்வலித்த முகத்துடன் சமுத்திரம் பார்த்தவாறிருந்தான். அவள் கண்களைத் தாழ்த்தியபடி, புன்னகை புரிந்தாள். சமுத்திரமும் சிரித்தான்.

எதையும் சொல்ல வேண்டியதில்லை என்று அவனுக்குத் தெரிந்தது. அவன் கை மெல்ல அவள் கையைத் தொட்டது. அவள் விரல்களில் இணக்கம் தெரிந்தது. விரல்கள் பின்னிக் கொண்டன. அவன் பேச விரும்பவில்லை. மௌனம் தித்தித்தது. ஸ்பரிசம் மூலம் எதையெதையோ அவளிடம் கொட்டிக் கொண்டிருந்தான். ரயில் ஓடிக் கொண்டிருந்தது.

சட்டென்று ஒரு கனவிலிருந்து விழிப்பவன் போல சமுத்திரம் தன்னினைவு கொண்டான்.

அவள் கண்கள் பாதி மூடியிருந்தன. உதடுகள் ஈரமாக இருந்தன. முகத்தில் கனவு தெரிந்தது.

''ஏய்'' என்றான் சமுத்திரம் அந்தரங்கமாய். ''என்ன யோசனை?''

அவள் நிமிர்ந்து பார்த்தாள். குப் பென்று அவள் முகம் சிவந்தது. புன்னகையுடன் தலைகுனிந்தாள்.

''என்ன?''

''ம்ஹூம்.''

''என்ன யோசனை? சொல்லேன்.''

''ஒரு விஷயம் யோசித்தேன்.''

''எதைப் பத்தி?''

''நம்ப பையனைப் பத்தி.''

சமுத்திரம் சிரித்தான். ''நம்ப பையனா? அதுக்குள்ளாகவா? அடி சக்கைன்னானாம்.''

அவள் குலுங்கிச் சிரித்தாள்.

''ஆமா, அவன் என்னை மாதிரி இருந்தா?''

''உங்களை மாதிரிதான் இருக்கணும்.''

''நேத்து நீதான் சொன்னே, கொன்னுடணும்னு.''

''அது அப்ப.''

''இப்ப மனசு மாறிடுச்சா?''

''ம்ம்'' என்றாள். ''நேத்துச் சொன்னீங்களே, அழகில்லாத மிருகம் இல்லைன்னு?''

''ஆமா.''


''அழகில்லாத மனுஷங்களும் இல்லை.'' அவள் அவன் கைகளை இறுக்கினாள்.

''பிள்ளையார் கோவிலுக்குப் போனியே... என்ன வேண்டிக்கிட்டே?''

''அடுத்த பிறவியிலேயும் நீங்கதான் எனக்குக் கணவரா வரணும்னு வேண்டிக்கிட்டேன்.''

''அடிபாவி! இவ்வளவு பெரிய தண்டனை தர்ற மாதிரி நான் என்ன தப்புச் செய்தேன்!''

- கபிஸ்தலம் ஏ. கே. ஆனந்தப்ரியா.



எழுத நினைத்தால் எழுதலாம்

மாங்கு, மாங்கு என்று முந்நூறு பக்கத்தில் மாத நாவலுக்கு ஒரு கொலைக் கதையை எழுதி முடித்து விட்டேன். தலைப்பு என்ன வைப்பது என்று தெரியாமல் குழம்பிக் கொண்டிருந்தேன்.

பின்னால் யாரோ பெரிதாக ஏப்பம் விடும் ஓசை கேட்டது. திரும்பிப் பார்த்தேன். என் அருமை மனைவி கமலாவின் அருமைத் தம்பி தொச்சுதான். வயிற்றில் அடையாக இருக்கும்! அதனால்தான் ஏப்பம் சைரன் மாதிரி ஒலிக்கிறது.

தலைப்புக்குத் தத்தளித்துக் கொண்டிருந்த அவஸ்தையில் தொச்சுவைக் கண்டதும் எரிச்சல்தான் வந்தது.

''தொச்சு... முக்கியமான விஷயம் எதுவும் இல்லை என்றால் அப்புறம் பேசலாம். இந்த நாவல் வேலை அவசரமா முடிக்க ணும்'' என்றேன்.

''அத்திம்பேரே... ஸாரி.. உங்களைத் தொந்தரவு பண்றதுக்கு வரலை. திடீரென்று ஒரு ஐடியா வந்தது. சொல்லிட்டுப் போகலாமே என்று வந்தேன்.''

''ஐடியா தேவையாக இருக்கிற போது உனக்குச் சொல்லி அனுப்பறேன். அப்படியே ஐடியாவில் ஊறின பரம்பரை... தொச்சு... கொஞ்சம் என்னைச் சும்மா விடு'' என்றேன்.

'பரம்பரை ' என்று நான் சொன்ன வார்த்தையைக் கேட்டுக் கமலா ஸ்கட், பேட்ரியட் ஏவுகணைகளின் கலவையாக மாறி, ''எங்க பரம்பரை ஒண்ணும் உங்க பரம்பரைக்குத் தாழ்ந்து போகவில்லை. உங்க பரம்பரை அழகு தெரியாதாக்கும்...'' என்று ஆரம்பித்தாள்.

''கமலா... எதுக்கு இப்படி நாக்குல நரம்பில்லாமல் பேசறே? அவரானால் மண்டையைக் கசக்கிக் கதை எழுதறார். உனக்குக் கதை எழுதத் தெரியுமா? இல்லை,உன் தம்பிக்குத்தான் கதை எழுதத் தெரியுமா...? கதை எழுதத் தெரிஞ்சவாளுக்கு இல்லாத ஐடியாவா உன் தம்பிக்கு வரப் போறது...?'' என்று என் மாமியார் என்னை மட்டம் தட்டும் அர்த்தத்தில் பேச, அருமைப் பெண்ணிற்கு எடுத்துக் கொடுத்தாற்போல் ஆகியது.

உடனே கமலா, ''போம்மா, பிறந்த வீட்டுப் பெருமையை உடன்பிறந்தவன் கிட்டச் சொன்ன கதையாக, அவருடைய கதை எழுதற திறமையை என்கிட்டச் சொல்லாதே. மூர்மார்க்கெட்டிலே போய் 1930-ம் வருஷத்து நாவல்களை வாங்கிண்டு வந்து, பரண்பூரா அடுக்கி வெச்சிருக்காரே அந்த ஐடியா யாருக்கு வரும்? இரண்டு நாவலைப் படிச்சுக் கலந்து, பிசைந்து ஒரு புது நாவல் உருவாக்குகிற திறமை யாருக்கு வரும்? வெளியில சொன்னால் வெட்கக் கேடு...'' என்றாள் கமலா.

''போதும் கமலா... உங்க பரம்பரை - நியூட்டன் பரம்பரை, ஐன்ஸ்டீன் பரம்பரை. ஒரு வார்த்தை சொன்னால் அதை வெச்சுண்டு ஒரு மகாபாரதமே எழுதிடுவே நீ...'' என்று கத்தினேன்.

''அக்கா.. நீ உள்ளே போ.. அத்திம்பேர் என்னைத்தானே சொன்னார். உனக்கு ஏன் உறைக்கிறது? அத்திம்பேர் மனசு எனக்குத் தெரியும். அவர் எனக்குச் செஞ்சிருக்கற உதவிகளுக்கு நான் ஏழு ஜென்மத்துக்கு நன்றியோட இருக்கணும்'' என்றான் தொச்சு.

தொச்சு பாம்பா, பழுதா? என்று தெரியவில்லை. இருந்தாலும் அவன் ஐஸ் வைத்தது எனக்குப் பிடித்துத்தான் இருந்தது.

''இல்லை... தொச்சு... நான் நாவல் பிரச்னையில இருந்ததால, உன் மேல அனாவசியமாச் 'சள்'ளுனு விழுந்தேன்... போகட்டும். என்ன ஐடியா.. .சொல்'' என்றேன்.

''சொல்றேன் அத்திம்பேர். அவன் அவன் ஷேர் மார்க்கெட்லே' நூறைப் போட்டு ஆயிரம் வார்றான். தோலில் காரே பூரேன்னு கோட்டுத் தைச்சு வெளிநாட்டுக்கு அனுப்பி நூறு ரூபாய் சரக்கில் நூறு டாலர் பார்க்கறான். நீங்க என்னடான்னா இராப்பகலா யோசனை பண்ணி, கை விரல் தேயற மாதிரி எழுதி, ஆயிரம், இரண்டாயிரம் கூடப் பண்ண முடியாம தவிக்கிறீங்க...''

''தொச்சு.. நீ சொல்றது உண்மைதான். ஆனால் ஒவ்வொருத்தரால் ஒண்ணு

அகஸ்தியன்

ஒண்ணுதான் செய்ய முடியும். அரிசி வியாபாரம் பண்றவன் எண்ணெய் வியாபாரம் பண்ணால் நஷ்டமாயிடும். ஏன்னா, ஒவ்வொரு வியாபாரத்திலயும் ஆயிரம் நெளிவு, சுளிவு இருக்கு.''

''ஐயோ ஐயோ... பிரமாதமாகச் சொன்னீங்க அத்திம்பேர்.. இந்த மூளை, இந்த யோசனை எல்லாம் யாருக்கு வரும்?... அக்கா, இரண்டு கப் காப்பி கொண்டு வா... எனக்குச் சர்க்கரை போடாதே'' என்றான், சந்தடிசாக்கில் கந்தகப் பொடி வைக்கும் தொச்சு!

''அத்திம்பேரே... உங்க பலம் எழுத்து. அதை வெச்சுண்டே பணம் குவிக்கலாம், இராப்பகலாக் கண்முழிச்சு எழுதாமலேயே! அதுக்குப் பிரமாதமான ஐடியா தோணித்து. நேத்து ராத்திரி அச்சாபீஸ்ல உட்கார்ந்திருந்தப்ப'' என்றான்.

''என்ன அச்சாபீஸ்...? என்ன ஐடியா?'' என்றேன்.

அந்தச் சமயம் கமலா இரண்டு கப் காப்பியுடன் வந்து, ''தொச்சு.. ஒரு அச்சாபீஸை பார்ட்னர் ஷிப்ல எடுத்திருக்கான். போன வாரம் உங்ககிட்ட ஆசீர்வாதம் வாங்கிண்டு போகலாம்னு வந்தான். நீங்க இல்லை. நான் 'அத்திம்பேர் ஆசீர்வாதமாக ஐந்நூறு போய் வெச்சுக்கடா' என்று கொடுத்தேன். ஒரு வாரமாகச் சொல்லணும் சொல்லணும்னு பாக்கறேன். நீங்க நாவல் எழுதற மும்முரத்தில் இருக்கிறப்பத் தொந்தரவு பண்ண வேண்டாம்னு இருந்துட்டேன்'' என்றாள்.

என் அக்காவிற்கு எப்போதோ கொடுத்த இருபத்தைந்து ரூபாய் கைமாற்று இன்னும் திரும்பி வரவில்லை என்று 250-லிருந்து 257வது தடவையாக (தினமும் ஒரு தடவை) குத்திக்காட்ட மட்டும் அது என்னைத் தொந்தரவு செய்வதாகாது! ஆனால் அவளுக்கு நேரம் இருந்தது. தொச்சுவுக்கு ஐந்நூறு ரூபாயைக் கொடுத் ததைச் சொல்ல மட்டும் என்னைத் தொந் தரவு செய்யக் கூடாதே என்ற கரிசனம்! நான் ''அப்படியா'' என்று கூறுவதோடு நிறுத்திக் கொண்டேன். மேலே ஒரு வார்த்தை சொல்லியிருந்தாலும் மகாபாரதம் - பாகம் இரண்டு ஆரம்பமாகியிருக்கும்!

''சரி, என்ன ஐடியா, அதைச் சொல்லு!'' என்று கேட்டேன்.

''அத்திம்பேரே.. உங்க லைன்லேயே நீங்க பணம் பண்ணலாம். எப்படின்னு கேட்கறீங்களா? 'கதை எழுதுவது எப்படி', அல்லது 'எழுத நினைத்தால் எழுதலாம்' என்கிற மாதிரி ஒரு தபால் பயிற்சிப் பள்ளியை ஆரம்பியுங்க...''

''சரிதான் தொச்சு.. ஆனால் கதை எழுதறது ஒரு வித்தை; கதை எழுதறது எப்படின்னு எழுதறது வேற மாதிரி வித்தை...''

''அத்திம்பேரே... கரெக்ட்டுதான். அதுக்கும் ஒரு ஐடியா வெச்சிருக்கேன். இப்படி போனைத் தள்ளுங்க...'' என்று சொல்லிய தொச்சு, ஒரு அழுக்கு டைரியை



எடுத்து, ஏதோ டெலிபோன் நம்பரைப் பார்த்து, போனில் மளமளவென்று பட்டன்களை அழுத்தினான். சுமார் பத்துப் பதினைந்து பட்டன்களை அவன் அழுத்த அழுத்த, என் ரத்த அழுத்தம் அதிகமாகி விட்டது! எங்கேயோ வெளிநாட்டுக்குப் போன் பண்ணுகிறான். பில் எவ்வளவு ஏறப் போகிறதோ! கடவுளே!

''ஹலோ.. ஹலோ... யாரு ஸ்ரீதரா... என்ன எப்படி இருக்கே... எங்களையெல்லாம் ஞாபகம் வைச்சிருக்கியா? அமெரிக்கா போய்ட்டால் பெரிய மனுஷனாயிடுவே... போகட்டும்; போன வருஷம் ஜானா மூலமா சுண்டைக்காய் வற்றல் கொடுத்து அனுப்பினேனே, எப்படி இருந்தது? ஒரு கால் போட்டு, 'தாங்க்ஸ்' கூடச் சொல்லலையே... சரி, போகட்டும். ஒரு ஹெல்ப் வேண்டும்.. அத்திம்பேர் இல்லை, அகஸ்தியன்... ஒரு கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸ் ஆரம்பிக்கிறார். எழுதுவது எப்படின்னு... அங்க அமெரிக்காவில் 'ஹௌ டு ரைட்' அப்படின்னு நிறைய புக்ஸ் இருக்குமே... அந்த மாதிரி புஸ்தகங்களை பத்து, இருபதை ஒரே அமுக்கா அமுக்கி அனுப்பிடு. அப்புறம் இந்த மாதிரி கதை எழுதறதுக்கு ஸ்கூல் நடத்தறவங்களைப் பாத்து பாடங்கள் ஒரு செட் வாங்கி அனுப்பு... என்ன? அப்புறம் அங்கச்சிக்கு முத்து வாங்கி அனுப்பறேன்னு சொன்னியே, என்ன ஆச்சு? உனக்காக வேப்பம்பூ திரட்டி உலர்த்தி வெச்சிருக்கா... ரஸம் பண்ணினால் தூக்கி அடிக்கும்... இங்கே எல்லாரும் சௌக்கியம்... ஒரு வாரத்தில் புஸ்தகம் வந்து சேரணும்...'' என்று சொல்லி போனை வைத்தான். நான் பெருமூச்சு விட்டேன்.

''அத்திம்பேர் இந்த ஸ்ரீதர் சரியான தொணதொணப்பு ஆசாமி... சட்னு விஷயத்தைக் கேட்டுக்க வேண்டியதுதானே.. அத்திம்பேர், அவன் அனுப்புற புஸ்தகத்தை எல்லாம் படிச்சு 20, 25 பாடம் தமிழில் எழுதுங்க. பாடமாவே வர்றதை அப்படியே மொழிபெயர்த்துடுங்க... மத்ததை நான் பாத்துக்கறேன்... வர்றேன் அக்கா.. என்னது இன்னொரு அடையா, வேண்டாம்! இப்ப டயம் இல்லை.. சரி, உன் மனசு எதுக்குக் கஷ்டப்படணும், ஒரு டப்பாவில போட்டுக் கொடு. ஏகப்பட்டதை வெச்சுடாதே. அஞ்சோ, ஆறோ வை போதும்.. என்று சொல்லி விட்டுப் பறந்தான் - டப்பாவை வாங்கிக் கொண்டுதான்!

தொச்சுவின் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து ஸ்ரீதரும் ஒரு பெரிய புஸ்தகக் கட்டை பார்சலில் அனுப்பியிருந்தான். (அடுத்த தடவை அவன் பெண்டாட்டி பசங்களுடன் வரும் போது எவ்வளவு செலவை என் தலைமேல் வைக்கப் போகிறானோ!)

புஸ்தகங்களில் லட்டு லட்டாகக் கட்டுரைகள் இருந்தன. பாடங்கள் ரொம்பப் பிரமாதமாக இருந்தன. ஒருகணம் தொச்சுவை மனத்திற்குள் பாராட்டினேன்.



பரீட்சைக்குப் படிப்பது போல் இராப் பகலாகப் படித்தேன். (''இப்படி விடிய விடியப் படித்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்... பாலைச் சுண்டக் காய்ச்சியிருக்கேன். ஒரு தம்ளர் சாப்பிடுங்கோ''– என் மனைவி.)

படித்த சூட்டோடு இருபது பாடங்களையும் எழுதி முடித்தேன்.

நடுநடுவே இந்தப் பிரயாசையெல்லாம் ஏதாவது பலன் தருமா என்ற சந்தேகம் தலையைத் 'தூக்கிக் கொண்டிருந்தது.

''அத்திம்பேர்... பாடம் எல்லாம் தயார் பண்ணிட்டீங்கன்னு கேள்விப்பட்டேன். நான் நாலு நாளைக்கு ஒரு தரம் வந்து அக்காகிட்ட விசாரித்துக் கொண்டு தான் இருந்தேன். உங்களைத் தொந்தரவு பண்ணக் கூடாதுன்னு உங்க ரூம் பக்கமே வரவில்லை... எப்படி வந்திருக்கு பாடம் எல்லாம்?''

''நல்லாத்தான் வந்திருக்கு தொச்சு.. ஆனால் இதில் ஆதாயம் இருக்குமான்னுதான் தெரியலை.,...''

''பேசப்படாது அத்திம்பேர். நானும்

ஒரு மாசம் சும்மாவா இருந்தேன்? நிறைய சர்வே செய்தேன். விளம்பர டிசைன் கூடத் தயார் பண்ணிட்டேன். நாலு பத்திரிகையில் விளம்பரம் பண்ணினால் குறைஞ்சது ஆயிரம் பேராவது சேருவாங்க. ஐந்நூறு ரூபாய் பீஸ்.

''ஐந்நூறு ரொம்ப ஜாஸ்தியா இருக்கே.''

''பாருங்களேன், நீங்க மணியார்டர் கையெழுத்துப் போடறதுக்கே ஒரு ஆளை வேலைக்கு வெச்சுக்கணும்.''

''தொச்சு.. இவ்வளவு நீ சிரமம் எடுத்துக்கறே... இதில் உனக்கு எவ்வளவு பங்குன்னு இப்பவே நிச்சயம் பண்ணிட்டால் எனக்குச் சந்தோஷமாக இருக்கும்...''

''அத்திம்பேர்... இன்னிக்குத் தொச்சுன்னு ஒருத்தன் இருக்கான் என்றால் அது உங்களுடைய ஆதரவால்தான். ஆசீர்வாதத்தால்தான். உங்ககிட்ட நான் சாப்பிட்டதற்கு ஏழு ஜன்மத்திற்கு உழைக்கணும்.. இதில வர்ற லாபம் மொத்தம் உங்களுடையதுதான். நீங்களே இஷ்டப்பட்டு எது கொடுத்தாலும் சரி... என் பிரஸ்ஸில் பாடங்களை அச்சடித்தால் பிஸினஸ் வருதே, அதுவே போதும்..'' என்றான் தொச்சு.

முதன் முதலாக எனக்குத் தொச்சுவின் மீது ஒரு அலாதிப் பாசம் பிறந்தது. பாவம். நல்லவன்தான். ஏதோ ஒரு சமயம் 5, 10 வாங்கிக் கொண்டு திருப்பித் தராமல் இருந்திருப்பான். தொச்சுவுக்கு நல்ல மனசு.

தொச்சு தடபுடலாக விளம்பர டிசைன் தயார் பண்ணிக் கொண்டு வந்தான்.

''அத்திம்பேர், பாடங்கள் எல்லாம் கம்போஸ் ஆயிட்டுது. - புரூஃப் பார்த்துக் கொடுத்துடுங்கோ.. ஒரு மூச்சிலே அடிச்சுக் கொடுத்துடறேன். முதல்ல ஐயாயிரம் காப்பி அடிச்சுடறேன், ஒவ்வொரு பாடத்தையும்'' என்றான்.

''ஐயாயிரமா... ரொம்ப ஜாஸ்தியாக இருக்கும் போல இருக்குதே.. அவ்வளவு ஸ்டூடன்ட்ஸ் சேருவாங்களா?''

''அத்திம்பேர்... அச்சடிக்கும் போது ஒரு வருஷத்துக்கு வர்ற மாதிரி பிரிண்ட் பண்ணிக்கறது லாபம்... ஏன்னா கம்போஸிங் செலவுதான் எப்பவும் அதிகம். பிரிண்டிங் சார்ஜ் எப்பவுமே கம்மிதான்.''

''சரிப்பா... தொச்சு.. செய்.. ஆமாம்... இது அச்சடிக்கறதுக்குப் பணம்...''

''பேப்பருக்குப் பணம் கொடுத்துடுங்கோ. பிரிண்டிங் சார்ஜ் பின்னால வாங்கிக்கறேன். பல்லார்பூர் வாங்கட்டுமா, சேஷசாயி வாங்கட்டுமா?'' என்று கேட்டான்.

''இதெல்லாம் உன் டிபார்ட்மெண்ட்.. உன் இஷ்டப்படி வாங்கு.. சரி, பேப்பருக்கு எவ்வளவு பணம் வேணும்?''

''நாலு விளம்பரம் போடணும். அதுக்குப் பத்தாயிரம் ரூபாய்... பேப்பருக்கு.. ஒரு 'லாட்'டாக வாங்கிட்டால் சீப்பா யிடும். அதுக்கு ஒரு பத்தாயிரம் கொடுங்க. பாடங்களை அனுப்ப கவர் தயார் பண்ணணும். அதுக்கு ஒரு இரண்டாயிரம். பிளாக் செலவு 2000...'' ஒரு குத்து மதிப்பாக 25,000 கொடுங்க'' என்றான்.

குத்து மதிப்பைக் கேட்டதும் என் அடி வயிற்றில் குத்து விட்டது போலிருந்தது.

''என்ன தொச்சு...'ரொம்ப ஜாஸ்தியாக இருக்குதே...''

''அத்திம்பேர் மூணே மாசத்தில் வசூல் ஆயிடும்.. என்ன அக்கா காப்பியா... வேண்டாம். வெறும் மோர் கொடு.. காப்பி கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்கிறார். கொஞ்சம் பி.பி. இருக்கு'' என்றான் தொச்சு.

''இப்படி பேயா அலைஞ்சு நாயா ஓடினால் உடம்பு என்னத்துக்கு ஆகும்? ஊருக்கு உழைக்கிறதே உன் ராசி'' என்று அக்காக்காரி அன்புடன் அலுத்துக் கொண்டாள்.''

நான் பாங்க் அக்கவுண்டிலிருந்து வழித்து எடுத்து 25,000 ரூபாயைத் தொச்சுவிடம் கொடுத்தேன்.

''என்ன கமலா தொச்சுவைக் காணமே... பணம் வாங்கிக் கொண்டு போய் இருபது நாளாச்சு.. பாடத்தையும் காணோம். விளம்பரத்தையும் காணோம்.''

''தொச்சு, உங்க பணத்தை ஒண்ணும் முழுங்கிட மாட்டான். உங்க வேலையை மட்டும் பார்த்துக் கொண்டிருந்தால் அவன் வீட்டில் சோறு பொங்கிடுமா...? பத்து இடம் போய் பிஸினஸ் பிடிச்சால் தானே...''

இந்தச் சமயம் தொச்சு பிரத்யட்சமா



- கவிட் ரவி.

னான். ''என்ன அத்திம்பேர்... தொச்சு பணத்தைச் சுருட்டிண்டு அப்ஸ்காண்ட் ஆயிட்டான்னு நெனைச்சுட்டீங்களா? பாருங்க, பாடங்களை. ஒரு செட் கொண்டு வந்திருக்கிறேன்,'' என்று கூறி ரஜினி ஸ்டைலில் ஒரு பேக்கட்டை மேஜை மேல் போட்டான்! பிரித்தேன் -

எதிரே கட்டுக் கட்டாகப் பாடங்கள். ஒருகணம் அவை யாவும் ரூபாய் நோட்டுக்களாகத் தோற்றமளித்தன.

''தொச்சு... மன்னன்பா நீ... சரி எப்ப பேப்பர்ல விளம்பரம் போடப் போறே?''

''வர்ற வாரம். அதுக்குப் பணம் தேவை. இப்ப ஒரு த்ரீ கொடுங்க'' என்றான்.

கொடுத்தேன்.

இரண்டு நாள் கழித்து பேப்பரைப் பார்த்த போது அதில் எனக்கு ஓர் அதிர்ச்சி காத்திருந்தது. பிரபல எழுத்தாளர் ஒருவர் 'கதை எழுதுவது எப்படி' என்ற தபால் பயிற்சிப் பள்ளியை ஆரம்பித்திருப்பதாகச் செய்தி. தவிர அரைப் பக்க விளம்பரம் வேறு. அந்த எழுத்தாளர் (என்னை விடப் பிரபலமானவர்) எல்லாப் பாடங்களுக்கும் சேர்த்துக் கட்டணம் நூறு ரூபாய்தான் வைத்திருந்தார். விளம்பரத்தில் அவர் இதுவரை எழுதியுள்ள பத்து நாவல்களின் பெயர்களையும் பிரசுரமான புத்தகங்களின் பட்டியலையும் வெளியிட்டிருந்தார்கள். போதாததற்கு அவர் இதுவரை பெற்ற விருதுகள், பட்டங்கள், பரிசுகள் ஆகியவற்றின் விவரங்களையும் தடபுடலாகப் போட்டிருந்தார்கள்.

படிக்கப் படிக்க என் காலின் கீழ் தரை சரசரவென்று கீழே போய்க் கொண்டிருந்தது.

அந்தச் சமயம் தொச்சு, ''அத்திம்பேர் மோசம் போய்ட்டோம்... இந்தப் பாவி மனுஷன் இப்பவா ஸ்கூலை ஆரம்பிக்கணும்? பீஸைக் கூட அடிமட்டத்திலே வெச்சிருக்கான்...'' என்று கூறிக் கொண்டே வந்தான்.

''தொச்சு. அவர் பிரபல எழுத்தாளர். நானே அவர் ஸ்கூலில் சேர்ந்தால் நிறையக் கத்துக்கலாம்.. போகட்டும். பாடங்கள் அச்சடிச்ச செலவோட போகட்டும். விளம்பரம், கிளம்பரம் வேண்டாம். நீ பிரிண்ட் பண்ணின சார்ஜுக்கு இந்தப் பாடத்தை எல்லாம் பழைய பேப்பருக்குப் போட்டு எடுத்துக்க. மீதியை நான் கொடுத்துடறேன்... இனிமேல் உனக்கு ஏதாவது ஐடியா வந்தால் என் எதிரிகிட்ட போய்ச் சொல்லு'' என்று பாதி கேலியாகவும் பாதி கோபமாகவும் சொன்னேன்.

முதன் முறையாக என் மாமியார், என் மனைவி கமலா, தொச்சு மூவரும் என் பேச்சுக்கு எதிர்ப் பேச்சுப் பேசாமல் 'கம்'மென்று இருந்தார்கள்!

பட்ஜெட் வருது; கீரையைப் பதுக்கு!

சிரிக்க வையுங்கள் சிங்கப்பூர் செல்லுங்கள் !



''சாப்பாட்டுல தக்காளி சேர்த்துக் காதீங்க!''

''ஏன் டாக்டர்?''

''என்னோட ஃபீஸை ஒழுங்காக் கொடுக்கணும்ல... அதனால்தான்!''

- அ. அப்துல் பரீது, திருப்பத்தூர்.

○ ○ ○ ○

பட்டிமன்றப் பேச்சாளர், ''புத்தி சாலியான நடுவர் அவர்களே!'' என்று தன் பேச்சைத் துவக்கினார். நடுவர், ''நீங்கள் இப்படிச் சொல்வீர்கள் என்று



தெரிந்திருந்தால் என் மனைவியையும் அழைத்து வந்திருப்பேன்'' என்றார்.

உடனே, அப் பேச்சாளர், ''ஐயா, என்னுடையது ஒரு மணி நேர அனுபவம். உங்கள் துணைவியாருக்கோ ஆயுள் கால அனுபவம். நான் சொல்வதை வைத்தா அவர் தம்முடைய கருத்தை மாற்றிக் கொள்ளப் போகிறார்?'' என்றதும் பலத்த சிரிப்பு.

- அ. ஷண்முகசுந்தரம், சிட்லபாக்கம்.

○ ○ ○ ○



''டாக்டரைக் காதலிச்சது தப்பாப் போச்சுடி....''

''ஏன்?''

''என் கையைப் பிடிக்கும் போதெல்லாம், 'பத்து ரூபா' பீஸ் தர வேண்டியிருக்கு...''

- ஆர். வசந்தகுமார், கும்பகோணம்- 1.

○ ○ ○ ○


ஒரு வயதான பெண்மணி கீரை விற்றுக் கொண்டிருந்தாள். வெளியில் வைத் திருந்த கீரை நன்றாய் இல்லை. அதனால் அவள் அருகிலிருந்த சாக்குப் பையிலிருந்து எடுத்துத் தருமாறு நான் சொன்னேன். அவள் கொஞ்சம் தயங்கினாள்.

உடனிருந்த என் மருமகன், ''பாட்டி! கீரையை எல்லாம் பதுக்கி வைக்க வேணாம்! பட்ஜெட்ல கீரைக் கெல்லாம் வரி போட மாட்டாங்க'' என்று சொன்னவுடன், சுற்றியிருந்த எல்லோரும் சிரித்து விட்டார்கள். பாட்டியும்தான்.

- பி. ஜி. பி. இசக்கி, சிவசைலம்.

புதிய சீகா அரிய சித்த மூலிகைகள் கொண்ட
கேச, சரும பாதுகாவலன்.

அழகிய
தோற்றத்திற்கும்
கேச, சரும
பராமரிப்புக்கும்
'புதிய சீகா'!



15க்கும் மேற்பட்ட அரிய சித்த முறையில் மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்டது.

'புதிய சீகா'

சீயக்காய் கொண்டு சித்த முறையில் பவுடர் வடிவில் தயாரிக்கப்பட்டு அழகிய பாக்கெட்டில் வெளிவருகிறது.

கேசம் விழுதல், பொடுகு, பரு, வேர்க்குரு மற்றும் சரும வியாதிகளை நீக்கி கேச வளர்ச்சிக்கும் சரும பாதுகாப்பிற்கும் உறுதுணையாகிறது.

'புதிய சீகா' உபயோகித்து இயறகை அளித்திடும் அற்புத பலன்களை பெறுங்கள்.



விற்பனையாளர் :
காமதேனு டிஸ்ட்ரிபியூட்டர்ஸ்
(பி) லிட்.
3, முருகப்பன் தெரு, யானைகவுனி,
சென்னை-600 079.

சினிமாக் காதலைக் காப்பியடிக்காதீர்கள்!



"மாஸ்டர் ஆப் அரவணைப்பு" என்று ஒரு பட்டம் இருந்தால் அதைப் பெற தகுதியான நபர் கலாகேந்திரா கோவிந்த ராஜன் (இன்று லேட் கலா கேந்திரா கோவிந்த ராஜன்).

கடைசி நாட்களில் அவர் சற்று தளர்ந்திருந்த சமயம். அவரது நல்ல மனத்துக்கு, அனைவரும் அவருக்கு உதவக் காத்திருப்பதை எடுத்துச் சொல்லி, உடனடியாக ஒரு படத்தை எடுக்க, பூஜை போடச் சொன்னேன்.

இருபது வருடங்களாக நகைச்சுவைச் சங்கம் என்ற ஒரு சங்கத்தைத் தோள் கொடுத்துத் தூக்கி வரும் அவர் நகைச்சுவையாகவே ஒரு பதிலைச் சொன்னார்.

"விசு! பெண்ணுக்குக் கல்யாணமானா அவளுக்கு இருக்கிற பைத்தியம் தெளிஞ்சிடுங்கறது உன்னுடைய வாதம். ஆனா பெண்ணுக்குப் பைத்தியம் தெளிஞ்சாத்தான் கல்யாணமே அப்படிங்கறது சம்பந்தியோட பிடிவாதம். கல்யாணம் இப்ப முடியாதுப்பா. பைத்தியம்தான் கன்டினியூ ஆகணும்."

அவரது நகைச்சுவைச் சங்கத்துக்கு ஒருநாள் போயிருந்தேன். ஓர் அங்கத்தினர் ஒரு கதையைச் சொல்லி அதைப் படமாக்கச் சொன்னார். கதை என்ன தெரியுமா?

ஆஸ்பத்திரியில் ஓர் அன்னை பிரசவிக்கிறாள். ஆண் குழந்தை. மூன்று நாள் கழித்து அடுத்த படுக்கையில் இன்னொரு அன்னை பிரசவிக்கிறாள். அது பெண் குழந்தை.

ஆண் குழந்தைக்கும் பெண் குழந்தைக்கும் இடையே காதல் ஏற்படுகிறதாம்! தொட்டில்களுக்கு இடையே இருக்கும் ஓட்டை வழியாகச் சங்கேத மொழிகள் பரிமாறப்படுகிறதாம். டூயட் போட்டாலும் தப்பில்லையாம்!

முதல் அன்னை டிஸ்சார்ஜ் ஆக வேண்டிய சமயம். அந்த ஆண் குழந்தை ஆஸ்பத்திரியை விட்டுப் போக மறுக்கிறதாம். நானும் அந்த ஆண் குழந்தையோடுதான் போவேன் என்று பெண் குழந்தை அடம்பிடிக்கிறதாம். இந்த இடத்தில் கட்டாயம் சோகப் பாட்டுப் போடவேண்டுமாம்.

குழந்தைகளின் தந்தைமார்கள் காதலை எதிர்க்க, குழந்தைகளின் தாயார்கள் காதலை ஆதரிப்பதாக முடிவு எடுக்கிறார்களாம். தந்தைமார்கள் ஆபீசுக்குப் போயிருக்கும் சமயம், இரு தாயாரும் குழந்தைகளைத் தெருக் கோடியில் கொண்டு போய்ப் போட்டு விட்டு "உனக்கு அவளைப் பிடிச்சிருக்கு; அவளுக்கு உன்னைப் பிடிச்சிருக்கு; சந்தோஷமா வாழுங்க" என்று சொல்லி, ஆஸ்பத்திரிக்குத் திரும்பி, மாலை கணவர்கள் ஆபீஸில் இருந்து நர்ஸிங் ஹோமுக்கு வரும் போது, இரண்டு குழந்தைகளும் இறந்து விட்டதாகவும், அவர்களைப் புதைத்து விட்டதாகவும் பொய் சொல்லி விடுகிறார்களாம்.

அன்று அந்த அங்கத்தினர் சொன்னது நகைச்சுவைதான். ஆனால் நான் சிரிக்கவில்லை. அந்த நகைச்சுவைக்குப் பின்னே சினிமா என்னும் வலிமையான சாதனம் இளைஞர்களைக் கெடுத்துக் கொண்டிருக்கும் வேதனை எனக்குப் புரிந்தது.

அன்று திரு. கோவிந்தராஜன் என்னிடம் சொன்னார் : "விசு, முன்பு ஊருக்கு ஒரு நெகட்டிவ் காரக்டர் இருந்தது. பின்பு ஏரியாவுக்கு ஒரு நெகட்டிவ் காரக்டர் இருந்தது. பின்பு வீதிக்கு ஒன்று. பிறகு

விசு

வீட்டுக்கு ஒன்று. இப்பொழுது ஒரு வீட்டில் பாஸிட்டிவ் காரக்டரைப் பார்ப்பதே அபூர்வமாக இருக்கிறது. நல்ல விஷயங்களைக் காது கொடுத்துக் கேட்க யாருமே தயாராக இல்லை. செக்ஸ், வயலன்ஸ், டர்ட்டி லவ், ரிவென்ஞ் போன்ற தீய சக்திகள் எக்காளமாகக் கூத்தாடுகின்றன. இந்தத் தீய சக்திகளை எதிர்த்துப் போராடும் வலிமை, ஓர் எழுத்தாளனின் பேனாவுக்குத்தான் உண்டு.'' என்றார்.

அவரது கட்டளைக்கு அடிபணிவேன் என்று உறுதி கூறுகிறேன். இனி தோல்வி என்னைத் தளரச் செய்யாது! "God has sent me with certain responsibilities to be fulfilled and I will slowly get up and walk towards my commitment."

எந்தக் கதையையும் ரகசியமாக வைத்திருப்பது கதாசிரியர்களின் நோக்கம். ஏனெனில் கதை காப்பி அடிக்கப்பட்டு விடக் கூடாதே என்ற பயம். ஆனால் என்னுடைய அடுத்த படத்தின் கதையைப் பகிரங்கமாகவே இந்தக் கட்டுரையில் எழுதி, அது பிரசுரமான பிறகுதான் படத்திற்கே பூஜை போட உத்தேசித்து இருக்கிறேன்.

ஆம்! என் கதை வியாபாரத்துக்கு உதவாத கதை என அதைத் தொடவே பயப்படுவார்கள்.

''ஏ இளைஞர்களே! உங்களுக்குக் காதலிக்கச் சகலவிதமான உரிமைகளும் இருக்கின்றன. ஏனெனில் அது இயற்கையின் கட்டாயம். ஆனால் உங்களைப் பெற்றவர்களை ஒப்புக் கொள்ள வைக்கும் கடமையும் உங்களுக்கு இருக்கிறது என்பதை ஏன் மறக்கிறீர்கள்!

''ஓர் இளைஞன் ஒரு யுவதியைப் பார்த்தவுடன் - ஒரு யுவதி ஓர் இளைஞனைப் பார்த்தவுடன் அவர்கள் உடனடியாக ஏமாற்ற நினைப்பது அவர்களது தாய் தந்தையரைத்தான். அவர்களுக்குத் தெரியாமல் எங்கு சந்திப்பது, அவர்களுக்குத் தெரியாமல் எப்போது ஓடுவது என்பதைப் பற்றியே சிந்திக்கிறீர்களே! உங்களைப் பெற்று, எடுத்து, வளர்த்து, படிக்க வைத்த உங்கள் தாய் தந்தையர் உங்களுக்கு எதிரிகளா?

''கடைசியில் க்ளைமாக்ஸ் காட்சியில் சூரியனைத் தேடிக் கைகோத்துக் கொண்டு காதலர்கள் ஓடுவதாகத்தான் அநேகமாகக் காதல் படங்கள் முடிக்கப்பட்டு இருக்கின்றனவே தவிர, அதற்குப் பின் அவர்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்று சொல்லாத



'சினிமா'வை உங்கள் நண்பனாக நினைக்கிறீர்களே! ஆனால் அந்தச் சூரிய அஸ்தமன ஷாட்டுக்குப் பின்னால் உங்கள் வாழ்க்கை எப்படி அமையப் போகிறதோ என பயப்படும் அந்த அப்பாவி வயதான பெற்றோர்களை ஏன் விரோதியாக எண்ணுகிறீர்கள்? அவர்களால் அந்த வயதில் என்ன செய்து விட முடியும் என்ற காரணத்தினாலா?

''ஆறு மாத இருட்டு வாழ்க்கைதான் உங்கள் வாழ்க்கை என்று நினைத்துத் தவறான முடிவு எடுத்து விடாதீர்கள். ஏனெனில் அறிவுபூர்வமான வாழ்க்கையே ஆறு மாதத்துக்குப் பிறகுதான் ஆரம்பிக்கிறது. அதில்தான் சுவை அதிகம். அது அடிக் கரும்பு வாழ்க்கை!

''கடைசியாக ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் பெற்றோர்கள் உங்களை எதிர்க்கவில்லை. உங்கள் வாழ்க்கை நன்றாக அமைய வேண்டுமே என்று பயப்படுகிறார்கள். அவ்வளவுதான். அவர்கள் பயத்தைப் போக்குவது உங்களது கடமை. ஆனால் அந்த பயத்தை அதிகரிக்கிறது உங்கள் இளமை.''

எனக்கா காதலைப் பற்றித் தெரியாது? பிறந்தவுடனே எனக்கு 45 வயது ஆகிவிட்டதா என்ன? இல்லையே! காதலுக்கு ஒரு கண்ணியம் இருக்கிறது என்பதைப் புரிய வைத்து விட்டுத்தான் வேறு வேலை. என் பேனா சொத்தைப் பேனா அல்ல.

என் முதுமை என்பது 'நிழல்'.

என்னுள் இருக்கும் இளமை என்பது 'நிஜம்.'

அந்த 'நிஜம்' நிழலுக்காக வரிந்து கட்டப் போகிறது.

(நிழல்கள் தொடரும்)

50 ஆண்டுகளுக்கு முன்...

கல்கி ஆகஸ்டு 1 இதழ் :

உபயகுசலோபரி எழுதுவதற்காகக் கல்கி ஆசிரியர் பிள்ளையார் சுழி போட்டதுமே பத்திரிகையின் காவல் தெய்வமான விநாயகர் எதிரே வந்து நின்று விடுகிறார். ''நாற்காலியில் உட்கார்ந்து விட மாட்டேன், பயப்ப டாதே!'' என்று தமாஷ் பண்ணுகிறார். பிறகு, ''பத்திரிகையின் நோக்கம் என்ன?'' என்று கேட்கிறார்.

''மூன்று நோக்கங்கள்'' என்கிறார் ஆசிரியர் ''கல்கி''. ''முதலாவது தேச நலன்; இரண்டாவது தேசநலன்; மூன்றாவதும் தேசநலன்!''

இந்த தேச நலனில் பல பிரிவுகளை ''கல்கி'' எப்படி வரிசைப்படுத்துகிறார் என்பது ருசியானது. முதல் இதழின் அட்டைப் படம் தேசியக் (காங்கிரஸ்) கொடி. சுதந்திரத்துக்கு முற்பட்ட காலம் அல்லவா? இரண்டாவது இதழ் மேலட்டை தமது பக்திக்குரிய தேசத் தலைவர் ராஜாஜி. மூன்றாவது மேலட்டை நமது பாரம்பரியக் கலை களின் பிரதிநிதியாக ருக்மிணி தேவி. நாலாவது அட்டைப் படம் மிகவும் சக்திவாய்ந்த சாதனமாகிய சினிமாத் துறையின் பிரதிநிதியாக பிரபல வட இந்திய நடிகை சாந்தா ஆப்தே!

சினிமா, மக்களை வெகுவாகப் பாதிக்கக்கூடிய விஷயமாதலால் அதனை நல்வழிப்படுத்திச் செல்லும் பொறுப்பு பத்திரிகைகளுக்கு உண்டு என்று உணர்ந்து, கல்கி முதல் இதழிலேயே நாலு பக்கங்களை தமிழ் - ஹிந்தி சினிமாக்களுக்கு ஒதுக்குகிறார்.

எழுத்தாளர்கள் குறைவான அந் நாளில் அவரே நிறைய எழுதியிருக்கிறார். ''கமலாவின் கல்யாணம்'' தொடர்கதை ஆரம்பமாகிறது. 'குகன்' என்ற பெயரில் பாப்பா மலர்க் கதை, 'லாங்கூலன்' என்ற பெயரில் நையாண்டிச் சிறுகதை, தலையங்கம், உபயகுசலோபரி...

முதல் இதழிலேயே கல்கியுடன் இணைந்து விட்ட சாமாவின் கார்ட்டூன்கள் பக்கத்துக்குப் பக்கம் பளிச்சிடு கின்றன. ஊமமனின் முழுப் பக்க அரசியல் கார்ட்டூன்.

''கதிர்'' வேங்கடராமன் சிறுகதை எழுதியிருக்கிறார். கனசியாமதாஸ் பிர்லா எழுதிய ''கடல் கடந்த காந்தி'' கட்டுரைத் தொடர் (மொழிபெயர்ப்பு); டி. கே. சி.யின் ''கம்பர் தரும் காட்சி'' ஆகியன ஆரம்பம். சகுந்தலா பாரதி ''என் தந்தை'' என்ற தலைப்பிலும் உ. வே. சாமிநாத அய்யர் ''ஹரதத்த சிவாசாரியார்'' குறித்தும் ஏ. கே. செட்டி யார் பேர்லின் பயணக் கட்டுரையும் (யுத்த காலம்) எழுதுகிறார்கள். தவிர நிமிஷக் கதை, சிரிப்புத் துணுக்குகள், புத்தக விமர்சனம் இத்யாதி. எல்லாமாகச் சேர்ந்து ''கல்கி'' செய்யாத எதையும் இன்று யாரும் புதுமையாகச் செய்து விடவில்லை; முடியாது என உணர்த்துகின்றன.

முற்றும் கோணலாக முடியாத ஒரு முதல் கோணல் விஷயம், அட்டைப் படத்தில் எழும்பூர் ஸ்டேஷனுக்கு மேலே பறக்கும் மூவண்ணக் கொடி தலைகீழாகப் போய் விட்டதுதான்! பச்சை நிறம் மேலேயும் சிவப்பு நிறம் கீழேயும் அச்சாகி விட்டது!

இன்னொரு வேடிக்கை; இந் நாளில் சினிமா நட்சத்திரங்களும் விளையாட்டு வீரர்களும் விளம்பரங்களுக்கு போஸ் தருவதைப் பார்க்கிறோம். இந்த முதல் இதழ் போர்ன்விடா விளம்பரத்தில் ரவீந்திரநாத் தாகூர் படம் போட்டு, அவரது நற்சான்றிதழும் அச்சாகியுள்ளது!

நமது காரியாலயம்

சென்னை நகரில் ''எழும்பூர் ஸ்டேஷன் எங்கே இருக்கிறது?'' என்று கேட்பவர் களுக்கு, இனிமேல் பளிச்சென்று பதில் சொல்லலாம். எழும்பூர் ஸ்டேஷன் ''கல்கி'' காரியாலயத்திற்கு எதிர்த்தாற் போல்தான் இருக்கிறது. தமிழ் மக்கள் தங்களுடைய சொந் தப் பத்திரிகையின் காரியாலயத்திற்கு வந்து போவதற்குச் சௌகரியமாக ரயில்வே ஸ்டே ஷன், பஸ் நிற்குமிடம், டாக்ஸி நிற்குமிடம் எல்லாம் வசதியாய் அமைக்கப்பட்டிருக் கின்றன. நமது காரியாலயம் இருக்கும் சாலை யின் பெயரும் வெகு பொருத்தமாகவே வைக்கப்பட்டிருக்கிறது: ''காந்தி - இர்வின் ரோட்.''

(என்ன சேதி பகுதிக்கு இந்தத் துணுக் கை சுவாரஸ்யமான விதத்தில் எழுதிக் காட் டியவுடனே ஸோமஸ் கந்தனை ஆசிரியர் குழாத்தில் சேர்த்துக் கொண்டு விட்டார் கல்கி. ''ஸோமஸ்'' என்ற பெயரில் குட்டிக் கதைகள், சிறுகதைகளும் ''காந்தன்'' என்ற பெயரில் சினிமா விமர்சனங்களும் ஏரா ளமாக எழுதினார்.)

தலைவர்கள் சௌக்கியம்

அடுத்தபடி முக்யமான செய்தி நமது அரும்பெரும் தலைவர்கள் ராஜாஜி, வல்லப பாய், ஜவாஹர்லால் முதலியோர் சிறைச் சாலைக்குள் சௌக்யமாய் இருக்கிறார் களென்பது. யுத்தமானது மேற்கேயிருந்தும் கிழக்கேயிருந்தும் இந்தியாவை நெருங்கிக் கொண்டிருப்பதால் இப்படிப்பட்ட சமயத்

தில் நமது தலைவர்களுக்கு எவ்விதமான ஆபத்தும் நேரக் கூடாது என்றுதான் சர்க்கார் அவர்களைப் பத்திரமாய் சிறைக்குள் வைத் திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. இல்லா விட்டால் ருஷ்யாவும் பிரிட்டனும் ஒன்று சேர்ந்து ஜெர்மன் ராக்ஷதனுடன் போராடிக் கொண்டிருக்கும் இந்தச் சமயத்தில் ஜவாஹர் லால், ராஜாஜி முதலிய தலைவர்களைச் சிறை யில் வைத்திருக்க எவ்வித நியாயமும் காணப் படவில்லை.

வாழ்த்து

புத்தம் புது மலர்கள் பூக்குமே
வண்டினங்கள்
சித்தம் மகிழ்ந்துண்ணச் சேருமே
- நித்தமும்
பல்கி வளரும் பசுந்தமிழ்ச் சோலையாம்
'கல்கி' படர்ந்து வருங்கால்


- தேசிகவிநாயகம் பிள்ளை


ஆகாச வெடி

''சென்னை பஸ் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் சம்பந்தமாக சர்க்கார் விடுத் திருக்கும் அறிக்கையில், பஸ் தொழிலா ளர்கள், பஸ் சொந்தக்காரர்கள் ஆகிய இரு சாரார்கள் மீதும் குற்றம் இருப்பதாகக் கூறி யிருக்கிறார்கள்.''

- தினசரி.

பிரயாணிகள் மீதும் குற்றம்சாட்டாமல் விட்டதை ரொம்பவும் பாராட்டுகிறோம்.





ஒட்டிக்கு இரட்டி

''டேய்! நீதானேடா இப்போ இரைச்சல் போட்டு என். எஸ். கிருஷ்ணன் பாட் டுப் பாடிண்டிருந்தே?''

''இல்லைங்க, ஸார்! நெஜம்மா...''

''பொய் சொல்லித் தப் பிச்சிக்கலாம்னு பார்த்தியா? அதெல்லாம் இங்கே நடக் காது. அந்தப் பாட்டை இன் னும் இரண்டு தடவை பாடு!''

கமலாவின் கல்யாணம்

''ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் செய்து வை!'' என்று பெரி யோர்கள் சொல்லியிருக்கி றார்களாம். பொய் சொல்லு வது ஏதோ அவ்வளவு கலப

மான காரியம் என்று எண்ணித்தான் அவர்கள் அவ்வளவு பேச்சுத் தாராளம் காட்டியிருக்கிறார்கள்! ஆனால் ஜூனியர் வக்கீலாகிய எனக்குத் தெரியும் பொய்யிலுள்ள சிரமம். நம்முடைய கட்சி சாட்சியை, ஒரு பொய் சரியாகச் சொல்லி மீந்து வரும்படி செய்வதற்குள் வாய்ப் பிராணன் தலைக்கு வந்துவிடுகிறது. ஆயிரம் பொய் சொல்லுவதாம்! கலியாணம் செய்து வைப்பதாம்! அந்த நிபந்தனையின் பேரில்தான் கலியாணம் நடக்கும் என்றால், உலகத்தில் ஆண் பிள்ளைகள் எல்லாரும் விநாயகர்களாகயிருக்க வேண்டியதுதான்!

(கமலாவின் கல்யாணம் தொடர்கதையின் தொடக்கம்)



விலாசம் மாறுதல்

குழந்தை கண்ணன் சுவாமியைப் பின் வருமாறு வேண்டிக் கொண்டான்:- ''எங்கள் எல்லாரையும் காப்பாற்றுங்கோ, சுவாமி! அப்பா, அம்மா, தம்பி, நான் எல்லாரையும் காப்பாற்றுங்கோ! மயிலாப்பூர் வீட்டை விட்டு மாம்பலத்தில் 6 - ம் நம்பர் ராஜப்பய்யர் தெருவில் குடிவந்திருக்கிறோம்!''



(உபயகுசலோபரி பகுதிக்கு சாமா வரைந்த சித்திரம்)

படித்துப் பார்

புத்தகத்தைப் படித்து முடித்ததும் நமக்கு ஒரு ஏமாற்றம் உண்டாகிறது. ''அடடா! உலகத்தை இவ்வளவு சீக்கிரம் சுற்றியாகி விட்டதே!'' என்று அதிருப்தி கொள்கிறோம். இன்னும் கொஞ்சம் உலகத்தைச் சுற்றினால் தேவலை என்று தோன்றுகிறது. அடுத்த மூன்றாம் பதிப்பில் ஸ்ரீ செட்டியார் இன்னும் கொஞ்சம் சாவகாசமாக நம்மை உலகத்தைச் சுற்றும்படி செய்தாரானால் நாம் அவருக்கு 'கித்தோஸ்' செய்வோம். ('கித்தோஸ்' என்பதைப் பற்றி, பின்லாந்துக் கட்டுரையில் 61-ம் பக்கத்தில் பார்க்க.)

(உலகம் சுற்றும் தமிழன் - ஏ. கே. செட்டியார்)

வானதி வழங்கும் புதிய வெளியீடுகள்

சமயம், கட்டுரைகள்	ரூ.பை
இசை வழியே இறையருள் பெற்றவர்கள் - எஸ். லட்சுமி சுப்பிரமணியம்	40.00
திருமூலரின் திருமந்திர விருந்து - திரு சம்பந்தம்	55.00
நாதஜோதி ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் தரிசனம் - டாக்டர் திருமதி சரஸ்வதி ராமநாதன்	10.00
வாரியார் வழங்கும் விளக்கு - திருமுருக கிருபானந்தவாரியார்	14.00
ஆன்மீகச் செல்வர்கள். (102 ஆன்மீகத் தூதுவர்கள் புகைப் படங்களுடன்) - சங்கரிபுத்திரன்	35.00
வைஷ்ணவ ஜனதோ - ரா. கணபதி	27.00
கம்பன் கருத்துக் களஞ்சியம் - சரோஜினி செல்லக்கிருஷ்ணன்	25.00
பாலகாண்டப் பைம் பொழில் - முனைவர் சுந்தர சண்முகனார்	25.00
இவர்கள் இன்று சந்தித்தால் - மு. சாயபுமரைக்காயர்	9.00

பயணக் கட்டுரைகள்	
காசி - இராமேசுரம் - குரும்பூர் குப்புசாமி	15.00
ஜெய்பூர் - குரும்பூர் குப்புசாமி	18.00
கல்கத்தா - குரும்பூர் குப்புசாமி	18.00
காஷ்மீர் - குரும்பூர் குப்புசாமி	22.00

கட்டுரைகள்	
அன்றே இந்தியர் சொன்ன இன்றையக் கண்டுபிடிப்புகள் - எஸ். லட்சுமி சுப்பிரமணியம்	17.00
ந. பிச்சமூர்த்தியின் கலை-மரபும்-மனித நேயமும் - சுந்தர ராமசாமி	20.00
பேனா வீரர் பிரேம்சந்த் (வரலாறு) - சு. கிருஷ்ணமூர்த்தி	35.00
உண்மையின் தரிசனம் - லா.ச. ராமாமிர்தம்	17.00
இந்தியச் சிந்தனை மரபு - ர.சு. நல்லபெருமாள்	10.00
நிகழ்ச்சிகள் நினைவுகள் - தி.சா. ராஜூ	15.00

நாவல், கதைகள்	
நான் நானாக - சிவசங்கரி	22.00
ஆற்றில் ஒருகால், சேற்றில் ஒருகால் - சிவசங்கரி	22.00
குருக்ஷேத்திரம் - ர.சு. நல்லபெருமாள்	52.00
மயக்கங்கள் - ர.சு. நல்லபெருமாள்	36.00
கோட்டைப் புரத்து வீடு - இந்திரா சௌந்தர்ராஜன்	34.00
மாயநிலவு - இந்திரா சௌந்தர்ராஜன்	25.00
வைகையின் மைந்தன் (சரித்திர நாவல்) - முகிலன்	26.00
துளசி - லா.ச. ராமாமிர்தம்	22.00
அமுதத்தின் புதல்வி (வங்காளி நாவல்) - தமிழில் சு. கிருஷ்ணமூர்த்தி	22.00
ஒரு பிடி வைரம் - சுஜாதா விஜயராகவன்	16.00
நியாயம் கேட்கிறோம் பகுதி - 1 - ஜெயஸ்ரீ விஸ்வநாத்	24.00
நியாயம் கேட்கிறோம் பகுதி - 2 - ஜெயஸ்ரீ விஸ்வநாத்	24.00
வேரில் துடிக்கும் உயிர்கள் - 12 பிரபல ஆசிரியர்கள்	17.00
நீதிபதி கதைகள் - அனுராதா ரமணன்	20.00
ராஜ தரங்கிணி - கோவி. மணிசேகரன்	14.00
பாரதியார் கதைகள் - பாரதியார்	37.00
அதிசயக் கனவுகள் - பொன் பரமகுரு	16.00

தேவையான புத்தகங்களை V.P.P. யில் பெற கடிதம் எழுதுங்கள் V.P.P.யில் தபால் செலவு தனி.

விவரங்களுக்கு

வானதி பதிப்பகம்

13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை - 600 017. போன் : 442810

திருவடிச் சிறப்பு

இதுநாள்வரை இறைவன் கொடுத்த நாட்களை எப்படி எப் படியோ பாழாக்கிய பழங்கதை போல் இந்த நாளும் வீணாகப் போகிறது என்றால், பாவப் பட்டியலில் புதிய பதிவேடாக இன்றைய நாள் இருக்கப் போகிறது என்றால், இந்த நாள் தேவை தானா? ஒரு கதை சொல்கிறேன் கேளுங் கள்.

காரில் பவனி வந்த மகாராஜாவின் மனம் துணுக்குற்றது. ஒரு முதியவர் நடக்க முடியாத நிலையில் தாள மாட் டாத மூட்டை ஒன்றைத் தலையில் சுமந்தபடி வெயிலில் வியர்க்க வியர்க்க எதிரில் வந்து கொண்டிருந்தார்.

மகாராஜாவின் உத்தரவுப்படி கார் நின்றது. ''இந்த வயதில் இப்படி கஷ்டப் படலாமா? பிள்ளைகள் யாரும் காப்பாற்ற இல்லையா? தலையில் என்ன மூட்டை?'' மகாராஜாவின் கருணைக் கேள்விகள்...

''மகாராஜாவா... என் தெய்வமே... இந்த ஏழையின் கதையைக் கேளுங் கய்யா... காட்ல மரத்தை வெட்டிக் கரி யாக்கி தலைச் சுமையாக் கொண்டு வந்து ஊர்ல கொடுத்தாத்தான்யா எனக்குச் சோறு... பசங்க யாரும் காப்பாத்தல... இந்தக் கரி சொமந்து வித்தால் கால் வயிற்றுக் கஞ்சி கிடைக்கும்...'' ஏழைமை பேசியது.

மகாராஜா நிமிர்ந்தார். சாலைக்கு அந்தப் பக்கம் முழுவதும் சந்தன மரங்கள் நிறைந்த காடு. முழுவதும் மகாராஜாவுக்குச் சொந்தமானது. அதில் ஒரு பகுதியை இந்த ஏழைக்குக் கொடுத்தால் என்ன? பல தலைமுறைக்கு அவனுக்கு வறுமையே இருக்காது. ஆயிரக்கணக்கான ரூபாய் களைச் சில மரங்களே தந்து விடும்... உதவி யாளரை அழைத்து உத்தரவு பிறப்பித்தார்.

''பெரியவரே... இந்தச் சந்தனக் காட்டையே உங்க பேருக்குத் தானமாக் கொடுத்திருக்கேன்... கஷ்டப்படாமல் சௌக்யமாக இருங்கள்.'' மகாராஜாவின் படகுக் கார் சென்று மறைந்தது...

சில மாதங்களுக்குப் பிறகு அதே வழியாக அதே மகாராஜா பயணப்பட்ட போது, அவருக்குப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது. முன்பு பார்த்த அதே கிழவர் தலையில் சாக்கு மூட்டையோடு தடுமாறி நடந்து கொண்டிருந்தார். கார் அவர் முன் நின்றதும் மகாராஜாவைப் பார்த்துப் புலம்பினார் :

''என் தெய்வமா...? நீங்க நல்லா இருக் கணும்.. கொஞ்ச நாள் உங்க புண்யத்தில அரை வயிற்றுக் கஞ்சி குடிச்சேன். மறு படியும் இந்த நாய்ப் பிழைப்பு...''

திகைத்துப் போன மன்னர் பரபரப் புடன் கேட்டார் :

''நான் கொடுத்த சந்தனக் காடு என்னாச்சு..? அதை என்ன விலைக்கு விற் றீர்கள்?''

''காட்டை விக்கலை எசமான்... இதே மாதிரி மரத்தை வெட்டிக் கரியாக்கித்தான் வித்தேன்... கொஞ்ச நாள் கஞ்சி குடிக்க உதவியா இருந்தது.''

மகாராஜா மரம்மாகச் சமைந்தார்... இது வெறும் கதையல்ல. சந்தன மரங்களைக் கரியாக்கி விற்ற அந்த ஏழையைப் போலத் தான் நாமும்... கடவுள் கொடுத்த உடல், உயிர், உள்ளம், வாழ்நாள் இவற்றின் மேன்மை தெரியாமல் கரியாக்கி விடு கிறோம்...

ஒவ்வொரு நாளும் பயன் உள்ளதாக ஆக வேண்டும். சுயவிமர்சனம், சுயதர்சனம் மூலம் நாமே விலங்கிலிருந்து கடவுளாக வேண்டும். உறுதியான உடல், உயர்வான உள்ளம், உய்ய வேண்டிய உயிர் நாம் பெற்றாக வேண்டும். உயிர் உய்ய முடி யாதபடி தடையாக இருக்கும் மூன்று வகைப் பற்றுக்களையும் நீக்க வேண்டும். முக்தியை நோக்கி முன்னேற வேண்டும். இறைவன் திருவடியை எய்துவதே ஞானியர் வேட்கை என்று புரிந்து, நாமும் அப்படிச் செயல்பட வேண்டும்.

இறைவனது இரண்டு திருவடிகள் பரஞானம், அபர ஞானம் என்னும் இருவகை ஞான நிலைகளே! இந்து தர்மத்தின் ஆறு உட்பிரிவுகளும் திருவடிப் பேறுதான் முக்தி என்று தெளிவு படுத்துகின்றன. கடவுள் வாழ்த்துப் பாடிய திருவள்ளுவர் திருவடியைத்தான் தமது லட்சியமாகப் பாடினார்.

ஆறுமுகமும் பன்னிரண்டு கையும் கொண்ட முருகப் பெருமான் கூட பன்னி ரண்டு கால்களுடன் காட்சி தரவில்லை.. பக்தனுக்கு இருப்பது இரண்டு கை. அவன் இரண்டு கைகளாலும் பற்ற இரண்டு கால்கள் போதும் என்றே ஞான பண்டிதன் காட்சி தருகிறான். அந்தத் திருவடிகளே இந்துக்களின் வாழ்க்கை இலட்சியம்.

சுகிசிவம்

பாகவதத்தில் ஓர் உருக்கமான கட்டம். தேவகி வயிற்றில் தோன்றும் எட்டாவது கர்ப்பம், கம்சனுக்கு எமன் என்று அசரீரி வாக்கு. தேவகி - வசுதேவரைச் சிறையிலிட்டான் கம்சன். அவர்களுக்குப் பிறந்த ஆறு குழந்தைகளை ஒன்றன் பின் ஒன்றாகக் கொன்றான். ஏழாவது கர்ப்பம் இடம் மாறி ரோகிணியின் பிள்ளையானது. எட்டாவதாகக் கண்ணன்.

ஆவணி மாதத்து ரோகிணி நட்சத்திரம் அஷ்டமி திதி கூடிய நாள் இரவில், கோடி சூரியப் பிரகாசமான கண்ணனை ஈன்றாள் தேவகி. பிறந்த போதே சங்கு சக்கரத்துடன் இருந்த பேரொளிப் பிழம்பு பேசியது. யமுனையின் மறு கரையில், நந்தகோபர் திருமாளிகையில் யசோதை பெற்ற பெண் குழந்தையை எடுத்து வந்து, இங்கு வைக்கும்படி உத்தரவிட்டான் மாயக் கிருஷ்ணன்.

நள்ளிரவில், தூயபெருநீர் யமுனையைக் கடந்து, கண்ணனை நந்தகோபர் திருமாளிகையில் சேர்ப்பித்து விட்டு, அங்கிருந்த விஷ்ணு மாயை என்னும் கிருஷ்ண சகோதரியைக் கொண்டு வந்து தேவகியிடம் கொடுத்தார் வசுதேவர்.


அதுவரை உறங்கிக் கிடந்த சிறைக் காவலர் கண் விழித்தனர். கம்சன் செய்தி அறிந்து பறந்தோடி வந்தான். கொலை வெறி அவன் கண்களில் குடியிருந்தது. ஆறு குழந்தைகளை அவன் கொன்ற போது கொடுத்து நின்ற தேவகி, இந்தப் பிள்ளையைத் தர மறுத்தாள். ஏன்? இது யாரோ பெற்ற பிள்ளை! அநியாயமாக அந்தக் குழந்தை கொல்லப்படுவதைத் தடுக்க அவள் போராடினாள்.

குழந்தையின் இரண்டு கால்களையும் இரண்டு கைகளாலும் பிடித்து இழுத்துச் சுவரில் அறைந்து கொல்லும் வழக்கப்படி கம்சன் பற்றி எறிந்தான். என்ன ஆச்சர்யம்! சாளரம் வழியே பறந்து போய் ஆகாசத்தில் ஜொலித்தாள் விஷ்ணுமாயை! சங்கு சக்கரத்தோடு காட்சி கொடுத்த விஷ்ணு துர்க்கை 'கலகல' என்று சிரித்தாள்.

''அட மூடனே.. என்னைக் கொல்லுபவன் யாரும் இன்னும் பிறக்கவே இல்லை.. என்னைக் கொலை செய்ய எண்ணிய உன்னை இந் நேரம் நான் கொன்றிருப்பேன். ஏன் கொல்லவில்லை தெரியுமா..? கொல்ல நினைத்த நீ கொல்லுவதற்கு என் கால்களைப் பிடித்து விட்டாய். திருவடிகளைப் பற்றியவனை எந்தத் தெய்வமும் கொல்லுவதில்லை'' என்றாள்.

திருவடியின் சிறப்பு இப்போது புரிந்திருக்குமே!


(இன்னும் என்ன சொல்ல!)



நீங்கள் கேட்டவை - தராசு



◆ அழைப்பது பற்றி...



◆ ஏட்டிக்குப் போட்டி

O பா. இராமநாராயணன், ஈரோடு.

? 'அமைச்சர்களும், எம்.எல்.ஏ.க்களும் சொத்துக் கணக்குத் தர வேண்டும்' என்று அ. தி. மு. க. எம். எல். ஏ. கூறியது, ஊழலற்ற நிர்வாகத்துக்கு ஏற்ற கருத்தே. அதைத் தராசு கேலி செய்து சிரிப்பது சரியா?

! அடக் கடவுளே, அது கேலிச் சிரிப்பு இல்லை ஐயா! வேதனைச் சிரிப்பு! நான் ஜி. விசுவநாதனுடன் நூற்றுக்கு நூறு ஒத்துப் போகிறேன். ஆனால் நமது அரசியல்வாதிகள் போகாத ஊருக்கு இவர் வழி சொல்கிறாரே என்பதால் விரக்தியுடன் சிரிக்கிறேன்.

O ஐ. எஸ். வாசு, மாடம்பிள்ளை தர்மம்.

? பாமாயில் இனி கிடையாதாமே?

! மத்தியில் காங்கிரஸ், மாநிலத்தில் அ. தி. மு. க. கூட்டணியின் 'முதல் சாதனை'.

O எஸ். ப்ரியா, பாளையங்கோட்டை. ★

? தாள்படியும் கலாசாரம் தமிழகத்துக்கு மட்டும்தான் சொந்தமா?

! இல்லை. மரியாதைக்குரியவிதமாகப் போப்பாண்டவர், தாம் போய் இறங்கும் நாட்டின் மண்ணை மண்டியிட்டு முத்தமிடுவார். அண்மையில் நாடாளுமன்றப் படிக்கட்டுக்களில் ஒருவர் சிரம் பதித்து வணங்கினார். இவை பெருமைக்குரியன. இங்கே நடப்பது வேறு...!

O ஆர். எஸ். இராஜ், காரைக்கால்.

? மூத்த வயது எஸ். டி. எஸ். இளைய வயது



◆ ரூ. 1/- சம்பளம்

ஜெ. வை 'அம்மா' என்று அழைப்பது பற்றி...?

! தவறில்லை. குழந்தையைக் கூடப் பாசத்தோடு 'என்னம்மா' என்பது அழகானதுதான். கணவன் வீட்டிலிருந்து வரும் நம் பெண்ணை 'வாம்மா' என்று வரவேற்பதில்லையா என்ன!

O கே. ஏ. காளிமுத்து, காரை.

? 'ராஜீவ் காந்தி கொலையில் புலிகளுக்கு சம்பந்தம் இருப்பதால் இலங்கை அரசு பிரபாகரனைப் பிடித்து இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும்' என்று குமரி அனந்தன் கூறியிருப்பது குறித்து...?

! அதானே! இத்தனை சுலபமாகக் காரியம் முடிய வழி இருக்கும் போது இந்த ஸி.பி.ஐ. ஏ ன் தா ன் தாட்பூட் தடபுடல் பண்ணி, அலட்டிக் கொள்கிறதோ! கையில் வெண்ணெய் வைத்துக் கொண்டு யாராவது நெய்க்கு அழுவார்களா! இலங்கை அரசு தலையில் பொறுப்பைச் சுமத்தினால் பிரச்னை தீர்ந்தது!

O சி. சிவகுமார், குடியாத்தம்.

? தி. மு. க. இடைத் தேர்தலிலும் மாநகராட்சித் தேர்தலிலும் பங்கேற்குமா?

! தடுமாறாமல், தயங்காமல் பங்கேற்க வேண்டும். வெற்றிக்குப் பாடுபடவும் வேண்டும். முடிவை மக்கள் பொறுப்பில் விட்டு விட வேண்டும். அவர்கள் தீர்ப்பு எதுவாயினும் ஏற்க வேண்டும்.

O கவிட் ரவி, கும்பகோணம்

? சினிமா பற்றிப் பதில் சொல்லி எத்தனை காலமாகி விட்டது... சரி, கடைசியாகப் பார்த்த தமிழ் சினிமாப் படம் எது?

! டீ.வி.யில் குலேபகாவலி! ரசித்த விவரம் வேண்டுமா? யோசித்துச் சொல்லுங்கள்!

O கே. மதுரநேதா, கும்பகோணம்

? பட்ஜெட் என்றாலே விலை ஏற்றம் என்ற நிலை எப்போது மாறும்?

! அரசியல் காரணங்களுக்காகப் பொருளியலை வளைக்காத போது.

O ஸி. என். சிவகுமார், கோவை.

? ராஜீவ் காந்தி கொலை துப்புத் துலக்கலில் ஆயிரத்தில் ஒரு பங்கு சுறுசுறுப்பாவது சாதாரணக் குடிமகன் கொலை விஷயத்தில் காட்டப்படுமா?

! துப்புத் துலக்கலில் மட்டுமின்றி

மாதம் 1ரூ. சம்பளம் போதும் என்கிறாரே, ஜெ?



* மன்னருக்கு மரியாதை

* கூறியது குறித்து...



கோட்டை விடுதலிலும் இந்தச் சுறுசுறுப்பைக் காண முடியாது! ஷண்முகம் ''தற்கொலை'' விஷயத்தில் அவ்வளவு அபாரமாகச் செயல்பட்டிருக்கிறார்கள். நமது போலீஸின் திறமை பற்றி 'ஜெ' பதவி ஏற்ற சமயம் நம் தலையில் அடித்துச் சத்தியம் பண்ணாத குறையாகப் பேசிய போது நம்புவது எனக்குக் கஷ்டமாக இருந்தது. இப்போது நம்புவதில் சிரமமே இல்லை. எத்தனை சாமர்த்தியமாகச் செயல்பட்டிருக்கிறார்கள் என்று வியந்து போகிறேன். ஷண்முகம் ''தற்கொலை''யால் போலீஸ் - ஸி. பி. ஐ.க்கு கோட்டை விட்டதாகப் பரவலான அவப் பெயரோடு சரி. ஷண்முகம் உயிருடன் இருந்திருந்தால், எத்தனை தனி நபர்களுக்குக் கெட்ட பெயர் வந்து சேர்ந்திருக்குமோ, இப்போது எல்லோரும் காப்பாற்றப்பட்டு விட்டார்கள் பாருங்கள்! எவ்வளவு கருணை! எத்தனை பெருந்தன்மை! அடடா!

O எம். அசோக் ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.

? பட்டிமன்றம், வழக்காடு மன்றம் - எதற்கு உங்கள் வோட்டு?

! இதற்கே ஒரு பட்டிமன்றம் வைத்துத்தான் தீர்மானிக்க வேண்டும் போலிருக்கிறதே!

O வே. செந்தில்குமார், கொங்கணாபுரம்

? மோசடி அரசியல் என்றால் என்ன?

! எதையாவது சாதிக்க முடியாத போது, அரசாங்கமே பந்த் அறிவித்து விடுவது முதல்தர மோசடி. காவிரி நீர்ப் பிரச்னையில் கர்நாடக அரசைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றால், எல்லாக் கட்சிகளுமாகச் சேர்ந்து பந்த் நடத்துவதுதானா தீர்வு? அதுவும் தேசம் படுமோசமான பொருளாதார நிலையில் சிக்கியிருக்கும் போது எவ்வளவு நஷ்டம் நாட்டுக்கு? பந்த் மூலம் தமிழக மக்களின் ஒற்றுமை உணர்வைக் காட்டினால், கர்நாடக அரசு தானும் சளைத்ததல்ல என்று அதே தினம் ஏட்டிக்குப் போட்டியாக பந்த் நடத்துகிறது! புதிய முதல்வரிடம் புதிய சிந்தனை எதிர்பார்த்தோம். பழங் கள்ளைத்தான் வழங்குகிறார். மொந்தை கூடப் புதுசல்ல! யதார்த்த நோக்கில் செய்ய வேண்டுவது என்ன? கர்நாடகத்துடன் விட்டுக் கொடுக்காமல் போராடியபடியே ஓசைப்படாமல் தஞ்சைத் தரணியில் விவசாய முறைகளையும் பயிர்களையும் புதிய சூழலுக்கு ஏற்ப மாற்றி அமைப்பதுதான். இதற்கு விவசாய விஞ்ஞானிகளை முடுக்கி விட வேண்டும். விவசாயிகளுக்கு புதிய சிந்தனை உருவாக்க வேண்டும். செயல்முறைகளைக் கற்றுத் தர வேண்டும். பாலை வனத்தைச் சோலை வனமாக்கி உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்கிறது இஸ்ரேல்! 'நெற் களஞ்சியம்' என்ற பெயர் இல்லாமல் போகலாம். போகட்டுமே. வேறு பொருள்களை ஏற்றுமதி செய்து நெல்லை இறக்குமதி செய்து கொண்டால் போயிற்று.

O ஐ. ராமதாஸ், சென்னை.

? மாதம் ரூ 1 சம்பளம் போதும் என்று 'ஜெ' கூறி விட்டாரே?

! இதனால் தமிழ் நாட்டின் பொருளாதாரம் 'ஓகோ' என்று உயர்ந்து விடாது. 'நான் தமிழக மக்களுக்குச் சேவை புரிகிறேன். அதனால் சம்பளம் பெற மாட்டேன்' என்பது இவருக்கு முன் முதல்வர்களாக இருந்த பல பெரியோர்களை அவமதிப்பது போலாகும். அவர்களெல்லாம் சேவை புரியவில்லையா? சம்பளத்துக்காகவா வேலை செய்தார்கள்? அவர்கள் உழைப்புக்கு ஏற்ற சம்பளமா வழங்கப்பட்டது? என்ற கேள்விகள் எழ 'ஜெ' வாய்ப்பளித்தவராகிறார். தேவை முதல்வரின் சம்பளத் தியாகமல்ல. பரவலாக உள்ள கிம்பளத்தைக் கட்டுப்படுத்துவதுதான்.

* ரூ 25 பரிசு பெறுபவர் :

எஸ். ப்ரியா,
4/789 - B, 29வது தெரு,
சாந்தி நகர்,
பாளையங்கோட்டை - 627 002

வட்டமேஜை

● தங்களின் தலையங் கம், முதல்வர் ஜெயலலிதா வின் தவறையும் பாட்டாளி மக்கள் கட்சியின் தலைவர் ராமதாஸின் த வ றை யு ம் சுட் டி க் கா ட் டி, இருவருக் குமே அறிவுரை வழங்கி யிருப்பது பாராட்டத்தக்கது.
மொரட்டுப்பாளையம்,
ப. மாரியப்பன்.

கல்யாண வீடுகளில் கரண்டி பிடித்தவரை...

● முதல் கோணல் முற்றி லும் கோணலாகி விடாது. முன்னேற்பாட்டுடன் செய் யப்பட்டதொரு ச பை இடையூறுதான், தாமரைக் கனி, பண்ருட்டி விவகாரம். 'ஜெ' எங்கே திறமையான அரசியலை நிலைநாட்டி, மக்களிடம் நல்ல பெயர் வாங்கி விடுவாரோ என்கிற பயமே இந்தச் சதிக்குக் காரணம். பால் உள்ள பாத் திரத்தில் ஒரு துளி எலுமிச் சைச்சாறு பட்டாலும் மொத் தப் பாலும் திரிந்து போக லாம். ஆனால், இது ஒரு சிறு 'குப்பை' என்றே ஒதுக்க லாம்!
சிதம்பரம்,
எஸ். பாலசாகுல்.

● 'தலைவர்கள் தங்களைத் தாங்களே உயர்த்திக் கொண் டால் போதாது; நாட்டை உயர்த்துவதுதான் ராஜீ வுக்கோ, எம். ஜி. ஆருக்கோ அவர்கள் செலுத்தக்கூடிய அஞ்சலி, என்று ஆசிரியர் பக்கத்திலான தங்களின் பொன் வரிகளோடு 'வோட் டளித்த மக்களுக்குச் செய் யும் நன்றிக் கடனாகும்' என்ற வரியையும் சேர்த்துக் கொள்ளலாம் எ ன் று தோன்றுகிறது.
கும்பகோணம்,
எஸ். வி. ரவிகணேஷ்.

● அட்டையில் எ ங் க ள் பாசத்திற்குரிய புரட்சிக் கலைஞர் விஜயகாந்த் வண் ணப்படத்தை வெளியிட்ட தங்களுக்குப் பல நூறு பாராட்டுக்கள்.
மகிழஞ்சேரி, கே. கணேசன்.

● ஏ.வி.எம். 1-150 கட்டு ரையில் குறிப்பிடப்படாத ஒரு முக்கிய தகவல், ஐந்து முதல்வர்கள் அதன் படங் களில் பங்கு கொண்டிருக் கிறார்கள் என்பதுதான். அறிஞர் அண்ணா - கதை வசனம் : ஓர் இரவு, கலைஞர் க ரு ணா நி தி - வசனம் : பராசக்தி, எம். ஜி. ஆர்., என். டி. ராமராவ், ஜெயலலிதா, நடித்த படங் கள் முறையே, அன்பே வா, ராமு (தெலுங்கு), மேஜர் சந்திரகாந்த்.
சிட்லபாக்கம்,
அ.ஷண்முகசுந்தரம்.

● ரசிக்கத்தக்க அனுபவங் களை, ஏ. வி. எம். சரவணன் தமக்கே உரிய எளிய பாணி யில் கூறியிருந்தது, மிகச் சிறப்பாக இருந்தது.
மொரட்டுப்பாளையம்,
இராஜேஸ்வரன்.

● எங்கள் பாக்யராஜின் டைரக்ஷனில் ஏ. வி. எம். எடுத்த படம் 'முந்தானை முடிச்சு' வசூலில் சாதனை கண்ட படம். அதைப் பற்றிச் சரவணன் சார் ஒன்றுமே சொல்லவில்லை. நிருபரும் கே ட் க வி ல் லை. என் னய்யா, கவர் ஸ்டோரி! வெங்காயம்!
காரைக்கால்,
டி.அந்தோணிராஜ்.

● ''நெய் தோசை'' சிறு கதை, ஏழைமை வாழ்வின் யதார்த்தமான பிரதிபலிப்பு.
கன்னியாகுமரி,
ஆர்.இரசல்.


● நாம் காட்டும் பாசமும் பரிவும் ஒரு கட்டுக்குள் இருக்க வேண்டும். கண் மூடித்தனமான பா ச ம் நம்மை மூழ்கடித்து விடும் என்ற கருத்தை ''இன் னொரு பங்கஜம்'' சிறுகதை நன்றாக விளக்கியது.
தக்கோலம், அ. முஸ்தபா.

● சிறுகதைகள் அனைத் துமே நல்முத்துக்களாய் ஜொலித்தன.
தர்மபுரி, வித்யா.

● பிரபலமானவர்களின் பேட்டிகளையே படித்துப் படித்து, அலுத்துப் போன வாசகர்களுக்குக் கல்யாண வீடுகளில் கரண்டி பிடித்துத் தொழிலைத் துவக்கி, இன்று சமையல் கலை தலைவராக மு ன் னே றி யி ரு க் கு ம் பாலனை ம ன ந் தி ற ந் து பாராட்டிய கல்கியை, நாங் கள் பெ ரு மை யோ டு பாராட்டுகிறோம்!
கும்பகோணம்,
எஸ்.கே.மூர்த்தி.

● சித்தூரில் நடைபெறும் தொடர் பெண் கொலை களைப் பற்றிய செய்தியைப் படித்த போது நெஞ்சம் திக்திக் என்றது. மேன் மேலும் கொலைகள் தொட ரும் முன், காவல் துறை யினர் கு ற் ற வா ளி யை க் கண்டுபிடித்து இப் பிரச் னைக்கு முற்றுப் புள்ளி வைப்பார்களா...?
விசலூர், ஜி. ஜி. கிருஷ்ணன்.


khaitan



AHAAR



open for Lunch and Dinner
12.30 P.M– 2.45 P.M
7.30 P.M–11.30 P.M



Good food anywhere in the world, is a tradition handed down over the centuries, perfected to a fine art. And here **AHAAR** true to tradition, offers sumptuous, authentic Indian & Continental food with quality quite unlike anything you have ever tasted.

You can tantalise your taste buds with a blend of delicacies - both Vegetarian & Non.Vegetarian specially made by our experienced chefs.

Once with us, you'll want to come back time & again.

Because at **AHAAR** you'll feel once is never enough!

THE RESIDENCY

You only leave to come back

49, G.N.Chetty Road, T.Nagar,
Madras-600 017, India.
Tel: 8253434. Tlx: 041-8831 SAS IN.
Fax: 8250085.

TAS/291

சொத்துக்களை விற்கிறீர்களா ?



என் எச் பி 9% கேபிடல் பாண்டுகளை வாங்குங்கள். நிலம், வீடுகள், பங்குகள், பிணையங்கள், நகைகள் போன்ற நீண்டகால சொத்துக்களை விற்று மூலதன இலாபத்திலே 100% வரி விலக்குப் பெறுங்கள். என்எச்பி 9% கேபிடல் பாண்டுகளினால் உங்களுக்கும் சரி, உங்கள் மூலதனத்திற்கும் பெருமளவு ஆதாயங்கள் உண்டு.

- உங்கள் முதலீடு ஆண்டொன்றுக்கு 9% வட்டி ஈட்டும். இது ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வழங்கப்படும்.
- அல்லது முதலீடு செய்த தேதியிலிருந்து ரூ. 1000-க்கு ரூ. 240 என்னும் விகிதத்தில், முழு கால வரம்பாகிய 3 ஆண்டுகளுக்கும் தள்ளுபடியின் அடிப்படையில் முன் கூட்டியே ஆண்டொன்றுக்கு 9% என்னும் விகிதத்தில் வட்டியை பெற்றுக் கொள்ளவும் செய்யலாம். இதில் இடைக்காலமாகிய 3 மாதங்களுக்கான வட்டியும் முழுமையாக அடங்கும். அதனால் ஒரு நாளைய வட்டியைக்கூட நீங்கள் இழப்பதில்லை.
- வருமான வரி சட்டம் 1961, பிரிவு 54 E -ன் கீழ் மூலதன இலாப வரிக்கு விலக்குண்டு.
- வட்டித் தொகையின் மீது, அது வழங்கப்படும் நிலையில் வரி கழிக்கப்படாது.
- சொத்து வரி சட்டம் 1957, பிரிவு 5 (1)(xvi) மற்றும் 5(1A) இவற்றின் கீழ் ரூ. 5 இலட்சம் வரையிலான தொகைக்கு, இதர தகுதியுள்ள ஆஸ்திகளுடன் வரி விலக்கு உண்டு.
- வருமான வரி சட்டம் 1961, பிரிவு 80L-ன் கீழ் வட்டித் தொகைக்கு வரி விலக்கு உண்டு.
- இது சம்பந்தமான, செலுத்தும்செலவுகள் என் எச் பியைச் சார்ந்ததாகும்.
- நாட்டிலுள்ள 150க்கும் மேற்பட்ட இடங்களில் ஆண்டு முழுதும் சமவிலைக்கு இது கிடைக்கும்.
- வீடு கட்ட நிதியுதவி வழங்குவதில் நாட்டின் தலையாய நிறுவனமாகிய எமது முக்கிய குறிக்கோளே, அனைவரும் வீடு கட்ட வேண்டும், அதற்கான நிதியுதவியை அதிகரிக்க உதவ வேண்டும் என்பதே. ஆகையால் இதிலே முதலீடு செய்வதால், நாட்டில் பலர் வீடு கட்டிட நிதியுதவி செய்த மன நிறைவும் கிடைக்கும்.

விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கும்/ஏற்கப்படும் இடங்கள்: நேஷனல் ஹவுஸிங் பேங்க் அலுவலகங்கள் (பம்பாய் & டில்லி) • **கேன்ஃபினா** அலுவலகங்கள் • இந்த இஷ்யூவிற்கான 9 பாங்கர்களது, 51 இடங்களிலுள்ள 142, கிளைகள்: அலகாபாத் பாங்க், ஆந்திரா பாங்க், பாங்க் ஆஃப் பரோடா, கனரா பாங்க், விஜயா பாங்க் (சாகார் பவன், பம்பாய்), ஃபேர்க்ரோத் பினான்ஷியல் சர்வீஸஸ், இந்தியன் பாங்க், பஞ்சாப் நேஷனல் பாங்க், ஸ்டேட் பாங்க் ஆஃப் மைசூர், மற்றும் தி வைஸ்யா பாங்க் லிட்.

NATIONAL HOUSING BANK
YOU GAIN THE NATION GAINS
9% CAPITAL BONDS

நேஷனல் ஹவுஸிங் பேங்க்

(ரிஸர்வ் பாங்க் ஆஃப் இந்தியாவினால் முற்றும் உடமையாக்கப்பட்டது)

வீடு கட்டும் துறைக்கு புதிய பாதை வகுக்கிறது

3 வது மாடி, பாம்பே லைஃப் பில்டிங், அக்பரஅலீஸின் மேலே, 45 வீர் நரிமன் ரோடு, பம்பாய் 400 023. ஃபோன்: 222702, 224347

6 வது மாடி, இந்துஸ்தான் டைம்ஸ் ஹவுஸ், 18-20, கஸ்தூர்பா காந்தி மார்க், புதுதில்லி 110001. ஃபோன்: 3712006, 3712036

FORTUNE 45 Tam

கலையும், இசையும், நகையும், சுவையும்


கதையும், கவியும், கருத்தான கட்டுரையும்

கலங்கரை விளக்கமாய் அரிய பல காவியமும்

கலந்தளிக்கும் விருந்தாய் விளங்கும் கல்கியே


கண்டாய் நீ அரை நூற்றாண்டு இன்று

காண்பாயே இன்னும் பல நூற்றாண்டு



பாரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர்: சீதா ரவி.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 2344145; சர்க்குலேஷன் மானேஜர்: 2344190; விளம்பரம் - சந்தா: 2344157; டைரக்டர்: 2341543.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/- வெளிநாடு : கப்பல் தபால்: ரூ. 300/-; விமானத் தபால்: ரூ. 700/-.
ஆறு மாதச் சந்தா: உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு : கப்பல் தபால்: ரூ. 150/-; விமானத் தபால் ரூ. 350/-.





Our track record has a lot to do with our leaving the beaten track.



Breakthrough technology.

At the TI Group, breakthrough technology has led to innovative products for practically every user industry.

Our micro-alloyed and precision tubes, for instance, are revolutionising the very way future cars and two-wheelers are being designed and built. For the construction industry, we offer cold-roll formed building systems with Z-purlins that cut construction costs by as much as 30%. For a variety of engineering applications, we've come out with cold-roll formed metal sections and cold-drawn welded tubes that are lighter but structurally stronger than conventional materials. Our high-strength chains are of such high reliability that they're now original fitment on leading Japanese export bikes.

That's not all, of course.

We also manufacture bicycles and accessories to international standards — incorporating innovative features.

Our product range is much wider than these.

With a common thread running right through: superiority in quality, performance and economy.

Tube Investments of India Ltd

- **TI Cycles of India** • **TI Miller**
- **Tube Products of India** • **TI Metal Sections**
- **TI Diamond Chain Ltd** • **TI Cold Forge**

HTA 7508

BEHIND THE MASK IS ONE OF INDIA'S MOST MODERN CONSUMERS.



HAVE YOU IDENTIFIED HIM? He's very literate. ★ Very modern in his outlook. ★ And he enjoys a high standard of living. ★ His savings are impressive. ★ And his purchasing power is every marketeer's dream. ★ He's the citizen of metropolitan Kerala. ★ The type of person who's always interested in bettering his way of life. ★ The type of consumer your product is looking out for.

Start a dialogue with him. ★ Communicate your product's merits through the Malayala Manorama Group. ★ Comprising ten publications (including India's largest circulating Daily, Weekly, Woman's and Children's Fortnightly) that effectively cover every type of demographic and psychographic consumer profile, in every nook and corner of Kerala. ★ In the most cost-effective manner.

It's the kind of media logic, your marketing instinct will identify with.

MALAYALA MANORAMA
GROUP OF PUBLICATIONS

TALK TO US. TALK TO KERALA


MALAYALA MANORAMA DAILY*WEEKLY*VANITHA*BALARAMA*BALARAMA AMARCHITRAKATHA*MANORAMA YEAR BOOKS*ONAM ANNUAL*THE WEEK
MANORAMA COMICS*BHASHAPOSHINI

விஜிபி

வழங்கும் இணையில்லா வீட்டு மனைகள்

உடனடியாக வீடு கட்டி குடியேற சகல வசதிகளுடனும் அழகுற அமைக்கப் பட்டிருக்கும் விஜிபி வீட்டு மனைத் திட்டங்களில் உங்களுக்கு ஏற்ற வீட்டு மனையை தேர்ந்தெடுக்க ஒரு அரிய வாய்ப்பு!

ரொக்கம் அல்லது கலபத் தவணைகளில் உங்கள் வசதிக்கேற்ப வீட்டு மனை வாங்கும் திட்டத்தின் மூலம் உடனடியாக ஒரு நல்ல வீட்டு மனையை சொந்தமாக்கிக் கொள்ளுங்கள்.



விஜிபி வீட்டு மனைகளின் பத்திரங்கள் சுத்தமானவை. வீடு கட்ட கடன் வாங்கு வதற்கு விண்ணப்பிக்க தகுதியானவை. முழுப் பணம் செலுத்தி 10 நாட்களுக் குள் உத்திரவாதத்துடன் பதிவு செய்த நிலப் பத்திரங்கள் உங்கள் கைகளில் ஒப்படைக்கப்படும்.

இலவசமாக நிலத்தை பார்வையிட சிறப்பான ஏற்பாடு செய்து தரப்படும்.


மிக உறுதியாகவும் விரைவாகவும் நீங்கள் விரும்பியவாறு வீடுகள் கட்டித் தரப்படும். வீடு கட்டுவதற்கு 10 ஆண்டு களில் திருப்பி செலுத்தும் வகையில் கடன் வசதியும் ஏற்பாடு செய்து தரப்படும்.

விஜிபி கோகுல் நகர்	விஜிபி கீரீன் லேண்ட்	விஜிபி ஸ்ரீராமானுஜர் டவுன்	விஜிபி மவுண்ட் மேரி டவுன்
தூய காற்றோட்டம் நிறைந்த வளப்பமிக்க நகர். சென்னையிலிருந்து 15 கி.மீ. தொலைவில் செங்கல்பட்டு சாலையில் பஸ் போக்குவரத்து வசதியுடன் பரங்கிமலை ரயில்வே நிலையம் 5 கி.மீ. தொலைவில் ஒரு சில மனைகளே உள்ளன. Govt. App. No. LPDM/DDTP/64/73.	பிரம்மாண்டமாக உருவாகியுள்ள மறைமலை நகரை ஒட்டி அமைந்துள்ளது விஜிபி கிரீன் லேண்ட். இயற்கை வளப்பும் தூய காற்றும் நிறைந்த உங்கள் மனதிற்கேற்ற இடம். அரசு அங்கீகார எண்: செ.உ.ந.இ. எண்: 83-2 ம.ப. 2.	சென்னைக்கு அருகில் வரலாற்றுப் புகழ் பெற்ற திருத்தலமாகிய ஸ்ரீபெரும்புதூரில் 2500-க்கும் மேற்பட்ட மனைகள் அடங்கிய விஜிபி ஸ்ரீராமானுஜர் டவுன். நல்ல காற்றோட்டத்திற்கும் சுகாதாரத் திற்கும் ஏற்ற சகல வசதிகள் அடங்கிய குடியிருப்புத் திட்டம். இதில் பகுதி 1 & பகுதி 2 விற்று தீர்ந்து விட்டன. பகுதி 3 இப்பொழுது விற்பனைக்குள்ளது. *அரசு அங்கீகார எண்: CR DTCP-M-83-117/L.P. 81 R.O.C. No. 2417/82 CRTI.	சென்னையை அடுத்த காட்டாங் குளத்தூரில், சுற்றிலும் கண்ணுக்கு இனிய மலைகள் சூழ்ந்த இயற்கை எழில் மிகுந்த நகர் விஜிபி மவுண்ட் மேரி டவுன். சுற்றுப்புற சூழலை பாதிக்காத தொழிற்சாலைகளும், திரையரங்கும் அருகில் உள்ளன. அரசு அங்கீகார எண்: செ.உ.ந.இ. எண்: 83-44 ம.ப. 2. மிகக் குறைந்த மனைகளே விற்பனைக்கு உள்ளன.



விஜிபி ஹவுஸிங் பிரைவேட் லிமிடெட்

மேலும் விவரங்களுக்கு அணுகவும்: விஜிபி சதுக்கம், சைதாப்பேட்டை, சென்னை-600 015.
தொலைபேசி எண்கள்: 457333, 457236, 457372. டெலக்ஸ்: 041-6337 விஜிபி இன்.
கீழ்க்கண்ட விஜிபி கிளைகளிலும் தொடர்பு கொள்க: ரட்டன் பஜார் போன்: 564949 மவுண்ட் ரோடு, போன்: 840234.
விஜிபி மக்கள் சேவையில் மகத்தான 35 ஆண்டுகள்.



கடவுள் கவனித்துக் கொண்டிருக்கிறார்!

கண் புற உலகத்தைப் பார்க்கிறது,
மனம் கண்ணைப் பார்க்கிறது.
அந்தராத்மா மனத்தைப் பார்க்கிறது,
இது உண்மை; மாற்ற முடியாத உண்மை
மனசாட்சிக்கு ஏற்ப நாங்கள் சுத்தமான
ருசிகரமான இனிப்பு மற்றும் கார
வகைகளைத் தயாரிக்கிறோம்.

இனிப்பு வகைகள்:

1. மங்களூர் போளி
2. தேங்காய் போளி
3. ரஸ மலாய்
4. ஸோன் பப்டி கேக்
5. மாலாடு ரவாலாடு
6. இனிப்பு ஸோமாஸ்
7. முந்திரி கத்லி
8. கடலை உருண்டை
9. பொரிவிளங்காய் உருண்டை
10. தேங்காய் கோவா
11. அதிரசம்
12. வெல்ல சீடை
13. சூரத்காரி
14. கோதுமை ஹல்வா
15. ரஸகுல்லா
16. குங்குமபூ லட்டு
17. குங்குமபூ பாதம் ஹல்வா
18. குங்குமபூ வீட் ஹல்வா
19. புரூட் ஹல்வா
20. சூரியகலா

கார வகைகள்:

1. தட்டை
2. தேன்குழல்
3. கைமுறுக்கு
4. சீடை
5. ஸ்பெஷல் மிக்ஸர்
6. நவரத்ன மிக்ஸர்
7. உருளைக்கிழங்கு சிப்ஸ்
8. வாழைக்காய் சிப்ஸ்
9. வறுபயறு
10. வெஜிடபிள் சமோசா
11. ரயில் கட்டிடம்
12. சீப்புச் சீடை

பொடி வகைகள்:

1. கருவேப்பிலைப் பொடி
2. பருப்புப் பொடி
3. இட்லிப் பொடி
4. சாம்பார்ப் பொடி
5. ரசப் பொடி
6. ஊறுகாய் மிளகாய்ப் பொடி

திருமண வைபவங்களுக்கு, பருப்புத் தேங்காய் அதிரசம், திரட்டுப்பால், சீர் முறுக்கு ஆகியவற்றை தயாரித்துக் கொடுக்கிறோம்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு.
சென்னை - 600 020 போன் : 412557

Ad-Ventures



GOKUL No.1 MATTIPPAL BATHI
Mfrs. T.S.R. & Co., HOME NEEDS PVT. Ltd.
GOKUL MALA BATHIS
தலைமுறை வழிவந்த தனித்தன்மை.
இதனை வெல்ல எதுவும் இல்லை.
கோகுல்
ஊறுகாய்கள்:
எலுமிச்சை
மாங்காய்
பூண்டு
மிக்ஸட்
வெஜிடேபிள்
பத்திகள்:
சாண்டல்
மாலா
மட்டிப்பால்
LIME
MANGO
டி.எஸ்.ஆர். & கோ.
ஹோம் நீட்ஸ் பி.லிட்.,
கோகுல் கார்டன்ஸ், கும்பகோணம் 612 001.

REGISTERED NO. M. 4292
Registered as Newspaper in Srilanka



முற்றிலும் சிறந்த விவால்டி ரெடிமேடுகள் ஆடவர்களுக்காக.
ஷர்ட்ஸ், ட்ரௌஸர்ஸ், குர்தா பைஜாமாஸ், நைட்-சூட்ஸ், வெஸ்ட்ஸ் & ப்ரீஃப்ஸ் மற்றும் பல.
தரமான இழைகள் இணைந்து ஒருங்கமைந்தது.